# தம்மபதம்

நா. செயப்பிரகாசு

தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்

# தம்மபதம்

# தம்மபதம்

நா. செயப்பிரகாசு

(தமிழாக்கம்)

தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்

ISBN : 81-7090-305-X

தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடு : 245

திருவள்ளுவராண்டு 2033 ஆடித்திங்கள் - சூலை 2002

| | | |
|---|---|---|
| நூல் | : | தம்மபதம் |
| ஆசிரியர் | : | (தமிழாக்கம்) நா. செயப்பிரகாசு |
| மொழி | : | தமிழ் |
| பொருள் | : | இலக்கியம் |
| பதிப்பு | : | முதற்பதிப்பு |
| பக்கம் | : | (46+334) 380 |
| தாள் | : | டி.என்.பி.எல்.மேப்லித்தோ 16கே.ஜி. |
| அளவு | : | டெம்மி 1/8 |
| நூற்கட்டுமானம் | : | சாதாக்கட்டு |
| விலை | : | உரூ. 190/- |
| படிகள் | : | 500 |
| அச்சுப்பதிவம் | : | சித்ரா பிரிண்டர்ஸ், கரந்தை. |
| அச்சு | : | தமிழ்ப் பல்கலைக்கழக மறுதோன்றி அச்சகம், தஞ்சாவூர். |

தமிழ்ப் பல்கலைக்கழகம்

தஞ்சாவூர் - 613 005 - இந்தியா

முனைவர் இ. சுந்தரமூர்த்தி
துணைவேந்தர்

## அணிந்துரை

தமிழகத்தில் ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே பௌத்த நெறி அறிமுகமாகியிருந்தது. சங்கச் சான்றோருள் இளம்போதியார், சீத்தலைச் சாத்தனார் போன்றோர் இதற்குச் சான்றாக அமைவர். தொடர்ந்து காலங்காலமாய்த் தமிழகத்தில் பௌத்தநெறி போற்றிப் பின்பற்றப்பட்டு வந்ததற்கு வரலாற்றுச் சான்றுகள் பல உள. தமிழகமெங்கும் பௌத்த விகாரங்கள் நிறைந்திருந்தன. தமிழ்ப் பிக்குகள் இலங்கை, மலேசியா, சீனா முதலிய நாடுகளுக்கும் சென்று பௌத்த நெறியைப் பரப்பினர். ஆசாரியர் தர்மபாலர் போன்றோர் அவருள் குறிக்கத்தக்கவர். பௌத்த சமயச் சான்றோர்கள் தமிழில் இலக்கிய இலக்கணங்களையும் தந்துள்ளனர். மணிமேகலை, வீரசோழியம், குண்டலகேசி முதலியன பௌத்த சமயச் சான்றோர்களால் ஆக்கப்பெற்றவை.

பௌத்தக் கோட்பாட்டினை விளக்கும் நூல்கள் திரிபிடகங்கள் எனப்பெறும். இவை பாலி மொழியில் உள்ளன. அவற்றுள் ஒரு நூலே தம்மபதம். பௌத்த சமய நூல்கள் முழுமையையும் கற்க வாய்ப்பில்லாதவர்கள் அவற்றின் பிழிவான தம்மபதத்தை மட்டும் கற்றாலே போதுமானது என்பார் டாக்டர் இராதாகிருட்டிணன் அவர்கள். இந்நூல் புத்தர்பெருமான் பல்வேறு சூழல்களில் தம் சீடர்களுக்கும் அன்பர்களுக்கும் அருளிச்செய்த அருள் மொழிகளின் தொகுப்பாகும்.

இந்நூலைத் தமிழில் மொழிபெயர்த்துத் தந்துள்ளார் பேராசிரியர் நா. செயப்பிரகாசு அவர்கள். பாலி மொழியிலிருந்து நேரடியாக மொழிபெயர்க்கப்பெற்றது இதன் சிறப்பாகும். தம்மபதத்தில் உள்ள பாடல்களை வெறுமனே மொழிபெயர்த்துத் தருவதோடு நின்றுவிடாமல் கருத்துக்களை நன்கு புரிந்து கொள்ளும்

வகையில் பாடல் கூறப்பட்ட சூழல், பௌத்த சமயக் கலைச்சொற்களுக்கு விளக்கங்கள் ஆகியவற்றையும் தந்துள்ளது இதன் தனிச் சிறப்பாகும். இவற்றோடு தம்மபதக் கருத்துக்களுக்கு இணையாகத் தமிழ் இலக்கியங்களில் காணப்பெறும் கருத்துக்களைத் தேடி எடுத்துத் தந்திருப்பது ஆய்வாளர்களுக்குப் பெரிதும் துணை புரிவதாக அமையும்.

பிற மொழிகளில் உள்ள நல்லறிஞர் சாத்திரங்களைத் தமிழ் மொழியில் தருவதும் சிறந்த தமிழ்ப் பணியாகும். தமிழ்ப் பல்கலைக்கழகம் அத்தகைய பணியில் தொடக்ககாலமுதல் ஈடுபாடுகொண்டு அரியநூல்களை வெளியிட்டுவருகிறது. தம்மபதம் என்னும் இவ்வரிய நூல் இன்று தமிழ் மக்கள் கைகளில் தவழ்வதை எண்ணிப் பெருமகிழ்வு அடைகின்றோம். இந்நூலை ஆக்கித் தந்த பேராசிரியர் நா. செயப்பிரகாசு அவர்களுக்கு இனியபாராட்டுதல்கள். தமிழ்கூறு நல்லுலகம் இந்நூலினை ஏற்றுப் போற்றுமாக.

தஞ்சாவூர்
31.07.2002

**இ. சுந்தரமூர்த்தி**

## ஆசிரியர் உரை

'பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்
தமிழ் மொழியில் பெயர்த்தல் வேண்டும்'

- பாரதியார்

தமிழ்ப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் மதிப்பிற்குரிய முதுமுனைவர் வ.அய். சுப்பிரமணியம் அவர்கள் என்னைப் பாலி மொழி கற்கப் பணித்தார். முதலில் சென்னையில் தங்கிச் சிலகாலம் வணக்கத்திற்குரிய பிக்கு நில்வக்கே சோமானந்தத் தேரர் அவர்களிடம் மொழிக் கல்வி பெற்றேன். பின்னர் நாலந்தாசென்று பாலி மொழி கற்றேன். நாலந்தாவில் மொழிக் கல்வியின் போது வணக்கத்திற்குரிய தேரர் உஜ்ஜாகரா பிவம்ஸ அவர்களிடம் தம்மபதம் கற்கும்பேறு கிட்டியது. தம்மபதத்தை அவர் கற்பித்த பாங்கு அந்நூலின் மேல் எனக்கு மிகுந்த மரியாதையை ஏற்படுத்தியது. இந்நூலைத் தமிழில் தரவேண்டும் என்ற எண்ணம் அன்றே உதித்துவிட்டது. பின்னர் மொழியாக்கத்தின்போது ஏற்பட்ட ஐயங்களைக் கடிதம் மூலம் தொடர்பு கொண்டு கேட்டபோதெல்லாம் மகிழ்வுடன் விளக்கமளித்துதவினார் அப்பெருந்தகையாளர்.

தமிழகம் திரும்பிய பின் தம்மபதத்தைத் தமிழாக்கம் செய்யும் எண்ணத்திற்கு ஊக்கமூட்டி அனுமதியளித்தார் அன்றைய துணைவேந்தர் முனைவர் ச. அகத்தியலிங்கம் அவர்கள். மொழியாக்கப் பணியின்போது உற்சாகமூட்டி உரிய ஆலோசனைகளை வழங்கியவர் முனைவர் இராம. சுந்தரம் அவர்கள். நூல்வடிவம் பெற்றபின் அதனை நுண்ணாய்வு செய்து உரிய திருத்தங்களைத் தந்தவர் பன்மொழிப்புலவர் மு.கு. ஜகந்நாதராஜா அவர்கள்.

நீண்ட காலத்திற்குப்பின் இதனை அச்சிட ஆணையிட்டருளியவர் முன்னைத் துணைவேந்தர் கதிர். மகாதேவன் மற்றும் முன்னைப் பதிவாளர் (பொறுப்பு) முனைவர் கு.வெ. பாலசுப்பிரமணியம் அவர்கள் ஆவர்.

தற்பொழுது இந்நூலுக்குச் சிறந்ததொரு அணிந்துரை வழங்கிய தமிழ்ப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் முனைவர் இ. சுந்தரமூர்த்தி அவர்களுக்கு என் உளமார்ந்த நன்றி.

பதிப்புப் பணியின்போது பல்வகையிலும் உதவிபுரிந்தவர் பதிப்புத்துறை இயக்குநர் (பொறுப்பு) முதுமுனைவர் ம.சா. அறிவுடைநம்பி அவர்கள். கணிப்பொறிமூலம் நூலை நல்லமுறையில் வடிவமைத்துத் தந்த கரந்தை சித்ரா அச்சகத்தார் மற்றும் அச்சிட்ட பதிப்புத்துறைப் பணியாளர்கள் ஆகிய அனைவருக்கும் என் நன்றி.

அன்பன்
**நா. செயப்பிரகாசு**

## பொருளடக்கம்


| | | | பக்கம் |
|---|---|---|---|
| முன்னுரை | | | I |
| பாலி–தமிழ் ஒலிப்பு முறை அட்டவணை | | | XXXV |
| 1. | Yamaka Vagga | இரட்டைச் செய்யுள் | 1 |
| 2. | Appamāda Vagga | விழிப்புணர்வியல் | 21 |
| 3. | Citta Vagga | மன இயல் | 33 |
| 4. | Puppha Vagga | மலர் இயல் | 47 |
| 5. | Bāla Vagga | மூடர் இயல் | 61 |
| 6. | Paṇḍita Vagga | அறிஞர் இயல் | 75 |
| 7. | Arahanta Vagga | முத்தர் இயல் | 89 |
| 8. | Sahassa Vagga | ஆயிரவியல் | 101 |
| 9. | Pāpa Vagga | தீவினை இயல் | 115 |
| 10. | Daṇḍa Vagga | தண்டனை இயல் | 127 |
| 11. | Jarā Vagga | மூப்பியல் | 139 |
| 12. | Atta Vagga | ஆன்மவியல் | 149 |
| 13. | Loka Vagga | உலகவியல் | 157 |
| 14. | Buddha Vagga | புத்தர் இயல் | 167 |
| 15. | Sukha Vagga | இன்பவியல் | 179 |
| 16. | Piya Vagga | அன்பு இயல் | 187 |
| 17. | Kodha Vagga | சினவியல் | 195 |
| 18. | Mala Vagga | குற்றவியல் | 203 |
| 19. | Dhammaṭṭha Vagga | சான்றோரியல் | 215 |
| 20. | Magga Vagga | நெறியியல் | 227 |
| 21. | Pakiṇṇaka Vagga | பொதுவியல் | 239 |
| 22. | Niraya Vagga | நரகவியல் | 251 |
| 23. | Nāga Vagga | யானை இயல் | 261 |
| 24. | Taṇhā Vgga | வேட்கை இயல் | 269 |
| 25. | Bhikkhu Vagga | பிக்கு இயல் | 283 |
| 26. | Brāhmaṇa Vagga | பிராமணர் இயல் | 297 |
| - | துணை நூற்பட்டியல் | | 325 |

7

## முன்னுரை

மலர்தலையுலகில் மன்னுயிர்க்கு ஆக்கம் தேடும் சமயங்கள் பலவற்றுள் பௌத்தமும் ஒன்று. மன்னர் குலத்தில் பிறந்து மாந்தர்தம் துன்பங்களைக் கண்ணுற்றுத் துன்ப நீக்க வழியைக் கண்டறிதற் பொருட்டுத் தன் அரச வாழ்வைத் துறந்து துன்பத்திற்கான உண்மைக் காரணத்தைக் கண்டு உலகிற்கு உரைத்த புத்தர்தம் கொள்கைகளைக் கூறுவது பௌத்தம். இஃது இல்லறத்தாரும் துறவறத்தாரும் உணர்ந்து பின்பற்றுதற்குரிய வாழ்க்கை நெறிகளைப் பகுத்துக் கூறுகிறது. துறவறத்தில் உள்ளவர்கள் பின்பற்ற வேண்டிய விதிமுறைகளையும் தவநெறியையும் கூறும் அதே சமயத்தில் இல்லறத்தார் பின்பற்ற வேண்டிய சமுதாய ஒழுக்க நெறிகளையும் அறநெறிகளையும் வகுத்துக் கூறுகிறது பௌத்தம். இக்கோட்பாடுகள் அனைத்தும் பல சூழல்களில் புத்தரால் கூறப்பெற்றுப் பின்னர் அவர்தம் மாணாக்கரால் பல நூல்களாகத் தொகுக்கப்பெற்றன. அந்நூல்கள் முப்பிடகங்களாகப் (Tipiṭaka) பகுக்கப் பெற்றன.

### முப்பிடகங்கள் (Tipiṭaka) தொகுக்கப்பெற்றமை

புத்தர்தம் மகாபரிநிர்வாணத்திற்குப் பின்னர் சில நாள்களில் அவருக்கு இறுதி மரியாதை செலுத்தும் பொருட்டு அவர் நிர்வாணம் எய்திய இடமான குசிநாராவில் அவர்தம் மாணவர்கள் கூடினர். அக்கூட்டத்திற்கு மகா கஸ்ஸபர் தலைமை தாங்கினார். அக்கூட்டத்தில் தன் முதுமைக் காலத்தில் துறவியாகிப் புத்தர்தம் கோட்பாடுகளைச் சரிவரக் கற்றுணராத சுபத்தன் (Subhadda) என்னும் பிக்கு எழுந்து, நண்பர்களே புத்தர் தம் மறைவிற்கு வருந்தாதீர்கள். இப்பொழுது நாம் அவர்தம் கட்டுப்பாடான நெறிமுறைகளினின்றும் நிச்சயமாக விடுபட்டுள்ளோம். புத்தர் உயிருடன் இருந்த காலத்தில் அவர்தம் கடுமையான விதிமுறைகளைத் தவறாது பின்பற்றுவதில் நாம் மிகுந்த கவனம்

செலுத்த வேண்டியிருந்தது. ஆனால் நாம் தற்பொழுது நம் விருப்பம்போல் செயல்படுவதற்கான உரிமையைப் பெற்றுள்ளோம். எனவே வருந்த வேண்டாம் என்று கூறினார். சுபத்தரது இச்சொற்களைக் கேட்ட பிற பிக்குகள் அதிர்ச்சியடைந்தனர். புத்தர்தம் அறங்களுக்குத் தவறான பொருளுரைக்கக் கூடிய இயக்கங்களும் சங்கத்தில் இருக்கக்கூடும் என உணர்ந்தனர். எனவே அவைத்தலைவரான மகா கஸ்ஸபர் எழுந்து அன்பர்களே வாருங்கள். புத்தர்தம் கோட்பாடுகளைப் பிறர் திரித்துப் பரப்புவதற்கு முன், அத்திரிபு வாதங்கள் வலிமை பெறுவதற்கு முன் நாம் அந்த அறங்களையும் விதிமுறைகளையும் தொகுத்து வைப்போம் என்றார். அதன்படி அரகந்த நிலை அடைந்த ஐநூறு பிக்குகள் தேர்ந்தெடுக்கப் பெற்றனர். அவர்கள் புத்தர்தம் கூற்றுகளை அவர்தம் சொற்களிலேயே திரட்டிச் சேர்க்கப் பணிக்கப் பெற்றனர். ஆறுமாதங்களில் அப்பணி நிறைவுற்று மீண்டும் கூடவேண்டும் எனத் தீர்மானிக்கப் பெற்றது.

அத்தீர்மானத்தின்படி புத்தர் மறைந்து ஆறுமாதத்தில் ஐநூறு பிக்குகளும் ராஜகேகத்தில் வேபார மலையுச்சியில் உள்ள சத்தபன்னி (Sattapanni ) குகையில் கூடினர். இக்கூட்டம் பௌத்த பிக்குகளின் முதல் மாநாடு எனப் பெறும். கூட்டத்திற்கு மகா கஸ்ஸப தேரர் தலைமை ஏற்றார். இக் கூட்டத்தில் ஐநூறு பிக்குகளும் கஸ்ஸபர், ஆனந்தர், அநுருத்தர், உபாலி, வங்கீசர், புண்ணர், குமார கஸ்ஸபர், கச்சாயனர், கொட்டிதர் ஆகியோரது தலைமையில் பல்வேறு குழுக்களாகப் பிரிந்து விநயம், சுத்தம், தம்மம், கதைகள் முதலான பல்வேறு பிரிவுகளையும் ஆராய்ந்து தொகுத்தனர். இவ்வாறு தொகுக்கப் பெற்றவை நூல்களாக வகுக்கப் பெற்றன.

அந்நூல்கள் அவற்றின் பொருள் அடிப்படையில்

1. விநய பிடகம் (Vinaya piṭaka)
2. சுத்த பிடகம் (Sutta piṭaka)
3. அபிதம்ம பிடகம் (Abhidhamma piṭaka)

என மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப் பெற்றன.

அவற்றில் விநய பிடகத்தில்

1. மகா வக்கம் (Mahāvagga)
2. சுல்ல வக்கம் (Cullavagga)
3. பாசித்தியம் (Pācittiya)
4. பாராஜிகம் (Pārājika)
5. பரிவாரம் (Parivāra)

என ஐந்து நூல்கள் அடங்கியுள்ளன. இவற்றுள் பாசித்தியமும் பாராஜிகமும் சேர்ந்து சுத்தவிபங்கம் (Suttavibhaṅga) எனப்பெறும். மகாவக்கமும் சுல்லவக்கமும் சேர்ந்து கந்தகம் (Khandhaka) எனப்படும். விநய பிடக நூல்களில் பௌத்த பிக்குகள் தங்கள் துறவு வாழ்க்கையில் கடைப்பிடிக்க வேண்டியனவும் விலக்க வேண்டியனவும் கூறப்பட்டுள்ளன. துறவு நெறியினின்றும் பிறழ்ந்தார்க்கு உரிய தண்டனைகளும் விளக்கமாகக் கூறப்பெற்றன. இவையனைத்தும் உரைநடையில் அமைந்தவை.

சுத்த பிடத்தில்

1. தீக நிகாயம் (Dīga Nikāya)
2. மஜ்ஜிம நிகாயம் (Majjhima Nikāya)
3. சம்யுத்த நிகாயம் (Samyutta Nikāya)
4. அங்குத்தர நிகாயம் (Aṅguttara Nikāya)
5. குத்தக நிகாயம் (Kuddhaka Nikāya)

என ஐந்து நூல்கள் உள. இவற்றுள் குத்தக நிகாயம் ஒரு தனி நூலன்று. இது 15 சிறு நூல்களைக் கொண்ட தொகுப்பு ஆகும்.

அவையாவன.

1. குத்தக பாடம் (Kuddhaka pāṭha)
2. தம்மபதம் (Dhammapada)
3. உதாநம் (Udāna)
4. இதிவுத்தகம் (Itivuttaka)
5. சுத்தநிபாதம் ( Sutta Nipāta)
6. விமான வத்து (Vimāna Vattu)

| | | |
|---|---|---|
| 7. | பேத வத்து | (Peta Vattu) |
| 8. | தேர காதா | (Thera Gāthā) |
| 9. | தேரி காதா | (Theri Gāthā) |
| 10. | ஜாதகம் | (Jāthaka) |
| 11. | நித்தேசம் | (Niddesa) |
| 12. | படிசம்பிதமக்கம் | (Paṭisambhida Magga) |
| 13. | அபதானம் | (Apadāna) |
| 14. | புத்த வம்சம் | (Buddha Vaṁsa) |
| 15. | சரிய பிடகம் | (Cariya piṭaka) |

என்பனவாம். சுத்த பிடக நூல்களில் இல்லறத்தாரும் துறவறத்தாரும் பின்பற்றவேண்டிய அறநெறிகள் சமுதாயச் சீரமைப்புக் கோட்பாடுகள் முதலியன கதைகள் மூலமாகவும் உவமைகள் மூலமாகவும் மிக அழகாகச் செய்யுள் வடிவத்தில் விளக்கப் பெற்றுள்ளமையைக் காணலாம்.

அபிதம்ம பிடகத்தில்

| | | |
|---|---|---|
| 1. | தம்மசங்கணி | (Dhammasaṅgaṇi) |
| 2. | விபங்கம் | (Vibhaṅga) |
| 3. | கதாவத்து | (Kathāvattu) |
| 4. | தாது கதா | (Dhātukathā) |
| 5. | புக்கல பஞ்ஞத்தி | (Puggala Paññatthi) |
| 6. | யமகம் | (Yamaka) |
| 7. | பட்டான | (Paṭṭhāna) |

என ஏழு நூல்கள் உள்ளன. இப்பிரிவில் உள்ள நூல்களில், கற்றுணர்ந்த சான்றோர்க்கு ஏற்ற வகையில் உயர்ந்த தத்துவக் கோட்பாடுகளும் உளவியல் கோட்பாடுகளும் விளக்கப் பெறுகின்றன.

இவ்வாறு தொகுக்கப் பெற்றவை ஏறத்தாழ 400 ஆண்டு காலமாக ஏட்டில் எழுதப் பெறாமல் ஆசிரியரிடமிருந்து மாணாக்கர் என்ற வகையில் வாய்மொழி இலக்கியமாகவே வழங்கி வந்தன. கி.மு. முதல் நூற்றாண்டில் இலங்கையில் வட்டகாமணி அபயன் (Vaṭṭagamani Abaya 88 - 76 B.C.) காலத்தில்தான் அவை ஏட்டில்

எழுதப்பெற்றன என மகாவம்சம் கூறுகிறது. இதற்காக வட்டகாமணி அபயன் கூட்டிய பிக்குகள் கூட்டம் நான்காவது பிக்குகள் மாநாடு எனப்பெற்றது[2].

இவ்வாறு தொகுத்தமைக்கப் பெற்ற முப்பிடங்களில் (Tipiṭaka) சுத்த பிடகத்தில் குத்தக நிகாயத்தின் இரண்டாவது நூலாக இருப்பது தம்மபதம்.

### தம்மபதம் சொற்பொருள்

தம்மபதம் (Dhammapada) என்னும் சொல் தம்ம+ பத (Dhamma + Pada) என்னும் இரு சொற்களின் தொகைச் சொல்லாகும். 'தம்மம்' என்னும் சொல் (சமஸ்கிருதத்தில் Dharma) தமிழில் அறம் என்னும் சொல் தரும் அனைத்துப் பொருளையும் தரக் கூடியதாகும். 'பத' (Pada) என்பது 'வழி', 'நெறி' என்னும் பொருள் தருவதாகும். எனவே 'தம்மபத' என்பது 'அறநெறி' என்னும் பொருள் தருகிறது. மேலும் 'பத' என்னும் சொல்லிற்குச் 'சொல்' என்ற பொருளும் உண்டு. அவ்வாறு பொருள் கொண்டால் இத்தொகைச் சொல் அறமொழி எனப் பொருள்படும். இவ்வகையில் பொருள் கொள்வதும் குற்றமில்லை. எனினும் அறநெறி எனப் பொருள் கொள்வதே மரபாக உள்ளது.

### நூலின் அமைப்பு

தம்மபதம் நூலிலுள்ள கருத்துக்கள் அனைத்தும் புத்தரால் கூறப்பெற்றவை எனினும் அவையனைத்தும் இப்பொழுதுள்ள இதே வடிவத்தில் கூறப்பெற்றனவெனக் கொள்ளவியலாது. புத்தர் தம் நிர்வாணத்திற்குப் பின் அவர்தம் கோட்பாடுகள் நூல்களாக தொகுக்கப்பெற்று அந்நூல்களில் பல இடங்களிலும் உள்ள அரிய கருத்துக்கள் மட்டும் மீண்டும் தனியாகத் தொகுக்கப் பெற்றன. அவ்வாறு தொகுக்கப் பெற்ற கருத்துக்கள் இயல்களாகப் பகுக்கப் பெற்றன. இம்முறையில் வடிவமைக்கப் பெற்ற நூலே தம்மபதம். மேலும் இந்நூல்கள் அனைத்தும் ஏறத்தாழ நானூறு ஆண்டு காலமாக வாய்மொழி வழியாகவே வழங்கி வந்தமையின் இதில் மேலும் சில மாற்றங்கள் ஏற்பட்டிருக்கவும் வாய்ப்புகள் உள.

தம்மபதம் ஏறத்தாழ 300 சூழல்களில் புத்தரால் கூறப்பெற்ற 423 அறிவுரைப் பாடல்களைக் கொண்டதாகும். நூல் முழுமையும்

ஈரடிப் பாடல்களாலும் மூவடிப் பாடல்களாலும் ஆக்கப் பெற்றுள்ளது. இஃது 26 இயல்களாகப் பகுக்கப் பெற்றுள்ளது. தொகுக்கப் பெற்ற பாடல்கள் கால அடிப்படையிலன்றி பொருள் அடிப்படையிலேயே வகைப்படுத்தப் பெற்றன.

புத்தர் ஞானம் பெற்றபின் தாம் கண்டறிந்த உண்மைகளை உலகிற்கு உணர்த்தும் நோக்கத்துடன் இசிபதனத்திலுள்ள மான்காட்டை நோக்கி (தற்போதைய சாரநாத்) வந்து கொண்டிருக்கும்பொழுது எதிர்ப்பட்ட உபகன் என்னும் துறவி கேட்ட கேள்விக்குக் கூறிய மறுமொழியே முதன்முதலாகக் கூறிய பாடல் எனத் தெரிகிறது. ஆனால் இப்பாடல் தம்மபதத்தில் 353 ஆவது பாடலாக வேட்கை இயலில் காணப்படுகிறது. பாடல்கள் அவை கூறப்பெற்ற கால அடிப்படையில் தொகுக்கப் பெறவில்லை என்பதை இது காட்டுகிறது.

ஒவ்வொரு இயலிலும் தொகுக்கப்பெற்ற பாடல்களின் தொகுப்பு முறையும் சரியாக அமையவில்லை. எல்லா இயல்களிலும் அமைந்துள்ள பாடல்களின் எண்ணிக்கை சம அளவினதாக இல்லை. மேலும் 266 ஆவது பாடலும் 267 ஆவது பாடலும் பிக்குகளின் தன்மையைப் பற்றிக் கூறுவனவாக உள்ளன. ஆனால் இவை சான்றோர் இயலில் வைக்கப்பட்டுள்ளன. பாடலின் பொருள்படி இவை இரண்டும் பிக்கு இயலில் இருப்பதே பொருத்தம் எனத் தோன்றுகிறது. அது போன்று 258 ஆவது பாடல் சான்றோர் இயலில் வைக்கப்பட்டுள்ளதற்குப் பதிலாக அறிஞர் இயலில் வைத்திருப்பின் பொருத்தமானதாக இருக்கும்.

தவிரவும் 80 ஆம் பாடலாக அறிஞர் இயலில் காணப்படும் பாடலே 145 ஆம் பாடலாகத் தண்டனை இயலிலும் காணப்பெறுகிறது. இவ்விரண்டிற்கும் உள்ள ஒரே வேறுபாடு ஒரு சொல் மட்டுமே. ஈற்றடியில் உள்ள இறுதிச் சொல் 80 ஆம் பாடலில் அறிஞர் என்னும் பொருள்படும் 'Paṇḍita' என்றுள்ளது. 145 ஆம் பாடலில் சான்றோர் எனப் பொருள்படும் Subbata என்றுள்ளது. இவ் வேறுபாட்டிற்காகவே இப்பாடல் இரு இடங்களிலும் வைக்கப்பட்டுள்ளது. இவ்விரண்டு பாடல்களையும் கூறிய சூழலை ஒன்றாகவே காட்டியுள்ளார் உரைகாரர் புத்தகோசர். மேலும் இப்பாடலைத் தண்டனை இயலில் வைத்திருப்பது பொருள் நோக்கில் பொருத்தமற்றதாகவும் தோன்றுகிறது. இவ்வாறு அமைப்பு

முறையில் சில குறைபாடுகள் காணப்பெறினும் நூலின் சிறப்பு கற்றுணர்ந்து போற்றும் வகையில் உள்ளது.

### நூலது சிறப்பு

தம்மபதம் சுத்தபிடகத்தில் உள்ள சிறு நூல். எனினும், இது முப்பிடகங்களிலும் உள்ள ஏனைய முப்பது நூல்களின் சாரத்தையும் தன்னகத்தே கொண்டுள்ளது எனின் மிகையாகாது. எனவே இதைப் பௌத்த சமயக் கோட்பாடுகளின் பிழிவு எனலாம். முப்பிடகங்களையும் கற்பதற்கு ஆற்றலும் பொறுமையும் அற்றவர்கள் பௌத்த சமய அறநூல்களின் சாரமான தம்மபதத்தைக் கற்கலாம் என டாக்டர் இராதாகிருட்டிணன் கூறுவார்[3]. உண்மையை நாடும் எவரும் சமய வேறுபாடின்றி விரும்பிக் கற்கும் வகையில் அமைந்துள்ளது தம்மபதம். புத்தர் பகர்ந்த இப் பொன்மொழிகளைத் தங்கள் வாழ்வில் முறையாகப் பின்பற்றும் எவரும் ஆன்மீக வளர்ச்சி பெற்று உன்னதமான நிலையை அடைவர் என்று நாரத தேரர் தமது தம்மபதம் ஆங்கில மொழிபெயர்ப்பு நூலின் முன்னுரையில் குறிப்பிடுகிறார். இது சாதாரணமாகக் கதைகளைப் படிப்பது போன்று படித்துவிட்டுப் போகக்கூடியதன்று. தமிழ் மறையாம் திருக்குறளை மனம் ஒன்றித் திரும்பத் திரும்பக் கற்பது போன்று ஆழ்ந்த கவனத்துடன் மீண்டும் மீண்டும் கற்று வாழ்வில் பின்பற்றத் தக்கது இந்நூல். தேரவாத பௌத்தத்தைப் பின்பற்றும் நாடுகளில் பௌத்த சமயத்தில் முதல் நிலைத் துறவு (Pabbajja) ஏற்ற மாணவர்கள் (Sāmaṇera) தம்மபதம் முழுவதையும் உரைவிளக்கத்துடன் மனனம் செய்தால்தான் அவர்களுக்கு உயர்நிலைத் துறவாம்முழுத்துறவும் (Upasampadā) அளிக்கப்படும் என்னும் விதி கடைப்பிடிக்கப்படுகிறது[4]. போர் வெறி கொண்டிருந்த மாமன்னன் அசோகனை அன்பின் சின்னமாக மாற்றியது தம்மபதத்தில் இரண்டாவது இயலில் உள்ள முதற் செய்யுள் என பௌத்த மரபு கூறுகிறது[5]. இவை இந்நூலின் பெருமைக்குச் சான்றாகும்.

இந்நூல் முழுமையும் தெளிவான அழகிய எளிமையான நடையில் அமைந்துள்ளது. கருத்தின் தெளிவும் ஆழமும் மனத்தை ஈர்க்கக்கூடிய வகையில் உள்ளன. சொல்லவேண்டிய செய்திகள் நேரடியாகவும் சுருக்கமாகவும் நறுக்குத் தெரித்தாற்போன்றும் சொல்லப்பட்டுள்ளன. ஒன்றன் நன்மை தீமை ஆகிய

இருபக்கங்களையும் ஆராய்ந்து இரு நிலைகளையும் கூறும் தன்மை இந்நூலில் மற்றொரு சிறப்பாகும். இதில் கூறப்பெற்றுள்ள எளிமையான பொருள் பொதிந்த பொருத்தமான உவமைகள் இதன் சிறப்பை மேலும் உயர்த்துகின்றன.

உவமைகள்

தம்மபதம் நூலில் உள்ள மொத்தம் 423 பாடல்களில் ஏறத்தாழ 140 உவமைகளைக் கையாண்டுள்ளார் புத்தர். கூறப்பெற்ற உவமைகள் அனைத்தும் எளிமையானவை. மக்கள் தம் அன்றாட வாழ்வில் சாதாரணமாகக் காணக்கூடியவை. இவை அனைத்திலும் ஒரே ஒரு உவமைதான் சாதாரணமாக உலகில் காண இயலாத ஒன்றாக உள்ளது. மனம், வாக்கு, காயம் மூன்றிலும் குற்றங்களை நீக்கிய சான்றோர்களது உடல் ஒளிமயமானது. அவ்வொளியை ஆபஸ்ஸர தேவர்களது உடலில் தோன்றும் ஒளிபோன்றது என்கிறார் புத்தர். ஆபஸ்ஸர தேவர்கள் என்போர் பிரம்ம உலகத்தில் வாழக்கூடிய மின்னலொத்த ஒளிமிகு கடவுளர். இவர்கள் சாதாரணமாக உயர்ந்த அன்புக்கும் நட்புக்கும் எடுத்துக் காட்டாகக் கூறப்படுவார்கள். இவர்களைப் பற்றிய கருத்து ஏற்கனவே மக்களிடம் பரவியிருத்தலினாலேயே இந்த உவமையைக் கூறினார் புத்தர். இதைத் தவிர ஏனைய உவமைகள் அனைத்தும் உலகப் பொருள்கள் மற்றும் நடைமுறைகளினின்றுமே எடுக்கப்பெற்றவை. அதே சமயம் அவை விளக்கப்புகும் கருத்தினைக் கற்போர் உள்ளத்தில் எளிதில் பதியச் செய்ய வல்லவை.

உலகியலின் ஆசாபாசங்களில் சிக்கித் தவிக்கும் மனம் அதிலிருந்து விடுபட முடியாமல் தவிக்கிறது. அமைதியிழந்து அலைபாயும் மனத்தின் நிலையைக் கூறவரும் புத்தர் தண்ணீரிலிருந்து வெளியே எடுத்துத் தரையிலிட்ட மீன் துடிப்பதைப்போல இந்த மனமும் துடித்துக்கொண்டுள்ளது எனக் கூறுகிறார் (பாடல் 34). இவ்வாறு நிலையற்றதும் அடிக்கடி மாறுவதும் காப்பதற்கு அரியதுமான மனத்தைச் சான்றோர்கள் கட்டுப்படுத்தி அடக்கி நேராகத் தன் குறிக்கோளை நோக்கிச் செலுத்தும் தன்மைக்கு வில்லாளி தன் அம்பினை குறியை நோக்கி நேராகச் செலுத்துவதை உவமையாகக் கூறுகிறார் (பாடல் 33).

மனம் அலைபாயக்கூடியது, சரியான முறையில் காக்கப் படாவிடின் ஆசை முதலிய தீய எண்ணங்கள் எளிதில் மனத்துட் புகுந்து பாழாக்கிவிடும். இஃது எது போலவெனின் வீட்டின் கூரை நன்றாக வேயப்படாவிடின் அதனுள் எளிதில் மழை நீர் புகுந்துவிடுவது போன்று என உவமை கூறுகிறார். (பாடல் 13.)

நன்றாக வேயப்பட்ட கூரையுள் மழைநீர் புகவியலாது. அதுபோன்று நன்கு பக்குவப்பட்ட மனத்துள் ஆசை புக இயலாது, என்கிறார் (பாடல் 14.). அப்படிப் பக்குவப்பட்ட மனத்தை மாரன் மீண்டும் கவர இயலாதபடி எல்லைப்புற நகரங்களை எதிரிகளிடமிருந்து இரவும் பகலும் விழிப்புடன் காப்பது போலக் காக்க வேண்டும் என்று கூறுகிறார் புத்தர் (பாடல்கள் 40 ; 315)

இவ்வுடல் நிலையற்றது. எந்த நேரமும் அழிந்துபடக் கூடியது. என்னும் உண்மையை விளக்கவரும் புத்தர் இதனை மண் பானைக்கு ஒப்பிடுகின்றார். சரியான முறையில் பயன் படுத்தினால் நன்கு பயன்படும் மண்பானை கவனமின்றியிருந்தால் உடைந்து விடும். அது மட்டுமன்றி மீண்டும் அதைச் சரிசெய்து பயன்படுத்த முடியாது. இவ்வுடலும் இருக்கும்வரை பயனுள்ளதாக இருக்கும் அழிந்தபின் மீண்டும் சரிசெய்து பயன்படுத்த இயலாதபடிப் பாழாகிவிடும். (பாடல் 40.)

இது போன்றே மனிதனைத் தொடரும் நிழல் (பாடல் 2), மலைமேலுள்ள மனிதன் தரையில் உள்ள மக்களைப் பார்த்தல் (பாடல் 28), மலர்ச் சோலையில் தேன் சேகரிக்கும் வண்டு மலருக்குச் சேதமின்றித் தேனைச் சேகரித்தல் (பாடல் 49), தூங்கிக் கொண்டிருக்கும் ஊரை வெள்ளம் அடித்துச் செல்லல் (பாடல் 257), தாய்ப்பசுவிடம் பால் குடிக்கும் கன்று (பாடல் 284), யானைப் பாகன் அங்குசத்தால் யானையை அடக்குதல் (பாடல்326), தாமரை இலைமேலுள்ள தண்ணீர் இலையில் ஒட்டாதது (பாடல் 401), தருப்பைப் புல்லைத் தவறாகப் பிடித்து இழுத்தால் கையை அறுத்தல் (பாடல் 311), போன்ற அனைத்து உவமைகளும் புதுமையானதாகவும் அன்றாட வாழ்க்கையிலிருந்து எடுக்கப்பெற்றவையாகவும் உள்ளன. இத்தகு உவமைகள் கற்பதற்கு இன்பம் பயப்பது மட்டுமன்றி கருத்தைஎளிதில் புரிந்து கொள்வதற்குத் துணை செய்வதாகவும் அமைகின்றன.

நூலில் குறிக்கப்பெறும் பொருள்

தம்மபதம் நூலில் கூறப்பெற்றுள்ள பொருள் இயல் வரிசையில் இங்குச் சுருக்கமாகத் தரப்படுகிறது.

1. இரட்டைச் செய்யுளியல்

நல்வினையாயினும் தீவினையாயினும் மனமறிந்து செய்யக் கூடிய வினையின் பயன் செய்தவனைச் சென்று சார்ந்தே தீரும். சினம் பகையை வளர்க்கிறது. சினத்தைக் கொண்டு பகையை அழிக்க இயலாது. மாறாக அன்பினால் பகைமையை அழித்துவிட இயலும். சிற்றின்ப நாட்டமுள்ளவனை மாரன் எளிதில் வீழ்த்தி விடுகிறான். மன மாசுடையவன் தூய துறவாடையை அணியும் தகுதியை இழந்தவனாகிறான். பொருளற்றதைப் பொருளற்றதாகவும் பொருளுள்ளனவற்றைப் பொருளுள்ளனவாகவும் பார்த்து அறிபவர்களே உண்மையை உணர்ந்தவர்கள். தீவினையாளன் இம்மையிலும் மறுமையிலும் துன்புறுகிறான். அவன் தான் செய்த தீவினைகளை எண்ணிக் கலங்குகிறான். நல்வினையாளன் இம்மையிலும் மறுமையிலும் இன்புறுகிறான். அவன் தான் செய்த நல்வினைகளை எண்ணிக் களிக்கிறான். அறநூல்களைக் கற்றவன் பிறருக்குக் கற்பிப்பதுடன் தானும் அவற்றைக் கடைப்பிடிக்க வேண்டும். இன்றேல் அவன் கற்ற நூல்களின் பலன் அவனுக்கில்லை.

2. விழிப்புணர்வியல்

விழிப்புணர்வுடன் இருத்தல் இறவாமைக்கு வழி. விழிப்புணர்வின்றி இருத்தல் இறப்பிற்கு வழி. அறிஞர்கள் விழிப்புணர்வுடன் விடாமுயற்சியுடனும் உறுதியுடனும் தவமியற்றி நிர்வாணமடைகின்றனர். அறிவற்றவர்கள் மயக்கத்தில் அழுந்தி அழிகின்றனர். விழிப்புணர்வுடைய அறிஞர்கள் புகழும் விழிப்புணர்வற்றவர்கள் பழியும் அடைகின்றனர். விழிப்புணர்வுடன் இருந்து சோம்பலைக் கண்டு அஞ்சும் பிக்குகள் நெருப்புப் போன்று இருந்து தன்கட்டுகள் அனைத்தையும் எரித்து அழிக்கின்றனர். அத்தகையோர் வீழ்ச்சி அடைவதில்லை.

### 3. மனவியல்

மனம் அடிக்கடி மாறக்கூடியது, தடுத்து நிறுத்துவதற்கும் காப்பதற்கும் அரியது. எப்பொருள் மீதும் எளிதில் சென்று படரக் கூடியது, காட்சிக்கு அரியது, நுண்மையானது, விரைந்து நெடுந்தொலைவு செல்லக்கூடியது, தனித்து இயங்குவது. அறிஞர்கள் இத்தகைய மனத்தைக் கட்டுப்படுத்துகின்றனர். மனத்தைக் கட்டுப்படுத்துவது மாரனை நீக்குவதாகும். இன்பத்தைக் கொணர்வதாகும். ஒருவனது தீய மனம் அவனுடைய எதிரிகளை விடவும் அவனுக்குப் பெரிதும் தீமை பயக்கவல்லது. ஒருவனது நல்ல மனம் அவனது தாய் தந்தையர், நண்பர்களைவிடவும் உறுதியான நன்மை பயக்கவல்லது.

### 4. மலரியல்

இவ்வுடல் நீர் குமிழைப் போன்றது என்பதையறிந்து மாரனின் மலர்க்கணையிலிருந்து விடுபடவேண்டும். நெறியினின்று வழுவியவனும் நிறைவற்ற ஆசைகளுடையவனும் இயமனின் ஆளுகைக்குள் வருகின்றனர். பிறர் குறைகளைக் காண்பதைத் தவிர்த்துத் தன் குறைகளையே ஒருவன் கண்டறிந்து தன்னைத் திருத்திக்கொள்வானாக. தாம் கற்றதைப் பிறர்க்கு உபதேசித்துத் தாம் பின்பற்றானாயின் கற்றதன் பயன் இல்லை. அவன் கற்றதற்கு ஏற்பப் பின்பற்றுவானாயின் அது பெரும் பயன் நல்குவதாகும். ஒருவன் தன் ஒருபிறவியிலேயே பல நற்செயல்களைச் செய்ய வேண்டும். மல்லிகை போன்ற மலர்களின் மணமும் பிற மணப்பொருள்கள் மணமும் காற்றை எதிர்த்துச் செல்வதில்லை. ஆனால் நல்லொழுக்கமுடைய சான்றோரின் புகழ் காற்றை எதிர்த்து எங்கும் சென்று நிறைவதுடன் தேவருலகையும் எட்டவல்லது.

### 5. மூடரியல்

மூடர்களுக்கு வாழ்க்கை நீண்டதாகத் தோன்றும் ஒருவன் தன்னினும் மேலானவர்களுடனோ தனக்கு இணையானவர்களுடனோ தொடர்பு கொள்ள வேண்டும். மூடர்களுடன் ஒருபோதும் உறவு கொள்ளக் கூடாது. தன்னை அறிவுடையவனாகக் கருதிக்கொள்ளும் ஒருவன் மூடனாகவே இருக்கிறான். அறிவற்றவன் தன் அறியாமையை அறிந்து கொள்ளும்பொழுது அவ்வளவிற்கு அறிவுடையவன் ஆகிறான்.

எவ்வளவு நேரம் உடனிருப்பினும் சட்டுவம் கறிச் சுவையை அறியாது. அதுபோன்று எத்தனைக் காலம் சான்றோருடன் பழகினும் மூடர்கள் நல்லறங்களை அறிந்து கொள்வதில்லை. அறிவுடையோர் சிறிது காலமே பழகினும் அறநெறிகளை நன்கு அறிந்து கொள்வர். மூடர்கள் தமக்குத்தாமே பகையாவர். பின்னால் நினைத்து வருந்தக்கூடிய செயல்களைத் தவிர்க்க வேண்டும். தீய செயல்களின் விளைவுகள் உடன் தெரிவதில்லை. அவை நீறுபூத்த நெருப்பாக மறைந்திருந்து உரிய நேரத்தில் சுடுகின்றன. அற்பர்கள் பெறும் அறிவு நன்மைக்குப் பதிலாகத் தீமையே பயக்கிறது.

## 6. அறிஞரியல்

நம் குற்றங்களைச் சுட்டிக் கண்டிக்கும் அறிஞர்களைக் கண்டால் பெருநிதிக் குவியலைக் காட்டுவோர் போன்று அவருடன் நட்புக்கொள்ள வேண்டும். அறநெறியை உவப்போடு ஏற்றுக் கொள்பவர்கள் கலக்கமற்ற மனத்தினராய் இன்பமாக வாழ்கின்றனர். அறிஞர்கள் போற்றுதலாலும் தூற்றுதலாலும் பாதிக்கப்படுவதில்லை. உலக இன்ப துன்பங்களின் மீது பற்று வைக்காமல் அவற்றினின்று விலகியிருப்பர். தங்கள் சொந்த நலனுக்காக அறநெறியினின்றும் வழுவிய நெறியில் செல்லமாட்டார்கள். பேரறிவு நிலையாம் ஞானநிலையை எய்திய அறிஞர்கள் பேரொளியினராய் விளங்கி இவ்வுலகிலேயே நிர்வாணத்தை அடைந்தோராய் இருப்பர்.

## 7. ஞானியர் இயல்

ஞானியர் உலக வாழ்க்கையாம் பயணத்தை முடித்து விட்டவர்கள். துன்பங்களினின்றும் நீங்கியவர்கள், பற்றுகளைத் துறந்து உலகக் கட்டுகளை அறுத்தவர்கள். நிர்வாண நிலை ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டவர்கள். ஐம்புலன்களையும் அடக்கி நிலைப்படுத்தியவர்கள். இத்தகைய இயல்பினருக்குப் பிறப்பிறப்பாகிய துன்பம் இல்லை. அவர்கள் முற்றிலும் விடுதலையடைந்து முழு அமைதி அடைந்தவர்கள் ஆவர். இத்தகையோர் இருக்கும் இடம் நாடாக இருப்பினும், காடாக இருப்பினும் மலை உச்சியாயினும் பள்ளத்தாக்காயினும் அது இன்பமயானது.

## 8. ஆயிரவியல்

பொருளற்ற ஓராயிரம் சொற்களைவிட மன அமைதி தரக்கூடிய பொருளுள்ள ஒரு சொல்லே உயர்ந்தது. நூற்றாண்டு காலம் யாகம் செய்வதைவிடத் தன்னைத்தானே வென்ற சான்றோரை ஒருகணம் வழிபடுவது பெரும்பலன் நல்கவல்லது. அப்படி வழிபடுவோருக்கு ஆயுள், அழகு, இன்பம், ஆற்றல் ஆகிய நான்கும் பெருகுகின்றன. ஒழுக்கமற்ற நூறாண்டு வாழ்க்கையைவிட ஒழுக்கமும் தியானமும் உள்ள ஒருநாள் வாழ்வே உயர்ந்தது. அடக்கமற்ற நூறாண்டு வாழ்வினும் ஞானமும் தியானமுமுடைய ஒருநாள் வாழ்வே உயர்ந்தது. உலகப் பொருள்களின் தோற்றமும் மறைவும் அறியாத நூறாண்டு வாழ்வினும் ஆக்க அழிவுகளை அறிந்த ஒருநாள் வாழ்வே சிறந்தது. உயர்ந்த அறத்தை அறியாத நூறாண்டு வாழ்வினும் அதனை அறிந்த ஒருநாள் வாழ்வே மேலானது.

## 9. தீவினை இயல்

நல்வினை ஆற்றுவதில் தாமதமின்றி விரைந்து செயல்பட வேண்டும். தீய எண்ணங்களைத் தவிர்த்து நீக்க வேண்டும். தீய செயல்களை ஒருமுறை செய்துவிடின் மீண்டும் அதைச் செய்யாது தவிர்க்க வேண்டும். நல்வினை ஒன்று செய்யின் மீண்டும் மீண்டும் விருப்பமுடன் அதைச் செய்ய வேண்டும். நீர்த்துளி சொட்டுவதால் சிறிது சிறிதாகக் குடம் நிறைவது போல தீவினையோ நல்வினையோ சிறிது சிறிதாக ஒருவனிடம் நிறைகிறது. தீவினையின் பயன் செய்தவனை எந்நிலையிலும் சென்று சேர்ந்துவிடும். அதனிடமிருந்து அவன் தப்பமுடியாது.

## 10. தண்டனை இயல்

அனைவரும் தண்டனைக்கு அஞ்சுகின்றனர். அனைவரும் மரணத்திற்கு அஞ்சுகின்றனர். தனது இன்பத்திற்காக இன்பமாய் வாழ விரும்பும் பிற உயிர்களைத் தண்டித்துத் துன்புறுத்துவோர் தனது மரணத்திற்குப் பின் இன்பமாக இருப்பதில்லை. யாரிடமும் கடுஞ்சொற்களைப் பேசாதீர். மூடர்கள் தாம் செய்யும் செயலின் பலனை அறியாமலேயே தீச்செயல்களைச் செய்து கொண்டிருக்கின்றனர். அத்தகையோர் மனத்துன்பம், இழப்பு, உடல்துன்பம், நோய், மனமாறாட்டம், அரசதண்டனை, பழிச்சொல்

சுற்றத்தை இழத்தல், பொருள் இழப்பு, தன் வீட்டை இழத்தல் ஆகிய துன்பங்களை அடைவர். மழித்தலும், நீட்டலும், பட்டினி கிடத்தலும், வெறுந்தரையில் படுத்தலும், புழுதியிலும் சாம்பலிலும் புரள்தல் போன்றவையும் தங்கள் ஐயங்களைத் தீர்த்துக் கொள்ளாதவர்களைத் தூய்மைப்படுத்துவதில்லை.

11. மூப்பியல்

அலங்கரிக்கப்பட்ட இவ்வுடல் எலும்புகளின் குவியல். நோயுள்ளது, நிலையற்றது. இவ்வுலகில் மனிதவாழ்வு மரணத்தில் முடிவடைவது. எலும்புகளால் கட்டப்பெற்று தசையும் குருதியும் கலந்த சாந்தால் பூசப்பட்டது. இதனுள் மூப்பும் சாக்காடும் அகந்தையும் வஞ்சகமும் நிறைந்துள்ளது. கல்வியறிவற்றவனின் உடல்தான் உழவு மாட்டைப் போன்று வளர்ந்து முதுமையடைகிறது. அவனது அறிவு வளர்வதில்லை. இளமையில் தூய வாழ்க்கை வாழாமலும் செல்வம் சேர்க்காமலும் உள்ளவன் மீன் இல்லாக் குளத்தில் இரைதேடும் கிழட்டுக் கொக்கு போன்றும் சிதைந்த வில்லைப்போன்றும் கடந்த காலத்தை எண்ணி ஏக்கம் கொள்வான்.

12. ஆன்மவியல்

பிறருக்கு உபதேசிப்பவர் முதலில் தங்களை நெறியில் நிறுத்திக் கொள்ள வேண்டும். பின்னரே பிறருக்கு உபதேசிக்க வேண்டும். ஒருவனுக்கு அவனே தலைவன். வேறொருவன் தலைவனாக முடியாது. ஒருவனது பாவம் அவனுக்குள்ளேயே தோன்றி அவனாலேயே செய்யப்பட்டு அது அவனையே அறுக்கிறது. தீய செயல்களைச் செய்வது எளிது. நல்லனவற்றைச் செய்வது கடினம். அறிவிலிகள் தங்கள் மூடத்தனத்தால் சான்றோரைப் பழித்துத் தன்னைத்தானே அழித்துக் கொள்கின்றனர். பிறருடைய நலனுக்காக அவர்கள் எவ்வளவு பெரியவர்களாக இருப்பினும் தனது சொந்த நலனை இழக்கத் துணியக் கூடாது. தன்னுடைய சொந்த நலன் எதுவெனத் தெரிந்து அதில் முழுமையுடன் முயல வேண்டும்.

13. உலகவியல்

நீர்மேல் குமிழ்போல் நிலையற்றது எனக் கருதி இவ்வுலகைப் பார்ப்பவனை மரணம் நெருங்காது. தீய செயல்களைத் தவிர்த்து நற்செயல்களையே செய்பவர்கள் இவ்வுலகிலும் மறுவுலகிலும்

இன்பமடைகின்றனர். முன்னர் செய்த தீய செயல்கள் அனைத்தையும் தன் நற்செயல்களால் மறைத்தொழித்த ஒருவன் மேகத்தினின்றும் விடுபட்ட நிலவைப் போன்று ஒளிர்கிறான். அறங்களை மதியாதவனும் பொய்யையே துணையாகக் கொண்டவனும் மறுவுலகச் சிந்தையற்றவனுமான ஒருவனுக்குச் செய்யவியலாத பாவம் ஏதும் இல்லை. இவ்வுலகையே ஆள்வதாயினும் சுவர்க்கம் கிட்டினும் பிரபஞ்சம் முழுவதற்கும் தனித்தலைவன் ஆயினும் அவற்றையெல்லாம் விட சோதபன்ன நிலையடைதலே சிறந்தது.

## 14. புத்தர் இயல்

மானிடராய்ப் பிறத்தல் அரிது. மரணத்திற்குட்பட்ட மனித வாழ்வு கடினமானது. உயரிய உண்மைகளைக் கேட்டல் அதனினும் கடிது, அவருள்ளும் சிலரே புத்தராகத் தோன்றுவர். பாவம் தவிர்த்து நல்லன பெருக்கி, மனத்தைத் தூய்மைப் படுத்துக. பொறுமையைக் கடைப்பிடித்தல் மிகச் சிறந்த துறவாகும். நிர்வாணம் அடைவதே அனைத்துள்ளும் மேலானது. பிற உயிரைக் கொல்பவனும் துன்புறுத்துபவனும் துறவியாகமாட்டான். பிறரைப் பழிக்காதே. மிதமான உணவுகொண்டு தனிமையில் இருந்து தியானம் செய்க. இவையே புத்தர்களின் அறிவுரைகள். காமவுணர்வுகள் சிறுபோது இன்பம்தந்து பெரிதும் துன்பம் தருவன. மலைக்குகை, காடு முதலியன சரியான அடைக்கலங்களல்ல. புத்தனை அடைக்கலமாகச் சென்றடைந்தவன் உண்மையான அடைக்கலத்தையடைந்து துன்பம், துன்பத்தின் தோற்றம், துன்ப நீக்கம், துன்ப நீக்க நெறிகள் ஆகிய நான்கினையும் அறிந்து கொள்கின்றனர். புத்தர்களைக் காண்பது எளிதன்று. அவர்கள் எல்லா இடங்களிலும் பிறப்பதில்லை. புத்தர்களைக் காண்பதும் இனிமையானது.

## 15. இன்பவியல

வெற்றி பகையை வளர்க்கிறது. தோற்றவன் துன்பத்தில் வாழ்கிறான். ஆசையைவிடப் பெரிய நெருப்பு வேறில்லை. பகையைப் போன்ற குற்றம் மற்றொன்றில்லை. ஐந்து கந்தங்களைப் போன்ற துன்பம் வேறில்லை. பசியே மிகப்பெரிய நோய். மனநிறைவே மிகப்பெரும் செல்வம். நம்பிக்கையே மிகப்பெரும் உறவு. சான்றோரைக் காணலும் உடன் வாழ்தலும் மகிழ்வானது. மூடரின் தொடர்பு நீண்ட துன்பம் தரத்தக்கது.

16. அன்பு இயல்

இவ்வுலகில் எதையும் விருப்புடனோ வெறுப்புடனோ அணுகாதே. விருப்பமானவற்றை அடையாதிருத்தலும் வெறுப்பானவற்றை அடைதலும் துன்பம் தருவன. பற்று, பாசம், வாஞ்சை, காமம், வேட்கை இவற்றினின்றும் துயரமும் அச்சமும் பிறக்கின்றன. இவற்றினின்றும் நீங்கியோர்க்குத் துயரமும் இல்லை. அச்சமும் இல்லை. உண்மையான ஞானிகளையும் அறநெறியில் நிற்போரையும் மக்கள் அன்புடன் போற்றுவர். நல்வினையாளர்களை அவர்களது நல்வினைகள் மறுவுலகில் மகிழ்ந்து வரவேற்கும்.

17. சினவியல்

சினத்தை அன்பால் வெல்க. தீமையை நன்மையால் வெல்க. கஞ்சத்தனத்தைக் கொடையால் வெல்க. பொய்யை உண்மையால் வெல்க. அகிம்சையைக் கடைபிடித்து உடலின் மீதான பற்றுகளைத் துறந்த முனிவர்கள் இறவாப் பெரும் பேறு பெற்றவர்கள். எப்பொழுதும் விழிப்புணர்வுடன், இரவும் பகலும் தம்மைத் தாமே நல்வழியில் நிறுத்திக் கொண்டவர்தம் குற்றங்கள் அழிந்து படுகின்றன. மனம் வாக்கு காயம் ஆகிய மூன்றாலும் உண்டாகும் குற்றங்களைக் காக்க வேண்டும். அறிஞர்கள் உடலை, சொல்லை, மனத்தைக் கட்டுப்படுத்தி ஆள்கின்றனர். அவர்களே உண்மையில் நல்லடக்கமுடையவர்கள்.

18. குற்றவியல்

குற்றங்கள் துடைக்கப்பட்டவர்கள் உயர்ந்தோர் உலகை அடைகின்றனர். அவர்களுக்குப் பிறப்பு இல்லை. தவறான நடத்தை பெண்ணிற்குக் கேடு, கஞ்சத்தனம் செல்வர்களுக்குக் கேடு, இத்தகைய குற்றங்கள் மறுவுலகிலும் துன்பம் பயப்பன. இவை அனைத்திலும் மோசமான குற்றம் அறியாமை. புறங்கூறுவோர் பொய்யுரைப்போர், திருடுவோர், பிறன்மனை நயப்போர், மது அருந்துவோர் ஆகிய இவர்கள் இந்த உலகில் தங்கள் வேரைத் தாங்களே துணித்துக் கொள்கின்றனர். பிறருக்குக் கொடுப்பதைக் கண்டு பொறாமை கொள்பவன் அமைதியடைவதில்லை. பிறர் குற்றங்களையே பார்ப்பவர்கள் சினம் கொள்பவர்களாக உள்ளனர். அவர்கள் தங்கள் குற்றங்களை வளரவிடுகின்றனர்.

## 19. சான்றோர் இயல்

அதிகமாகப் பேசுவதாலேயே ஒருவர் அறிஞர் ஆகிவிடமாட்டார். குறைந்தளவு கற்றிருப்பினும் அதை உணர்ந்து கற்று அதன்படி நிற்பவரே உண்மையில் கற்றவராகிறார். பொறாமையும் வஞ்சகமும் தன்னலமும் உள்ளவர்கள் இனிய பேச்சும் அழகிய தோற்றமும் கொண்டிருப்பதால் நல்லியல்பினர் ஆகார். இத்தகைய குணங்களை வேரோடு களைந்தவரே முதியவர் ஆவர். ஒழுக்கமின்றியும் பொய் பேசியும் திரிபவர் தன் தலையை மழித்துக் கொள்வதனாலேயே துறவியாகார். வேட்கையை நீத்து அனைத்துத் தீமைகளையும் களைந்தவரே துறவியாவார். அறநெறியிலிருந்து வழுவியாரும் மடமையும் அறியாமையும் கொண்டவர்களும் பிச்சையெடுப்பதாலும் மௌனமாக இருப்பதாலும் பிக்குகளாகவோ முனிவர்களாகவோ ஆகார். நன்மை தீமை இரண்டையும் கடந்து பிரம்மச்சரிய நிலையில் நின்றவரும் பாவங்களை நீத்தவருமே பிக்கு என்றும் முனிவர் என்றும் கருதப்படுவர்.

## 20. நெறியியல்

நெறிகளுள் எண்வகை நெறியே உயர்ந்தது. வாய்மைகளுள் நான்கு வாய்மைகளே மேலானவை. அறங்கள் அனைத்திலும் வேட்கையற்ற அறமே உயர்ந்தது. மனிதருள் ஞானக்கண்ணுள்ள புத்தனே தலைசிறந்தவன். ததாகதர்கள் வழியை மட்டும் காட்டுவார்கள். அவ்வழியில் நீயே முனைந்து செயற்படவேண்டும். தோன்றும் பொருட்கள் அனைத்தும் அழியக்கூடியன என்றும், துன்பம் தருவன என்றும் ஆன்மாவற்றன என்றும் கண்டுணர்ந்து கொள்பவனது நெறியே தூய நெறி. சோம்பலும் மந்தபுத்தியும் உள்ளவர்கள் அறிவின் வழியைக் காணமாட்டார்கள். தியானத்தால் ஞானம் பெருகுகிறது. பெண்களின்மேல் ஆண்களுக்குள்ள பற்று சிறு அணுவின் அளவினதாயினும், அதனை அழிக்காது விடின் அது தாய் பசுவிடம் பால் குடிக்கும் கன்றுபோல் பெருகி வளர்ந்துவிடும்.

## 21. பொதுவியல்

சிறிது இன்பத்தை விடுவதன்மூலம் பேரின்பம் கிடைப்பதாயின் அறிஞர்கள் பேரின்பத்தைக் கருதிச் சிற்றின்பத்தை விட்டொழிப்பாராக. செய்ய வேண்டுவனவற்றைச் செய்யாமல்

விடுவதும், செய்யக் கூடாதனவற்றைச் செய்வதுமாக உள்ள அசட்டைத்தனம் கொண்டவர்களிடத்துக் குற்றங்கள் மிகுகின்றன. ஆசை என்னும் தாயையும், ஆணவம் என்னும் தந்தையையும், நிலைவாதம் சூனியவாதம் என்னும் அரசர்களையும் கொன்று புலன்கள் புலன் நுகர்ச்சிகள் என்னும் நாட்டை அதன் பற்றாகிய படைகளுடன் அழித்தவனே பிராமணன். அவனே துன்பங்களற்றவன். விழிப்புணர்வுள்ளவர்கள் புத்தர், அறம், சங்கம் ஆகியவற்றின் பெருமையை உணர்ந்து தியானம் செய்து ஞானியாகின்றனர். அவர்கள் உடலின் நிலையாமையை நினைத்து கொல்லாமையில் மனமகிழ்ந்து தியானத்தை விரும்பியிருந்து ஞானியராகின்றனர். தூய நெறியுடையவன் எங்குச் சென்றாலும் பிறரால் வணங்கப்படுகிறான். அத்தகையவன் இமயம் போன்று வெகுதூரத்தில் இருந்தாலும் எங்கும் தெரியும்படியாக ஒளிவிட்டுத் திகழ்கின்றான்.

## 22. நரகவியல்

துவராடை அணிந்தவர்களுள்ளும் தீயோரும் அடக்கமற்றோருமாகப் பலர் உளர். அத்தகைய தீவினையாளர் நரகம் செல்கின்றனர். பிறன் மனைவியை நாடும் பேதையர் தீவினைப்பயன், அமைதியான தூக்கமின்மை, பிறரால் பழிக்கப்படுதல், நரகம் ஆகிய நான்கு துன்பங்களை அடைகின்றனர். குறையுடன் கூடியதும், சரியான முறையில் செய்யப்படாததுமான செயல்கள், ஒழுக்கமற்ற பிரம்மச்சரியம் இவை உயர்ந்த பலனைத் தாரா. வெட்கப்படக்கூடாததற்கு வெட்கப்பட்டும் வெட்கப்படவேண்டியதற்கு வெட்கப்படாமலும் இருப்பவன் தீய காட்சியினனாய் நரகத்திற்குச் செல்கிறான். தவறல்லாததைத் தவறாகவும் தவறானதைச் சரியானதாகவும் கருதுபவன் நரகத்தை அடைகிறான்.

## 23. யானை இயல்

பிறர் கூறும் வசைச் சொற்களைத் தாங்குவதற்குத் தங்களைப் பழக்கப்படுத்திக் கொண்டவர்கள் மனிதருள் மேலானவர்கள். பெருந்தீனியுடன் தூக்கமும் கொண்டு பன்றிகள் சேற்றில் புரள்வதுபோல் படுக்கையில் சோம்பலுடன் புரண்டு கொண்டு இருக்கும் மூடர்கள் மீண்டும் மீண்டும் பிறந்து கொண்டிருக்கிறார்கள். நல்லொழுக்கமும் நல்லறிவும் உள்ள விவேகமான துணைவன்

கிடைப்பின் அத்துணைவனுடன் தீமைகளை வென்று மகிழ்வுடனும் முழுமனத்துடனும் பழகுக. அத்தகு துணை கிடைக்காவிடின் தனித்து வாழ்வாயாக. மூடருடன் தொடர்பு கொள்ளற்க. துன்புறும் காலத்து உதவும் நண்பர்களைப் பெறல் இனிது. முதுமைவரை ஒழுக்கத்துடன் வாழ்வது இனிது. தீவினையைத் தவிர்த்தல் இனிது.

## 24. வேட்கை இயல்

விழிப்பற்றவனிடம் வேட்கை விரைந்து படர்கிறது. வேட்கையை விட்டவர்களைத் துன்பம் அணுகுவதில்லை. வேட்கை முழுவதும் களையப்படாவிடின் மீண்டும் மீண்டும் அவனைத் துன்பம் தொடர்கிறது. உலக இன்பங்களில் நாட்டம் கொண்டு ஓடுவோன் வேட்கை வயப்படுகிறான். இரும்பினாலோ, மரத்தாலோ, சணலாலோ செய்யப்பட்ட விலங்குகள் உறுதியானவை என அறிஞர்கள் கூறமாட்டார்கள். இவையனைத்தையும் விட ஆசையே பெரிய விலங்கு. வேட்கையை அழிப்பது துக்கங்கள் அனைத்தையும் வெல்கிறது. களைகள் வயல்களைக் கெடுக்கின்றன. காமம், சினம், மயக்கம், வேட்கை ஆகியன மனிதனைக் கெடுக்கின்றன.

## 25. பிக்கு இயல்

ஐம்புலன்களையும் மனத்தையும் அடக்கிய பிக்கு துன்பத்திலிருந்து விடுபட்டவனாகிறான். ஐம்புலன்களையும் அடக்கிச் சமாதி நிலையில் விருப்புற்று மனத்தை ஒருமுகப்படுத்தித் தனிமையில் இன்பம் காண்பவரே பிக்கு ஆவர். அறநெறிப்பட்ட வாழ்க்கையும், அறநெறியில் இன்பமும், அறநெறிப்பட்ட சிந்தனையும் கொண்டு எப்பொழுதும் அறத்தை மறவாத பிக்கு உயரிய அறத்தினின்றும் வீழ்ச்சியடைவதில்லை. அருவுருவானவற்றில் நான் எனது என்னும் எண்ணமின்றி அவை உண்மையற்றவை என்று எண்ணி, துன்பம் கொள்ளாமலும் இருப்பவரே பிக்கு. தனிமையை நாடியவரும், அமைதியான மனத்தினரும் உண்மையான அறத்தினை நன்கு அறிந்தவருமான பிக்கு பிறரினும் மேலான இன்பத்தை அடைகிறார். முழுமையான மகிழ்ச்சியும் புத்தரின் அறிவுரைகளில் ஆழ்ந்த நம்பிக்கையும் உடைய பிக்குகள் உலகத் துன்பத்தைத் துறந்து பேரின்ப நிலையை அடைகின்றனர். இளமையில் புத்த நெறியில் த்ன்னை

அர்ப்பணித்துக்கொண்ட பிக்கு மேகத்தினின்றும் விடுபட்ட நிலவைப்போன்று ஒளிர்கிறார்.

## 26. பிராமணர் இயல்

நான், எனது என்ற எண்ணம் இன்றியும் புலன்களின் வயப்படாமலும், ஆசையாம் கட்டுகளை அறுத்தவருமானவரே பிராமணர் எனப்படுவார். தீமைகளைத் துறந்து அமைதியில் வாழ்பவர் எவரோ அவரே பிராமணர். பிராமணரை அடிப்பது வெட்கக்கேடானது. ஆனால் அவ்வாறு அடித்தவர்மீது அவர் சினம் கொள்வது அதனினும் வெட்கக்கேடானது. பிராமணர் பழி உணர்விலிருந்து தன்னைக் காத்துக்கொள்ள வேண்டும். எவரொருவர் மனம், வாக்கு, காயம் இம்மூன்றாலும் தீவினைகளைத் தவிர்த்தவரோ அவரே பிராமணர் எனப்படத்தக்கவர். சடைமுடியாலும் குலத்தாலும், பிறப்பாலும் ஒருவர் பிராமணர் ஆவதில்லை. அழுக்கடைந்த கந்தையணிந்து, உடலில் நரம்புகள் வெளியே தெரியக் காட்டில் தனித்திருந்து தவம் செய்பவரே பிராமணர். இனத்தால் ஒருவர் பிராமணராவதில்லை. ஆசையென்னும் விலங்குகளைத் தகர்த்து அச்சமற்றிருப்பவரே பிராமணர். தமக்கு இழைக்கப்படும் தீமைகளை மனத்தாங்கலின்றி சகித்துக்கொண்டு பொறுமையே துணையாக இருப்பவரே பிராமணர்.

இல்லறத்தாருடனோ துறவியரிடமோ நெருக்கமான தொடர்பின்றி ஆசைகளைத் துறந்தவரே பிராமணர். பிற உயிர்களைத் துன்புறுத்தாது இருப்பவரே பிராமணர். ஏமாற்றங்களுக்கிடையே பொறுமையும், வன்முறையாளர்களிடையே அமைதியும் பற்றினரிடையே பற்றற்றும் இருப்பவரே பிராமணர். பிறர் பொருளை அது எத்தன்மையாயினும் கைக்கொள்ளா திருப்பவரே பிராமணர். நிலவைப் போன்று களங்கமற்றத் தூய்மையானவராகவும், அமைதியானவராகவும் பாவங்களால் சூழப்படாதவராகவும், பிறப்பிற்குரிய ஆசையை அறுத்தவரும் எவரோ அவரே பிராமணர். தனது முற்பிறவிகளை அறிந்தவரும் சுவர்க்க நரகங்களின் இயல்பினை அறிந்தவரும், பிறவியைக் கடந்தவரும் எவரோ அவரே பிராமணர்.

### தம்மபதம் உரை நூல்

இலக்கியச் சுவையிலும் சமயம் மற்றும் தத்துவ விளக்கங்களிலும் சிறப்புற்று விளங்கும் தம்மபதம் நூலுக்குப் புத்தகோசரால் பாலியில் உரைநூல் ஒன்று எழுதப் பெற்றது. இவ்வுரை சிங்களத்திலுள்ள உரைநூலை அடிப்படையாகக் கொண்டது என்பர். பொதுவாக இவ்வுரை கி.பி.4 அல்லது 5-ஆம் நூற்றாண்டில் எழுதப்பெற்றிருக்கலாம் எனக் கருதப்படுகிறது. மூலநூலைப் போன்றே இவ்வுரை நூலும் தெளிவாகவும் சுவையாகவும் அமைந்துள்ளது. தம்மபதப் பாடல்கள் கூறப்பெற்ற சூழல்களை இவ்வுரை நூலில்தான் விளக்கமாகக் காணமுடிகிறது. ஒவ்வொரு பாடலும் புத்தர் எங்குத் தங்கியிருக்கும் பொழுது யார் பொருட்டுக் கூறப் பெற்றது என்னும் குறிப்பும் பாடல் கூறப்பெற்ற சூழல் பற்றிய விளக்கமும் தரப்பெற்றுள்ளது. பாடலும் சொற்பொருளும் பின் தரப்படுகின்றன. இலக்கியச் சுவை, சமய தத்துவங்களைத் தவிர அக்காலத்து அரசியல், சமுதாய மற்றும் பண்பாட்டுச் செய்திகளும் இதில் பெரிதும் காணக் கிடைக்கின்றன. புத்தகோசர் தம்மபதத்தைத் தவிர பிற திரிபிடக நூல்களுக்கும் உரை எழுதியுள்ளார். ஏனைய இரு திரிபிடக உரையாசிரியர்களைவிட இவரே மிகுதியான நூல்களுக்கு உரை எழுதியவராவார். இவர் உரை நூல்களைத் தவிர விசுத்திமக்க (Visuddhi Magga) என்னும் நூலும் எழுதியுள்ளார். புத்த கயாவிற்கு அருகிலுள்ள சிற்றூரில் பிறந்த இவர், தம் ஆசிரியர் இரேவத தேரரின் அறிரைப்படி இலங்கைக்குச் சென்றார். அங்குச் சங்கபாலரிடம் திரிபிடகங்களுக்கான சிங்கள உரை நூல்களைக் கற்றுத் தேர்ந்து விசுத்திமக்க (Visuddhi Magga) நூலை எழுதினார். நூலது சிறப்பு இவருக்குப் பெரும் பாராட்டினை ஈட்டித்தந்தது. பின்னர் சிங்களத்திலுள்ள திரிபிடக உரை நூல்களின் அடிப்படையில் பாலியில் உரை எழுதத் தொடங்கினார். அக்காலம் முழுவதும் அவர் இலங்கையில் உள்ள அநுராதபுரத்தில் கந்தாகாரவிகாரத்தில் (Ganthākāra Vihāra) தங்கியிருந்தார்[6]. அவ்வாறு எழுதப்பெற்ற உரைகளுள் ஒன்றே தம்மபத அட்டகதா (Dhammapada aṭṭhakathā) எனப்படும் தம்மபத உரை நூலாகும்.

### பிற மொழிகளில் தம்மபதம்

பௌத்த சமத்தில் செல்வாக்கு இந்தியாவிலும் பிறநாடுகளிலும் பரவத் தொடங்கியதும் திரிபிடக நூல்களும் உடன்

கொண்டு செல்லப்பட்டன. அவ்வகையில் பௌத்த சமய த்தின் பிழிவான தம்மபதம் பிற மொழிகளில் விரும்பி ஏற்கப்பெற்றது. அவ்வாறு பழமையான ஐந்து மொழிகளில் தம்மபதம் நூல் இருப்பதாகத தெரிகிறது.

அவை.

1. சமஸ்கிருதம்
2. புதிய சமஸ்கிருதம்
3. பிராகிருதம்
4. சீனம்
5. திபெத்தியம்.

சமஸ்கிருத மொழியில் இரண்டு பழமையான மொழிபெயர்ப்புகள் இருந்ததாகத் தெரிகிறது. அவற்றில் ஒன்று சீனமொழியில் உள்ள சூஹ் - யா- சிங் (Chiuh Yau ching) என்னும் மொழிபெயர்ப்பு நூலுக்கு அடிப்படை எனக் கூறப்படுகிறது[7]. இந்நூல் தற்போது கிடைக்கவில்லை. எனினும் சீன நூலில் (சூஹ் -யா- சிங்) முன்னுரையில் கூறப்பட்டுள்ள செய்தி வாயிலாகவே இந்நூலைப் பற்றி அறிய முடிகிறது. சமஸ்கிருதத்தில் உள்ள மற்றொரு தம்மபத நூல் உதானவர்கம் (Udānavarga) ஆகும். உதானவர்கமே சீன மொழியில் உள்ள சூஹ்யா சிங்கிற்கு மூலநூல் என்பார் திரு. ராக்ஹில் ( Rockhill Rockhill`s udānavarga P.X). இதுவே பௌத்த சமயப் பிரிவுகளுள் ஒன்றான சர்வாஸ்திவாதத்தைச் சார்ந்தவர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட நூலாகும். உதானவர்கத்தில் 375 பாடல்கள் பாலியில் உள்ள தம்மபதத்திற்கு இணையாக உள்ளன. இந்நூலும் முழுமையாகக் கிடைக்கவில்லை.

இவ்விரண்டு நூல்களையும் தவிர மற்றும் இரண்டு மொழிபெயர்ப்புகளும் சமஸ்கிருதத்தில் உள்ளன.

அவை.

1. இலங்கையைச் சேர்ந்த வனரத்தின (Vanaratna) என்பவரது மொழிபெயர்ப்பு (1363- 1468).

2. பௌத்த சமயப் பிரிவினருள் ஒரு பிரிவினரான லோகுத்தரவாதிகளால் ஏற்றுக்கொள்ளப்பட்ட சமஸ்கிருத தம்மபதம் ஒன்று இருந்ததாகத் தெரிகிறது. இந்நூல் முழுமையாகக் கிடைக்கவில்லை. ஆனால் இதன் இரண்டு இயல்களும் வேறுசில தனிப்பாடல்களும் மகாவஸ்து நூலில் மேற்கோளாகக் காட்டப்பட்டுள்ளன.

பிற்கால மொழிபெயர்ப்பாக அவதூத் கிஷோர் மொழிபெயர்த்த நூல் ஒன்று வாராணாசியிலிருந்து வெளியிடப்பட்டது. மற்றொன்று திரு இராமச்சந்துரு என்பவரால் மொழிபெயர்க்கப்பட்டு ஹைதராபாத்திலிருந்து வெளியிடப்பட்டது.

**சீன மொழிபெயர்ப்பு**

சீன மொழியில் தம்மபதம் பலமுறை மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. அவற்றுள் ஒன்று சூஹ் – யா – சிங் (Chu - yau - ching). இது சமஸ்கிருத மொழியில் உள்ள உதானவர்கத்தின் மொழிபெயர்ப்பு என ராக்உறில் குறிப்பிடுகிறார். மற்றொன்று பா - கியூ - சிங் (Fa - kheu - ching). இந்நூல் கலப்புச் சமஸ்கிருதத்திலிருந்து மொழிபெயர்க்கப்பட்டது எனக் கருதப்படுகிறது. இதன் மூலநூல் எனக் கருதப்படும் கலப்புச் சமஸ்கிருத நூல் தற்போது கிடைக்கவில்லை. ஆனால் அந்நூல் கி.பி. 223 - இல் - வெய் - சி - லான் (Wei - Chi - Lan) என்னும் சீன பிக்குவால் இந்தியாவிலிருந்து சீனாவிற்குக் கொண்டு செல்லப்பெற்று மொழிபெயர்க்கப் பெற்றது[8]. இந்நூல் சாமுவேல் பீல் அவர்களால் 1878 -இல் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப் பெற்றது. மூன்றாவது சீனநூல் பா-சு-பி - உசிங் (Fa - chu - pi uching) இதில் சில பாடல்களே கதைகளுடன் தற்போது கிடைத்துள்ளன. நான்காவது நூல் பா-சி -யாவ் -சுங் (Fa - chi - yao - sung) இந்நூல் பாலிமொழி தம்மபதத்துடன் பெரிதும் ஒத்துள்ளது.

சீனமொழி பெயர்ப்பான பா- கியூ -சிங் பாலி தம்மபதத்துடன் ஒத்துள்ளது. பாலி தம்மபத இயல்களுடன் தொடக்கத்தில் 8 இயல்களும் இடையில் ஓர் இயலும் (33- ஆம் இயல்), இறுதியில் நான்கு இயல்களுமாக 13 இயல்கள் அதிகமாகச் சேர்த்து மொத்தம் 39 இயல்கள் இந்நூலில் உள்ளன. சீனமொழி பெயர்ப்பில் பாலி தம்மபதத்திற்கு இணையான இயல்களில் மட்டும் 79

3

மிகைப்பாடல்கள் உள்ளன. சீன மொழிபெயர்ப்பில் 39 இயல்களில் மொத்தம் 760 பாடல்கள் உள்ளன.

**பிராகிருத தம்மபதம்**

பிராகிருதத்தில் ஒன்றான காந்தாரி பிரகிருதத்தில் ஒரு தம்மபத நூல் கிடைக்கிறது. இது கரோஷ்டி (Kahroshti) எழுத்து வடிவத்தில் உள்ளது. இந்நூல் முழுமையாகக் கிடைக்கவில்லை. கிடைத்த அளவில் 342 பாடல்கள் உள்ளன. இது மொத்த அளவில் எட்டில் ஐந்து பாகமேயாகும் எனக் கணக்கிடுகின்றனர். மொத்தம் 520 முதல் 560 பாடல்கள் வரை இருத்திருக்கக்கூடும் எனக் கருதப்படுகிறது. இதை பருவாவும் மித்ராவும் சேர்ந்து 1921-இல் வெளியிட்டனர். பெய்லி (H.W. Bailey) 1945 -இல் இதை வெளியிட்டார். இந்நூலில் 232 பாடல்கள் பாலி தம்மபதத்துடன் ஒத்துள்ளன.

**திபெத்திய தம்மபதம்**

திபெத்திய மொழியில் தம்மபதம் 28 பகுதிகளாக வெளியாகியுள்ளது. இது உதானவர்கம் என அழைக்கப்படுகிறது. இந்நூலில் 33 இயல்களில் 1000 பாடல்களுக்கு மேல் உள்ளதாகத் தெரிகிறது. இவற்றில் நான்கில் ஒரு பங்கு பாலிமொழி தம்மபதத்திற்கு இணையாக உள்ளது.

**மிகைப்பாடல்களின் காரணம்**

பாலிமொழியில் தம்மபதத்தைத் தொகுத்த ஆசிரியர் முப்பிடகங்களில் பல பகுதிகளின்றும் எடுத்துத் தொகுத்த பாடல்களேயன்றி அவர் சேர்க்காமல் விட்ட பாடல்களையும் பிறமொழியில் தொகுத்த ஆசிரியர்கள் சேர்த்துக் கொண்டனர். உதாரணமாகச் சீன நூலான பா - கியூ - சிங்கின் இறுதி இயலான நல்லூழ் குத்தக பாடத்தில் (Kuddhaka pātha) உள்ள மங்கல சுத்தத்தின் (Mangala Sutta) மொழிபெயர்ப்பாகும். 38- ஆவது இயலான சமயப்பலன் மகாமங்கல ஜாதகத்தினின்றும் எடுக்கப்பெற்றது எனத் தெரிகிறது. தவிர வேறுசில பாடல்களும் மொழிபெயர்ப்பு ஆசிரியரால் புதிதாக இயற்றிச் சேர்க்கப்பெற்றன. இன்னும் சில பாடல்கள் ஏற்கனவே உள்ள பாடல்களின் விரிவாகவும் வேறுவகையான அமைப்பாகவும் உள்ளன[9].

### பிற்கால மொழிபெயர்ப்புகள்

பிற்காலத்தில் பௌத்த சமயம் மேலை நாடுகளின் கவனத்தை ஈர்க்கத் தொடங்கிய பின்னர், தம்மபதம் பலமொழிகளிலும் பலமுறை மொழிபெயர்க்கப்பட்டது. அது பற்றிய விபரத்தைக் கீழே காணலாம்.

1. **ஆங்கிலம்**

| மொழிபெயர்ப்பாளர் | வெளியீடு | ஆண்டு |
|---|---|---|
| 1. மாக்ஸ்முல்லர் | ஆக்ஸ்போர்டு | 1870 |
| 2. ஜேம்ஸ் கிரே | ஆசிரியர் | 1887 |
| 3. F.C. உட்வர்டு | ஆசிரியர் | 1929 |
| 4. திருமதி ரைஸ்டேவிட்ஸ் | பாலிடெக்ஸ்ட் சொஸைட்டி | 1931 |
| 5. என். கே. பகவதி | பம்பாய் புத்த சங்கம் | 1935 |
| 6. பி.எல். வைத்யா | கீழைநாட்டுப் புத்தகநிறுவன உதவியுடன் | 1934 |
| 7. நாரத தேரர் | ஆசிரியர் | 1940 |
| 8. டாக்டர் எஸ். இராதாகிருட்டினன் | ஆக்ஸ்போர்டு | 1950 |
| 9. குன்கன்ராஜா | ஆசிரியர் | 1956 |
| 10. பி.ஸ்ரீராமசந்துருடு | ஆசிரியர் | 1976 |

இவற்றைத் தவிர நாற்பதுக்கும் மேற்பட்ட மொழிபெயர்ப்புகள் ஆங்கிலத்தில் வந்துள்ளதாகத் தெரிகிறது.

2. **பிரெஞ்சு**

பெர்னாண்டு ஹூ (Fernand Hu) 1876 -இல் தனது பிரெஞ்சு மொழி பெயர்ப்பை வெளியிட்டார்.

3. ஜெர்மன்

1. வெபர் (Weber) 1860 - இல் தனது ஜெர்மானிய மொழிபெயர்ப்பை வெளியிட்டார்.

2. சுல்ட்ஸ் (Schultze) 1885-ல் ஆங்கிலத்திலிருந்து மொழிபெயர்த்து வெளியிட்டார்.

3. நியூமென் (Newmann) 1893 -இல் தனது மொழிபெயர்ப்பை வெளியிட்டார்.

4. 1919 -இல் ஒரு மொழிபெயர்ப்பு பெர்லினிலிருந்து வெளியானது. ஆசிரியர் பெயர் தெரியவில்லை.

4. இத்தாலியன்

பவோலினி ( Pavolini) 1908 -இல் தம்மபதத்தை இத்தாலிய மொழியில் மொழிபெயர்த்தார்.

5. போலிஷ்

மிகால்ஸ்கி (Michalski) 1925-இல் தம்மபதத்தைப் போலிஷ் மொழியில் பெயர்த்தார்.

6. லத்தீன்

டாக்டர் பாஸ்போல் (Fausboll) 1885 - இல் லத்தீன் மொழியில் மொழிபெயர்த்தார். இவர்தான் முதன்முதலாகப் பாலிதம்மபத மூலப் பாடல்களை உரோமன் எழுத்தில் எழுதித் தன் மொழிபெயர்ப்புடன் சேர்த்து வெளியிட்டார்.

7. இந்தி

1. ராகுல சாங்கிருத்தியாயன் 1933 -இல் தம்மபதத்தை இந்தியில் மொழிபெயர்த்தார்.

2. சத்திய பிரகாஷ் சர்மா 1973 -இல் தனது இந்தி மொழிபெயர்ப்பை வெளியிட்டார்.

3. பிரபுல்ல சந்திரராய் தம்மபத பாடல்களையும் பாடல்கள்தம் சூழல்களையும் கவிதையில் மொழிபெயர்த்து 1981 -இல் வெளியிட்டார்.

4. இவற்றைத் தவிர கிஷோர் நாராயணன் என்பவரும் ஒரு மொழிபெயர்ப்பைத் தந்துள்ளதாகத் தெரிகிறது.

8. கன்னடம்

1. அஸ்வத்த நாராயணராவ் 1908 -இல் தம்மபதத்தைக் கன்னடத்தில் மொழி பெயர்த்துள்ளார்.

2. திரு.இராஜரத்தினம் 1945 -இல் ஒரு மொழிபெயர்ப்பைத் தந்துள்ளார்.

3. ஸ்ரீரங்கராஜின் கன்னட மொழிபெயர்ப்பு 1984 - இல் வெளியானது.

9. தெலுங்கு

1. சர்லா கணபதி சாஸ்திரி 1953 -இல் தம்மபதத்தைத் தெலுங்கில் மொழிபெயர்த்துள்ளார்.

2. வேதுல சூரிய நாராயண சாஸ்திரி ஒரு மொழிபெயர்ப்பைத் தந்துள்ளார்.

3. மொனகா பிச்சி ரெட்டி என்பவர் ஒரு மொழிபெயர்ப்பைத் தந்துள்ளார்.

10. தமிழில் தம்மபதம்

பௌத்த சமயம் தமிழகத்திற்கு வந்த காலத்திலேயே தம்மபதமும் தமிழகத்திற்கு வந்திருக்க வேண்டும். எனினும் தம்மபத நூலைத் தமிழில் முழுமையாக மொழிபெயர்த்ததற்கான சான்று ஏதுவும் கிடைக்கவில்லை.

பிக்கு சோமானந்தர் 1950 -இல் மொழிபெயர்த்து வெளியிட்ட தம்மபதமே நமக்குக் கிடைத்துள்ளனவற்றில் முதல் மொழிபெயர்ப்பாகும். இவர் தம்மபதம் மூல பாடல்களையும் தமிழ்

எழுத்தில் எழுதிச் சேர்த்துள்ளார். இவருக்கு அடுத்தபடியாக 1952 -இல் மும்மணி என்பவரது தம்மபத மொழிபெயர்ப்பு வெளியானது. 1954 - இல் ப. இராமசாமி மற்றொரு மொழிபெயர்ப்பைத் தந்துள்ளார். இவரது மொழிபெயர்ப்பில் 421 பாடல்களே உள்ளன. இதற்குப்பின் அ.லெ. நடராஜன் ஒரு மொழிபெயர்ப்பைத் தந்துள்ளார். இவற்றைத்தவிர சிலர் தேர்ந்தெடுத்த சில பாடல்களை மட்டும் மொழிபெயர்த்துத் தந்துள்ளதாகத் தெரிகிறது.

## தமிழ்ப் பல்கலைக் கழக மொழிபெயர்ப்பு

இந்தப் புதிய மொழிபெயர்ப்புத் தமிழ்ப் பல்கலைக் கழக மொழிபெயர்ப்புத் துறைக்காகச் செய்யப்பெற்றது. பாலி மொழியிலிருந்து நேரடியாக மொழிபெயர்க்கப்பட்டது. இதன் சிறப்பாகும். இதில் பாலி மூலத்தில் உள்ள பாடல்கள் உரோமன் எழுத்தில் கொடுக்கப்பட்டுள்ளன. அவ்வப்பாடல்களுக்குக் கீழ் அவற்றுக்கான மொழிபெயர்ப்பு தரப்பட்டுள்ளது. அத்துடன் தம்மபதக் கருத்துக்களை நன்கு புரிந்து கொள்ளும் வகையில் பாடல்கள் கூறப்பெற்ற சூழல்களும் சுருக்கமாக அமைகின்றன. இவை தம்மபத உரைநூலிருந்து (Dhammapada Aṭṭhakathā) எடுக்கப்பட்டன. இதற்கு அடுத்ததாக அரிய சொற்களுக்கான விளக்கமும் தேவையான இடங்களில் இடம்பெற்றுள்ளன. ஏற்ற இடங்களில் தமிழ் இலக்கியங்களிலிருந்து பொருத்தமான மேற்கோள்களும் தரப்பெற்றுள்ளன. ஆக இந்நூல் கீழ்க்கண்டவாறு அமைந்துள்ளது.

1. பாடல் (உரோமன் எழுத்தில்)
2. மொழிபெயர்ப்பு
3. சூழல்
4. விளக்கம்
5. மேற்கோள்

## மொழிபெயர்ப்பில் சிக்கல்களும் தீர்வுகளும்

மொழிபெயர்ப்பு என்பது இரு மொழிகளுக்கிடையே அமைக்கப்படும் பாலம். இரண்டு வேறுபட்ட இலக்கண

அமைப்புகளும், மரபுகளும் பண்பாடுகளும் கொண்ட மொழிகளுக்கிடையே இத்தகைய பாலம் அமைப்பது எளிதன்று. ஒன்றின் இலக்கண அமைப்பு மற்றொன்றிற்குப் பொருந்தாது. ஒன்றன் மரபு மற்றொன்றில் அறியப்படாததாகவும் இருக்கலாம். அல்லது வேறு புதிய மரபுகளும் இருக்கலாம். இவ்விரண்டையும் இணைத்து ஒன்றில் உள்ள இலக்கியத்தை அதன் சுவையும் இயல்பும் கெடாதவாறு மற்றொரு மொழியில் அதன் மரபுகளையும் காத்துத் தருவது என்பது குதிரையையும் காளையையும் ஒரே வண்டியில் பூட்டி ஓடச் செய்வது போன்று சிக்கலானது. ஆனால் இயலாததன்று. மொழிபெயர்ப்பில் ஏற்படும் சிக்கல்களை உரிய முறையில் அணுகினால் அதிகமான பாதிப்பின்றி அவற்றைத் தீர்த்துக் கொள்ள இயலும். அவ்வகையில் மொழிபெயர்ப்பில் தோன்றிய சிக்கல்களையும் அவற்றை அணுகிய முறையும் சுருக்கமாகக் காணலாம்.

### வடிவம்

தம்மபத மொழிபெயர்ப்பில் முதல் சிக்கல் மூலநூல் செய்யுள் வடிவில் இருப்பது தான். பாலி மொழியில்செய்யுள் வடிவில் உள்ள நூல் ஒன்றைத் தமிழ் மொழியில் அதே செய்யுள் வடிவில் தருவது என்பது சிக்கலானது. இரண்டு மொழியிலும் யாப்பமைதி வேறுவேறாகும். எனவே பாலிமொழியில் உள்ளதைத் தமிழில் கொண்டு வரும்பொழுது தமிழின் யாப்பமைதிக்கு ஏற்பக் மாற்றியமைக்கவேண்டும்.

அவ்வாறு மாற்றும்பொழுது சில சொற்களை விடுப்பதும் சிலவற்றைச் சேர்ப்பதும் தவிர்க்க இயலாததாகிவிடும். அவ்வாறெனில் மூல மொழியில் உள்ளனவற்றை கருத்துச் சிதைவின்றி அவ்வாறே கொண்டுவரவேணடும் என்ற நோக்கம் பாழாகலாம். இச்சிக்கல்களைத் தவிர்க்க மூலத்தில் செய்யுள் நடையில் உள்ள கருத்தினைத் தமிழில் உரைநடை வடிவில் கொடுக்கலாம் என்று தீர்மானிக்கப் பட்டது. அவ்வாறு தரும்பொழுது வடிவம் தான் மாறுபடுகிறதேயன்றி மிக முக்கியமானதான கருத்துச் சிதைவு தவிர்க்கப்படுகிறது.

### தொடரமைப்பு

ஒரு கருத்தைச் செய்யுள் வடிவத்தில் கூறும்பொழுது யாப்பமைதி, நடையழகு, சுவை, கருத்தில் அழுத்தம் ஆகிய

காரணங்களுக்காகச் சொல்லவரும் கருத்தின் அமைப்பை முன்னும் பின்னுமாக மாற்றியமைக்கும் உரிமை (Poetic Right) கவிஞனுக்கு உண்டு. உதாரணமாக

இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு (குறள் 5)

என்னும் திருக்குறள் பொருளமதிப்படி இறைவன் பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு இருள்சேர் இருவினையும் சேரா என்று இருக்க வேண்டும். ஆனால் இவ்வாறு மாற்றியமைப்பது முன்னர் கூறியபடி கவிஞரின் உரிமை. ஆனால் இவ்வாறு அமைந்துள்ள செய்யுளை மொழிபெயர்க்கும்பொழுது அதே அமைப்பில் கூற முயல்வது பல சமயங்களில் சரியான முறையாக அமையாது. அதிலும் செய்யுள் வடிவில் உள்ளதை உரைநடை வடிவில் மொழிபெயர்க்கும்பொழுது மூலநூல் கருத்தைச் சரியான முறையில் இலக்கு மொழியில் கொடுத்ததாக ஆகாது. எனவே அவற்றை தொடரியல் அமைப்பின்படி மாற்றித் தரவேண்டியதாகிறது. உதாரணமாக

Muhuttam api ce viññū
panditaṁ payirupāsati
Kippaṁ dhammaṁ vijānāti
Jivhā sūparasaṁ yathā (தம்மபதம் 65)

என்னும் செய்யுளை அதே அமைப்பின்படி மொழிபெயர்ப்பதாயின்

சிறிது காலமே அறிவுடையோர்
சான்றோருடன் பழகியிருந்தாலும்
நல்லறங்களை அறிந்து கொள்கின்றனர்
நாக்கு குழம்பின் சுவையைப் போன்று

என மொழிபெயர்க்க வேண்டும். இவ்வாறு மொழிபெயர்ப்பதால் கருத்துத் தெளிவு கிடைக்கவில்லையாதலின் கருத்துத் தெளிவிற்காக, நாவானது குழம்பின் சுவையை (நாவில் வைத்தவுடன்) அறிந்து கொள்வதுபோல அறிவுடையோர் சிறிது

காலமே சான்றோருடன் பழகியிருந்தாலும் நல்லறங்களை அறிந்து கொள்கின்றனர் எனத் தொடர் அமைப்பை மாற்றித் தரவேண்டியதாகிறது.

சொல்பயன்பாடு

சாதாரணமாக மொழிபெயர்ப்பில் தோன்றும் சிக்கல்களுள் முக்கியமான ஒன்று கலைச்சொற்களை மொழிபெயர்த்தலில் தோன்றும் சிக்கலாகும். ஒரு மொழியில் உள்ள சொற்கள் அனைத்திற்கும் மற்றொரு மொழியில் இணைச்சொற்கள் கிடைத்துவிடுவதில்லை. அதிலும் கலைச் சொற்களுக்கு இணையான சொற்கள் மற்றொரு மொழியில் கிடைப்பது அரிது. இதற்குக் காரணம், இரண்டு மொழிகளுக்கிடையே உள்ள மரபு மற்றும் பண்பாட்டு வேறுபாடுகளே ஆகும். இத்தகைய சிக்கல் தம்மபத மொழிபெயர்ப்பிலும் தோன்றியது.

பாலிமொழியில் கையாளப்பெறும் Dhamma, Citta, Tanhā, Pāpa, Puñña போன்ற கலைச்சொற்களுக்கு இணையாகத் தமிழில் அறம், மனம், வேட்கை, தீவினை, நல்வினை என்ற சொற்கள் வழக்கில் இருப்பதால் இவற்றில் சிக்கல் ஏதும் தோன்றவில்லை. ஆனால் Atta, Tathāgatā, Sugata, Bhikkhu போன்ற சொற்களுக்கு நேரடியான இணைச்சொற்கள் தமிழில் கிடைக்கவில்லை. எனவே இத்தகு சொற்களை மொழிபெயர்க்கும் பொழுது சிக்கல் எழுந்தது. அவற்றுள் Atta என்னும் சொல் சாதாரணமாகத் 'தான்' 'தன்' என்னும் பொருளைத் தரும். ஆனால் இதுவே கலைச் சொல்லாகப் பயன்படும்பொழுது பொருளின் ஆழம் அதிகமாகிறது. அப்பொழுது இது ஆன்மா என்பதற்கு இணையான பொருளைத் தருகிறது. ஆனால் பௌத்த சமயக் கோட்பாடு ஆன்மா என ஒன்றை ஏற்றுக் கொள்வதில்லை. எனவே இதை ஆன்மா என்று மொழிபெயர்ப்பது முற்றமுழுக்கப் பொருத்தமான மொழிபெயர்ப்பு அன்று. எனினும் ஆன்மாவிற்கு இணையான ஆனால் ஆன்மா அல்லாத ஒன்றைக் குறிக்கும் சொல் தமிழில் கிடைக்கவில்லையாதலால் அதனை ஆன்மா என்றே மொழிபெயர்க்க வேண்டியதாயிற்று.

Tathāgatā, Sugata, Bhikkhu போன்ற சொற்களை முன்னைய வகையிலும் மொழிபெயர்ப்பது இயலாததாகிறது. இச்சொற்களை

சொற்பெயர்ப்புப்படி நேரடியாக மொழிபெயர்த்தால் அவை குறிக்க வந்த பொருள் விளக்கம் பெறாதாதலின் அச்சொற்கள் கடன் சொற்களாகக் கொள்ளப்பட்டு ததாகதர், சுகதர், பிக்கு என்றே பயன்படுத்தப்படுகின்றன. மணிமேகலை ஆசிரியர் சீத்தலைச் சாத்தனாரும் இச்சொற்களை இதே முறையில் கையாண்டுள்ளார் என்பது இங்கு நோக்கத்தக்கது. தாவரங்கள், விலங்குகள் போன்றவற்றின் பெயர்கள் வரும் இடங்களில் இயன்றமட்டும் அவற்றிற்குரிய தமிழ்ப் பெயர்களே பயன்படுத்தப்பட்டுள்ளன. எனினும் சில தாவரங்கள் பெயர்களை அவ்வாறு மொழிபெயர்க்க இயலவில்லை. அச்சொல் குறிக்கும் தாவரம் எது என அறிய இயலாத நிலையில் அப்பெயர் அதே வடிவத்தில் கையாளப்பட்டுள்ளன. எடுத்துக்காட்டு, கட்டகப்பூண்டு, மாலுவாக் கொடி.

### சிலேடைப்பொருள்

சில இடங்களில் மூலமொழியில் சொற்கள் சிலேடைப்பொருளில் கையாளப்படும்பொழுது அச்சொல் குறித்து நிற்கும் இரண்டு பொருளையும் குறிக்கக்கூடிய ஒரு சொல் இலக்கு மொழியில் கிடைப்பது அரிதாகும். தம்மபத மொழிபெயர்ப்பிலும் அத்தகு இடர்ப்பாடு ஏற்பட்டது. அத்தகைய இடங்களில் அப்பாடல் நேரடியாகக் குறிக்க வந்த பொருளே மொழிபெயர்ப்பில் கொடுக்கப்பட்டுள்ளது. மற்றொரு பொருள் விளக்கத்தில் கூறப்பட்டுள்ளது. எடுத்துக்காட்டாக Akataññu என்னும் சொல் Akata + Añña என்ற இருசொற்களின் தொகைச் சொல்லாகக் கொண்டால் அது ஆக்கப்படாததை (நிர்வாணம்) அறிந்தவன் என்ற பொருள் தரும். மொழிபெயர்ப்பில் இப்பொருளே பயன்படுத்தப்பட்டுள்ளது. அஃதாவது நிர்வாணத்தை அறிந்தவன் என மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. ஆனால் இச்சொல்லைப் பிரிக்காமல் பொருள் கொண்டால் நன்றியற்றவன் எனப்பொருள்படும். இப்பொருள் விளக்கம் கூறும் பகுதியில் கூறப்பட்டள்ளது.

இன்னோரன்ன வகையில் மொழிபெயர்ப்பில் தோன்றிய ஏனைய சிக்கல்களும் அணுகப்பெற்றுத் தீர்த்துக்கொள்ளப்பட்டன.

குறிப்புகள்

1 விநயபிடக நூல்கள் ஐந்துடன் பாதிமொக்க (Pātimokkha) என்னும் நூலையும் ஆறாவது நூலாகச் சிலர் சேர்ப்பர். ஆனால் பிறர் அதைத் தனி நூலாகக் கொள்வதில்லை.

2 பௌத்த சமய முதல் மாநாடு புத்தர்தம் மறைவிற்குப் பின் ஆறுமாதத்தில் கூடிய ஐநூறு பிக்குகளின் கூட்டமாகும். இதன் தலைவர் மகாகஸ்ஸபர். இது ராஜகேகத்தில் வேபாரா மலையில் உள்ள சத்தபன்னி (Sattapanni) குகையில் கூடியது. இம்மாநாட்டில் தான் திரிபிடக நூல்கள் தொகுக்கப்பெற்றன.

இரண்டாவது மாநாடு புத்தர் மறைந்து 100 ஆண்டுகளுக்குப் பின்னர் வைசாலியில் கூட்டப்பெற்றது. இம்மாநாட்டில் 700 பிக்குகள் கலந்து கொண்டனர். இதில் விநயபிடகத்தில் கூறப்பட்டுள்ள விதிகளுக்கான விளக்கங்கள் வரையறுக்கப்பட்டன.

மூன்றாவது மாநாடு அசோகரின் காலத்தில் மொக்கலபுத்ததேரர் தலைமையில் கூடியது. இம்மாநாட்டில் முடிவில்தான் மகிந்தனும் சங்கமித்தையும் இலங்கைக்கு அனுப்பப்பட்டனர்.

3 Dr. S. Radhakrishanan; Indian Philosophy, Vol. I. ; P. 349.

4 தேராவாத பிரிவின் மரபுப்படி ஒருவர் துறவு ஏற்க முன்வந்தால் அவருக்கு முதலில் தொடக்க நிலைத் துறவு (Pabbajja) அளிக்கப்படும். இந்நிலையில் உள்ளவர்கள் மாணவத் துறவியர் (Sāmaṇera) எனப்படுவர். இவர்கள் இந்நிலையில் ஐந்து ஆண்டுகள் இருந்து தம் ஆசிரியருக்குப் பணிபுரிந்து அவரிடம் பௌத்த சமயக் கல்வி கற்க வேண்டும். ஐந்தாண்டுகள் முடிந்தபின்னர் அவர்களுக்கு முழுத்துறவு அளிக்கப்படும். மாணவ நிலையில் உள்ளவர்களுக்கு முழுத்துறவு பெற்றவர்களுக்கு விதிக்கப்பட்டது போன்ற கட்டப்பாடுகள் அதிகம் இல்லை.

5. Narada Thera, Dhamapada; P. VII.

6. இவர் ஆலோக விகாரத்தில் தங்கியிருந்து திரிபிடகங்களையும் உரைநூல்களையும் பெற்றுப் பாலியில்செய்தார் என பர்மிய மரபு கூறுகிறது.

(Malalasekara : Dictionary of Pali proper names : Vol. II; P.307)

7. B.C. Law ; A History of Pali Literature, Vol. I. ; P.215

8. Ibid; P. 216.

9. Ibid; P. 221.

---

## பாலி – தமிழ் ஒலிப்புமுறை அட்டவணை :

உயிர் ஒலிகள்

| பாலி | தமிழ் |
|---|---|
| a | அ |
| ā | ஆ |
| i | இ |
| ī | ஈ |
| u | உ |
| ū | ஊ |
| e | எ, ஏ |
| o | ஒ, ஓ |

இதில் e, o ஆகிய எழுத்துக்கள் பொதுவாக நெடிலாகவே ஒலிக்கப் பெறினும் அவற்றைத் தொடர்ந்து இரட்டை மெய்கள் வரும் போழுது மட்டும் அவை குறிலாகவே ஒலிக்கப் பெறும்.

எ – டு : Setthi, Pokkharanī

மெய் ஒலிகள்

| பாலி | தமிழ் | பாலி | தமிழ் | பாலி | தமிழ் |
|---|---|---|---|---|---|
| k | க | ṭ | ட | p | ப |
| kh | | ṭh | | ph | |
| g | | ḍ | | b | |
| gh | | ḍh | | bh | |
| ṅ | ங | ṇ | ண | m | ம |
| c | ச | t | த | y | ய |
| ch | | th | | r | ர |
| j | ஜ | d | | l | ல |
| jh | | dh | | v | வ |
| ñ | ஞ | n | ந | s | ஸ |
| | | | | h | ஹ |
| | | | | ḷ | ள |

தமிழில் உயர்ப்புடை ஒலியன்களான kh, gh முதலியன இல்லை. ஒலிப்புடைய வெடிப்பொலியன்களான g, ḍ, d, b ஆகியவற்றிற்கு இணையான தமிழ் வரிவடிவங்கள் இல்லை. எனினும் இவற்றை நாம் கீழ்க்கண்ட சொற்களில் ஒலிக்கிறோம்.

எ – டு :

| | |
|---|---|
| தங்கம் | ( taṅgam ) |
| வண்டல் | ( Vaṇḍal ) |
| தந்தம் | ( tandam ) |
| கம்பர் | ( Kambar ) |

சனியொலி : ( Nigghahita )

| பாலி | தமிழ் |
|---|---|
| ṁ | அங் / அம் |

இவ்வொலியை இருவிதமாகவும் ஒலிப்பர். இது சமஸ்கிருதத்தில் உள்ள அனுஸ்வரத்தைப் போன்றது. இவ்வொலியன் சிலரால் ŋ என்றும் ṃ குறிக்கப்படுவதுண்டு.

---------

<u>மெய்யொலியன்கள் ஒலிப்புமுறை அட்டவணை.</u>

| ஒலிப்பு முறை / ஒலிப் பிடம் | ஈரிதழ் | | பல்லிதழ் | பல் | | அண்பல் | வளைநா | | அண்ணம் | | கடையண்ணம் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | உயிர்ப் பிலாத | உயிர்ப் புடைய | | உயிர்ப் பிலாத | உயிர்ப் புடைய | | உயிர்ப் பிலாத | உயிர்ப் புடைய | உயிர்ப் பிலாத | உயிர்ப் புடைய | உயிர்ப் பிலாத | உயிர்ப் புடைய |
| ஒலிப்பிலா வெடிப்பொலி | p | ph | | t | th | | ṭ | ṭh | c | ch | k | kh |
| ஒலிப்புடைய வெடிப்பொலி | b | bh | | d | dh | | ḍ | ḍh | j | jh | g | gh |
| மூக்கொலி | m | | | n | | | ṇ | | ñ | | ṅ | |
| உரசொலி | | | | | | s | | | | | h | |
| அதிரொலி | | | | | | r | | | | | | |
| மருங்கொலி | | | | | | l | ḷ | | | | | |
| அரை உயிர் | | | v | | | | | | y | | | |

## 1. YAMAKA VAGGA[1]

### 1. இரட்டைச் செய்யுள்

1. Manopubbaṁ gamā dhammā[2]
Manoseṭṭhā Manomayā
Manasā ce Paduṭṭhena
bhāsati vā karoti vā
Tato naṁ dukkhamanveti
cakkaṁ va vahato padaṁ. ( 1 )

**மொழிபெயர்ப்பு**

எல்லாச் செயல்களுக்கும் மனமே முன்னோடியாகிறது. மனமே அனைத்திற்கும் தலைமையானது. செயல்கள் அனைத்தும் மனத்தின் வெளிப்பாடே. (எனவே) ஒருவன் தீய எண்ணங்களுடன் பேசினாலும், தீயசெயல்களைச் செய்தாலும் அவற்றால் உண்டாகும் துன்பங்கள் இழுத்துச் செல்லும் எருதுகளைப் பின் தொடர்ந்து போகும் வண்டிச் சக்கரம் போல அவனுடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றித் தொடர்கின்றன.

*சூழல்*

சக்கு பாலன் என்பான் புத்தரது அறவுரைகளை ஏற்றுத் துறவியாகித் தவஒழுக்கம் மேற்கொண்டான். அவன் அந்நெறியின் உயர்நிலையான அரகந்த நிலை[3] அடையும் பொழுது அவனது கண்பார்வையை இழந்தான். கண்பார்வை இழந்த நிலையில் அவன் நடைப்பயிற்சி மேற்கொள்ளும் பொழுது அவன் காலடிபட்டு ஏராளமான தம்பலப் பூச்சிகள் நசுங்கிச் செத்தன. இதனைக் கண்ணுற்ற சில துறவிகள் இது குறித்துப் புத்தரிடம் முறையிட்டனர்

அவர்களுக்குப் புத்தர்"அரகந்த நிலையடைந்தவரைப் புதிய வினைகள் சேர்வதில்லை. எனினும் பழைய வினையின் பயனை அடைந்தே தீருவர். அதன்படிச் சக்குபாலன் தன் முற்பிறவியில் மருத்துவனாக இருந்து, அவனிடம் தன் கண்ணுக்கு மருத்துவம் பார்க்க வந்த பெண் தன் வாக்குத் தவறியமையான் அவளுடைய கண்களைக் குருடாக்கினான். அதன் பயனே இப்பிறவியில் அவன் கண் குருடானது" எனக் கூறி இப்பாடலை அறிவுறுத்தினார்.

*விளக்கம்*

1. yamaka - என்பது தமிழில் இரட்டை என்னும் பொருள் தருவது. யமகம் என்னும் சொல் தமிழ் இலக்கணத்தில் இதே பொருளில் வழங்குவதைக் காணலாம். இப்பகுதியில் ஒவ்வொரு கருத்தும் இரண்டு செய்யுள்களில் உடன் பாட்டானும் எதிர்மறையானும் விளக்கப் பெறுதலின் இவ்வியல் இரட்டைச் செய்யுள் எனப்பட்டது.

2 Dhamma - என்னும் சொல் தமிழில் அறம் என்னும் சொல் தரும் அனைத்துப் பொருள்களையும் தரும். இவ்விடத்தில் இச்சொல் வினை, செயல் என்னும் பொருளில் கையாளப் படுகிறது.

3 அரகந்த நிலை என்பது பௌத்தக் கோட்பாட்டின்படி ஒவ்வொரு துறவியும் அடைய வேண்டிய உயர்ந்த நிலையாகும். இந்நிலைகள் அடைந்தார்க்கு வேட்கை இல்லாமையால் இவர்களை வினைகள் பற்றுவதில்லை. அவர்கள் செய்யும் செயல்களுக்கான பயன் அவர்களைத் தொடாது. அவர்கள் நிர்வாணம் அடைதற்கான பக்குவம் எய்தியவர்களாகலின் அவர்களுக்கு மீண்டும் பிறப்பில்லை. எனினும் இவர்கள் தாங்கள் முன்னர் செய்த வினையின் பலனை அனுபவித்தே ஆக வேண்டும். வேதாந்திகளும் சைவர்களும் கூறும் சிவன் முக்தி என்னும் நிலையே பௌத்தர்களின் `அரகந்த` நிலையாகும் எனக்கூறலாம்.

மேற்கோள்

தீயவை செய்தார் கெடுதல் நிழல்தன்னை
வீயா தடிஉறைந் தற்று. (*திருக்குறள்: 208*)

2. Manopubbaṅgamā dhammā
Manoseṭṭhā manomayā
Manasā ce pasannena
bhāsati vā karoti vā
Tato naṁ sukhamanveti
chāyā va anapāyinī. (2)

**மொழிபெயர்ப்பு**

எல்லாச் செயல்களுக்கும் மனமே முன்னோடியாகிறது. மனமே அனைத்துச் செயல்களுக்கும் தலைமையானது. செயல்கள் அனைத்தும் மனத்தின் வெளிப்பாடே. (எனவே) ஒருவன் தூய எண்ணங்களோடு பேசினாலும் சரி, செய்தாலும் சரி, அவற்றினால் உண்டாகும் நன்மைகள் எப்பொழுதும் அவனை அவன் நிழல்போன்று தொடர்கின்றன.[1]

*சூழல்*

மட்டக்குண்டலி என்னும் சிறுவன் காமாலை நோயால் இறக்கும் தறுவாயில் புத்தரின் அருள் ஒளியால் கவரப்பட்டு அவர்பால் தன் மனத்தைச் செலுத்தினமையின் தேவ குமாரனாகப் பிறந்தான். அச்சிறுவனின் நிலையைப் புத்தர் அவன் தந்தைக்கு உணர்த்திய போது இப்பாடல் புத்தரால் கூறப்பட்டது.

*விளக்கம்*

1. ஒரு மனிதனின் நிழல் அவனை எப்பொழுதும் விட்டகல்வ -தில்லை. அவன் எங்குச் சென்றாலும் உடன் செல்லும். நிற்கின் நிற்கும் ; நடந்தால் நடக்கும் ; அமரின் அமரும்: படுத்தால் படுக்கும். அது போல நல்மனத்தோரை இன்பம் அவன் ஒதுக்கினும் ஒதுங்காது தொடரும்.

மேற்கோள்

மனத்தானாம் மாந்தர்க் குணர்ச்சி *(குறள்: 453)*
மன நலம் மன்னுயிர்க் காக்கம் *(குறள்: 457)*
மனநலத்தி னாகும் மறுமை *(குறள்: 459)*

3. Akkocchi maṁ avadi maṁ
ajini maṁ ahāsi me
Ye taṁ upanayhanti
veraṁ tesaṁ na sammati. (3)

மொழிபெயர்ப்பு

(இவன்) என்னைப் பழித்துரைத்தான். (இவன்) என்னை அடித்தான். (இவன்) என்னைப் (பேச்சினாலோ செயலிலோ) வென்றான். (இவன்) என் பொருள்களைக் கவர்ந்து கொண்டான் என்று ஒருவன் எண்ணி வெறுப்பினை வளர்த்துக் கொண்டால் (அவர்களிடையே) பகை ஒருபோதும் தீர்வதில்லை.

4. Akkocchi maṁ avadhi maṁ
ajini maṁ ahāsi me
Ye taṁ na upanayhanti
veraṁ tesūpasammati. (4)

மொழிபெயர்ப்பு

இவன் என்னைப் பழித்தான், என்னை அடித்தான், என்னை வென்றான், என் பொருள்களைக் கவர்ந்து கொண்டான் என்ற வகையில் ஒருவன் வெறுப்பை வளர்த்துக் கொள்ளா விடில் அவர்களிடையே உள்ள பகை தீர்ந்து விடுகிறது.

புத்தரின் அத்தை மகன் திஸ்ஸர் தன்னுடைய முதுமைக் காலத்தில் துறவு மேற்கொண்டார். புதிய துறவியான அவரை மூத்த துறவி எனத் தவறாக எண்ணிய சில மூத்த துறவிகள் அவருக்கு மரியாதை செய்ய அவர் அம்மரியாதையை ஏற்றுக் கொண்டார். ஆனால், பின்னர் அவர் புதியவரே எனத் தெரிந்து அவர் செயலை அவர்கள் பழித்தனர்.[1] இதனால் வெகுண்ட திஸ்ஸர் புத்தரிடம் முறையிட்டு அவர்களைத் தண்டிக்க வேண்டினார். உண்மை நிலையை உணர்ந்த புத்தர் அவரது தவறினை உணர்த்தி இவ்விரு செய்யுள்களையும் கூறினார்.

*விளக்கம்*

1. பௌத்த சமய விதிகளின் படி ஒருவர் எவ்வளவு வயதான வராயினும் அவர் துறவுமேற்கொள்வாராயின் தனக்கு முன் துறவியானவர் தன்னினும் வயதில் இளையவராயினும் அவருக்கு மரியாதை செலுத்தக் கடமைப்பட்டவராவார். அவ்வாறன்றி தம் வயது குறித்துத் தமக்கு முன் துறவியானவர் தமக்கு மரியாதை செலுத்த வேண்டும் என்று எதிர்பார்ப்பதும், அவர்கள் அறியாமல் செய்யும் மரியாதையை, அவர்களுக்குத் தன்னிலையை வெளிப்பட உணர்த்தாது மறைத்து ஏற்றுக் கொள்வதும் குற்றமாகும். இங்குப் பெரியவர், சிறியவர் என்பது துறவு வாழ்க்கைக் காலத்தைக் கொண்டே கணக்கிடப்படுமேயன்றி பிறப்பைக் கொண்டு கணக்கிடப்படுவதில்லை.

மேற்கோள்

நகையும் உவகையும் கொல்லும் சினத்தின்
பகையும் உளவோ பிற. *(குறள்: 304)*
இணரெரி தோய்வன்ன இன்னா செயினும்
புணரின் வெகுளாமை நன்று. *(குறள்: 308)*

5. Na hi verena verāni
Sammantī 'dha kudācamaṁ
Averena ca sammanti.
esa dhammo sanantano. (5)

**மொழிபெயர்ப்பு**

இவ்வுலகில் பகைமையால் பகைமையை ஒழிக்கவியலாது. மாறாக அன்பால் அதனை அழிக்கலாம்.இதுவே தொன்மையான[1] அறமாகும்.

*சூழல்*

மலட்டுப் பெண்ணொருத்தி பொறாமையால் தன் மாற்றாளின் கருவைக் கலைக்க மருந்திடுகிறாள். அம்மருந்து தாய், சேய் இருவரது உயிரையும் குடிக்கிறது. இறக்கும் நேரத்தில் தன் மூத்தாளின் குழந்தைகளை அவ்வாறே கொல்வேன் என வஞ்சினம் கூறி இறந்தாள். மறுபிறவியில் அவ்வாறே கொல்லவும் செய்கிறாள்.

அதற்குப் பழியாக மூத்தாள் அடுத்த பிறவியில் அவள் குழந்தைகளைக் கொல்கிறாள். இருவரும் இவ்வாறு மாறி மாறி வஞ்சம் தீர்த்து வருகிறார்கள். இவர்களது இப்போராட்டத்தின் மூன்றாவது சுற்றில் இளையாள் இயக்கியாகப் பிறந்து மூத்தாளின் குழந்தைகளைத் தின்ன வரும் பொழுது அவர்கள் அனைவரும் புத்தரிடம் வந்து சேர்கின்றனர். புத்தர் தமது அறிவுரையால் இயக்கியின் கோபத்தைத் தணித்து இப்பாடலைக் கூறி நெறிப்படுத்துகிறார்.

*விளக்கம்*

1. sanantana என்னும் சொல் தொன்மையான அறம் எனப்பொருள்படும். இங்குத் தொன்மையான அறம் எனப்படுவது இறந்த காலத்து எண்ணில் புத்தர்கள் காட்டிய அறம் ஆகும்.

மேற்கோள்

அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை
இகழ்வார்ப் பொறுத்தல் தலை. *(குறள்: 151)*
மிகுதியான் மிக்கவை செய்தாரைத் தாம்தம்
தகுதியான் வென்று விடல். *(குறள்: 158)*

6. Pare ca na vijānanti
mayamettha yamā mase
Ye ca tattha vijānanti
tato sammanti medhagā . (6)

**மொழிபெயர்ப்பு**

இவ்வுலகில் நாம் இறக்கப் போகிறோம் எனப் பிறர்[1] அறியமாட்டார்கள்அதனை அறிந்தவர்கள் கலகம் செய்வதை நிறுத்திவிடுகின்றனர்.

*சூழல்*

கோசாம்பியில் புத்தர் இருந்த போது இரண்டு பிக்கு களிடையே தோன்றிய சண்டை, ஏனை பிக்குகளையும் ஊர்

மக்களையும் இரு குழுவினராகப் பிரித்துச் சண்டையிடும் படியாக வளர்ந்தது. இதையறிந்த புத்தர் அவர்களுக்குப் பல வகையில் அறிவுரை கூறியும் அவர்கள் உணர்ந்து திருந்தினார்களில்லை. எனவே, இவர்கள் மீது வருத்தமுற்ற புத்தர் காட்டில் தனியாக வாழச் சென்றுவிட்டார். இதனை அறிந்த பிக்குகள் திருந்தி, புத்தரை அணுகி மன்னிப்புக் கேட்டு நின்றனர். அப்பொழுது புத்தர் கூறியது இப்பாடல்.

*விளக்கம்*

1. para என்னும் சொல் பிறர் என்னும் பொருள்படும். இவ்விடத்தில் பிறர் என்பது, நிலையறியாது கலகம் செய்து கொண்டிருக்கும் அறிவிலிகளைக் குறிக்க வருகிறது.

7. Subhānupassiṁ viharantaṁ
indriyesu asaṁvutaṁ
Bhojanamhi amattaññuṁ
kusītaṁ hīnavīriyaṁ
Taṁ pasahati māro
vāto rukkhaṁ va dubbalaṁ. (7)

**மொழிபெயர்ப்பு**

சிற்றின்ப நாட்டத்துடன் வாழ்பவனும், புலனடக்க மற்றவனும், அளவறிந்து உண்ணாதானும், சோம்பலுடையவனும் முயற்சியற்றவனுமான ஒருவனை வலிமையற்ற மரத்தைப் பெருங்காற்று வீழ்த்துவது போல மாரன்[1] வீழ்த்துவது உறுதி.

8. Asubhānupassiṁ viharantaṁ
indriyesu susaṁvutaṁ
Bhajanaṁ ca mattaññuṁ
Saddhaṁ āraddha vīriyaṁ
Taṁ ve nappasahati māro
vāto selaṁ va pabbataṁ. (8)

மொழிபெயர்ப்பு

சிற்றின்ப நாட்டமில்லாதானும், புலனடக்கம் உள்ளவனும், அளவறிந்துண்பானும் முழு நம்பிக்கையும்[2] முழு முயற்சியும் உடையவனுமானவனை மலைப் பாறையைக் காற்று வீழ்த்தவியலாதது போன்று மாரன் வீழ்த்த இயலாது.[3]

*சூழல்*

சகோதரர்கள் இருவர் பௌத்தத் துறவியாயினர். அவருள் மூத்தவர் முழு நம்பிக்கையும் முயற்சியும் உடையவர். இளையவர் தனது மனைவியரது தூண்டுதலின்படித் துறவு நெறியை விட்டு நீங்கினார். மூத்தவர் தூண்டுதலுக்காளாகாமல் பெய்தீர் ஒழுக்க நெறி நின்று உய்ந்தார். இவர் இருவர் குறித்தும் புத்தர் கூறியவை இவ்விரு பாடல்களும்.

*விளக்கம்*

1. பௌத்த நெறிப்படி மாரன் ஐவகைப்படும்.
   அவை,
   1. ஐவகைக் கந்தங்கள் (Khandā)
   2. நல்லொழுக்க, தீயொழுக்கநெறிகள் (abhisaṅkhāra)
   3. இறப்பு (Maccu)
   4. உணர்ச்சி வழி (Kilesa)
   5. தேவகுமாரன்மாரன் (Devaputta).

   இந்தஐந்து வகைகளும் பிறவிக்கு இட்டுச் செல்வனவாம். எனவே இவ்வைந்தும் மனிதனுக்கு எதிரிகள்.

2. Saddhā- என்பது மும்மணிகளாம் புத்தன் (Buddha). அறம் (Dhamma), சங்கம் (Saṅgha) இவற்றின் மீது முழு நம்பிக்கை வைத்தலாகும். இந்நம்பிக்கை குருட்டு நம்பிக்கையன்று. அறிவுப் பூர்வமாகத் தெரிந்து தெளிந்து நம்புவதையே பௌத்தம் வலியுறுத்துகிறது.

3. இவ்விரு பாடல்களும் இல்லறத்தாரை விட துறவறத்தாருக்கே பெரிதும் கூறப்பட்டது. துறவியர் தம் நெறியினின்றும்

வழாமல் சிற்றின்ப நாட்டமின்றி புலனடக்கமுற்று, மீதூண் விரும்பாமல் நெடுநீர்மை, மறவி, மடி, துயில் ஆகியன நீத்து வாழ்தல் அவசியம். இன்றேல் நெறி பிறழ்வது திண்ணம். முதல் பாடலில் கூடாதன கூறி இரண்டாம் பாடலில் வேண்டியன விளக்கியுள்ளார் புத்தர்.

மேற்கோள்

குற்றமே காக்கப் பொருளாகக் குற்றமே
அற்றம் தரூஉம் பகை. *(குறள்: 434)*
அவாவில்லார்க்கு இல்லாகும் துன்பம் அஃதுண்டேல்
தவாஅது மேன்மேல் வரும். *(குறள்: 368)*

9. Anikkasāvo kāsāvaṁ
Yo vatthaṁ paridahessati
Apeto dammasaccena
Na so kāsāvaṁ arahati. (9)

**மொழிபெயர்ப்பு**

மனமாசுடையவனும் புலன்களைக் கட்டுப்படுத்தாதவனும் மெய்யொழுக்க மற்றவனும் மஞ்சள்துறவாடையை[1] அணிதற்குத் தகுதியற்றவனாகிறான். அஃது அவனுக்கு உயர்வைத் தருவதில்லை.

10. Yo ca vantakasāvassa
sīlesu susamāhito
Upeto damasaccena
sa ve kāsāvaṁ arahati. (10)

**மொழிபெயர்ப்பு**

மனமாசற்றவரும் புலனடக்கமுள்ளவனும் மெய்யொழுக்க நெறியுடையவரும் எவரோ அவரே மஞ்சள் துறவாடை அணியத் தகுதியுடையவராவார். அவருக்கே அஃது உயர்வு தரும்.

*சூழல்*

அன்பர்கள் சிலர் மூத்த துறவியாகிய தேவதத்தனுக்குஅழகிய உயர்ந்த ஆடையை அளித்தனர். அவ்வாடை தேவதத்தனுக்கு நல்ல

தோற்றத்தைத் தரவில்லை.[2] இது குறித்து புத்தரிடம் கேட்ட போது, தேவதத்தன் முற்பிறப்பிலும் தன் இயல்பிற்குப் பொருந்தாத ஆடையணிந்து அதனால் துன்புற்றதைச் சுட்டிக் காட்டி இவ்விரு செய்யுளையும் கூறியருளினார்.

*விளக்கம்*

1. பௌத்த துறவிகள் மஞ்சள் வண்ண ஆடைகளை அணிதல் மரபு. இவ்வாடை அணிபவர் மன மாசற்று உயர்தன்மை களைக் கொண்டவர்களாக இருக்க வேண்டும் என்பது கோட்பாடு. ஆனால் ஆடை ஒருவனுடைய உயர் தன்மை களைக் குறிப்பதில்லை. மனமாசுடையவர் துறவாடையை அணிந்தாலும் அவர் போற்றத் தகுந்தவர் அல்லர். உயர்ந்த தன்மைகளைக் கொண்டவர் துறவாடை அணியா விடினும் அவர் போற்றி வணங்கத் தக்கவர் என்பது பின்னும் ஓரிடத்தில் புத்தரால் விளக்கப்பட்டது.
(பார்க்க – பாடல் 142)

2. தேவதத்தன் புத்தருடைய உறவினன். சிறு வயது முதல் புத்தருக்கு விரோதமாகச் செயல்படுபவன். புத்தர் ஞானம் பெற்றவுடன் தேவதத்தனும் புத்தரை அணுகித் துறவு மேற்கொண்டான். எனினும் தன் இயல்புப்படி பல தீச்செயல்கள் செய்துவந்தான். அவனுடைய மன மாசால் உயர் துறவாடை அவனுக்குப் பொருத்தமான தோற்றத்தைத் தரவில்லை.

மேற்கோள்

தவமறைந் தல்லவை செய்தல் புதல் மறைந்து
வேட்டுவன் புள்சிமிழ்த் தற்று. *(குறள்: 274)*

வஞ்ச மனத்தான் படிற்றொழுக்கம் பூதங்கள்
ஐந்தும் அகத்தே நகும். *(குறள்: 271)*

வானுயர் தோற்றம் எவன்செய்யும் தன்நெஞ்சம்
தானறி குற்றப் படின். *(குறள்: 272)*

11. Asāre sāramatino
sāre casāra dassino
Te sāraṁ nādhigacchanti
michā saṅkappagocarā. (11)

**மொழிபெயர்ப்பு**

பொருளற்றவற்றைப் பொருளுடையதாகவும் பொருளுடையதைப் பொருளற்றதாகவும் பார்க்கிறவர் உண்மை நிலையை ஒரு போதும் அடைவதில்லை. தவறான நெறியையே அடைவர்.[1]

12. Sārañ ca sārato ñatvā
asārañ ca asārato
Te sāraṁ adhigacchanti
sammā sankappagocarā. (12)

**மொழிபெயர்ப்பு**

பொருளுடையதைப் பொருளுடையதாகவும் பொருளற்றதைப் பொருளற்றதாகவும் அறிபவர்கள் உண்மை நிலையினை உணர்கின்றனர்.[2] அவர்கள் நன்னெறியினை அடைந்தவராவர்.

*சூழல்*

சாரிபுத்தரும் மொக்கலானரும் புத்தரின் பெருமையை உணர்ந்து, தங்களது ஆசிரியரான சஞ்சயனை விட்டு நீங்கிப் புத்தரை அடைக்கலமாகச் சென்றடைந்தனர். அவர்கள் தங்கள் பழைய ஆசிரியரான சஞ்சயனிடம் புத்தரின் பெருமைகளைக் கூறி அவரையும் புத்தரை அணுகத் தூண்டினர். ஆனால் சஞ்சயன் தமது பெருமைகளைப் பேசி மறுத்துவிட்டார். இதைச் சாரிபுத்தரும் மொக்கலானரும் புத்தரிடம் கூற, புத்தர் கூறிய செய்யுள்கள் இவை.

*விளக்கம்*

1. தவறான நெறியாவன–ஆசை (Kāma) _ தீய எண்ணம் (vyāpāda); உயிர்க்கொலை (vihiṁsa)

2. உண்மை நெறிகளாவன– பற்றற்றிருத்தல்( Nekkhamma) அன்பும் இரக்கமும் (avyāpāda) கொல்லாமை(avihiṁsa) இவை மூன்றும் நன்னெறிகளாம்.

மேற்கோள்

பொருளல்ல வற்றைப் பொருளென் றுணரும்
மருளானாம் மாணாப் பிறப்பு. *(குறள்: 351)*

இருள்நீக்கி இன்பம் பயக்கும் மருள்நீங்கி
மாசறு காட்சி யவர்க்கு. *(குறள்: 352)*

13. Yathā'gāram ducchannaṁ
vuṭṭhi samativijjhati
Evaṁ abhāvitaṁ cittaṁ
rāgo samativijjhati. (13)

**மொழிபெயர்ப்பு**

நன்றாக வேயப்படாத கூரையினிடையில்மழைநீர்எளிதில் புகுந்து விடும். அதுபோலப் பக்குவமற்ற மனத்துள் ஆசை எளிமையாகவும் முழுமையாகவும் புகுந்து விடும்.

14. Yathā'gāraṁ succhannaṁ
vuṭṭhi na samativijjhati
Evaṁ subhāvitaṁ cittaṁ
rāgo na samativijjhati. (14)

**மொழிபெயர்ப்பு**

நன்றாக வேயப்பட்ட கூரையுள் மழை நீர் எளிதில் புக இயலாது. அதுபோல் பக்குவப்பட்ட மனத்துள் ஆசை எளிதில் புக இயலாது.

*சூழல்*

புத்தரின் உறவினனான நந்தன், தனது திருமண நாளன்று புத்தரைத் தொடர்ந்து சென்று துறவியாகி விட்டான். எனினும் அவன் எப்பொழுதும் தனக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட

மணமகளையே நினைத்துக் கொண்டிருந்தான். இதை அறிந்த புத்தர் நந்தனுக்குத் தவநெறியைப் போதிக்கிறார். அந்நெறியில் சென்ற நந்தன் மனத் தெளிவு பெற்று ஞான நிலையாம் அரகந்த நிலையை அடைகிறான். அச்சமயத்தில் புத்தர் கூறிய பாடல் இது. நந்தனுடைய முந்தைய மனநிலை நன்கு வேயப்படாத கூரையையும், மாறிய மனநிலை நன்கு வேயப்பட்ட கூரையையும் குறிக்கும்.

15. Idha socati pecca socati
 pāpakāri ubhayattha socati
 So socati so vihiññati
 disvā kammakilitthaṁ attano. (15)

**மொழிபெயர்ப்பு**

தீவினையாளன்[1] இம்மையிலும் துன்புறுகிறான்,[2] மறுமையிலும் துன்புறுகிறான்[3]. அவன் (இம்மை மறுமையாகிய) இருமையிலும் துன்புறுகிறான். அவன் தான் செய்த தீச்செயலைக் கண்டு வருந்துகிறான், துன்புறுகிறான்.

*சூழல்*

புத்தர் காலத்தில் இராஜகிரியில் சந்தன் என்னும் பன்றிக் கறி விற்பவன் ஒருவன் இருந்தான். அவன் நாளும் பன்றிகளை மிகவும் கொடூரமான முறையில் துன்புறுத்திக் கொன்று வந்தான். அவன் பன்றியின் நான்கு கால்களையும் நான்கு புறம் இழுத்துக் கட்டிக் கட்டையால் நையப்புடைப்பான். பின்னர் கொதிக்கும் வெந்நீரை வாய்வழியாக ஊற்றுவான். அந்நீர் பின்புறவழியாக சுத்தமான நிலையில் வெளியே வரும் வரையில் ஊற்றிப்பின் கொல்வான். இவ்வாறு ஐம்பத்திரண்டு ஆண்டுகள் வாழ்ந்தான். இறுதிக் காலத்தில் அவன் வினைக்கேற்ப அவன் உடல் கடுமையான வெப்பத்தாலும், வேதனையாலும் ஏழு நாள்கள் துடித்து இறந்தான். இது பற்றிப் புத்தரிடம் கூறிய பொழுது புத்தர் கூறிய பாடல் இது.

*விளக்கம்*

1. Pāpakāri என்னும் சொல் எப்பொழுதும் தொடர்ந்து தீவினைகளைச் செய்பவனையே குறிக்கும். எப்பொழுதாவது

தவறிச் செய்பவன் Pāpi என்றும் தீவினை செய்வதையே வழக்கமாகக் கொண்டவன் Pāpakāri என்றும் குறிக்கப்படுவர்.

2. தீவினையாளன் இம்மையில் மன அமைதியின்றித் துன்புறுகின்றான்.

3. தீவினையாளன் தன் வினைப்பயனை மறுமையில் அனுபவிக்கும் பொழுது துன்புறுகிறான்.

மேற்கோள்

தீயவை தீய பயத்தலால் தீயவை
தீயினும் அஞ்சப் படும். *(குறள்: 202)*

எனைப்பகை உற்றாரும் உய்வர் வினைப்பகை
வீயாது பின்சென் றடும். *(குறள்: 207)*

16. Idha modati pecca modati
katapuñño ubhayattha modati
So modati so pamodati
disvā kammavisuddhamattano. (16)

**மொழிபெயர்ப்பு**

அறம் செய்பவன்[1] இம்மையிலும் மகிழ்ச்சியடைகிறான்,[2] மறுமையிலும் மகிழ்ச்சியடைகிறான்.[3] அவன் இருமையிலும் இன்பமடைகிறான். அவன் தன் அறச்செயல்களைக் கண்டு மகிழ்கிறான், இன்புறுகிறான்.

*சூழல்*

சாவத்தியில் தம்மிகன் என்பவன் தன் வாழ்நாள் முழுதும் அறச் செயல்களையே செய்து வந்தான். எனவே அவன் மனம் தெளிவாகவும் மகிழ்ச்சியாகவும் இருந்தது. அவனது இறுதி நாளிலே மரணப் படுக்கையில் இருக்கும் பொழுது புத்த பிக்குகளை அழைத்துச் 'சுத்தங்களை' இசைக்கச் சொல்லிக் கேட்டிருந்தான். அப்பொழுது வானத்திலிருந்து தேவர்கள் அவனுக்கு மலர்த்தேர் கொண்டுவந்து அவனை அழைத்தனர். 'சுத்தங்களைக்' கேட்டுக்

கொண்டிருந்த அவன் தேவர்களைச் சற்று நிற்கும்படிக் கேட்டுக் கொண்டான். இக்காட்சி பற்றி அறியாத பிக்குகள் தாங்கள் பாடுவதை நிறுத்தச் சொல்வதாகக் கருதி மனவருத்தத்துடன் நிறுத்திவிட்டடனர். இதுபற்றி அவர்கள் புத்தரிடம் முறையிட புத்தர் உண்மையைத் தெளிவுபடுத்தி இப்பாடலைக் கூறினார்.

*விளக்கம்*

1. katapuñño – என்பது எப்பொழுதும் நல்வினையையே செய்து கொண்டிருப்பவனைக் குறிக்கும்.
2. நற்செயலால் ஏற்படும் மனநிறைவான இன்பம்.
3. நற்செயல் பயனால் மறுமையில் பெறும் இன்பம்.

மேற்கோள்

துணைநலம் ஆக்கம் தரூஉம் வினைநலம்
வேண்டிய எல்லாம் தரும். *(குறள்: 651)*

17. Idha tappati pecca tappati
pāpakārī ubhayattha tappati
pāpaṁ me katan ti tappati
biyyo tappati duggatiṁ gato. (17)

**மொழிபெயர்ப்பு**

தீவினையாளன் இம்மையிலும் துன்புறுகிறான். மறுமையிலும் துன்புறுகிறன். இருமையிலும் துன்புறுகிறான். நான் தீவினை ஆற்றினேனே என்று எண்ணி அவன் வருந்துகிறான். (அத்தீய ) வழியிலேயே சென்று மேலும் துன்புறுகிறான்.

*சூழல்*

தேவதத்தன் பொறாமையால் புத்தரைக் கொல்ல முயல்கிறான். ஆனால், அவனது முயற்சியினின்றும் புத்தர் தப்பிப் பிழைத்துக் கொள்கிறார். அவனது பல முயற்சிகளும்

தோல்வியடைகின்றன. அவனது இறுதிக்காலத்தில் தன் செயல்கள் அனைத்தையும் எண்ணி வருந்துகிறான். மரணப்படுக்கையில் இருக்கும் அவன் புத்தரைக் கண்டு மன்னிப்பு வேண்டத் துடிக்கிறான். அவனைச் சிலர் கட்டிலில் வைத்து புத்தரிடம் தூக்கிச் செல்கின்றனர். ஆனால், வழியிலேயே பரிதாபமாக இறக்கிறான். இது குறித்துப் புத்தர் கூறியதே இப்பாடல்.

மேற்கோள்

தீப்பால தான்பிறர்கண் செய்யற்க நோய்ப்பால
தன்னை அடல்வேண்டா தான். *(குறள்: 206)*

18. Idha nandati pecca nandati
katapuñño ubhayattha nandati
puññaṁ me katanti nandati
bhiyyo nandati suggatiṁ gato (18)

**மொழிபெயர்ப்பு**

நல்வினையாளன் இம்மையிலும் இன்புறுகிறான். மறுமையிலும் இன்புறுகிறான். அவன் இருமையிலும் இன்புறுகிறான். நான் இவ்வறம் இயற்றினேன் என எண்ணி மகிழ்கிறான். அவ்வழியிலேயே சென்று மேலும் மகிழ்ச்சியடைகிறான்.

*சூழல்*

சாவத்தியில் அநாதபிண்டிகனின்[1] இளைய மகள் சுமனா தேவி புத்தருக்குப் பணிவிடை செய்வதில் பெருவிருப்பினள். அவளது இறுதிக் காலத்தில் மரணப்படுக்கையில் தன் தந்தையைப் பார்த்துத் தம்பி என்றழைக்கிறாள். தன் மகள் நல்லறம் பல இயற்றியும் இறுதிக்காலத்தில் சித்தம் கலங்கித் தன்னைத் தம்பி என்றழைத்தாளே என வருந்திய அநாதபிண்டிகன் புத்தரிடம் தன் குறையைத் தெரிவிக்கிறான். புத்தரும், மனிதன் தவநெறியில் அடைய வேண்டிய நிலைகளுள் இரண்டாவது நிலையைச்[2] சுமனா அடைந்து விட்டாள் என்றும் முதல் நிலையையே அடைந்துள்ள அநாதபிண்டிகனுக்கு அவன் நிலையை உணர்த்த வேண்டியே தம்பி என்றழைத்தாளென்றும் கூறி இப்பாடலைக் கூறினார்.

*விளக்கம்*

1. அநாதபிண்டிகன் சாவத்தியில் பெருஞ்செல்வன். புத்தர் மேல்பேரன்பு பூண்டு, அவருக்கு ஜேதவன மகா விகாரம் என்னும் பெரிய மடலாயத்தைக் கட்டிக் கொடுத்து, மேலும் பல உதவிகள் செய்தான்.

2. தவநெறியின் நான்கு நிலைகள்

1. சோதபன்னர் 2.சகதாகாமி
3.அநாகாமி 4.அரகந்தர்

இவற்றில் சோதபன்னர் என்பது உலகியல் வெள்ளத்தைக் கடந்தவர் என்னும் பொருள் படுவது. இந்நிலையை அடைந்தவர் உலகியல் நிலையை உணர்ந்தவர் ஆவார். இவர் ஏழு பிறவிகளுக்குப் பின் நிர்வாணம் அடைவர் என்பது கொள்கை.

சகதாகாமி என்னும் இரண்டாம் நிலையினர் இன்னும் ஒரு பிறவி இவ்வுலகில் பிறந்து முக்தியடைவர்.

அநாகாமி நிலை மீண்டும் வாராதவர் என்னும் பொருளுடையது. இவர் உயர்ந்த தேவருலகில் ஒரே முறை பிறந்து அரகந்தராவார். இவருக்கு இவ்வுலகில் இனிப் பிறவி இல்லை என்பது பொருள்.

அரகந்தர் என்பவர் ஞானம் அடைந்தவர். இவர் இப்பிறவியிலேயே நிர்வாணம் அடைய விருப்பவர்.

19. Bahum pi ce sahitam bhāsamāno
na takkaro hoti naro pamatto
Gopo va gāvo gaṇayaṁ paresaṁ
na bhāgavā[1] sāmaññassa[2] hoti. (19)

**மொழிபெயர்ப்பு**

அறநூல்கள் பலவற்றையும் தெளிவாகக் கற்று அவற்றைப் பின்பற்றி நடக்கும் முயற்சியின்றி அதைப்பற்றி அதிகம் பேசிக்கொண்டிருப்பது மட்டும் செய்கின்றவன், பிறருடைய

பசுக்களை எண்ணிக் கொண்டிருக்கும் மேய்ப்பனைப் போன்று [3] தனது சமய வாழ்வுக்கேற்ற உயர்பலனை அடைந்து அனுபவிக்க மாட்டான்.[4]

20. Appam pi ce sahitaṁ bhāsamāno
dhammassa hoti anudhammacārī
Rāgañ ca dossañ ca pahāya mohaṁ
sammappajāno suvimutta citto
Anupādiyāno idha vā huraṁ vā
sa bhāgavā sā maññassa hoti. (20)

**மொழிபெயர்ப்பு**

ஒருவன் சிறிதளவே அறநூல்களைக் கற்றிருந்தாலும் அவ்வாறு கற்றதனை வாழ்க்கையில் கடைப்பிடித்து ஒழுகி, ஆசை, கோபம், மோகம் ஆகியவற்றை நீக்கி உண்மையை உணர்ந்து,[5] உலக அழுக்குகளினின்றும் விடுபட்டுத் தூய்மைப்பட்ட மனத்தினனாய் எவ்விதப் பற்றுமின்றி இருப்பின் அவன் இவ்வுலகிலும் மறுவுலகிலும் தன் தூய நெறிக்குரிய பயனை அனுபவிக்கிறான்.

*சூழல்*

சாவத்தியில் இருவர் புத்தரிடம் சென்று துறவு மேற்கொண்டனர். அவருள் ஒருவன் அறநூற் கல்வியில் காலம் கழித்தான். அறநூல் கற்றோன் பெரும் கல்வியாளன் ஆனான். தவநெறியில் சென்றோன் ஞானம் பெற்று நிர்வாண நிலையை நோக்கிச் சென்று கொண்டிருந்தான். நூல் கற்றோன் தனது அறிவுத் திறனை நிலைநாட்ட விருப்பம் கொண்டு தவநெறியினனைக் கேள்வியால் மடக்க முயன்றான். இவனது எண்ணத்தை அறிந்த புத்தர் இருவரையும் அழைத்து உயர் அறமாகிய தவநெறி குறித்துச் சில கேள்விகள் கேட்டார். நூல்கற்றோன் அவற்றிற்கு விடைசொல்லமாட்டாமல் விழித்தான். தவ நெறியினன் தன் சொந்த அனுபவத்தின் மூலம் சரியான விடைசொன்னான். அவனை வாழ்த்திய புத்தர் இவ்விரு செய்யுள்களையும் கூறியருளினார்.

*விளக்கம்*

1. Bhāgava - பங்காளி எனச் சாதாரணமாகப் பொருள்படும். இங்குச் சிறப்பாகச் சமய நெறியில் கிட்டும் பலனைக் குறித்தது.

2. Sāmaññassa - துறவு நெறியின் பலன் – நிர்வாணம்.

3. மேய்ப்பன் தினமும் மாடுகளை மேய்த்து மாலையில் உரியவனிடம் சேர்த்துவிட்டுக் கூலியாகச் சிறுபொருள் பெறுவான். ஆனால் பசுவின் பால், தயிர், நெய் முதலியபற்றில் அவனுக்கு எவ்வித உரிமையும் இல்லை.

4. நூல் கற்று அதற்குத் தக நில்லாமல் கற்பிப்பதிலேயே காலம் கழிப்பவன் முத்தி நிலையாகிய பயனை நுகரமாட்டாமல் மாணவர்கள் தரும் கூலிப்பணமும் அவர்களது பணிவிடையும் மட்டும் பெறுகிறான்.

5. உண்மையை உணர்த்தலாவது இவ்வுலகின் நிலைமையை உணர்ந்து முத்திநெறிக்குரிய வழியை அறிந்து நடத்தல்.

மேற்கோள்

கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக. *(குறள்: 391)*

தவம்செய்வார் தங்கருமம் செய்வார்மற் றல்லார்
அவம்செய்வார் ஆசையுட் பட்டு. *(குறள்: 266)*

## 2. APPAMĀDA VAGGA

### 2. விழிப்புணர்வியல்

1. Appamādo amatapadaṁ
Pamādo maccuno padaṁ
Appamattā na mīyanti
Ye pamattā yathā matā. (21)

**மொழிபெயர்ப்பு**

விழிப்புடன் இருத்தல்[1] இறவாமைக்கு வழி[2] விழிப்பின்றியிருத்தல் இறப்பிற்கு வழி. விழிப்புணர்வுடையோர் இறப்பதில்லை, விழிப்புணர்வற்றோர் இறந்தாரைப் போல்வர்.

2. Etaṁ visesato ñatvā
appamādamhi paṇḍitā
Appamāde pamodanti
ariyānaṁ gocare ratā (22)

**மொழிபெயர்ப்பு**

இவ்வேறுபாட்டினைத் தெளிந்த அறிஞர்கள் விழிப்புணர்வில் முனைப்புடன் உள்ளனர், அவ்விழிப்புணர்வில் உவப்புற்று (மேலும் மேலும் அந்நிலையிலிருந்து) உயர்நிலை[3] அடைகின்றனர்.

3. Te jhāyino sātatikā
niccaṁ daḷhaparakkamā
phusanti dhīrā nibbāṇaṁ
Yogakkhemaṁ anuttaraṁ. (23)

**மொழிபெயர்ப்பு**

விடாமுயற்சியுடன், தவறாது, உறுதியுடன் ஆழ்ந்து தவம் செய்யும்[4] சான்றோர் நிர்வாணம் என்னும் (முழுமையான) பாதுகாப்பினை அடைகின்றனர்.

*சூழல்*

மாகந்தியா என்னும், பொறாமை கொண்ட கோசாம்பி அரசி நிரபராதியான தன் மாற்றாள் சாமாவதியைப் பொய்க் குற்றம் சாட்டி உயிரோடு எரித்து விட்டாள். இக் கொடூரக் கொலையை அறிந்த அரசன் மாகந்திக்கு மரண தண்டனை அளித்துத் தண்டித்தான். பிக்குகள் இவ்விருவரில் உண்மையில் இறந்ததாகக் கருதப்பட வேண்டியது யார், இறவாமையை உடையவர் யார் என அறிந்து கொள்ள விரும்பி, புத்தரை அணுகிக் கேட்டனர். புத்தரும், மாகந்தியே இறந்தாளாகக் கருதத் தக்கவள். சாமாவதி போன்ற விழிப்புணர்வினர் இறந்தாராகக் கருதத் தக்கவரல்லர் எனக் கூறினார்.

*விளக்கம்*

1. விழிப்புணர்வுடன் இருத்தலாவது, தனது வினைகளில் குற்றம் சாராது, மனம் தீச்செயல்கள் (akusalakammāni ) பால் திரும்பாது தன்னைக் காத்துக் கொண்டு தவம் முதலிய நிர்வாணத்திற்குரிய நெறிகளில் ஊக்கமுடன் இருத்தல்.

2. பௌத்த நெறிப்படி இறப்பு என்பது மீண்டும் பிறப்பதற்கு வித்தாகக் கருதப்படுகிறது. மீண்டும் பிறத்தற்கான வினையை உடையவரே இறந்தாராகக் கருதப்படுவர். மீண்டும் பிறக்கும் விதியற்றோர் பிறவிக் கடல் கடந்தார் ஆவார்.

3. உயர்நிலை அடைதலாவது அரகந்த நிலையாகிய ஞானநிலை எய்துதல். இதுவே வாழ்வின் குறிக்கோளாகும்.

4. தவமியற்றுவதில் இருநிலைகள் உள

1. ஒருமுனைப்பாடு (samatha)
2. உள்ளொளி பெறல் (vipassana)

மேற்கோள்

மடியை மடியா ஒழுகல் குடியைக்
குடியாக வேண்டு பவர். *( குறள்: 602 )*

மடிமடிக்கொண் டொழுகும் பேதை பிறந்த
குடிமடியும் தன்னினும் முந்து. *(குறள்: 603 )*

நெடுநீர் மறவி மடிதுயில் நான்கும்
கெடுநீரார் காமக் கலன். *( குறள்: 605 )*

4. Uṭṭhānavato satimato
sucikammassa nisammakārino
Saññatassa ca dhamma jīvino
appamattassa yaso 'bhivaḍḍhati. (24)

**மொழிபெயர்ப்பு**

விடா முயற்சி, தெளிவான சிந்தனை, வினைத் தூய்மை, அன்பு, ஆழ்ந்தகவனம், அறவாழ்வு[1], விழிப்புடைமை ஆகியவற்றை உடையவனது புகழ் மேலும் மேலும் வளர்கிறது.

*சூழல்*

பெரும் செல்வன் ஒருவனுடைய மகன் அடக்கமும் பணிவும் உடையவனாய்ச் சாதாரணத் தொழிலாளியைப் போல் எளிமையாக வாழ்ந்து வந்தான். அவனது எளிமை, அடக்கம், திறமையைக் கண்ட மன்னன் அவனை உயர்ந்த பதவியில் அமர்த்தினார். மன்னன் ஒரு சமயம் அவனைப் புத்தருக்கு அறிமுகப் படுத்தும் பொழுது புத்தர் அவனது இயல்பினையும் அதன் பயனையும் மன்னனுக்கு விளக்கி இப்பாடலைக் கூறினார்.

*விளக்கம்*

1. அற வாழ்க்கை அல்லது தூய வாழ்க்கை என்பது வீடு பேற்றிற்குரிய எட்டு நெறிகளுள் ஒன்றாகும். தூய

வாழ்க்கை (sammā ājīvo) வாழ்வோர் கீழ்க்கண்ட ஐவகைத் தொழில்களை விட்டொழிக்க வேண்டும்.

1. அறிவு வணிகம் (sattha vāṇija )
2. உயிர் வணிகம் (satta vāṇija )
3. நச்சு வணிகம் ( visa vāṇija )
4. ஊன் வணிகம் (maṃsa vāṇija)
5. கள் வணிகம் (majja vāṇija )

இவை தவிர நடைமுறை நெறிகளாகப் பஞ்ச சீலம் என்னும் ஐவகை ஒழுக்கமும் (கொல்லாமை, கள்ளாமை, பிறன்மனை நயவாமை, பொய் கூறாமை, கள்ளுண்ணாமை); சமயத் துறையில் உள்ளோர் (துறவியராக அல்லாதோர்) இவற்றோடு இரவில் தூய்மையற்ற உணவு உண்ணாமை, மணப்பொருள்களைப் பயன்படுத்தாமை, தரையில் பாய் மேல் படுத்தல் ஆகிய மூன்றும் சேர்த்து அட்டசீலம் என்னும் எண் வகை ஒழுக்கமும்; துறவியருக்கு இவற்றோடு நாட்டியம், இசை போன்றவை விரும்பாமை, பொன் வெள்ளி ஆகியவை தொடாமை ஆகிய இரண்டு நெறிகள் சேர்த்து, தசசீலம் என்னும் பத்து வகை ஒழுக்க நெறிகளையும் வகுத்துள்ளார் புத்தர். இவற்றுள் துறவியருக்கு இரவில் உண்ணாமை என்னும் விதியை வற்புறுத்துவார் புத்தர், இந்நெறிகளே ஒருவரை அறநெறிப்பட்ட தூய வாழ்வில் வைத்து நிர்வாண நிலை அடைய வழி வகுப்பன.

மேற்கோள்

ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றித்
தாழா துஞற்று பவர். *(குறள்: 620)*

அருமை உடைத்தென் றசவாமை வேண்டும்
பெருமை முயற்சி தரும். *(குறள்: 611)*

5. Utthānen 'appamādena
sañ̄ñamena damena ca
Dīpaṁ kayirātha medhāvī
yaṁ ogho n'ābhikīrati. (25)

**மொழிபெயர்ப்பு**

அறிஞர்கள் விடா முயற்சி, விழிப்புணர்வு, ஒழுக்கம், தன்னடக்கம் ஆகியவற்றால் தன்னை வெள்ளத்தால்[1] பாதிக்கப்படாததொரு தீவாக ஆக்கிக் கொள்கின்றனர்.

*சூழல்*

மகாபந்தகன் என்னும் துறவி தன் தம்பியாகிய சூள பந்தகன் என்பனையும் துறவு நெறிப்படுத்தினான். மூத்தவன் கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கினான். ஆனால் இளையவனான சூள பந்தகன் ஒரு செய்யுளை மனனம் செய்ய நான்கு மாதங்களாக முயன்றும் இயலவில்லை. இதனால் சலிப்புற்ற மூத்தவன் அவனைக் கடிந்து நீ துறவுக்குத் தகுதியற்றவன் எனக் கூறி இல்லறத்திற்கே திரும்பும்படிச் சொன்னான். இதனை அறிந்த புத்தர் சூள பந்தகனை அழைத்து அவனது தகுதியும் தன்மையும் அறிந்து அவனிடம் தூய்மையான ஒரு வெள்ளைத் துணியைக் கொடுத்துக் கொளுத்தும் வெய்யிலில் அதைப் பிடித்துக் கொண்டிருக்கும்' படிக் கூறினார். அவனும் அவ்வாறே பிடித்துக் கொண்டு அத்துணியைக் கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்தான். சிறிது நேரத்தில் வியர்வையால் அத்துணி அழுக்கடைந்தது. இதைக் கண்ட அவன் மனத்தில் வாழ்க்கையின் நிலையாமைக் கொள்கை ஆழமாகப் பதிந்தது. அதன்பின் அவன் தவநெறியில் சென்று அரகந்த நிலையடைந்தான், அப்பொழுது புத்தர் கூறிய பாடல் இது.

*விளக்கம்*

1. வெள்ளமாவது (ogha):- புலனுகர்ச்சி (kāma); தவறான கண்ணோட்டம் (diṭṭhi); உலக வாழ்வில் விருப்பம் (Bhava); அறியாமை (avijjā) ஆகியனவாகும். மேடான தீவினுள் வெள்ளம் நுழைந்து அழிவினை உண்டாக்க இயலாது. அது போல முயற்சியுடைமை முதலிய நன்னெறிகளை உடையோரை புலனுகர்ச்சி முதலிய தீமையாகிய வெள்ளம் அணுகி அவர்களை அழிக்க இயலாது.

மேற்கோள்

நிலையின் திரியாது அடங்கியான் தோற்றம்
மலையினும் மாணப் பெரிது. *(குறள்: 124)*

ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்க லாற்றின்
எழுமையும் ஏமாப் புடைத்து. *(குறள்: 126)*

6. Pamādamanuyuñjanti
bālā dummedhino jana
Appamādañ ca medhāvī
dhanaṁ seṭṭhaṁ 'va rakkhati. (26)

**மொழிபெயர்ப்பு**

அறிவற்ற மக்கள் மயக்கத்தில் அழுந்தி அழிகின்றனர். அறிவுடையோரே விழிப்புணர்வினைப் பெரு நிதி போல் போற்றிக் காக்கின்றனர்.

7. Mā pamādamanuyuñjetha
Mā kāmarati santavaṁ
Appamatto hi jhāyanto
Pappoti vipulaṁ sukhaṁ. (27)

**மொழிபெயர்ப்பு**

மயக்கத்தில் உழலாதீர், புலனுகர்ச்சியில் மனம் கொள்ளாதீர். விழிப்புணர்வுடனிருந்து தவம் இயற்றுவோர் அளவிறந்த பேரின்பத்தை அடைகின்றனர்.

*சூழல்*

புத்தர் சாவத்தியில் ஜேதவனத்தில் தங்கியிருந்த போது சாவத்தியில் காமன் விழா ஏழு நாள்கள் நடைபெற்றது. இளைஞர் தங்கள் உடலில் சாணம் முதலியவற்றைப் பூசிக்கொண்டு தெருவில் தீய சொற்களை உரக்கச்சொல்லிக் கொண்டு திரிந்தனர். இந்நாள்களில் புத்தர் தம் மாணவர்களுடன் வெளியே வராமல் மடத்துள்ளேயே தங்கியிருந்தார். எட்டாம் நாள் சில அன்பர்கள் புத்தருக்கும் ஏனையோருக்கும் உணவும் பரிசுப் பொருள்களும் கொண்டு வந்து கொடுத்து புத்தரை நோக்கி "ஐயா, ஏழு நாள்களும் தங்களுக்கு மகிழ்வுற்றுச் சென்றனவோ? " என வினவினர்.

அதற்குப் புத்தர்அறிவிலிகளின் செயலையும் அறிவுடையோர் செயலையும் வேறுபடுத்திக் காட்டி அதன் பயனையும் விளக்கி இப்பாடலைக் கூறினார்.

8. Pamādaṁ appamādena
Yadā nudati paṇḍito
paññāpāsādamāruyha
asoko sokiniṁ pajaṁ
Pabbataṭṭho'va bhummaṭṭhe
dhīro bāle avekkhati. (28)

**மொழிபெயர்ப்பு**

சான்றோர் விழிப்புணர்வால் மயக்கத்தை அகற்றி அறிவாகிய பெரிய மாளிகையில் துன்பமின்றி அமர்ந்து கொண்டு, மலை மேலுள்ளோன் தரையில் உள்ள மக்களைப் பார்ப்பது போன்று துன்பத்தில் உழன்று கொண்டிருக்கும் அறிவற்ற மக்களைப் பார்க்கின்றனர்.

*சூழல்*

ஒரு சமயம் மகா கஸ்ஸப தேரர் தன் உயர்தனி ஆற்றலால் பிறப்பு இறப்பு பற்றிய இரகசியத்தை அறிந்து கொள்ளும் முயற்சியில் ஈடுபட்டிருந்தார். இதை அறிந்த புத்தர் அவர்முன் தோன்றி அப்படி முழுமையும் அறிந்து கொள்ளும் திறன், புத்த நிலை அடைந்தோர்க்கே இயலும் என்றுரைத்து இப்பாடலைக் கூறினார்.

மேற்கோள்

பொறியின்மை யார்க்கும் பழியின்று அறிவறிந்து
ஆள்வினை இன்மை பழி. *(குறள்: 618)*

9. Appamatto pamattesu
suttesu bahujāgaro
Abalassaṁ'va sīghasso
hitvā yāti sumedhaso. (29)

**மொழிபெயர்ப்பு**

விழிப்புணர்வுடனும் மிகுந்த எச்சரிக்கையுடனும் உள்ள (அறிஞர்கள்), வலிமையுடைய குதிரையைப் போன்று விரைந்து சென்று மயக்கமும் மந்த நிலையும் உள்ளவர்களைப் பின்னால் விடுத்து முன்னேறிவிடுவர்.

*சூழல்*

நண்பர் இருவர் புத்தரிடம் சென்று துறவு மேற்கொண்டு தவநெறியில் சென்றனர். கானகத்தே தவமியற்றச் சென்ற அவர்களுள் ஒருவர் மிகுந்த ஆர்வத்துடனும் சுறுசுறுப்புடனும் விடா முயற்சியுடனும் செயல்பட்டுத் தவமியற்றினார். மற்றவர் ஆர்வமின்றி இருந்தார். முடிவில் அவர்களைப் புத்தர் அழைத்து விசாரிக்கும் பொழுது அவர்கள் தங்கள் செயல்களைக் கூறினர். புத்தர் அவருள் முயற்சியுடையோரைப் பாராட்டிக் கூறிய பாடல் இது.

10. Appamādena Maghavā
devānaṁ seṭṭhataṁ gato
Appamādaṁ pasaṁsanti
pamādo garahito sadā. (30)

**மொழிபெயர்ப்பு**

தன் விழிப்புணர்வால் மகவா என்பவன்[1] தேவர்களின் அரசனாக (இந்திரனாக) ஆனான். விழிப்புணர்வு எல்லோராலும் பாராட்டப்படுகிறது. அசட்டையாக இருத்தல் அனைவராலும் எப்பொழுதும் பழிக்கப்பகிறது.

*சூழல்*

சாதாரண மனிதனும் தன்னுடைய தளரா உழைப்பாலும் நற்செயலாலும் தேவர்களுக்கு அரசனாகிறான். புத்தரின் காலத்தில் வைசாலியில் வாழ்ந்து வந்த ஒருவன் தன் நன்முயற்சியால் தேவர்களுக்கு அரசனான். அவனைக் குறித்து புத்தர் கூறிய பாடல் இது.

*விளக்கம்*

1 'மகவா' என்பது இந்திரன் என்னும் பொருள்படும் சொல். பழங்காலத்தில் ஒருவன் தன் வாழ்நாள் முழுதும் பிறருக்கு உழைப்பதிலும், நல்லறச் செயல்கள் செய்வதிலும் ஈடுபட்டுத் தேவேந்திரனாகப் பிறக்கும் பேறுபெற்றான். அவனை இங்குப் புத்தர் எடுத்துக்காட்டுகிறார். மகவான் பற்றிய செய்தியை மகமாணவக ஜாதகத்தில் காண்க.

மேற்கோள்

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும். *(குறள்: 50)*

11. Appamādarato bhikkhu
pamāde bhayadassi vā
Sañ̃ojanaṁ aṇuṁ thūlam
ḍahaṁ aggi' va gacchanti. (31)

**மொழிபெயர்ப்பு**

எச்சரிக்கையுடன் இருப்பதை விரும்பும் பிக்கு சோம்பலைக் கண்டு அஞ்சுகிறார். நெருப்பு சிறிய பெரியவாகிய அனைத்தையும் எரித்து அழிப்பது போல அவர் தமது கட்டுகளை[1] எல்லாம் எரித்து அழித்து முன்னேறுகிறார்.

*சூழல்*

துறவி ஒருவர் தவமியற்றக் காட்டுக்குள் சென்று தவ முயற்சியில் இறங்கினார். ஆனால், அவர் அம்முயற்சியில் சோர்வுற்றுப் புத்தரைக் காணத் திரும்பிக் கொண்டிருந்தார். வழியில் காட்டுத் தீ ஒன்று சிறிய பெரியவாகிய அனைத்துப் பொருள்களையும் ஒரு சேர அழித்துக் கொண்டு வேகமாகப் பரவுவதைக் கண்டார். இக்காட்சியால் புதிய சிந்தனையைப் பெற்ற அவர் ஞானம் அடைதற்குத் தடையாக இருக்கும் கட்டுகளை ஒரு சேர அழிக்கத் தீர்மானித்தார். இம்மனத் தெளிவினைத் தொலைவில் இருந்து அறிந்த புத்தர் அவர் முன் தோன்றிக் கூறிய பாடல் இது.

விளக்கம்

1 Saññojana - மனிதனின் ஞான வழி முன்னேற்றத்திற்குத் தடையாக உள்ள கட்டுகள் பத்து என்பர் பௌத்தர்.

அவை,

1. உடல் உண்மையானது என்னும் எண்ணம் (Sakkāyaditthi)
2. ஐயம் (Vicikiccā)
3. பயன் நாடிச் செய்யும் விரதங்கள் (Silabbata parāmāsa)
4. காம வேட்கை (Kāmarāga)
5. சினம் (Paṭigha)
6. உருவ நாட்டம் (Rūparāga)
7. உருவம் அற்ற உலக நாட்டம் (Arūparāga)
8. அசந்தை (Māna)
9. தானே மேலானவன் எனனும் உணர்வு (Uddhacca)
10. அறியாமை (avijjā)

இப்பத்தையும் நீக்கி உயரிய ஒழுக்க நெறியில் நின்று செயல்படுபவர்கள் வீடு பேறடைவர்.

மேற்கோள்

ஊழையும் உப்பக்கங் காண்பர் உலைவின்றித்
தாழா துஞற்று பவர். (குறள்: 620)

12. Appamādarato bhikkhu
pamade bhayadassi vā
Abhabbo parihānāya
nibbānass'eva santike. (32)

மொழிபெயர்ப்பு

விழிப்புணர்வில் மகிழ்வும் அசட்டையில் அச்சமும் கொண்டுள்ள பிக்கு தன் நிலையினின்றும் வீழ்ச்சியடைவதில்லை. மாறாக நிர்வாண நிலைக்கு அருகில் உள்ளவர் ஆவர்.

*சூழல்*

பிக்கு ஒருவர் எளிமையும் மன நிறைவும் கொண்டவராய் வாழ்ந்து வந்தார். அவரது இயல்பினைக் கண்ட புத்தர். அவர் தனது முற்பிறவியில் தன்னுடன் கங்கைக் கரையில் வாழ்ந்த போது ஏற்பட்ட பழக்கத்தால் இந்தக் குணம் அவருக்கு ஏற்பட்டது என்றுரைத்து அத்தகைய குணமுள்ளவர்கள் என்றும் தன் நிலையினின்றும் வீழ்வதில்லை; மாறாக நிர்வாண நிலையை நெருங்கிவிட்டவர் என்று கூறிய பாடல் இது.

மேற்கோள்

மடியிலா மன்னவன் எய்தும் அடியளந்தான்
தாஅய தெல்லாம் ஒருங்கு. *(குறள்: 610)*

## 3. CITTA VAGGA

### 3. மன இயல்

1. Phandanaṁ capalaṁ cittaṁ
   durakkhaṁ dunnivārayaṁ
   Ujuṁ karoti medhāvi
   usukāro'va tejanaṁ. (33)

**மொழிபெயர்ப்பு**

வில்லாளி தனது அம்பினை நேராகச் செலுத்துவது போன்று அறிவுடையோர் நிலையற்றதும், அடிக்கடி மாறுவதும், காப்பதற்கும் நிறுத்துவதற்கும் அரியதான மனத்தை நேராகச் செலுத்துவர்.

2. Vārijo 'va thale khitto
   okamokata ubbhato
   Pariphandati 'daṁ cittaṁ
   māradheyyaṁ pahātave. (34)

**மொழிபெயர்ப்பு**

நீரிலிருந்து வெளியே எடுத்துத் தரையிலிடப்பட்ட மீன் துடிப்பதைப் போல, இந்த மனமும் துடித்துக் கொண்டிருக்கிறது. எனவே,மனத்திலிருந்து மாரனை நீக்க வேண்டும்.[1]

*சூழல்*

தவறான கண்ணோட்டத்துடனும் தீய எண்ணங்களுடனும் வாழ்ந்து வந்தார் ஒரு பிக்கு. அவரது மன நிலையை அறிந்த புத்தர் அவர் முன் தோன்றி அவரது தவறான மன நிலையைச் சுட்டிக் காட்டித் திருத்தும் பொழுது கூறியவை இப்பாடல்கள்.

*விளக்கம்*

1. நீரிலிருந்து மீனைத் தரையில் எடுத்துப் போட்டால் அம்மீன் அமைதியின்றித் தன் உயிருக்காகப் போராடுகிறது. அதுபோல மனத்தை இருக்க வேண்டிய முத்தி நெறியிலிருந்து எடுத்து உலக விவகாரங்களில் திருப்பினால் அமைதியிழந்து ஆசை வயப்பட்டு ஒன்றிலிருந்து ஒன்றுக்குத் தாவி அலைந்து தவிக்கிறது. தரையிலிருந்து மீனை எடுத்துத் தண்ணீரில் போட்டால் அது உயிர் பிழைத்து உற்சாகமாக நீந்துவது போல, மாரனின் பிடியிலிருந்து விடுவித்து நிர்வாண நெறியில் மனத்தைச் செலுத்தினால் அது பேரின்ப வெள்ளத்தில் நீந்தித் திளைக்கிறது.

(மாரனைப் பற்றிய விளக்கம் பாடல் 8 இல் காண்க)

3. Dunniggahassa lahuno
Yattha kāmanipātino
Cittassa damatho sādhu
cittaṁ dantaṁ sukhāvahaṁ. (35)

**மொழிபெயர்ப்பு**

தடுத்து நிறுத்துவதற்கு அரியதும் எளிதில் மேலெழக் கூடியதும்[1] எப்பொருளின் மீதும் எளிதில் சென்று படரக் கூடியதுமான[2] மனத்தைக் கட்டுப்படுத்துவது நல்லது. மனத்தைக் கட்டுப்படுத்துவதே இன்பத்தைக் கொணர்வதாகும்.

*சூழல்*

பிக்குகள் சிலர் தவநெறி மேற்கொண்டு தனித்திருந்து தவமியற்ற வெகுதூரத்திலுள்ள ஓர் ஊருக்குச் சென்று அதனருகில் தங்கினர். தங்கள் தவ நெறிக்கு இடையூறு ஏற்படக் கூடாதெனக்

கருதி ஒருவருக்கொருவர் பேசுவதில்லை என உறுதி பூண்டிருந்தனர். ஒரு நாள் அவர்களுக்கு உணவு கொண்டு வரும் பெண் அவர்களிடம் தவமியற்றும் முறைகளைப் பயின்று தினமும் தவமியற்றி முன்றாம் நிலையான அநாகத நிலையை அடைந்தாள். அத்துடன் தொலைவில் உணரும் ஆற்றலும் அவளுக்குக் கை கூடியது. அதன்படித் துறவியரது நிலையை அறிய முற்பட்டு அவர்கள் இன்னும் முதல் நிலையிலேயே இருப்பதை அறிந்து அதற்குக் காரணம் முறையான உணவு கிட்டாமையே எனத் தெரிந்து அதற்கான ஏற்பாடுகளைச் செய்ய அவர்கள் அரகந்த நிலையை அடைந்தனர். அவர்களைப் பற்றி அறிந்த ஒரு துறவி தானும் அதே உயர் நிலை அடைய விரும்பி அவ்விடம் சென்றார். அங்குப் பிறர் மனத்தை அறியும் பெண்ணைப் பற்றியறிந்து, சில சமயம் தறிகெட்டுப் போகும் தன் மனத்தை அப்பெண் அறியின் இழுக்காகுமே என்று நாணி அவ்விடம் விட்டகன்று புத்தரிடம் வந்தார். அவர் திரும்பிய காரணத்தை அறிந்த புத்தர் அவருக்கு அவ்விடமே சரியான இடம் என்று கூறி அவ்விடத்திற்கே திருப்பி அனுப்பினார். அவரும் அங்குச் சென்று மனத்தை அடக்கித் தவம் செய்து ஞானம் பெற்றார். அவருக்கு அறிவுரை கூறிய பாடல் இது.

*விளக்கம்*

1. மனம் உள்ளடங்கிக் கிடப்பது போன்று தோன்றினும் அது எப்பொழுதும் சிறு காற்றுக்கும் மேலெழும் பஞ்சு போன்று மேலெழுந்து பறக்கும் தன்மையது. ஓரிடத்து அடங்கிக் கிடப்பதன்று.எனவே அது இலேசானது(lahuno) எனக் குறிப்பிடப்பட்டது.

2. மனம் ஒரு பொருளை நிலையாகப் பற்றிக் கொண்டிருப்பதில்லை. சிறு குழந்தை புதிய பொம்மையைக் கண்டவுடன் கையிலுள்ள பொம்மையை அது புதியதை விட நல்லதாக இருப்பினும் - தூக்கி எறிந்துவிட்டுப் புதியதை நாடுவது போன்று; மனம் ஓரின்பத்தைத் துய்த்துக் கொண்டிருக்கும் பொழுது எந்த நேரத்திலும் மற்றொன்றின் மீது சென்று படரும் தன்மையுடையது. எனவே தான் "மனமென்னும் பேய்க் குரங்கு" என்றார் இராமலிங்க அடிகளார்.

4. Sududdasaṁ sunipuṇaṁ
yattakāmanipātinaṁ
Cittaṁ rakkhetha medhāvi
cittaṁ guttaṁ sukhāvahaṁ. (36)

**மொழிபெயர்ப்பு**

காட்சிக்கு அரியதும்[1], மிக நுண்மையானதும், தான் விரும்புவதனை எளிதில் சென்று பற்றக் கூடியதுமான மனத்தை அறிஞர்கள் கட்டுப்படுத்துகின்றனர். அவ்வாறு மனத்தைக் கட்டுப்படுத்துவது இன்பத்தைக் கொணர்வதாகும்.

*சூழல்*

பௌத்தத் துறவி ஒருவன் அந்நெறிக்குரிய ஒழுக்க விதிகள் பலவாக இருக்கக் கண்டு அவ்வளவையும் முறையாகப் பின்பற்றுவது கடினம் என அஞ்சினான். எனவே துறவு நெறியை விட்டுவிட முயன்றான். இதையறிந்த புத்தர் அவனை அழைத்துக் கேட்க அனைத்து விதிகளையும் பின்பற்றுவது கடினமாக இருப்பதால் ஓரிரு விதிகள் மட்டுமிருப்பது நல்லது என்றான். அவன் விருப்பத்திற்கிணங்க புத்தர் மனத்தைக் கட்டுப்படுத்தும் ஒரே விதியை மட்டும் அவனுக்கு விதித்தார். அவனும் அவ்வாறே நடந்து ஞானியானான். அவனுக்கு அறிவுரை கூறும் பொழுது புத்தர் கூறிய பாடல் இது.

*விளக்கம்*

1 நுண்பொருளான மனத்தைப் புறக்கண்களால் கண்டறிவது கூடாததாகலின் காட்சிக்கரியது என்றார்.

5. Dūrangamaṁ ekacaraṁ
asarīraṁ guhāsayaṁ
Ye cittaṁ saññamessanti
mokkhanti mārabandhanā. (37)

**மொழிபெயர்ப்பு**

நெடுந்தொலைவு செல்வதும்[1] தனித்து இயங்குவதும்[2] உருவமற்றதும், குகையுள் இருப்பதுமான[3] மனத்தைக்

கட்டுப்படுத்துபவர்கள் மரணத்தின் (மாரனின்) கட்டிலிருந்து[4] விடுபடுகின்றனர்.

*சூழல்*

அரகந்தரான பிக்கு ஒருவருக்கு அவரது மருமகன் பணிவிடை புரிந்து தவப்பயிற்சி மேற்கொண்டிருந்தான். ஒரு சமயம் அவன் இரண்டு ஆடைகளைப் (civara) பெற்றான். அதில் ஒன்றைத் தன் மாமனுக்குக் கொடுத்தான். அவர் அது தேவையில்லை என மறுத்தார். இதனால் அவருக்குத் தன்மேல் அன்பில்லை என எண்ணி மனம் வருந்தினான் மருமகன். எனவே, தன் துறவு நெறியை விட்டு இல்லறத்தில் புக எண்ணினான். மாமன் உறங்கும் பொழுது அவருக்கு விசிறிக் கொண்டே தன் எதிர்காலத்தைப் பற்றி எண்ணிக் கொண்டிருந்தான். இத்துறவை விட்டுத் திருமணம் முடிப்பேன். எனக்கு ஒரு குழந்தை பிறக்கும். அக்குழந்தையுடனும் மனைவியுடனும் துறவிலிருக்கும் மாமனைக் கண்டு வாழ்த்துப் பெற வருவேன். வழியில் மனைவி கையிலிருக்கும் குழந்தை இறந்து விடும். இதனால் ஆத்திரமுற்ற நான் அவனை நையப்புடைப்பேன் என்று எண்ணிக் கொண்டே கையிலிருந்த விசிறியால் மாமனை அடித்து விடுகிறான். அவனது மன ஓட்டத்தைப் புரிந்து கொண்டார் மாமன். இச்செயலுக்கு வெட்கமுற்று ஓடிவிடுகிறான் அவன். அவனைப் பிடித்து புத்தரிடம் கொண்டு வந்து நிறுத்துகிறார் மாமன். புத்தர் அவனுக்கு அலை பாயும் மனத்தின் தன்மையைப் பற்றிக் கூறியது இப்பாடல்.

*விளக்கம்*

1. மனம் கண்ணிமைக்கும் நேரத்திற்குள் எவ்வளவு தூரமும் சென்று திரும்பக் கூடியது. இருந்த இடத்தில் இருக்கும் பொழுதே மனம் நிலவுக்கும் வேறு இடங்களுக்கும் சென்று திரும்பும் தன்மையுடையது எனவே நெடுந்தொலைவு செல்வது எனப்பட்டது.

2. மனத்தில் ஒரு நேரத்தில் ஒரே எண்ணம் தான் தோன்றும். என்பதையே தனித்தியங்குவது என்றார். ஒரே நேரத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட எண்ணங்கள் தோன்ற மாட்டா.

3. மனம் குகையில் இருப்பது என்பது அது இருக்கும் இடம் இதுதான் எனத் தெளிவாக அறிவியலாததாகையால். அது பிறர் அறியா வண்ணம் ஒளிந்திருப்பதுவே காரணம். இதயத்தைக் குகையாகக் குறிப்பதும் உண்டு.

4. இங்கு மாரன் எனப்படுவது மரணத்தை. ஏனையவெல்லாம் பின்னதாகக் கூறப்படும்.

6. Anavaṭṭhita cittassa
saddhammaṁ avajānito
Pariplavapasādassa
paññā na paripūrati. (38)

மொழிபெயர்ப்பு

நிலையாக நிற்கும் மனமற்றவனும் உண்மையான அறத்தினை அறியாதவனும் அலைபாயும் புலன்களை உடையவனுமானவனது[1] அறிவு முழு நிறைவடைவதில்லை.

7. Anavassuta cittassa
ananvāhato cetaso
Puññapāpa pahīṇassa
natthi jāgarato bhayaṁ. (39)

மொழிபெயர்ப்பு

பேராசையால் தோய்க்கப்பட்டு வெளுத்துப் போகாத மனத்தினனும்[2] கோபத்தினால் பாதிக்கப்படாதவனும் நன்மை தீமைகளுக்கு அப்பாற்பட்டவனுமான எச்சரிக்கை உடையவனுக்கு அச்சம் என்பதில்லை.

கதை

விவசாயி ஒருவன் பிக்குகளின் உழைப்பில்லாத கவலையற்ற வாழ்க்கையைப் பார்த்துத் தானும் பிக்கு ஆனால் அவர்களைப் போல் கவலையின்றிச் சுவையான உணவுகளை உண்டு வாழலாம் என்ற எண்ணத்தில் துறவு மேற்கொண்டார். சில நாளில் மீண்டும் குடும்ப வாழ்வில் ஆசைப்பட்டுத் துறவைக் கைவிட்டான். பின்பு

மீண்டும் துறவியானான். இவ்வாறு ஆறு முறை துறவைக் கைவிட்ட அவன் ஆறாம் முறை வீட்டிற்குச் சென்று அங்கு அலங்கோலமாகப் படுத்திருக்கும் தன் மனைவியைப் பார்த்து வெறுப்புற்றுத் துறவினை உறுதியாகப் பற்றிக் கொண்டு தவம் செய்து அரகந்தரானான். ஏனைய துறவிகளிடம் தான் ஞானம் பெற்றதைக் கூறிய போது அவர்கள் அதை நம்பாமல் புத்தரிடம் முறையிட்டனர். புத்தர் உண்மையைப் புரிந்து கொண்டு அவர்களுக்குக் கூறிய பாடல்கள் இவை.

*விளக்கம்*

1 மனம் அலைபாய்வதன் மூலம் எதிலும் முழுமையை உணர முடிவதில்லை. ஒன்றில் நின்று அதனை அனுபவித்துக் கொண்டிருக்கும் பொழுதே மற்றொன்றின் மீது மனம் பாய்வதால் அதன் அனுபவம் முற்றுப் பெறாமலேயே மற்றதன் மீது பாய்கிறது. இவ்வாசை ஒன்றிரண்டோடு நிற்பதில்லை. மேலும் மேலும் வளர்ந்து கொண்டே போகிறது. எனவே இத்தகைய மனத்தினர் எதிலும் நிறைவு காண்பதில்லை.

2 வெண்மை சாதாரணமாகத் தூய்மையைக் குறிப்பினும் இங்குத் தூய்மையற்ற நிலையைக் குறிக்க வந்தது.

anavassuta citta - anavassuta + citta.
anavassuta - na + avassuta
avassuta - ava + su (ta)

su என்னும் வேர்ச்சொல் வெண்மையைக் குறிக்கும்.

avassuta முழுமையான வெண்மைப் பொருள்.

anavassuta --( எதிர்மறைப் பொருள் ) வெண்மையாக்கப்படாத.

வெண்மையாக்கப்படாத மனிதனுக்கு அச்சமில்லை. வண்மையை மூடன் என்னும் பொருளில் சீத்தச வச் சாத்தனார்

வெள்ளை மகன் போல் விலாவிற நக்கு (மணி 14. 36)

என்றும்; அறிவின்மை என்னும் பொருளில் கொங்குவேளிர்

வெள்ளமை கலந்த .... புன்சொன் மாற்றம் *(பெருங்கதை: இலாவண. 19 - 21)*

என்றும் புன்மொழி என்னும் பொருளில் வெண்பாப் பாட்டியலார்.

வெள்ளைக் கவி - புன்மொழிகளால் கவி பாடுவோன்
*(வெண்பாப்பாட்: 18)*

என்றும் கூறுதல் காண்க.

மேற்கோள்

வெண்மை எனப்படுவ தியாதெனின் ஒண்மை
உடையம்யாம் என்னும் செருக்கு. *(குறள்: 844)*

இதற்குப் பரிமேலழகர் உரை எழுதும் பொழுது "வெண்மையாவது அறிவு முதிராமை" என்பார்.

8. Kumbhūpamaṁ kāyamimaṁ viditvā
nagarūpamaṁ cittamidaṁ ṭhapetvā
Yodetha māram paññāyudhena
jitañ ca rakkhe anivesano siyā. (40)

**மொழிபெயர்ப்பு**

இவ்வுடலை மண்பானைக்கு இணையாக மதித்து[1], நகரத்தைக் காப்பது போல மனத்தைக் காத்து[2], அறிவு என்னும் ஆயுதம் கொண்டு மாரனை எதிர்த்துப் போர்புரிந்து[3], இது வரை வென்ற பகுதியினை ஓய்வின்றிக் காக்க[4].

*சூழல்*

பிக்குகள் சிலர் ஒரு காட்டில் மரங்களின் அடியில் தங்கியிருந்து தவமியற்றினர். அந்த மரங்களில் குடியிருந்த

தேவதைகள் இவர்களால் தங்களுக்கு இடையூறு ஏற்படுமோ என அச்சம் கொண்டு அவர்களை அவ்விடத்தினின்றும் வெளியேற்ற முற்பட்டன. அம்முயற்சியில் அவை பெரும் ஒலி எழுப்பியும் அருவருக்கத் தக்க அச்சமூட்டக் கூடிய உருவங்களைத் தோற்றுவித்தும் தவத்திற்கு இடையூறு ஏற்படுத்தின. இதனால் கவலையுற்ற பிக்குகள் புத்தரிடம் சென்று முறையிட்டனர். புத்தர் நட்புணர்வை வெளிப்படுத்தும் பாடலைக் (Metta sutta) கற்பித்து, அதைப் பாடி அன்பு, கருணை என்னும் உணர்வுகளை வெளியிட்டுத் தேவதைகளை அமைதிப்படுத்த முயலும்படிக் கூறி அனுப்பினார். அவர்களும் அவ்வாறே செய்து தேவதைகளை அமைதிப்படுத்தித் தங்களுக்கு உதவும்படிச் செய்தனர். பின்னர் அவர்கள் விரைவில் ஞானம் பெற்றனர். புத்தர் அவர்களுக்கு அறிவுரை கூறித் தெளிவுபடுத்தும் பொழுது கூறிய பாடல் இது.

*விளக்கம்*

1. மண்பானை நல்ல நிலையில் இருக்கும்வரை பயன்பாடுடையதாக இருக்கும். பானை உடைந்துவிடின் அது பயன்பாடில்லாமல் போவதோடு மட்டுமன்றிப் பின்னால் அதை எவ்வகையிலும் சரிசெய்ய வியலாது. மேலும் புதிய பானையில் பெய்வித்த நீர் கசிவுற்று வெளியேறுவதும் உண்டு. அதுபோல இவ்வுடல் இருக்கும் வரை அதைப் பயன்படுத்தலாம். ஞானம் பெற வழி செய்யலாம். ஆனால், எப்பொழுது சிதையும் எனச் சொல்லவியலாது. அப்படிச் சிதைந்துவிடின் அதனால் எந்தப் பயனும் இல்லை. உடைந்த மண்பானை குப்பையாக மதிக்கப்படுவது போல இறந்த உடலும் அசத்தப் பொருளாக மதிக்கப்படக் கூடியது. எனவே உடல் இருக்கும் பொழுதே செய்ய வேண்டியவற்றைச் செய்ய வேண்டும்.

2. அரண்களுடைய நகரத்தைப் படைகள் கொண்டு காப்பது போல ஒழுக்கம் என்னும் வீரர்களையும் அறிவு என்னும் ஆயுதங்களையும் கொண்டு புலன்களாகிய ஐந்து வாயில்களையுடைய மனமாகிய கோட்டையைக் காக்க வேண்டும் என்பது பொருள்.

3. மாரன் மனத்தை மயக்கி முயற்சியைக் கெடுப்பது வழக்கம். அப்படி மாரனின் முயற்சி நம் மீது விழும் போது அறிவென்னும் ஆயுதத்தைப் பயன்படுத்தி மாரனுடன் போரிட்டு வெல்ல வேண்டும். மாரனின் இம்முயற்சிக்குப் புத்தரின் வரலாற்றைக் காண்க.

4. கோட்டையை எதிரி முற்றுகையிடும்பொழுது கோட்டைக்குள் இருப்பவர் வெளிவந்து எதிரியைத் தாக்கி விரட்ட வேண்டும். எதிரி பின் வாங்கிச் செல்வானாயின் அவன் விட்டுச் சென்ற பகுதிகளில் தம் படைகளை நிறுத்தி இடைவிடாது காவல் புரிய வேண்டும். அவ்வாறு காவல் செய்யாது விடின் மீண்டும் எதிரி அவ்விடத்தைப் பிடித்துக் கொள்ளலாம். அதுபோல் தவமுயற்சியில் கிடைத்த வெற்றிகளை - வளர்த்துக் கொண்ட உள்ளொளியை- மாரனின் முயற்சியால் கெட்டுவிடாது காக்க வேண்டும். வளர்த்த முயற்சியில் தளர்ந்துவிடுவோமாயின் மாரன் எளிதில் நம்மை ஆட்கொண்டு அழிவுப் பாதையில் இட்டுச் சென்று விடுவான் என்பது பொருள்.

9. Aciraṁ vat 'ayaṁ kāyo
pathaviṁ adhisessati
Chuddho apetaviññāṇo
nirattharṁ 'va kaliṅgaraṁ. (41)

**மொழிபெயர்ப்பு**

எந்த நேரமும் இவ்வுடல் மண்ணில் வீழ்வது உறுதி. அப்பொழுது அது தனது உணர்வுகளை இழந்து பயனற்ற மரம் போல் எறியப்படுவதாகும்.[1]

*சூழல்*

பிக்கு ஒருவர் கடுமையான நோயுற்றார். அவரது உடல் பிறரால் அணுகவியலாதபடி அருவருக்கத் தக்கதாக இருந்தது. எனவே உடனுறையும் துறவிகள் யாரும் அவரை அணுகி உதவி செய்யவில்லை. இதைக் கண்ட புத்தர் அவரைத் தொட்டுத் தூக்கித் தானே அவரது உடலை வெந்நீர் விட்டுக் கழுவித் தூய்மை செய்து

மருந்திட்டார். பின்பு அவரது படுக்கையில் அமர்ந்து உடலின் நிலையாமையை உணர்த்தி அந்நிலையிலும் மனத்தைக் கையாள வேண்டிய முறைகளை இப்பாடலால் கற்பித்தார்.

*விளக்கம்*

1. பௌத்த நெறிப்படி இவ்வுலகில் எப்பொருளும நிலையானதன்று . அனைத்தும் மாறக் கூடியதாகும். மரம் போன்றவை வீழ்ந்தால் அக்கட்டைகளைக் கொண்டு நமக்குத் தேவையான பொருள்களைச் செய்து கொள்கிறோம். ஆனால் இவ்வுடல் வீழ்ந்து விட்டால் இதனால் எப்பயனும் இல்லை என்பது மட்டுமன்றி கெட்ட நாற்றத்தைத் தந்து பல நோய்களுக்கும் காரணமாகிவிடும்.

10. Diso disaṁ yaṁ tam kayirā
verī vā pana verinaṁ
Micchāpaṇihitaṁ cittaṁ
pāpiyo naṁ tato kare. (42)

**மொழிபெயர்ப்பு**

கயவன் ஒருவன் மற்றொருவனுக்குச் செய்யும் தீங்கை விடவும், எதிரி ஒருவன் தன் எதிரிக்குச் செய்யும் தீங்கை விடவும், தவறான நெறியில் செலுத்தப்பட்ட மனம்[1] ஒருவனுக்கு மிகுந்த தீங்கினை விளைவிக்கும்.

*சூழல்*

செல்வன் ஒருவன் தன் ஊருக்குப் புத்தர் வந்திருந்த போது அவரைத் தக்க வகையில் உபசரித்துப் பின் அவர் திரும்பிச் செல்லும் பொழுது அவருடன் சிறிது தூரம் சென்று திரும்பினான். அவன் திரும்பும் வழியில் தற்செயலாக வந்த ஒரு அம்பால் தாக்குண்டு இறந்தான். இதை அறிந்த சில பிக்குகள் புத்தரிடம் இதுபற்றிக் கூறி, புத்தர் அவ்வூருக்குச் செல்லாவிடில் அச்செல்வன் புத்தருடன் வந்திருக்க மாட்டான். அவனுக்கு அக்கொடிய மரணம் ஏற்பட்டிருக்காதே என வினவினர். புத்தர் அதை மறுத்து, முன் வினைப் பயனைத் தவிர்க்க யாராலும்

இயலாது. வரும் மரணம் எவ்வகையிலும் வந்தே தீரும் அவன் இறந்தது அவனுடைய முன்வினைப் பயன் என விளக்கி இப்பாடலைக் கூறினார்.

*விளக்கம்*

1. தவறான நெறியில் செல்லும் மனம் கீழ்க்கண்ட பத்து வழிகளில் செல்லும்.

1. கொலை 2.களவு 3.தவறான காமம்
4. பொய்யுரை 5. புறங்கூறல் 6. கடுஞ்சொல் பகரல்
7.வீண் பேச்சு 8. பிறர் பொருளை அநீட்ய விரும்பும் பேராசை 9. தீய எண்ணம் 10. தவறான நம்பிக்கை.

11. Na taṁ mātā pitā kayirā
aññe vā pi ca ñātakā
Sammā paṇihitaṁ cittaṁ
seyyaso naṁ tato kare. (43)

**மொழிபெயர்ப்பு**

ஒருவனுக்கு அவனுடைய தாய்,தந்தை, மற்ற உறவினர்களும் செய்யும் நன்மையை விட அவனது நல்வழிப்பட்ட மனம்[1] செய்யும் நன்மை மிகுப் பெரிதாகும்[2].

*சூழல்*

செல்வன் ஒருவனுடைய மகன் உல்லாசமாக நதியில் நீராடச் சென்று கொண்டிருந்தான். அப்பொழுது கச்சாயன தேரர் பிச்சைக்காக எதிரே வந்து கொண்டிருந்தார். பொன்னிற எழில் பெற்றிருந்த அவரது மேனியைக் கண்டு மயக்கம் கொண்ட செல்வனின் மகன் இத்தகு எழிலுடைய இவர் பெண்ணாக இருந்தாலோ, அல்லது தான் பெண்ணாக இருந்தாலோ இருவரும் கலந்து இன்புறின் அது பேரின்பமாகுமே என எண்ணி ஏங்கினான். அவனது அந்த ஆழமான எண்ணத்தின் விளைவாக அவனது ஆண்மை நிலை மாறிப் பெண்மை தோன்றி, அவன் உடல் முழுமையான பெண்ணாக மாறியது. அப்பெண் தன்

குடும்பத்தினரைப் பார்ப்பதற்கு நாணமுற்று யாரும் அறியாமல் கண்கானா இடம் செல்லத் துணிந்தாள். வழியில் சென்ற வணிகர் குழுவினரின் பின்னாலேயே சென்ற அவளை அவ்வணிகர்கள் தம் தலைவனுக்குப் பொருத்தமான பெண் எனக் கருதித் தம்முடன் தக்கசீலம் அழைத்துச் சென்று அவளைத் தலைவனுக்கு மணமுடித்து வைத்தனர். அவர்கள் வாழ்வில் அவர்களுக்கு இரு குழந்தைகள் பிறந்தன. இந்நிலையில் அவளது பழைய நண்பன் வணிகம் காரணமாகத் தக்கசீலம் வந்தவனை அவள் கண்டு பேசித் தன் நிலையைக் கூறினாள். அவன் தற்போது தக்கசீலம் வந்துள்ள கச்சாயனரிடம் சென்று மன்னிப்பு வேண்டின் நலம் பிறக்கலாம் என்று கூற அவளும் கச்சாயனரைச் சென்று வணங்கித் தன் நிலையைக் கூறி மன்னிக்க வேண்டினாள். அவர் தன் இயல்புப் படி மன்னித்து ஆசி வழங்க மீண்டும் ஆண் உருவம் வந்தது. தன் உருவம் பெற்றவுடன் அவன் துறவு மேற்கொண்டு தவநெறியில் சென்றான். ஏனையோர் அவனிடம் நீ ஆணாக இருந்தபோது பிறந்த குழந்தை மீது உனக்கு அன்பு மிகுதியா? பெண்ணாக இருந்த பொழுது பிறந்த குழந்தைகள் மீது அன்பு மிகுதியா? என வினவ அதற்கு அவன் தான் பெண்ணாக இருந்த பொழுது பிறந்த குழந்தைகள் மீதுதான் மிகுந்த அன்புண்டு என்பான். பின்னர் சில நாள்களில் அவன் ஞானம் எய்தினான். அப்பொழுது அவனிடம் அக்கேள்வியைச் சிலர் கேட்ட போது அவனோ இரு குழந்தைகளும் தனக்குச் சமமே எனக் கூறினான். இதனால் அவன் பொய் சொல்கிறான் எனக் கருதிய அவர்கள் அவனைப் புத்தரிடம் கொண்டு நிறுத்த, புத்தர் அவன் சொல்வது உண்மையே எனக் கூறி இப்பாடலை உரைத்தருளினார்.

*விளக்கம்*

1. நல்வழிப்பட்ட மனமாவது பத்து வகையான நற்செயல்களின் வழிப்பட்டதாகும். பத்து வகையாவன:

1. பெருந்தன்மை 2. நல்லொழுக்கம் 3. தவம் 4. இரக்கம் 5. தொண்டுணர்ச்சி 6. தானம் 7. பிறர் நலத்தில் மகிழ்ச்சி 8. அறவுரைகள் கேட்டல் 9. அறநெறிகளை வளர்த்தல் 10. நேரிய கருத்தைச் சீராக வைத்தல்.

2 பெற்றோரும் உற்றோரும் இப்பிறவியில்தான் உதவ இயலும். அதுவும் தம் பொருள் கொடுத்தல், உடல் உழைப்பினை நல்கல், கருத்துகள் கூறுதல் ஆகியவற்றின் மூலமாக உதவலாம். ஆனால் தன் வினைப்பயனை அனுபவிக்கும் பொழுது அத்துன்பம் பிறரால் பகிர்ந்து கொள்ளத் தக்கதன்று. மேலும் மறுபிறவியில் இவர்களது உறவும் உதவியும் இல்லையாகி விடும். ஆனால் அவனது நல்ல மனம் அவனுக்கு எப்பிறவியிலும் தொடர்ந்து வந்து உதவும்.

## 4. PUPPHA VAGGA

4. மலர் இயல்

1. Ko imaṁ paṭhaviṁ vijessati
   Yamalokañ ca imaṁ sadevakaṁ
   Ko dhammapadaṁ sudesitaṁ
   kusalo pupphaṁ iva pacessati. (44)

**மொழிபெயர்ப்பு**

இவ்வுலகத்தையும்[1], இயமன் உலகத்தையும்[2] தேவர் உலகத்தையும்[3] வெற்றி கொள்பவர் யார் ?[4] மாலைகட்டும் வல்லுநன் (பொருத்தமான) மலர்களைப் பொறுக்கிச் சேர்ப்பது போல மேலான அறநெறியினை[5] ஆராய்ந்து அறிபவர் யார்?

2. Sekho paṭhaviṁ vijessati
   Yamalokañ ca imaṁ sadevakaṁ
   Sekho dhammapadaṁ sudesitaṁ
   kusalo puppham iva pacessati. (45)

**மொழிபெயர்ப்பு**

தவநெறி மாணவன் ஒருவன்[6] இவ்வுலகத்தையும் இயமன் உலகத்தையும், தேவர் உலகத்தையும் வெற்றி கொள்கிறான். மலர்களைத் தெரிந்து பொறுக்கும் வல்லுநன் போன்று அவன் மேலான அறநெறியை ஆராய்ந்து அறிந்து கொள்கிறான்.

*சூழல்*

ஒரு சமயம் பிக்குகள் சிலர் இவ்வுலகையும் அதன் முடிவையும் பற்றிப் பேசிக் கொண்டிருந்தனர். இதைக் கேட்ட புத்தர் அவர்களைப் பார்த்து இவ்வுலகத்தைப் பற்றி விவாதித்துக் கொண்டிராமல் தவநெறியை மேற்கொண்டு தன்னை அறிந்து கொள்ள முயலும்படி அறிவுரை கூறிய பாடல் இது.

*விளக்கம்*

1. இவ்வுலகை வெல்லுதலாவது தன்னைத் தானே வெல்லுவதாகும்.

2. இயமன் உலகம் என்பது நரகர் உலகம், மிருக உலகம், அசுர உலகம், பேய் உலகம் என்னும் நான்கையும் சேர்த்து மொத்தமாகக் குறிப்பதாகும். அவரவர் வினைக்கேற்ப அவ்வவ்வுலகில் துன்புற்று மீள்வர்.

3. தேவர் உலகம் என்பது நரகர் உலகம் முதலான நான்கு நீங்கிய ஏழுலகங்களுள் மனித உலகம் தவிர்த்த ஆறு உலகங்களுமாம்.

4. நமன் உலகத்தையும் தேவர் உலகத்தையும் வெற்றி கொள்வதாவது அவ்வுலகங்களில் பிறவாமல் நிர்வாண நிலையை அடைவதாம்.

5. மேலான அறநெறியாவன, நிர்வாண நிலை எய்துவதற்குப் புத்தர் கூறிய அறநெறிகள். அவை நான்கு பேருண்மைகளும் எட்டு தூய நெறிகளும் பத்து ஒழுக்கங்களுமாம்.

6. தவநெறி மாணவர் (Sekho) என்பவர் சோதபன்ன நெறி முதலான ஏழு நிலைகளிலும் உள்ளவர்கள். அஃதாவது சோதபன்ன நெறியினர். சோதபன்ன நிலையினர், சகதாகாமி நெறியினர், சகதாகாமி நிலையினர், அனாகமி நெறியினர், அனாகமி நிலையினர், அரகந்த நெறியினர் எனப்படுபவர். இவர்கள் இன்னும் எட்ட வேண்டிய நிலைகள் இருப்பதால்

இவர்கள் மாணவர்கள் எனப்பட்டனர். நான்காம் நிலையான அரகந்த நிலை எய்தியவர் எய்துதற்குரிய குறிக்கோளை எய்திவிட்டவராகலின் அவர் மாணவராகார்.

மேற்கோள்

கூற்றம் குதித்தலும் கைகூடும் நோற்றலின்
ஆற்றல் தலைப்பட் டவர்க்கு. *(குறள்: 269)*

3. Pheṇ̄upamaṁ kāyamimaṁ viditvā
maricidhammaṁ abhisambudhāno
Chetvāna mārassa papupphakāni
adassanaṁ maccurājassa gacche. (46)

**மொழிபெயர்ப்பு**

இவ்வுடல் நீர்க்குமிழைப் போலவும் கானல் நீரைப் போலவும் (நிலையற்றது ) என்பதை உணர்ந்து மாரனின் மலர்க் கணைகளை அழித்து[1] இயமனின் பார்வைக்குச் சிக்காத உயர் நிலையை[2] அடைதல் வேண்டும்.

*சூழல்*

கானல் நீர்க் காட்சியும் நீர்க்குமிழும் உண்மை போலத் தோன்றிப் பின் பொய்யாகிப் போவதைக் கண்ணுற்ற பிக்கு ஒருவர் அதுபோலவே அனைத்தும் நிலையற்றது என உணர்ந்து தவநெறியை மேற்கொண்டார். இதனை அறிந்த புத்தர் அவர்முன் தோன்றி அவரது முடிவு மிகச் சரியானது எனப் பாராட்டி இப்பாடலைக் கூறினார்.

*விளக்கம்*

1. மாரனின் மலர்க்கணைகளை அழித்தலாவது மாரனால் மனம், உலக இன்பங்களை அனுபவிக்கத் தூண்டப்படும் பொழுது அத்தூண்டுதலுக்கு ஆட்படாது உறுதியாக நிற்றலாம்.

2 ஒருவனது வினைப்பயனால் பிறப்பு, துன்பம், இறப்புஎன்னும் நிலை வாய்க்கிறது. ஞானியர் (அரகந்தர்) புதிய வினைகளினின்றும் நீங்கி நிர்வாணம் என்னும் முத்திப் பேற்றிற்கு உரியோராகின்றனர். எனவே அவர்களுக்கு மரணம் என்பதில்லை. எனவே அவர்கள் இயமனின் பார்வையிலிருந்து தப்பியோர் ஆகின்றனர்.

மேற்கோள்

படுமழை மொக்குளின் பல்காலும் தோன்றிக்
கெடுமிதோர் யாக்கையென் றெண்ணி - தடுமாற்றம்
தீர்ப்போம்யாம் என்றுணரும் திண்ணறி வாளரை
நேர்ப்பார்யார் நீணிலத்தின் மேல். (நாலடியார்: 27)

4. Pupphāni h'eva pacinantaṁ
byāsattamanasaṁ naraṁ
Suttaṁ gāmaṁ mahogho'va
maccu ādāya gacchati. (47)

**மொழிபெயர்ப்பு**

பெரு வெள்ளம் தூங்கிக் கொண்டிருக்கும் ஓர் ஊரையே முழுவதுமாக அடித்துச் செல்வது போலப் புலனுகர்வாகிய மலர்களைச் சேகரிப்பவனும்[1] நெறியினின்றும் வழுவிய மனத்தவனுமானவனை இயமன்[2] எடுத்துச் சென்று விடுவான்.

*சூழல்*

விதூதபன் என்னும் கோசல அரசன் பிறர் புறங்கூறியதைக் கொண்டு புத்தருடைய சாக்கிய குலத்தின் மீது கடுங்கோபங் கொண்டு அக்குலத்தையே வேரறுத்தாற் போல் அழித்தான். அதைச் செய்துவிட்டுத் தன் நாடு திரும்பும் பொழுது தன் படையினருடன் ஆற்றுப் படுகையில் தங்கியிருந்தான். இரவில் அனைவரும் உறங்கும் பொழுது பெருவெள்ளம் வந்து அனைவரையும் அடித்துச் சென்று விட்டது. இதைச் சிலர் புத்தரிடம் தெரிவித்த போது புத்தர் கூறிய பாடல் இது.

*விளக்கம்*

1. மலர்களைச் சேகரித்தல் என்பது உலக ஆசாபாசங்களைக் குறிக்க வந்தது. இவ்வியலின் இரண்டாம் பாடலில் மலர்களைப் பொறுக்குதல் என்பது அறிவுடையோன் அறநெறியைத் தேர்ந்து தெளிவதற்கு உவமையாகக் கூறப்பட்டது. இது முரண்பாடாகாதா வெனின் ஆகாது. எவ்வாறெனின் அங்கு மாலை கட்டுவோன் தனது மாலை சிறப்பாக அமைய வேண்டும் என்ற காரணத்தால் எவ்வெவ்விடத்து எவ்வெம்மலர் இருத்தல் வேண்டும் எனத் தெளிந்து தேர்ந்து எடுத்துக் கட்டுகிறான். செய்யும் செயல் சிறப்பாக அமைவது அங்கு நோக்கமாகிறது. எனவே, தமது வாழ்வின் நோக்கமாகிய ஞானம் எய்துதற்குரிய சிறந்த நெறிகளைத் தேர்ந்து தெளிதற்கு அஃது உவமையாகக் கூறப்பட்டது. இங்குப் பொதுவாக மலர்களைச் சேகரித்தல் எனக் குறிக்கப் பெறுகிறது. மலர்களைச் சேகரிப்போர் இன்னின்ன மலர்கள் என்ற குறியின்றிக் கிடைக்கும் மலர்கள் அனைத்தையும் சேகரித்துக் கொள்வர். அதுபோன்று தம்முன் இன்பமானவை எனத் தோன்றும் அனைத்தையும் செய்யும் மனிதர்கட்கு அஃது உவமையாக்கப் பட்டது. இதே பொருளிலேயே அடுத்த பாடலிலும் கையாளப்படுகிறது.

2. இயமன் உலகம் என்பது நரகர் உலகம், மிருக உலகம், பேய் உலகம், அசுர உலகம் என நான்காகக் கூறப்படினும், இங்கு நரகர் உலகமே சிறப்பாகக் கூறப்பட்டது.

5. Pupphāni h'eva pacinantaṁ
byāsattamansaṁ naraṁ
Atittaṁ yeva kāmesu
antako kurute vasaṁ. (48)

**மொழிபெயர்ப்பு**

(ஐம்புலன் நுகர்வாகிய) மலர்களைச் சேகரிப்பவனும், நெறியின் வழுவிய மனத்தவனும் நிறைவற்ற ஆசைகளை உடையவனுமானவனை இயமன் தன் ஆளுகைக்குக் கீழ் கொண்டு வருகிறான்.

சூழல்

பிக்குகளுக்குக் காலையில் உணவு முதலியன அளித்து உபசரித்த பெண்ணொருத்தி அன்று மாலையே மரணமடைந்தாள். இதையறிந்த பிக்குகள் புத்தரிடம் தெரிவித்து அத்தகு மரணத்திற்கு விளக்கம் கேட்டனர். புத்தர் இந்த உலகின் நிலையாமையைக் குறித்து விளக்கி நிலையான, நிறைவான மனமற்றவர்கள் எந்த நேரத்திலும் மரண தேவன் கீழ் பணிய வேண்டியவர்களாவர் எனக் கூறிய பாடல் இது.

மேற்கோள்

புல்நுனி மேல் நீர்போல் நிலையாமை என்றெண்ணி
இன்னினியே செய்க அறவினை - இன்னினியே
நின்றான் இருந்தான் கிடந்தான் தன்கேளலறச்
சென்றான் எனப்படுத லால். (நாலடியார்: 29)

6. Yathā 'pi bhamaro puppham
vaṇṇagandhaṁ aheṭhayaṁ
Paleti rasam ādāya
evaṁ gāme munī care. (49)

**மொழிபெயர்ப்பு**

மலர்ச் சோலையில் வண்டு எவ்வாறு மலர்களின் வண்ணத்திற்கோ மணத்திற்கோ ஊறு நேராவண்ணம் தேன் சேகரிக்கிறதோ அது போலத் துறவியும் ஊர்ப் பகுதிகளில் நடந்து கொள்கிறார்.[1]

சூழல்

மொக்கலானர் ஒரு சமயம் தன் மனவலிமையால் ஊர்ப் பெருங்குடி மகன் ஒருவனை அவனது மனைவியுடன் புத்தரிடம் வருவித்து புத்தரின் அறவுரைகளைக் கேட்கச் செய்தார். புத்தரின் உரைகளைக் கேட்ட அவர்கள் புத்தநெறியைப் பின்பற்றத் தொடங்கினர். மொக்கலானரின் இச்செயலை மற்ற பிக்குகள்

புத்தரிடம் கூறிய போது புத்தர், மொக்கலானரைப் போன்ற சிறந்த துறவிகள் மக்களைச் சான்றோர் அறவுரைகளைக் கேட்கும்படி மனம் மாறச் செய்கின்றனர். அவர்கள் மலருக்கு ஊறு நேரா வண்ணம் தேன் குடிக்கும் வண்டுகளுக்கு ஒப்பானவர்கள் என எடுத்துக் கூறினார்.

*விளக்கம்*

1. வண்டானது மலருக்குத் தீங்கிழைக்கா வண்ணம் தனக்குத் தேவையானதை மட்டும் மலரினின்றும் பெறுவது போல உயர்ந்த பிக்குவானவரும் ஊர் மக்களுக்கு எவ்வித இடையூறுமின்றித் தமக்குத் தேவையானதைப் பெற்றுக் கொள்வர் என்பதாம்.

7. Na paresaṁ vilomāni
na paresaṁ katākataṁ
Attano'va avekkheyya
katāni akatāni ca. (50)

**மொழிபெயர்ப்பு**

ஒருவன் அடுத்தவனுடைய குறைகளையும் அவன் செய்தனவற்றையும் செய்யாமல் விடுத்தனவற்றையும் ஆராய வேண்டுவதில்லை. அவன் தான் செய்தனவும் செய்யாமல் விடுத்தனவும் பற்றியே பார்ப்பானாக.

*சூழல்*

நிர்வாணத் துறவி ஒருவர் தன் கொள்கையைப் பின்பற்றும் பெண்ணொருத்தியைப் பொறாமையால் புத்தனது அறவுரைகளைக் கேட்கவிடாது தடுத்து வந்தார். ஆனால் அவள் தன் மகன் முலம் புத்தரைச் சந்தித்து அவரைத் தன் வீட்டிற்கு அழைத்து உபசரித்தாள். அவள் புத்தரின் அறவுரைகளைக் கேட்டுக் கொண்டிருந்த போது அங்கு வந்த நிர்வாணத் துறவி அவளையும் புத்தரையும் இழித்துரைத்தார். திடீரென எதிர்பாராது நடந்த இந்நிகழ்ச்சியால் மனம் வெறுத்த அ ளைத் தேற்றும் வகையில் புத்தர் இப்பாடலைக் கூறினார்.

மேற்கோள்

ஏதிலார் குற்றம்போல் தம் குற்றம் காண்கிற்பின்
தீதுண்டோ மன்னும் உயிர்க்கு. *(குறள்: 190)*

உன் கண்ணிலுள்ள விட்டத்தைக் கவனியாது உன் சகோதரன் கண்ணிலுள்ள துரும்பைப் பார்ப்பதேன் *(பைபிள்: மாத்.:7:3)*

8. Yathā 'pi ruciraṁ pupphaṁ
vaṇṇavantaṁ agandhakaṁ
Eveṁ subhāsitā vācā
aphalā hoti akhubbato. (51)

**மொழிபெயர்ப்பு**

பார்வைக்கு அழகிய வண்ணங்களை உடைய மலர்கள் மணமற்றிருப்பின் பயனற்றது போன்று, தன் அழகிய சொற்களால் பிறருக்கு உபதேசிக்கும் ஒருவன் தான் அதன்படி நடவாவிடின் அதனால் அவனுக்கு எந்தப் பயனும் இல்லை.

9. Yathā'pi ruciraṁ pupphaṁ
vaṇṇavantaṁ sugandhakaṁ
Evaṁ subhāsitā vācā
saphalā hoti sakubbato. (52)

**மொழிபெயர்ப்பு**

பார்வைக்கு அழகிய வண்ணமுடைய மலர்கள் நல்ல மணத்தையும் பெற்றிருப்பின் அது பெரும்பயனுடையதாவது போலத் தாம் கற்றதைப் பிறருக்கு அழகிய சொற்களால் உபதேசிப்பவன் தானும் அதைப் பின்பற்றுவானாயின் அஃது அவனுக்குப் பெரும் பயன் நல்குவதாகும்.

*சூழல்*

மல்லிகா, வாசபகத்தியா என்னும் இரு பெண்கள் ஆனந்தரிடம் அறநூல்கள் கேட்டு வந்தனர். அவர்களுள் ஒருத்தி

அறநூல்களை முழுதும் நன்கு கற்று வந்தாள். மற்றொருத்தியோ சிறிதே கற்று அதில் முன்னேற்றம் காட்டாதிருந்தாள். அவர்கள் நிலையை அறிந்து புத்தர் கூறிய பாடல்கள் இவை.

**மொழிபெயர்ப்பு**

இணரூழ்த்தும் நாறா மலரனையர் கற்றது
உணரவிரித் துரையா தார். *(குறள்: 65)*

10. Yathā' pi puppharāsimhā
kayirā mālāguṇe bahū
Evaṁ jātena maccena
kattabbaṁ kusalaṁ bahuṁ. (53)

**மொழிபெயர்ப்பு**

ஒரு குவியல் மலரைக் கொண்டு பல மாலைகள் தொடுப்பது போல, பிறந்து இறக்கும் ஒரு பிறவியிலேயே பல நற்செயல்களைச் செய்ய வேண்டும்.

*சூழல்*

விசாகை என்னும் பெண்[1] புத்தருக்குப் பணிவிடைகளும் உதவிகளும் பல செய்து வந்தாள். ஒரு சமயம் அவள் பௌத்த துறவிகளுக்காகப் பெரும் பொருட்செலவில் ஒரு மடாலயத்தைக் கட்டி முடித்தாள். அதனால் பெருமகிழ்வுற்ற அவள் தன் மக்களுடனும் பேரக் குழந்தைகளுடனும் பாடிக் கொண்டே அக்கட்டிடத்தின் உள்ளே சுற்றி வந்தாள். இதைக் கண்ட பிக்குகள் சிலர் இது பற்றி புத்தரிடம் தெரிவித்தனர். புத்தர் அவர்களுக்கு விளக்கம் சொல்லுமுகமாக விசாகையின் மிகப் பெரும் அறச் செயலைப் பாராட்டி அவள் தன் நீண்ட கால விருப்பத்தை நிறைவேற்றியது போல அனைவரும் சிறந்த அறங்களைச் செய்ய வேண்டும் எனக் கூறிய பாடல் இது.

*விளக்கம்*

1. விசாகை சாவத்தியில் செல்வந்தர் குலப் பெண். இவள் அனாதபிண்டிகனைப் போல மலர்வனம் (Pupphārāmā)

என்னும் பெயரில் ஒரு பெரிய மடாலயத்தைக் கட்டிக் கொடுத்தாள். புத்தரிடம் பேரன்பும் அவருக்குப் பணி விடை செய்வதில் பெரும் விருப்பினளும் ஆவாள். புத்தர் சாவத்தியில் இருக்கும் காலத்தில் நாளும் புத்தரிடம் சென்று தொண்டாற்றியவள்.

மேற்கோள்

அன்றறிவாம் என்னா தறஞ்செய்க மற்றது
பொன்றுங்கால் பொன்றாத் துணை. *(குறள்: 36)*

யாக்கையை யாப்புடைத்தாய் பெற்றவர் தாம்பெற்ற
யாக்கையால் ஆய பயன்கொள்க - யாக்கை
மலையாடும் மஞ்சுபோல் தோன்றிமற் றாங்கே
நிலையாது நீத்து விடும். *(நாலடியார்: 28)*

11. Na pupphagandho paṭivātaṁ eti
na candanaṁ tagaramallikā vā
Satañ ca gandho paṭivātaṁ eti
sabbā disā sappuriso pavāti. (54)

**மொழிபெயர்ப்பு**

மலர்களின் மணமும் சந்தனம், தகரம், மல்லிகை ஆகியவற்றின் மணமும் காற்றை எதிர்த்துச் செல்வதில்லை. ஆனால் உயர் சான்றாண்மையின் மணம் காற்றையும் எதிர்த்துச் செல்லும், சான்றோரின் புகழ் எல்லாத் திசைகளிலும் பரவுகிறது.

12. Candanaṁ tagaraṁ vā' pi
uppalaṁ atha vassikī
Etesaṁ gandha jātānaṁ
sīlagandho anuttaro. (55)

**மொழிபெயர்ப்பு**

(எனவே) சந்தனம், தகரம், மல்லிகை ஆகியவற்றின் நறுமணத்தை விட நல்லொழுக்கத்தின் நறுமணம் மிகமிக உயர்ந்தது.

*சூழல்*

புத்தர் ஒரு சமயம் சிறந்த மணப் பொருள்களாக இயல்பாகவே மணம் தரத் தக்கவை (Mūlagandha ), கூட்டுப் பொருளாகி மணம் தரத் தக்கவை (Sāragandha), மலரின் மணம் (Puppha gandha ) என மூவகை மணங்களைக் குறிப்பிட்டார்.[1] ஒரு மாலையில் தோட்டத்தில் இருந்த ஆனந்தர் இது பற்றிச் சிந்தித்தார். இம்மூன்றையும் மிஞ்சிய சிறந்த மணம் ஏதும் உண்டோ என்று அறிய விரும்பினார். அது பற்றி அவர் புத்தரிடம் கேட்ட போது புத்தர் இப்பாடல்களைக் கூறிச் சான்றாண்மையின் மணம் அனைத்திலும் சிறந்தது என்றார்.

*விளக்கம்*

1 இயல்பாக மணம் தரத் தக்கதாகச்(Mūlagandha) சந்தனமும், கூட்டுப் பொருளாகி மணம் தரத் தக்கதாகத் (Sāragandha ) தகரமும், மலரின் மணமாக (Puppha gandha ) மல்லிகையும் உதாரணமாகக் கூறப்பட்டது.

(தகரம் - தகரப்பொடி)

மேற்கோள்

குணநலம் சான்றோர் நலனே பிறநலம்
எந்நலத் துள்ளதூஉம் அன்று. *(குறள்: 982)*

மன்னனும் மாசறக் கற்றானும் சீர்தூக்கின்
மன்னனின் கற்றார் சிறப்புடையர் - மன்னர்க்குத்
தன்தேய மல்லால் சிறப்பில்லை கற்றார்க்குச்
சென்ற விடமெலாஞ் சிறப்பு. *(வாக்குண்டாம்: 26)*

13. Appamatto ayaṁ gandhaṁ
 yā' yaṁ tagaracandanī
 Yo ca sīlavataṁ gandho
 vāti devesu uttamo. (56)

**மொழிபெயர்ப்பு**

தகரம் சந்தனம் ஆகியவற்றின் மணம் சிறிது தூரத்திற்கு மட்டுமே செல்லக் கூடியது. ஆனால் தேவருலகு மட்டும் எட்டக் கூடிய சான்றோரின் சிறப்பு என்னும் மணம் மிகவும் உயர்ந்தது.

*சூழல்*

ஒரு முறை கஸ்ஸப தேரர் தனக்குத் தானம் வழங்கும் உரிமையை ஓர் ஏழைக்கு வழங்க எண்ணிக் காத்திருந்தார். அப்பொழுது தேவர்களின் அரசனான இந்திரன் ஓர் ஏழை நெசவாளியின் வடிவத்தில் வந்து அவருக்குத் தானம் வழங்கினான். இதை அறிந்த புத்தர் கஸ்ஸபரின் உயர்குணமாகிய மணத்தால் கவரப்பட்டு இந்திரன் வந்தான் எனக் குறிப்பிட்டு இப்பாடலைக் கூறினார்.

14. Tesaṁ sampannasīlānaṁ
appamādavihārinaṁ
Sammadaññāvimuttānaṁ
māro maggaṁ na vindati. (57)

**மொழிபெயர்ப்பு**

உயர்ந்த ஒழுக்கம் நிறைந்தவனும், விழிப்புணர்வுடன் உள்ளவனும் முற்றறிவினால் விடுதலை யடைந்தவனுமான[1] வனுடைய வழியினை மாரனும் அறிவதில்லை[2].

*சூழல்*

கோதிகன் என்னும் துறவி கடுமையான நோயினால் துன்புற்றிருந்தார். தன் நோய்த் துன்பம் தாங்காது கத்தியால் தன் கழுத்தை அறுத்துக் கொண்டார். ஆனால் சாவு அவரை நெருங்குமுன் உள்ளொளி பெற்று அரகந்தராகி நிர்வாணமடைந்தார். அவரது நிலையினை அறிந்த புத்தர் இயமனும் அவரை நெருங்கவில்லை எனக் குறிப்பிட்டு அரகந்தரானவர், மரணமில்லாப் பெருவாழ்வு வாழ்வதற்குரியவர் என விளக்கிய பாடல் இது.

*விளக்கம்*

1. vimuttā - விடுதலை யடைந்தவன்
vimutti - விடுதலை.

விடுதலைகள் ஐவகைப்படும் அவை.

1. Tadaṅga vimutti- தவறான கருத்துக்களை உண்மை அறிவால் களைதல் - இது தற்காலிகமானதாகும்.

2. Vikkhambhana vimutti- ஐவகைத் தடைகளையும் தியானத்தால் நீக்குதல் - இது நீண்ட விடுப்பு.

3. Samuccheda vimutti- குற்றங்களைத் தவிர்த்தல்.

4. Paṭippassaddhivimutti- குற்றங்களை அமைதிப்படுத்தி நிர்வாணத்திற்கான நெறியை அடைதல்.

5. Nissarana vimutti - குற்றங்களை முழுக்க நீக்கி அரகந்தராதல்.

ஐந்து விடுதலைகளுள் முதலாவது நல்லொழுக்கத்தால் பெறப்படுவது. இரண்டாவது தியானத்தால் பெறப்படுவது. ஏனைய மூன்றும் நல்லறிவினால் பெறப்படுவது.

2. மரணம் என்பது மீண்டும் பிறப்பதற்குரிய வழியுடன் இருப்பது. ஒருவன் மீண்டும் பிறப்பதற்குரியவித்து(காரணம்) அவனிடம் இல்லையெனில் அவன் இவ்வுலக வாழ்வைவிட்டு நீங்கினும் இறந்தானாகக் கொள்ளப்படுவதில்லை.

மேற்கோள்

கூற்றம் குதித்தலும் கைகூடும் நோற்றலின்
ஆற்றல் தலைப்பட் டவர்க்கு. (குறள்: 269)

15. Yathā sankāradhānasmiṁ
ujjhitasmiṁ mahāpathe
Padumaṁ tattha jāyetha
sucigandhaṁ manoramaṁ. (58)

மொழிபெயர்ப்பு

பெருவழியில் தூக்கியெறியப்பட்ட தேவையற்ற குப்பையிலிருந்தும் நறுமணம் பொருந்திய மனத்திற்கினிய தாமரை மலர்வதுண்டு.

16. Evaṁ saṅkhārabhūtesu
andhabhūte puthujane
Atirocati paññāya
sammāsambuddhasāvako. (59)

மொழிபெயர்ப்பு

அது போல மிகச் சாதாரணமான, கீழ்த்தரமான அறிவுக் கண்ணற்ற மக்களிடையிருந்து பேரறிவுடைய முழு ஞானியும் வெளிவந்து ஒளியுடன் திகழலாம்.

சூழல்

தாழ்த்தப்பட்ட பிரிவு மக்களிலிருந்து ஓர் அன்பன் புத்தருக்கும் அவரது மாணவர்களுக்கும் தொண்டாற்ற முன் வந்தான். புத்தர் அவனைத் தன் அறவுரைகள் மூலம் பௌத்த நெறியைத் தழுவச் செய்தார். அவனைப் பற்றிக் குறிப்பிடும் பொழுது புத்தர் இவ்விரு பாடல்களையும் கூறினார். புத்தர் இப்பாடல்களில் அறிவற்றவர்களைக் குருடராகவும் அறிவுடைச் சான்றோர்களைக் கண்ணுடையோராகவும் குறிப்பிட்டுள்ளார்.

மேற்கோள்

கள்ளி வயிற்றி னகில் பிறக்கு மான்வயிற்றில்
ஒள்ளரி தாரம் பிறக்கும் பெருங்கடலுள்
பல்விலைய முத்தம் பிறக்கு மறிவார்யார்
நல்லார் பிறக்குங் குடி.

*(நான்மணிக்கடிகை: 4)*

கண்ணுடையர் என்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர். *(குறள்: 393)*

## 5. BĀLA VAGGA

### 5. மூடர் இயல்

1. Dīghā jāgarato ratti
   dīghaṁ santassa yojanaṁ
   Dīgho bālānaṁ saṁsāro
   saddhammaṁ avijānataṁ. (60)

**மொழிபெயர்ப்பு**

விழித்திருப்போருக்கு இரவு நீண்டதாகத் தோன்றும். களைப்படைந்தோனுக்குப் பயணம் நீண்டதாகத் தோன்றும். உயர்ந்த உண்மைகளை அறியாத மூடர்களுக்கு வாழ்க்கை[1] நீண்டதாகத் தோன்றும்.

*சூழல்*

பசனேதி என்னும் மன்னன் ஒரு சமயம் புத்தரிடம் வந்து பெருந்தகையீர் நேற்று எனக்கு இரவு மிகவும் நீண்டதாகத் தோன்றியது என்றான். அங்கிருந்த மற்றொருவன் பெருந்தகையீர் எனக்கு வரும் வழி மிகவும் நீண்டதாகத் தோன்றியது என்றான். இவ்விரு கூற்றுகளையும் கேட்ட புத்தர், ஒருவருக்கு இரவு நீண்டதாகத் தெரிகிறது. மற்றொருவருக்கு வழி நீண்டதாகத் தெரிகிறது. ஆனால் மூடர்களுக்கோ வாழ்க்கையே நீண்டதாகத் தோன்றுகிறது எனக் கூறிய பாடல் இது.

*விளக்கம்*

1. Samsāra என்பது உலக வாழ்க்கை. சொல் பொருள்படி மீண்டும் மீண்டும் அலைதல் என்பதாகும். அதாவது உலக வாழ்விற்கு மீண்டும் மீண்டும் வருதல் என்பது. Samsara என்பது ஐவகைக் கந்தங்கள், அறுவகைப் புலன்கள் (மெய், வாய்,கண், மூக்கு, செவி, மனம்), உருவம் முதலிய மூலங்கள் இவற்றிற்கிடையே உள்ள தொடர்பு அறாமை என்பதுமாம். அன்றியும் ஒவ்வொரு பிறவிக்கும் இடையே உள்ள இடையறாத் தொடர்பு என்றும் விளக்குவதுண்டு.

2. Carañ ce nādhigaccheyya
seyyaṁ sadisaṁ attano
Ekacariyaṁ daḷhaṁ kayirā
natthi bāle sahāyatā. (61)

**மொழிபெயர்ப்பு**

(தவ நெறி மேற்கொள்ளும் மாணவன்) ஒருவன் ஒழுக்கம்,. தவம், அறிவு ஆகிய குணங்களில் தன்னினும் மேலானவர்களுடனோ, தனக்கு இணையானவர்களுடனோ தொடர்பு கொள்ளவேண்டும். அவ்வாறின்றேல் தனிமையைக் கைக்கொள்ளுதல் சிறந்தது. அதற்காக மூடர்களுடன் உறவு கொள்ளக் கூடாது.

*சூழல்*

புத்தர் சாவத்தியில் இருக்கும் பொழுது இராசகேசத்தில் (தற்போதைய ராஜ்கீர்) மகா கஸ்ஸப தேரரின் கீழ் இரு மாணவர்கள் வந்து சேர்ந்தனர். அவர்களில் ஒருவன் பொய் சொல்லல், விதிகளை மீறுதல் ஆகிய தவறுகளைச் செய்து வந்தான். தேரர் அவனைக் கண்டித்தார். இதனால் வெகுண்ட அவன், அவர் வெளியே சென்றிருந்த போது அவரது குடிசைக்குத் தீ வைத்து விட்டான். இதனைக் கேள்விப்பட்ட புத்தர் மூடர்களின் தொடர்பு தீங்கு விளைவிப்பது என்று கூறும் பாடல் இது.

மேற்கோள்

நுண்ணுணர்வி னாரொடு கூடி நுகர்வுடைமை
விண்ணுலகே யொக்கும் விழைவிற்றால் - நுண்ணூல்
உணர்வில ராகிய ஊதிய மில்லார்ப்
புணர்தல் நிரயத்துள் ஒன்று. *(நாலடியார்: 233)*

3. Puttā m' atthi dhanaṁ m' atthi
iti bālo vihaññati
Attā hi attano natthi
kuto puttā kuto dhanaṁ. (62)

**மொழிபெயர்ப்பு**

எனது மக்கள், எனது செல்வம் எனக் கூறிக் கொண்டு மூடர்கள் துன்புறுகின்றனர். ஆனால் தானே தனக்குச் சொந்தமில்லாத போது மக்களும் செல்வமும் சொந்தமாவது எவ்வாறு?

*சூழல்*

ஒரு பெரும் கஞ்சனான செல்வன் தான் இறந்தபின் மறுபிறவியில் ஒரு விகார உருவமுடைய பிச்சைக்காரனாகப் பிறந்தான். ஒருநாள் அவன் தான் முற்பிறவியில் வசித்த வீட்டினுள்ளே நுழைந்தான். வீட்டிலுள்ளவர்கள் அவனைக் கண்டு தூக்கி வெளியே எறிந்தனர். அப்பொழுது அவ்வழியே வந்து கொண்டிருந்த புத்தர் அதைக் கண்டு அங்குச் சென்று தூக்கியெறிப்பட்ட அப்பிச்சைக்காரன்தான் அவ்வீட்டுக் காரனுடைய இறந்து போன தந்தை. இப்பிறவியில் பிச்சைக்காரனாகப் பிறந்துள்ளான் என்று கூறி இவ்வுலகில் ஒருவன் தனக்குத் தானே சொந்தமில்லாத போது உற்றார் உறவினர் செல்வம் எல்லாம் எப்படிச் சொந்தமாக முடியும் எனக் கூறிய பாடல் இது.

மேற்கோள்

மனைப்பாசம் கைவிடாய் மக்கட்கென் றேங்கி
எனைத்தூழி வாழ்தியோ நெஞ்சே - எனைத்தும்
சிறுவரையே யாயினும் செய்த நன் றல்லால்
உறுபயனோ இல்லை உயிர்க்கு. *(நாலடியார்: 130)*

4. Yo bālo maññati bālyaṁ
paṇḍito vā'pi tena so
Bālo ca paṇḍitamānī
sa ve bālo'ti vuccati. (63)

மொழிபெயர்ப்பு

அறிவற்றவன் தன் அறியாமையை அறிந்து கொள்ளும் பொழுது அவ்வளவிற்கு அறிவுடையவன் ஆகிறான். தன்னை அறிவுடையவனாகக் கருதிக் கொள்பவனே மூடனாக உள்ளான்.

*சூழல்*

ஒரு சமயம் புத்தருடைய அறவுரைகளைக் கேட்க இரு நண்பர்கள் வந்தனர். அவர்களுள் ஒருவன் புத்தரின் உபதேசங்களைக் கேட்டு ஞான நெறியின் முதல் நிலையான சோதபன்ன நிலையை அடைந்தான். மற்றவனோ அங்கிருந்த சில பொருள்களைத் திருடி வந்தான். அவர்கள் இருவரும் வீடு திரும்பும்பொழுது திருடியவன் மற்றவனைப் பார்த்துத் தன்னைப் போல் கிடைத்த பொருளைத் திருடிக் கொண்டு வராத மூடன் எனப் பழித்துரைத்தான். இந்நிகழ்ச்சி பற்றி புத்தருக்குத் தெரிவித்த போது புத்தர் அறிவுள்ளோருக்கும் அறிவற்றவர்களுக்கும் இடையே உள்ள வேறுபாட்டினை விளக்கி இப்பாடலைக் கூறினார்.

மேற்கோள்

வெண்மை எனப்படுவ தியாதெனின் ஒண்மை
உடையம்யாம் என்னும் செருக்கு. *(குறள்: 844)*

5. Yāvajīvam'pi ce bālo
panḍitaṁ payirupāsati
Na so dhammaṁ vijānāti
Dabbi sūparasaṁ yathā. (64)

**மொழிபெயர்ப்பு**

எவ்வளவு நேரம் உடன் இருப்பினும் சட்டுவம் கறிச்சுவை அறியாதது போல மூடர்கள் எவ்வளவு காலம் சான்றோர்களுடன் சேர்ந்திருந்தாலும் அவர்கள் அறநெறிகளை அறிந்து கொள்வதில்லை.

*சூழல்*

உதாயி என்னும் பிக்கு ஒருவர் மகாதேரர்கள் அமரக் கூடிய அறவாசனத்தில் ஒரு சமயம் அமர்ந்திருந்தார். அவரைப் பேரறிஞர் எனத் தவறாக எண்ணிய சில துறவிகள் புத்தரின் அறவுரைகளில் தங்களுக்கிருந்த ஐயத்தைக் கேட்டனர். அவர்கள் வினாவிற்கு விடை பகர இயலாத உதாயி விழித்தார். இதனால் அவரது தரத்தினை அறிந்து கொண்ட ஏனைய பிக்குகள் அவரைப் பற்றி புத்தரிடம் முறையிட்டனர். புத்தர் மூடர்களின் இயல்பினை இப்பாடல் மூலம் அவர்களுக்கு அறிவுறுத்தினார்.

மேற்கோள்

பொன்னே கொடுத்தும் புணர்தற்கு அரியாரைக்
கொன்னே தலைக்கூடப் பெற்றிருந்தும் - அன்னோ
பயனில் பொழுதாக் கழிப்பரே நல்ல
நயனில் அறிவி னவர். *(நாலடியார்: 162)*

தண்டா மரையின் உடன் பிறந்தும்
தண்டேன் உணரா மண்டூகம்
வண்டே கானத் திடையிருந்து
வந்தே கமல மதுவுண்ணும்
பண்டே பழகி யிருந்தாலும்
அறியார் புல்லோர் நல்லோரை
கண்டே களித்தங் குறவாடித்
தம்மிற் கலப்பர் கற்றோரே. *(விவேக சிந்தாமணி)*

சட்ட சட்டி சட்டுவம் கறிச்சுவை அறியுமோ?
*(சிவவாக்கியர்)*

6. Muhuttam api ce viññu
paṇḍitaṁ payirupāsati
Khippaṁ dhammaṁ vijānāti
Jivhā suprasaṁ yathā. (65)

**மொழிபெயர்ப்பு**

நாவானது குழம்பின் சுவையை (நாவில் வைத்தவுடன்) அறிந்து கொள்வது போல அறிவுடையோர் சிறிது காலமே சான்றோருடன் பழகியிருந்தாலும் நல்லறங்களை அறிந்து கொள்கின்றனர்.

*சூழல்*

ஒரு சமயம் நண்பர்கள் முப்பதின்மர் ஒரு குழுவினராக புத்தரிடம் வந்து அவரது அறவுரைகளைக் கேட்டனர். அவர்கள் அவ்வாறு அறவுரைகளைக் கேட்டுக்கொண்டிருந்த அதே நேரத்திலேயே அதே இடத்திலேயே அரகந்த நிலை எய்தினர். இது பற்றி ஏனைய பிக்குகள் புத்தரிடம் வினவிய போது புத்தர் கூறிய பாடல் இது.

7. Caranti bālā dummedhā
amitten` eva attanā
karontā pāpakaṁ kammaṁ
Yaṁ hoti katukapphalaṁ. (66)

**மொழிபெயர்ப்பு**

புல்லறிவு படைத்த பேதையர் தமக்குத்தாமே பகைவர் ஆகித் தமக்குத்தாமே தீங்குகள் செய்துகொண்டு அதன் மூலம் கசப்பான பலன்களை அடைகின்றனர்.

*சூழல்*

சுப்பபுத்தன் என்னும் தொழுநோயாளி, புத்தரின் அறவுரைகளைக் கேட்டு சோதபன்னர் நிலையை அடைந்தான். பின்னர் அவன் புத்தரை வணங்கித் திரும்பிச் செல்லுங்கால் அவனை ஒரு மாடு முட்டி இறந்தான். அவனோடு புக்குசாதி, பாகியா, தாருசீரியா, தம்பதாழகன் என்னும் நால்வரும் இறக்கின்றனர். இது பற்றி புத்தரிடம் தெரிவித்தபோது ஐவரும் சென்ற பிறவியில் ஒரு செல்வனின் மக்களாகப் பிறந்து தேவதாசி ஒருத்தியை ஐவரும் புணர்ந்து அவளைக் கொன்று அவளது நகைகளைக் கவர்ந்து கொண்டனர். அவளோ இறக்கும் தறுவாயில் பழிவாங்கும் எண்ணத்தினளாக இருந்ததால் யக்கினியாகப் பிறந்து

மாடுஉருவில் வந்து முட்டிக் கொன்றாள். அவருள் சுப்பபுத்தன் தகரசீகி என்னும் பச்சேக புத்தரை[1] அவரது தோற்றம் கண்டு தொழுநோயாளி எனக் கேலி செய்தமையின் இப்பிறவியில் தொழுநோயாளியாகப் பிறந்தான் என விளக்கம் கூறி அவரவர் வினைப் பயனை அவரவரே அனுபவித்தாக வேண்டும் என்றுரைத்தார்.

*விளக்கம்*

1. பச்சேக புத்தர் (Pacceka Buddha) என்பவர் இருவகை புத்தர்களுள் ஒருவர். மற்றொருவர் சம்மாசம்புத்தர் (Sammāsambuddha). இவருள் பச்சேக புத்தர் தாம் பெற்ற அனுபவத்தை உலகுக்கு எடுத்துச் சொல்லாது ஊமையன் கண்ட கனா போலத் தாமே அனுபவித்துச் செல்வார். சம்மாசம்புத்தர் தமது அனுபவத்தை உலகிற்கு எடுத்துரைப்பார். இவ்விருவருடன் சதுசச்ச புத்தர், (Catusacca Buddha) சுத புத்தர் (Suta Buddha) என மேலும் இரு பிரிவினரைக் கூறுவதுண்டு. அஃதாவது உயர்நிலையாம் ஞானநிலையை அடைந்தோர் சதுசச்ச புத்தர் (Catusacca Buddha) ஆவார். அறநூல்களை நன்கு கற்றுணர்ந்தோர் சுதபுத்தர் (Suta Buddha) ஆவார்.

மேற்கோள்

தீதும் நன்றும் பிறர்தர வாரா
*(புறம்: 192)*

பிறர்க்கின்னா முற்பகல் செய்யின் தமக்கின்னா
பிற்பகல் தாமே வரும். *(குறள்: 319)*

8. Na taṁ kammaṁ kataṁ sādhu
yaṁ katvā anutappati
Yassa assumukho rodaṁ
vipākaṁ paṭisevati. (67)

மொழிபெயர்ப்பு

எச்செயலைச் செய்வதால் (செய்தவன் பின்னால்) வருந்துகிறானோ, எச்செயலின் பலனை அனுபவிக்கும் பொழுது கண்ணீர்விட்டு அழுகிறானோ அச்செயலைச் செய்யாமை நன்று.

சூழல்

சாவத்திக்கு அருகில் உள்ள ஊரில் வசித்து வந்த விவசாயி ஒருவன், திருட்டுப் பொருளை அது திருட்டுப் பொருள் என்று அறியாமல் பாதுகாத்து வைத்திருந்தான். அப்பொருள் அவனிடம் இருப்பதை அறிந்து அவன் மீது திருட்டுக் குற்றம் சுமத்தி விசாரணைக்குக் கொண்டு சென்றனர். அவன் தன் மீது சுமத்தப்பட்ட குற்றத்தை மறுக்க அவனைப் பற்றிய உண்மையை அறிந்து கொள்வதற்காக அவனைப் புத்தரிடம் அழைத்து வந்தனர். புத்தரும் உண்மை நிலையை எடுத்துக் கூற அவனது அறியாமை கருதி அவனை விடுதலை செய்தனர். அந்த நேரத்தில் அவனுக்கு அறிவுரை கூறும் வகையில் புத்தர் கூறிய பாடல் இது.

மேற்கோள்

தன்னைத்தான் காதல னாயின் எனைத்தொன்றும்
துன்னற்க தீவினைப் பால். *(குறள்: 209)*

9. Tañ ca kammaṁ kataṁ sādhu
yaṁ katvā nānutappati
yassa patīto sumano
vipākaṁ paṭisevati . (68)

மொழிபெயர்ப்பு

எச்செயலைச் செய்வதால் (செய்தவன் பின்னால்) வருந்துவதில்லையோ, எச்செயலின் பலனை அனுபவிக்கும் பொழுது இன்பமும் மகிழ்ச்சியும் அடைகின்றானோ அச்செயலைச் செய்தல் நன்று.

*சூழல்*

ராஜ கேகத்தில் (ராஜ்கீர் ) மன்னன் பிம்பிசாரனது மலர்த் தோட்டத்தில் பணியாற்றிய சுமனன் என்னும் தோட்டக்காரன் ஒரு நாள் தோட்டத்து மல்லிகை மலர்களைப் புத்தருக்குக் காணிக்கையாகக் கொடுத்தான். அதற்குப்பின் அச்செயலுக்காக மன்னனால் தண்டிக்கப்படலாம் என எதிர்பார்த்திருந்தான். ஆனால் அச்செயல் மன்னனுக்குத் தெரிந்தபோது மன்னன் மிக மகிழ்ந்து அவனுக்கு மிகுந்த பரிசுகளை வழங்கிப் பாராட்டினான். இதையறிந்த புத்தர் நற்செயல் புரிவோர் என்றும் அச்செயலுக்காகத் துன்புறுவதில்லை என இப்பாடல் மூலம் விளக்கினார்.

10. Madhu'vā maññati bālo
yāva pāpaṁ na paccati
yadā ca paccati pāpaṁ
atha bālo dukkhaṁ nigacchati. (69)

**மொழிபெயர்ப்பு**

மூடன் தீய செயல்களைச் செய்யும் பொழுது அவை தேன் போல இனிமையானதாக நினைத்துக் கொண்டு அவற்றின் பயன் தெரியும் வரைத் தொடர்ந்து செய்து கொண்டே இருக்கிறான். ஆனால் அவற்றின் பலன் தெரிய வரும் பொழுது அளவற்ற துன்பம் அனுபவிக்கிறான்.

*சூழல்*

சாவத்தி நகரில் செல்வன் ஒருவனுக்கு அழகிய மகள் ஒருத்தி இருந்தாள். தாமரை புரையும் அவளது மேனி எழிலில் விருப்புற்ற அனைத்து நாட்டு மன்னரும் செல்வரும் அவளைத் தனக்கு மணமுடித்துத் தர வேண்டினர். அனைவரது விருப்பத்தினையும் நிறைவேற்ற இயலாமையால் அவன் தன் மகளின் விருப்பப்படி அவளைத் துறவு மேற்கொள்ளச் செய்தான். அவளும் புத்த நெறியில் சென்று அரகந்தரானாள். அதன் பின் அவள் சாவத்திக்குப் பிச்சைக்காகச் செல்லும் பொழுது அவள் வந்து செல்வதைப் பார்த்த அவளது மாமன் மகன் அவள் தங்கியிருந்த குடிலுக்குள் நுழைந்து அவளை வன்முறையால் கெடுத்து விடுகிறான். இதை அவள்

ஏனைய பெண் துறவிகளிடம் சொல்ல, அச்செய்தி புத்தருக்கும் எட்டுகிறது. அதைக் கேள்விப்பட்ட புத்தர் கூறிய பாடல் இது.

11. Māse māse kusaggena
bālo bhuñjetha bhojanaṁ
Na so saṅkhatadhammānaṁ
kalaṁ agghati soḷasiṁ. (70)

**மொழிபெயர்ப்பு**

(விரதத்தின் மூலம் பலனடையலாம் என நம்பும்) மூடர்கள்[1] மாதம் ஒருமுறை புல்லின் நுனியளவு உணவு உண்கின்றனர். ஆனால் அவர்கள் உண்மையறத்தை[2] அறிந்த சான்றோரின் தன்மையில் பதினாறில் ஒருபங்குக்கும் ஈடாகமாட்டார்கள்.

*சூழல்*

ஜம்புகன் என்பவன் செல்வக் குடியில் பிறந்தும் முற்பிறவியில் செய்த வினைப்பயனால் இளமை முதல் மலத்தைத் தின்று வந்தான். உரிய பருவத்தில் ஆசீவக சமயத்தில் சேர்ந்து தலைமயிரைப் பறித்துத் துறவியானான். அப்பொழுதும் அவன் தன் பழைய வழக்கப்படி மலம் மட்டுமே தின்று வாழ்ந்து வந்தான். இதை அறிந்த ஏனைய துறவிகள் அவனைத் தங்கள் சமயத்திலிருந்து நீக்கிவிட்டனர். பின்னர் அவன் ஆடையின்றி நிர்வாணத் துறவியாகி எல்லாவித விரதங்களையும் கடுமையாகக் கைக்கொண்டு மாதம் ஒருமுறை தேனும் வெண்ணெயும் ஒரு புல்லின் நுனியளவு எடுத்து உண்டு வந்தான். ஒரு சமயம் அவன் புத்தரைச் சந்திக்கும்பொழுது புத்தர் அவனுக்கு இப்பாடலைச் சொல்லி உண்மையறத்தினை உணர்த்தினர். பின்பு அவன் புத்த சமயத்தில் சேர்ந்து அரகந்தரானான்.

*விளக்கம்*

1 உண்ணா நோன்பு மூலம் உயர் பேறு அடையலாம் என்ற கோட்பாட்டுடன் உண்ணா நோன்பிருந்து உடலை வாட்டுவோரை மூடர்கள் என்கிறார் புத்தர். புத்தரும் சிலகாலம் உண்ணா நோன்பிருந்து உடலை வாட்டித்

தவமியற்றிப் பார்த்து அதனால் பலனில்லை என்பதை உணர்ந்து அதை விடுத்தார். பின்னரே அவர் வசதியான சுகமான வாழ்க்கை, உடலைத் துன்புறுத்தி முயல்தல் ஆகிய இரண்டு உச்ச நிலையிலும் உண்மையை உணரவியலாது எனக் கண்டு சம நிலையான வழியைக் (majjhima paṭipadā) கண்டு அவ்வழியில் முயன்று ஞானம் பெற்றார்.

2 Saṅkhatadhammā - நன்கு அமைக்கப்பட்ட அறம் எனப் பொதுவாகப் பொருள்படினும், இங்குக் குறிப்பாகப் புத்தரால் உரைக்கப்பட்ட நாற்பேருண்மைகளையே குறிக்கும்.

12. Na hi pāpaṁ kataṁ kammaṁ
sajju khīraṁ' va maccati
Ḍahantaṁ bālam anveti
bhasmacchanno' va pāvako. (71)

**மொழிபெயர்ப்பு**

புதிதாகக் கறந்த பால் உடனே தயிராகாது போலத் தீய செயல்களின் விளைவுகள் உடனே தெரிவதில்லை. அத்தீய செயல்களின் பலன்கள் நீறுபூத்த நெருப்புப் போல மறைந்திருந்து பாவம் செய்த அறிவிலிகளைச் சுடுகின்றன.

*சூழல்*

இராசகேகத்தில் வேளுவனத்தில் புத்தர் தங்கியிருந்த போது ஒரு சமயம் மொக்கலானத் தேரரும் இலக்கணத் தேரரும் பிச்சைக்காக கிஜ்ஜகூட[1] மலையினின்றும் இறங்கிவரும் பொழுது வழியில் பாம்பின் உருவத்துடன் பேய் ஒன்றைக் கண்டனர். அதைக் கண்டு வியப்புற்ற அவர்கள் புத்தரிடம் வினவ, புத்தர் அதற்கான காரணத்தை விளக்கினார். கஸ்ஸப புத்தர்[2] காலத்தில் துறவிகள் பலர் ஊருக்குள் பிச்சைக்காகச் சென்று வந்தனர். இவர்களை விரும்பாத விவசாயி ஒருவன் துறவிகளின் குடிசைகளைத் தீயிட்டுக் கொளுத்தினான். இத்தீய செயலின் காரணமாக இப்பிறப்பில் பாம்புருக் கொண்ட பேயாகப் பிறந்துள்ளான் என விளக்கி இப்பாடலைக் கூறினார்.

*விளக்கம்*

1 கிஜ்ஜ கூட மலை என்பது இராசகேகத்திற்கு அருகில் உள்ள ஒரு மலையின் உச்சி.

2 கஸ்ஸப புத்தர், கௌதம புத்தருக்கு முந்திய புத்தர் ஆவார். 'இறந்த காலத்து எண்ணில் புத்தரும்' என மணிமேகலை ஆசிரியர் கூறக் காணலாம்.

13. Yāvadeva anatthāya
ñattaṁ bālassa jāyati
Hanti bālassa sukkaṁsaṁ
muddhaṁ assa vipātayaṁ. (72)

**மொழிபெயர்ப்பு**

அற்பர்கள் பெறும் அறிவும் புகழும் அவர்களுக்கு நன்மையைச் செய்வதற்குப் பதிலாகத் தீமையையே செய்கின்றன. அவர்களது சிந்தையில் கலக்கத்தை ஏற்படுத்தி நன்மையை அடையவொட்டாமல் அவர்களைக் கெடுத்து விடுகின்றன.

*சூழல்*

ஒரு சமயம் மொக்கலானரும் இலக்கணரும் பிச்சைக்குச் செல்லும் வழியில் சம்மட்டி வடிவப் பேயைக் கண்டனர். அதற்கான காரணத்தைப் புத்தரிடம் வினவினர். புத்தரும் அத்தகு பிறவிக்கான காரணத்தை வெளிப்படுத்தினார். அற்பன் ஒருவன் கவண் வில் எய்யும் கலையைக் கற்றுத் தன் கல்வித் திறனைச் சோதிக்க எண்ணி அவ்வழியாக வந்த பச்சேக புத்தர் ஒருவரைக் கல்லெய்து அடித்துக் கொன்றான். அக்கொடுமையான வினையின் காரணமாக இப்பிறவியில் இவ்வாறு பிறந்து துன்புறுகிறான் என்றுரைத்து இப்பாடலைக் கூறினார்.

14. Asataṁ bhāvanaṁ iccheyya
purekkhārañ ca bhikkhusu
Āvāsesu ca issariyaṁ
pūjā parakulesu ca. (73)

**மொழிபெயர்ப்பு**

மூடனான பிக்கு தனக்குத் தகுதியற்ற மரியாதையையும் முதன்மையையும் ஏனைத் துறவிகளிடமிருந்து எதிர்பார்ப்பான். மடத்தின் தலைமையையும் பொதுமக்களிடத்திலிருந்து வழிபாட்டையும் பெற விரும்புவான்.

15. Mam'eva kata maññantu
gihī pabbajitā ubho
Mam'ev'ativasā assu
kiccākiccesu kismici
Iti bālassa sankappo
icchā māno ca vaddhati. (74)

**மொழிபெயர்ப்பு**

இதைச் செய்தவன் நானே என இல்லறத்தாரும் துறவறத்தாரும் தன்னைப் பேச வேண்டும் என்றும் சிறிய, பெரியவாகிய எச்செயலுக்கும் அனைவரும் தன்னையே பின்பற்ற வேண்டும் என்றும் அறிவற்றவன் விரும்புகிறான். இதனால் அவனது ஆசையும் அகந்தையும் பெருகுகின்றன.

*சூழல்*

பொறாமைக் குணம் கொண்ட பிக்கு ஒருவர் தாம் தங்கியிருக்கும் விகாரத்திற்கு வருகை தந்த புத்தரின் தலைமை மாணாக்கர் ஒருவருக்கு அவர்களது அன்பர்களால் அளிக்கப்பட்ட வரவேற்பையும் மரியாதையையும் கண்டு அதிக பொறாமை கொண்டு அவரைப் பழித்துரைத்தார். மேலும், இது குறித்து அவர் புத்தரிடம் முறையிட்டார். புத்தர் அவரது இழிகுணத்தை உணர்ந்து அவரைக் கண்டித்து, துறவு மேற்கொண்டோர் அதிகாரத்தையும், பிறரது மரியாதையையும் எதிர்பார்க்கக் கூடாது. தான், எனது என்னும் அகந்தையை நீக்கிப் பற்றற்று வாழ்வதே உயர்வுக்கு வழி என அறிவுரை பகர்ந்து இப்பாடல்களைக் கூறினார்.

16. Aññā hi lābhūpanisā
aññā nibbānagāminī
Evaṁ etaṁ abhiññāya
bhikkhu Buddhassa sāvako
Sakkāraṁ nābhinandeyya
vivekaṁ anubrūhaye. (75)

மொழிபெயர்ப்பு

உலகியலில் வெற்றியைத் தரும் வழியும் நிர்வாணத்திற்கு இட்டுச் செல்லும் வழியும் நிச்சயமாக வேறு வேறாகும். இவ்வுண்மையை உணர்ந்து கொண்டு புத்தரைப் பின்பற்றும் சீடர்களாகிய பிக்குகள் உலகியல் செல்வாக்கில் நாட்டம் கொள்ளாது விவேகத்துடன் பற்றற்ற வாழ்வில் நின்று மெய்யறிவை ஈட்ட வேண்டும்.

சூழல்

புத்தர் சாவத்தியில் இருக்கும்பொழுது செல்வக் குடியில் பிறந்த இளைஞன் ஒருவன் புத்தர் நெறியில் நின்று துறவு மேற்கொண்டு வாழ்ந்தான். அவனுக்கு உறவினர்களிடமிருந்து ஏராளமான பரிசப் பொருள்கள் வந்தன. ஆனால் அவற்றை விரும்பாது காட்டில் தனித்து இருந்து தவமியற்றி அரகந்த நிலையை அடைந்தான். அவனது இச்செயலை ஏனைய பிக்குகள் புத்தரிடம் தெரிவித்தனர். புத்தரும் நிர்வாண நெறிக்கான வழி உலகியல் பாதையினும் வேறானது எனச் சுட்டிக் காட்டிக் கூறிய பாடல் இது.

மேற்கோள்

இருவே றுலகத் தியற்கை திருவேறு
தெள்ளிய ராதலும் வேறு. *(குறள் : 374)*

---

# 6. PAṆḌITA VAGGA

## 6. அறிஞர் இயல்

1. Nidhīnaṁ'va pavattāraṁ
   yaṁ passe vajjadassinaṁ
Niggayhavādiṁ medhāviṁ
   tādisaṁ paṇḍitaṁ bhaje
Tādisaṁ bhajamānassa
   seyyo hoti na pāpiyo. (76)

**மொழிபெயர்ப்பு**

இவ்விவற்றைச் செய்யற்க என நம் குற்றங்களைச் சுட்டிக் காட்டிக் கண்டிக்கும் அறிஞர் ஒருவரைக் கண்டால், புதைந்து கிடக்கும் செல்வத்தைச் சுட்டிக் காட்டுவோர் போல அவரைக் கருதி, அவரோடு நட்புக் கொண்டு பழக வேண்டும். அத்தகையோரது தொடர்பு நன்மை பயப்பதேயன்றித் தீமை பயப்பதாகாது[1].

*சூழல்*

புத்தர் சாவத்தியில் இருக்கும் பொழுது வறுமை யெய்திய பிராமணன் ஒருவன் புத்த பிக்குகளுடன் சேர்ந்து வாழலாம் என்ற எண்ணத்தில் புத்த விகாரத்தில் வந்து தங்கினான். அவன் அங்குள்ள துறவிகளுக்கு உரிய பணிவிடைகள் செய்து அவர்கள் அளித்த உணவினை உண்டு வாழ்ந்தான். எனினும் அவன் விரும்பிய படி அவர்கள் அவனுக்குத் துறவளிக்கவில்லை. இதனால் மனம் வருந்தியிருந்த அவன் நிலையை ஞானத்தால் அறிந்த புத்தர் அவன் உயர்பேறு அடைதற்குரியவன் எனத் தெளிந்தார். அன்று மாலை அவர் புத்த சங்கத்தைக் கூட்டி அவ்வெளியோனிடம் யாரும் எப்பொழுதாவது ஏதும் பெற்றீர்களா எனச் சங்கத்தாரை வினவினார்.

அதற்குச் சாரிபுத்தர் தான் முன்பு பிச்சைக்குச் சென்றபோது அவனளித்த ஒரு கரண்டி உணவினை நினைவு கூர்ந்தார். அதன் பொருட்டு அவனுக்குத் துறவளிக்கவும் துணிந்தார். சாரிபுத்தரிடம் துறவு பெற்ற அவன் சாரிபுத்தரின் அறிவுரைகளைக் கேட்டு அதன்படி நடந்து குறுகிய காலத்திற்குள் ஞானம் பெற்றான். இவனது இவ்வியல்பினைப் பாராட்டிய புத்தர் பிறரும் அவ்வாறே நடக்க வேண்டும் என அறிவுறுத்துமுகமாகக் கூறிய பாடல் இது.

*விளக்கம்*

1. உலகியல் நெறியில் மறைந்திருக்கும் பெருநிதிக் குவியலைச் சுட்டிக் காட்டுபவன் மிகவும் போற்றி வழிபடத் தக்கவனாகக் கருதப்படுகிறான். அஃதே போல் அருளியல் நெறியில் நம்முள் மறைந்து கிடக்கும் உயர் பேரியல்புகளை வெளிக்கொணரும் வழியைச் சுட்டிக் காட்டுபவரைப் போற்றி வழிபட்டு அவரை விட்டு அகலாது உடனிருந்து வாழ்வது ஒருவர்க்கு உயர்வளிப்பதாகும். அவர் கூறும் அறிவுரைகள் அந்த நேரத்தில் கசப்பானவை போல் தோன்றினும் அவற்றின் விளைவுகள் பின்னர் மிக்க இன்பத்தினை நல்க வல்லனவாகும்.

மேற்கோள்

உற்றநோய் நீக்கி உறாஅமை முற்காக்கும்
பெற்றியார் பேணிக் கொளல். *(குறள்: 442)*

அழச்சொல்லி அல்ல திடித்து வழக்கறிய
வல்லார்நட் பாய்ந்து கொளல். *(குறள்: 795)*

2. Ovadeyyānusāseyya
asabbhā ca nivāraye
Sataṁ hi so piyo hoti
asataṁ hoti appiyo. (77)

**மொழிபெயர்ப்பு**

பிறர் செய்யும் தீமைகளைக் கண்டித்துத் தடுத்து நல்லறிவு புகட்டி நல்வழிப்படுத்துபவர் நல்லோர்க்கு மிகவும் விரும்பத் தக்கவராகவும், தீயோர்க்கு வெறுப்பிற்குரியவராகவும் தோன்றுவார்.

*சூழல்*

புத்தர் சாவத்தியில் ஜேதவனத்தில் தங்கியிருக்கும் காலத்தில் கீடாமலையில் தங்கியிருந்த துறவிகள் இருவர் தமது நெறியின் நீங்கி நாணமில்லாதவராய் இழிசெயல் பல செய்து துறவு நெறிக்கு இழிவு தேடியவராக இருந்தனர். இதுபற்றிக் கேள்விப்பட்ட புத்தர் தமது தலைமை மாணாக்கருள் சாரிபுத்தர் முதலான இருவரை அழைத்து, அத்தீயவர்கள் உங்கள் அறிவுரைகளைக் கேளார் எனினும் நீங்கள் சென்று அவர்களுக்கு அறிவுரை கூறி வருகவெனப் பணித்தார். அப்பொழுது தீயவர்களது இயல்பினைப் பற்றிப் புத்தர் கூறிய பாடல் இது.

3. Na bhaje pāpake mitte
na bhaje purisādhame
Bhajetha mitte kalyāṇe
bhajetha purisuttame. (78)

**மொழிபெயர்ப்பு**

தீயோருடன் நட்புக் கொள்ளற்க. இழிந்தோருடன் இணக்கம் கொள்ளாதீர். உயர்ந்தோருடன் நட்புக் கொள்க. மேன்மக்களுடன் சேர்ந்து பழகுக.

*சூழல்*

புத்தர் துறவு பூணுவதற்கு முன் அவருக்குத் தேரோட்டியாக இருந்த சன்னன் என்பவன் புத்தர் ஞானம் அடைந்த பின்னர் தானும் துறவு பூண்டான். அவன் தான் முன்பு புத்தருக்குத் தேரோட்டியாக இருந்தமை குறித்துப் பெருமைப்பட்டவனாக, புத்தர் துறவு பூணுமுன் அவருக்கு எல்லாப் பணிவிடைகளும் நான் செய்தேன். பின்பு அவர் துறவு பூணும் பொழுதும் அவருடன் கானகம் சென்றும் உதவி புரிந்தேன். அப்பொழுதெல்லாம் என்னைத் தவிர வேறு யாரும் அவருக்குப் பணிவிடை செய்ய வந்தாரில்லை. ஆனால்

இப்பொழுது நான் சாரிபுத்தன், நான் மொக்கலானன், நான் தலைமை மாணாக்கன் எனச் சொல்லிப் பலர் வந்து சூழ்ந்துள்ளனர் எனக் கூறி சாரிபுத்தர் முதலானோரைப் பழித்துரைத்தான். இதையறிந்த புத்தர் அவனை மும்முறை எச்சரித்து அறிவுரை கூறினார். அவனும் அவர் முன்பு பணிவாக இருந்துவிட்டு அப்பால் சென்று மீண்டும் பழித்துரைக்கத் தலைப்பட்டான். இத்தன்மையை அறிந்த புத்தர், சாரிபுத்தர் முதலானோர் எத்தகைய உயர்ந்த நட்பிற்குகந்தவர் என எடுத்துரைத்துக் கூறிய பாடல் இது.

மேற்கோள்

மனநலம் மன்னுயிர்க் காக்கம் இனநலம்
எல்லாப் புகழும் தரும். *(குறள்: 457)*

நல்லினத்தி னூங்குந் துணையில்லை தீயினத்தின்
அல்லற் படுப்பதூஉம் இல். *(குறள்: 460)*

மருவுக மாசற்றோர் கேண்மை ஒன்றீத்தும்
ஒருவுக ஒப்பிலார் நட்பு. *(குறள்: 800)*

4. Dhammapīti sukhaṁ seti
vippasannena cetasā
Ariyappavedite dhamme
sadā ramati paṇḍito. (79)

**மொழிபெயர்ப்பு**

அறநெறியை உவப்போடு ஏற்றுக் கொள்பவர்கள் கலக்கமற்றுத் தெளிந்த மனத்தினராய் இன்பமாக வாழ்கின்றனர். சான்றோரின்[1] அறவுரைகளால் அறிவுடையோர் இன்பமடைகின்றனர்.

*சூழல்*

மகா கப்பினன் என்னும் மன்னன் பௌத்த சமயத்தைப் பின்பற்றித் துறவு மேற்கொண்டான். அவன் உரிய ஆசிரியரிடம் சென்று தவநெறி நின்று அரகந்த நிலையெய்தினான். அதனால் உண்டான பேரின்பத்தைத் துய்த்தவனாக என்னே இன்பம் என்னே

இன்பம் எனக் கூறி மகிழ்ந்தான். இதைக் கண்ட சில பிக்குகள் அவன் இழந்த தன் அரச வாழ்வின் சுகத்தை எண்ணி ஏங்குகிறான் எனத் தவறாகக் கருதி, புத்தரிடம் முறையிட்டனர். புத்தர் உண்மையை உணர்ந்தவராக அவர்களுக்குக் கூறிய பாடல் இது.

*விளக்கம்*

1 āriya என்னும் சொல் ārya என்னும் வடசொல்லின் திரிபு, உயர்ந்த என்னும் பொருள் தருவது.

5. Udakaṁ hi nayanti nettikā
usukārā namayanti tejanaṁ
Dāruṁ namayanti tacchakā
attānaṁ damayanti paṇḍitā. (80)

மொழிபெயர்ப்பு

நீர்ப்பாசனக்காரர்கள் நீரைத் தாங்கள் விரும்பிய பக்கம் செலுத்திப் பாய்ச்சுகின்றனர். வில்லாளிகள் அம்புகளை வளைவின்றி நேராகச் செய்கின்றனர். தச்சர்கள் மரங்களைத் தங்கள் தேவைக்கேற்ப வளைக்கின்றனர். அறிஞர்கள் தங்களைத் தாங்களே அடக்கி ஆள்கின்றனர்.

*சூழல்*

ஏழு வயதுடைய ஒரு சிறுவன் பௌத்த சமயத் துறவியானான். ஒருநாள் அவ்விளந் துறவி தன் ஆசானுடன் பிச்சைக்குச் சென்றான். செல்லும் வழியில் நீர்த்தேக்கம் ஒன்றைக் கண்ட அவன் இஃது என்ன எனக் கேட்டான். அதற்கு இஃது நீர்த்தேக்கம் என்றார் ஆசிரியர். இதனால் என்ன பயன் என்றான் மாணவன். இதிலிருந்து நீரை வேண்டிய இடத்திற்குச் செலுத்திப் பயிர்த்தொழில் செய்கின்றனர் என்றார் ஆசிரியர். பின் இதற்கு அறிவு உண்டோ என வினவினான் மாணவன். இல்லை என்றார் ஆசிரியர். அவ்வாறு அறிவற்ற பொருளும் நாம் விரும்பிய இடத்திற்குச் செலுத்தப்பட இயலுமாயின் அறிவுள்ள நம் மனத்தைக் கட்டுப்படுத்தி உயர்பேறு அடைய இயலாதோவெனச் சிந்தித்தான் மாணவன். இதுபோன்று நெருப்பில் இரும்புத் துண்டை காய்ச்சி அம்பு செய்யும் வில்லாளியும், ம தை வேண்டிய வடிவத்திற்கு

அறுத்து வளைத்துச் சக்கரம் முதலியன செய்யும் தச்சனையும் கண்டு ஆசிரியரை வினவித் தன் மனத்தை அடக்கி ஆண்டு ஞானம் அடையத் துணிந்து தன் இருப்பிடம் அடைந்து தவமியற்றி ஞானமடைந்தான் அவன். அவன் நிலையறிந்த புத்தர் கூறிய பாடல் இது.

மேற்கோள்

செறிவறிந்து சீர்மை பயக்கும் அறிவறிந்து
ஆற்றின் அடங்கப் பெறின். *(குறள்: 123)*

ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்க லாற்றின்
எழுமையும் ஏமாப் புடைத்து. *(குறள்: 126)*

6. Selo yathā ekaghano
vātena na samīrati
Evaṁ nindāpasaṁsāsu
na samiñjanti paṇḍitā. (81)

**மொழிபெயர்ப்பு**

உறுதியான கற்பாறை காற்றால் அசைக்கப்படுவதில்லை. அதுபோல அறிவுடையோர் போற்றுதலானும் தூற்றுதலானும் பாதிக்கப் படுவதில்லை.

*சூழல்*

புதிதாகத் துறவு பூண்ட இளைஞர் சிலர் குள்ள வடிவமுடைய முத்த துறவியைக் கண்டு அவரது தோற்றம் குறித்துக் கேலி பேசினர். இக்கேலிப் பேச்சினைக் கேட்டும் எவ்விதப் பாதிப்புமின்றித்தன் வழியே சென்று கொண்டிருந்தார் அம்முத்த துறவி. இச்செயல்களைச் சிலர் புத்தரிடம் கூறினர். அப்பொழுது புத்தர் அத்துறவியின் மனநிலை அசையாத பாறைக்குச் சமம். அரகந்த நிலை அடைந்தோர் போற்றுதலாலும் தூற்றுதலாலும் பாதிக்கப்படுவதில்லை எனக் கூறிய பாடல் இது.

மேற்கோள்

நிலையின் திரியா தடங்கியான் தோற்றம்
மலையினும் மாணப் பெரிது. *(குறள்: 124)*

7. Yathā pi rahado gambhīro
vippasanno anāvilo
Evem dhammāni sutvāna
vippasīdanti paṇḍitā. (82)

**மொழிபெயர்ப்பு**

ஆழமான நீர்நிலை அசைவற்றும் தெளிவாகவும் இருப்பது போல அறிவுடையோர் அறவுரைகளைக் கேட்பதன் மூலம் ஆழ்ந்த அமைதியை[1] அடைகின்றனர்.

*சூழல்*

தன் தாய் வீட்டிலிருந்து பெரும்பொருள் கொண்டு வரவில்லை என்ற காரணத்தால் தன் கணவனால் புறக்கணிக்கப்பட்ட இளம் பெண் ஒருத்தி, தன் கையிலிருந்த சிறு பொருளையும் புத்த பிக்குகளை உபசரிப்பதில் செலவிடுகிறாள். அவளது நல்லெண்ணத்தை அறிந்த புத்தர் அவளுக்கு அறம் உபதேசித்தார். புத்தரின் அறவுரைகளைக் கேட்ட அப்பெண் தவநெறியின் நான்கு நிலைகளில் முதல் நிலையான சோதபன்ன நிலை அடைந்தாள். அவள் அடைந்த நன்னிலை குறித்துப் புத்தர் கூறிய பாடல் இது.

*விளக்கம்*

1 ஆழ்ந்த அமைதியாவது தவநிலையில் கிட்டும் மன அமைதி. அதுவே பேரின்பம் எனப் பெரியோர்களால் போற்றப்படுகிறது.

மேற்கோள்

எனைத்தானும் நல்லவை கேட்க அனைத்தானும்
ஆன்ற பெருமை தரும். *(குறள்: 416)*

8. Sabbattha ve sappurisā cajanti
na kāmakāmā lapayanti santo
Sukhena phutthā athavā dukhena
na uccāvacaṁ paṇḍitā dassayanti. (83)

மொழிபெயர்ப்பு

சான்றோர் எதன் மீதும் பற்று வைக்காமல் அவற்றைத் துறந்த மன நிலையில் இருப்பர். உலகின் இன்ப துன்பங்களின் மீது மனம் வைக்காமல் விலகியிருப்பர். எனவே அவர்கள் தங்களுக்குக் கிடைக்கும் பாராட்டுகளால் மன மகிழ்ச்சி அடைவதுமில்லை. தூற்றுதலால் மனத்துன்பம் அடைவதுமில்லை.

*சூழல்*

ஒரு சமயம் புத்தர் பிராமணன் ஒருவனது வேண்டுகோளின் படி ஐந்நூறு பிக்குகளுடன் வேரஞ்சாவில் தங்கி மழைக்காலத்தைக்[1] கழித்தார். அவர் வேரஞ்சாவில் தங்கியிருந்த போது அவரை அங்குத் தங்கும்படிக் கேட்டுக் கொண்ட பிராமணன் அவர்களைச் சரியான முறையில் கவனித்துக் கொள்ளவில்லை. இதனால் அவர்களுக்குத் துன்பம் நேர்ந்த போதிலும் அவர்கள் அவற்றைப் பொருட்டாகக் கொள்ளாது மனவருத்தமின்றி இருந்தனர். மழைக்காலம் முடிந்த பின் அவர்கள் சாவத்திக்குத் திரும்பினர். அங்குச்சாவத்தி மக்கள் அவர்களைப் பெரிதும் போற்றி ஆதரித்தனர். இதனால் அவர்கள் மனமகிழ்வும் கொண்டார்களில்லை. இந்நிலையை உணர்த்துமுகமாகப் புத்தர் இப்பாடலைக் கூறினார்.

*விளக்கம்*

1 பௌத்த பிக்குகள் மழைக்காலத்தில் மூன்று மாதங்கள் ஒரே இடத்தில் தங்கியிருக்க வேண்டும். இரவில் வேறிடத்தில் தங்கக் கூடாது. பகலில் பிச்சைக்கு ஊருக்குள் செல்வதைத் தவிர வேறு ஊர்களுக்குப் பயணம் செய்யக் கூடாது. மூன்று மாதங்கள் என்பது ஆவணி, புரட்டாசி, ஐப்பசி, கார்த்திகை என்னும் இந்நான்கு மாதங்களில் முதல் மூன்று அல்லது கடைசி மூன்று என எதையாவது தேர்ந்து கொள்ள வேண்டும். இதை மழைக்கால வாழ்க்கை அல்லது மழைக்கால ஒடுக்கம் (Vassā vāsa) என்பர்.

மேற்கோள்

ஊழி பெயரினும் தாம்பெயரார் சான்றாண்மைக்
காழி எனப்படு வார். *(குறள்: 989)*

9. Na attahetu na parassa hetu
na puttamicche na dhanaṁ na raṭṭhaṁ
Na iccheyya adhammena samiddhim attano
sa silavā paññavā dhammiko siyā. (84)

**மொழிபெயர்ப்பு**

அறிஞர்கள் தன் பொருட்டோ பிறர்பொருட்டோ தீவினை செய்ய மாட்டார்கள். மக்கள் பேற்றையோ, பொருளையோ, அரசாட்சியையோ தீய வழியில் அடைய விரும்பமாட்டார்கள். தன் சொந்த நலனுக்காக அறத்தினின்றும் வழுவிய நெறியில் செல்லமாட்டார்கள். இத்தகையோரே சான்றோரும் அறிவுள்ளோரும் அறநெறியாளரும் ஆவார்கள்.

*சூழல்*

சாவத்தி நகரில் வாழ்ந்த ஒருவன், பௌத்த நெறி தழுவித் துறவியாக விரும்பினான். தன் விருப்பத்தைத் தன் மனைவியிடம் கூற அவளோ தங்கள் மகன் நடக்கும் காலமட்டும் இல்லறத்தில் அவன் இருக்க வேண்டும் எனக் கேட்டுக் கொண்டாள். அவள் வேண்டுகோளின்படி மகன் நடக்குமட்டும் இருந்து மீண்டும் கேட்டான். அப்பொழுது மகன் பருவ வயதடையும் வரை பொறுத்திருக்க வேண்டினாள். ஆனால் அவன் அவள் சொல்வதைக் கேளாமல் துறவு பூண்டு தவமியற்றி ஞானம் அடைந்தான். பின்னர் அவன் மனைவியும் மகனும் துறவு பூண்டு அவர்களும் ஞானமடைந்தனர். இதுபற்றிப் புத்தர் பாராட்டிக் கூறிய பாடல் இது.

மேற்கோள்

கடனென்ப நல்லவை எல்லாம் கடனறிந்து
சான்றாண்மை மேற்கொள் பவர்க்கு. *(குறள்: 981)*

10. Appakā te manussesu
ye janā pāragāmino
Athāyaṁ itarā pajā
tīramevānudhāvati. (85)

மொழிபெயர்ப்பு

மனிதர்களுள் சிலரே பிறவியாகிய பெருங்கடலைக் கடந்து அக்கரையை அடைகின்றனர்[1]. ஏனையோர் கடலைக் கடக்காது இக்கரையிலேயே[2] ஓடித் திரிகின்றனர்.

11. Ye ca kho sammadakkhāte
dhamme dhammānuvattino
Te janā pāramessanti
maccudheyyaṁ suduttaraṁ. (86)

**மொழிபெயர்ப்பு**

ஆனால் சான்றோரால் வகுக்கப்பெற்ற அறநெறிகளினின்றும் வழுவாது நடப்பவர்கள் கடத்தற்கரிய இயம லோகமான மரண உலகத்தைக் கடந்து அக்கரையை அடைகின்றனர்[3].

*சூழல்*

ஒரு சமயம் சாவத்தியில் உள்ள ஒரு தெருவில் வசித்த மக்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து பிக்குகளுக்குத் தேவையானவற்றைக் கொடுத்து உபசரித்து ஓரிரவு முழுவதும் அவர்களிடம் அறவுரை கேட்க வேண்டும் எனத் தீர்மானித்துச் செயல்பட்டனர். ஆனால் சிலர் இடையிலேயே சலிப்புற்றவராக எழுந்து சென்றுவிட்டனர் சிலர் எழுந்து உறங்கச் சென்றுவிட்டனர். சிலர் அங்கேயே இருந்தும் தூங்கி விழுந்தபடி இருந்தனர். மிகச் சிலரே அறவுரையை முழுமையாகக் கேட்டனர். மறுநாள் இது குறித்துப் புத்தரிடம் தெரிவித்த போது புத்தர் கூறியவையே இப்பாடல்கள்.

*விளக்கம்*

1. அக்கரையாவது நிர்வாண நிலை. பிறப்பற்ற பெரும்பேறு.

2. இக்கரையிலேயே இருத்தலாவது மீண்டும் பிறந்து உலகியலில் உழல்வது. இது Bhava Taṇha எனப்படும்.

3. மரண உலகத்தைக் கடத்தலாவது மீண்டும் பிறவா நிலையாம். மீண்டும் பிறவாதவர் பௌத்தக் கோட்பாட்டின்படி இறவாதவராம்.

மேற்கோள்

பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவனடி சேராதார். *(குறள்: 10)*

12. kaṇhaṁ dhammaṁ vippahāya
sukkaṁ bhāvetha paṇḍito
Okā anokaṁ āgamma
viveke yattha dūramaṁ. (87)

**மொழிபெயர்ப்பு**

அறிஞனானவன் இல்லறத்தைவிட்டுத் துறவறத்திற்குச் சென்று இருள் நிலையைத்[1] துறந்து ஒளி நிலையைப்[2] பெருக்கிக் கொள்ள வேண்டும். துய்த்தற்கரிய பேரின்பத்திற்காகத் தனிமையைத் தரும் துறவறத்திற்குச் செல்ல வேண்டும்.

13. Tatrābhiratiṁ iccheyya
hitvā kāme akiñcano
pariyodapeyya attānaṁ
cittaklesehi paṇḍito. (88)

**மொழிபெயர்ப்பு**

அந்தத் தனிமையாம் துறவறத்தில் பேரின்பத்தை நாடியவராக இவ்வுலக இன்பங்கள் அனைத்தையும் நீத்துக் குற்றங்கள் அனைத்தையும் துறந்து[3] அறிஞர்கள் தங்கள் மனத்தின் அழுக்குகளை[4] முற்ற முழுக்கக் களைந்துவிடுவார்களாக.

14. Yesaṁ sambodhiaṅgesu
sammā cittaṁ subhāvitaṁ
Ādāna paṭinissagge
anupādāye ye ratā
khīṇāsavā jutimanto
te loke parinibbutā. (89)

மொழிபெயர்ப்பு

பேரறிவு நிலையாம் ஞானநிலையின் எழுவகைத் தன்மைகளில்[5] மனத்தை நன்கு செலுத்தி நிறுத்திய அறிஞர்கள் எதிலும் பற்றற்றவர்களாய்க் கட்டுகளைத் துறப்பதில் பெருவிருப்புடையோராய் மாசு மருவற்றவராய்ப் பேரொளியினராய் விளங்கி இவ்வுலகிலேயே நிர்வாணத்தை அடைந்தோராக இருப்பர்.

*சூழல்*

ஒரு சமயம் கோசல நாட்டின் ஐநூறு பிக்குகள் மழைக்கால ஒடுக்கம் (Vassā vāsa )[7] பூண்டு பின் மழைக்காலம் முடிந்த பின் புத்தரைக் கான வேண்டிச் சாவத்தி நகரம் வந்து புத்தரை வணங்கி அமர்ந்தனர். அவர்களுக்கு அறம் கூறும் வகையில் புத்தர் இப்பாடல்களைக் கூறினார்.

*விளக்கம்*

1. இருள் நிலையாவது பத்துவகைத் தீச்செயல்கள்
(பார்க்க பாடல் 42 இன் விளக்கம்)

2. ஒளி நிலையாவது பத்துவகை நற்செயல்கள்
(பார்க்க - பாடல் 43 இன் விளக்கம்)

3. மனக் குற்றங்கள் ஐந்து - அவையாவன

1. புலனுகர் வேட்கை (kāmachanda)
2. தீய நோக்கம் (vyāpāda)
3. கோபமும் கவலையும் (Uddhacca -kukkucca)
4. சோம்பலும் அசட்டையும் (Thīna-middha )
5. ஐயம் (Vicikicchā )

4. மனமாசுகளாவன ஆசை, கோபம், அறியாமை, தன்மானம், ஆணவம் ஆகியன.

5. ஞான நிலையின் தன்மைகள்

1. விழிப்புணர்வு (Sati)
2. உண்மையை நாடும் பேரறிவு (Dhammavicaya)
3. பெரும் ஆற்றல் (Vīriya)
4. பேரின்பம் (Pīti)
5. அமைதி (Passaddhi)
6. ஒருமுனைப்பட்ட தவம் (Samādhi)
7. நடுவு நிலைமை (Upekkhā ).

6. கட்டுகள் நால்வகையாவன : (Kayagantha )

1. பேராசை (Abhijjhā )
2. தீய நோக்கம் (Vyāpāda )
3. தவறான சடங்குகளில் பற்று (Sīlabbata parāmāsa)
4. தன் கருத்தைச்சாதிக்க முனைதல் (Idaṁ saccābhinivesa)

7. பௌத்த பிக்குகள் மழைக்காலத்தில் மூன்று மாதங்கள் ஓரிடத்திலேயே ஒடுங்கியிருத்தல்.

(பார்க்க பாடல் 83 - இன் விளக்கம்)

மேற்கோள்

அடல்வேண்டும் ஐந்தன் புலத்தை விடல்வேண்டும்
வேண்டிய வெல்லாம் ஒருங்கு *(குறள்: 343)*

5. ஏழு நிலையின் ஞானங்கள்

1. விழிப்புணர்வு (Sati)
2. உண்மையை ஆராய்ந்து தெளிதல் (Dhammavicaya)
3. வீரியம் ஆற்றல் (Viriya)
4. பேரின்பம் (Pīti)
5. அமைதி (Passaddhi)
6. ஒருமைப்பட்ட மனம் (Samādhi)
7. நடுவு நிலைமை (Upekkhā)

6. உடலுக்கான தளைகள் (Kāyagantha)

1. பேராசை (Abhijjhā)
2. தீய நோக்கம் (Vyāpāda)
3. [illegible] (Sīlabbataparāmāsa)
4. இதுவே சத்தியம் என்ற முடிவு (Idamsaccābhinivesa)

7. [illegible]

[illegible]

மேற்கோள்

[illegible]

## 7. ARAHANTA VAGGA[1]

### 7. முத்தர் இயல்

1. Gataddhino visokassa
vippamuttassa sabbadhi
Sabbaganthappahīnassa
pariḷāho na vijjati. (90)

**மொழிபெயர்ப்பு**

உலக வாழ்க்கையாம் பயணத்தை முடித்தவனும்[2] எல்லாத் துன்பங்களினின்றும் நீங்கியவனும்[3] எல்லா வகையான பற்றுகளினின்றும் நீங்கியவனும்[4] உலகக் கட்டுகள் அனைத்தையும் அறுத்து[5] எல்லா வகையாலும் தன்னை உயர்த்திக் கொண்டவனுமான ஒருவனுக்கு ஆசையாம் காய்ச்சல்[6] இல்லை.

*சூழல்*

தேவதத்தன் புத்தர் மீது பொறாமை கொண்டு பௌத்த சங்கத்திற்குத் தான் தலைவனாக வேண்டும் என்ற ஆசையில், புத்தரைக் கொல்லப் பலவகையிலும் முயன்றான். ஒருமுறை இராஜகேகத்தில் கிஜ்ஜகூட மலையினின்றும் புத்தர் வரும் பொழுது தேவதத்தன் புத்தர் மேல் பாறையை உருட்டிவிட்டான். ஆனால் அப்பாறை வேறொரு பாறையின் மீது மோதி நின்றது. எனினும் அதிலிருந்து தெறித்த கல் ஒன்று புத்தரின் காலில் பட்டு கால் புண்ணானது. அப்புண்ணிற்கு மருத்துவம் பார்க்க வந்த மருத்துவன் சீவகன் மருந்திட்டுக் கட்டி விட்டுப் பின் நகருக்குள் ஒரு நோயாளியைப் பார்க்கப் போக வேண்டி இருப்பதாகவும் மாலையில் மீண்டும் வந்து கட்டை அவிழ்ப்பதாகவும் கூறிச் சென்றான்.

ஆனால், எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட தாமதத்தில் நகரக் கோட்டைக் கதவு அடைக்கப்பட்டதால் வர இயலவில்லை. கட்டை அவிழ்க்காவிடின் புத்தருக்கு வலி அதிகமாக இருக்குமே எனப் பெரிதும் வருந்தினான் மருத்துவன். இவ்வெண்ணத்தைத் தொலைவில் உணரும் ஆற்றலால் உணர்ந்த புத்தர் ஆனந்தரை அழைத்துக் கட்டை அவிழக்கச் சொன்னார். மறுநாள் அதிகாலையில் வந்த சீவகன் காயத்தின் வலி பற்றிக் கேட்டபோது புத்தர் கூறியதே இப்பாடல்.

*விளக்கம்*

1. அரகந்தர் என்னும் சொல் (Arahanta) பலவகையானும் விளக்கப் பெறுகிறது. (காமம் முதலாகிய ) பகையை வென்றவன் என்றும், உயர்பேறு எய்தியவன் என்றும், உயர்ந்தவன் என்றும், மறைவாகவும் தீச்செயல் புரியாதவன் என்றும் பல்வேறு விளக்கங்கள் கூறப்படும். இந்நிலையை அடைந்தவர்கள் அடைதற்குரிய பெரும் பேற்றினை அடைந்ததாகக் கருதப் பெறுவர். இவர்கள் பிறப்பு இறப்பு என்னும் பெருங் கடலைக் கடந்தவர்கள். மீண்டும் பிறவாப் பேறு பெற்றவர்களாதலின் இவர்கள் இவ்வுலக வாழ்வை முடித்தாரெனினும் பௌத்தக் கோட்பாடு இவர்களை இறந்தாராகக் கொள்வதில்லை. இவர்கள் பரிநிர்வாணம் எய்தியதாகக் கொள்வர். அப் பரிநிர்வாணக் காலம் வரை இவர்கள் பிறர்க்கு உண்மையை உணர்த்தியும் வாழ்ந்து காட்டியும் அறிவுறுத்துவர். இவர்களைச் சைவசித்தாந்தம் கோட்பாட்டின்படியும் வேதாந்தர் கோட்பாட்டின்படியும் கூறப்படும் சீவன்முத்தருக்கு இணையாகக் கூறலாம்.

2. உலக வாழ்க்கைப் பயணம் என்பது மாறிமாறிப் பிறந்தும் இறந்தும் உலகில் உழலும் நிலை.

3. எல்லாத் துன்பங்களும் என்பது ஐவகைக் கந்தங்கள் முதலாயினவாம்.

4. உலக வாழ்க்கையோடியைந்த தொடர்புகள் அனைத்தையும் விட்டு நீங்கிய நிலை. உலகில்

வாழ்ந்தாலும் அதில் பற்றின்றித் தாமரை இலைத் தண்ணீர் போல ஒட்டாமலும், போற்றுதலாலும், தூற்றுதலாலும் பாதிக்கப்படாமலும் வாழும் நிலை.

5. கட்டுகளாவன (Kāyaganthā )

பார்க்க பாடல் 89 இன் விளக்கம்.

6. Pariḷāho என்னும் சொல் காய்ச்சல், வெப்பம் என்னும் பொருள் தரத் தக்கது. வெப்பம் அல்லது காய்ச்சல் என்பது இருவகைப்படும். 1 உடலளவானது 2. மன அளவானது. அரகந்தர்கள் (முத்தர் ) உடலளவான காய்ச்சலை நிர்வாண நிலை வரை அனுபவிக்க வேண்டியவர்களே. மன அளவிலான காய்ச்சலுக்கு அவர்கள் ஒருபோதும் ஆட்படுவதில்லை.

2. Uyyuñjanti satimanto
na nikete ramanti te
Hamsā' va pallalaṁ hitvā
okaṁ okaṁ jahanti te. (91)

**மொழிபெயர்ப்பு**

விழிப்புணர்வுடையவர்கள், தம்மைத் தாமே திருத்திக் கொள்கின்றனர். இல்வாழ்க்கையில் அவர்கள் பற்று வைப்பதில்லை. நீர் நிலையை விட்டுப் பறந்து போகும் அன்னப் பறவைகள் போலத் தங்குமிடம் ஒவ்வொன்றையும் விட்டு நீங்கிச் செல்கின்றனர்.[1]

*சூழல்*

சில பிக்குகள் மகாகஸ்ஸபரின் செயல்களைத் தவறாகப் புரிந்து கொண்டு அவர் இன்னும் தன் உறவினர் மீதும் தன்னை ஆதரிக்கும் அன்பர்கள் மீதும் பற்றுக் கொண்டுள்ளார் எனத் தீர்மானித்துப் பேசினர். இதைக் கேள்வியுற்ற புத்தர் அவர்களது கருத்தை மறுத்துக் கஸ்ஸபர் அவ்வாறு எவரிடத்தும் பற்றுக்கொண்டவரல்லர் அவர் எல்லாப் பற்றுகளையும் துறந்தவர் என விளக்கிக் கூறி இவ்வறக் கருத்தினை உரைத்தார்.

*விளக்கம்*

1. அரகந்தர்கள் எவ்விடத்தையும் தம் சொந்த இடமாகக் கொள்வதில்லை. அதன் மீது பற்று வைப்பதுமில்லை. எனவே அவர்கள் எந்த ஓரிடத்திலும் விரும்பி நிலையாகத் தங்குவதுமில்லை. எனவே அவர்களுக்கு நான் எனது என்னும் உணர்வுகள் தோன்றுவதில்லை.

3. Yesaṁ sannicayo natthi
ye pariññātabhojanā
Suññato animitto ca
vimokkho yassa gocaro
Ākāse' va sakuntānaṁ
gati tesaṁ durannayā (92)

**மொழிபெயர்ப்பு**

பொருளாசையைத் துறந்தவனும்[1] அளவறிந்து உண்பவனும்[2] குறியற்ற சூனியமான நிர்வாண நிலை[3] ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு இருப்பவனுமானவனது அடிச்சுவடுகள் ஆகாயத்தில் பறந்து செல்லும் பறவைகளின் அடிச் சுவடுகள் காணப்படாதது போலப் பிறரால் அறியப்படாததாகும்.

*சூழல்*

பிக்கு ஒருவர் ஊருக்குள் சென்று தேவைக்கு மேல் பிச்சை ஏற்று வந்து மற்றைய நாளுக்கெனச் சேமித்து வைத்து வந்தார். இதுபற்றிப் பிற பிக்குகள் புத்தரிடம் முறையிட்ட போது புத்தர் அந்தப் பிக்குவை அழைத்து அறிவுரை கூறும் வகையில் இப்பாடலைக் கூறினார்.

*விளக்கம்*

1. பொருள் தொடர்பு என்பது இரண்டு வகை,

1. ஆசைவயப்பட்ட உலகியல் பொருள்கள்

2. துறவிகளுக்குத் தேவையான உடை, பிச்சைப் பாத்திரம் முதலியன. இவ்விரண்டின் மீதும் பற்று

நீக்கித் தேவைக்கு மிஞ்சி எதுவும் கொள்ளாமையே பொருளாசையை விடுதல் ஆகும்.

2 உணவு உண்பதில் உள்ள வேட்கையைத் தவிர்த்தல். (பார்க்க தம்ம பதம் 7, 8 பாடல்கள்)

3. நிர்வாணம் என்பது துன்பத்தினின்றும் விடுதலை அடைவதாகும். துன்பமாவது பிறப்பு, இறப்பு, உலக வாழ்க்கை ஆகியனவாகும். இது குறிக்கோளற்றது எனின் இதில் குறிக்கோளாகக் கொள்வதற்கு ஏதும் இல்லை என்பதாலன்று. இது உலகியல் பற்று போன்ற குறிகளை நீக்கிய தூய நிலையாகும் என்பதாகும். இது சூனியமானது எனின் இதில் ஆசை, ஆரவாரம், விருப்பு, வெறுப்பு ஆகிய குற்றங்கள் ஏதுமற்ற நிலை என்பதால் ஆகும்.

மேற்கோள்

காற்றில் பறந்து செல்லும் பறவைகளில் காலடிச் சவடும் நீரில் நீந்தும் மீன்களின் வழித்தடமும் காண முடியாதது போல அறிஞர்களின் வழியும் அறிய வொண்ணாதது.

*(வியாசபபாரதம் : 6763 )*

4. Yassāsavā parikhīṇā
āhāre ca anissito
Suññato animitto ca
vimokkho yassa gocaro
Ākāse' va sakuntānaṁ
padaṁ tassa durannayaṁ (93)

மொழிபெயர்ப்பு

குற்றங்களை[1] ஒழித்து விட்டனும், அளவறிந்து உண்பவனும் குறியற்ற சூனியமான நிலை ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டிருப்பவனுமானவனது அடிச்சவடு ஆகாயத்தில் பறந்து செல்லும் பறவைகளின் சுவடு காணப்படாதது போல பிறரால் அறியவியலாததாகும்.

*சூழல்*

ஒரு முறை பிக்கு அனுருத்தருக்கு அவரது ஆதாரவாளர்கள் ஏராளமான உணவுப் பொருள்களையும் பரிசப் பொருள்களையும் கொண்டுவந்து கொடுத்தனர். இதைக் கண்ட சில பிக்குகள் அவரைத் தவறாகப் புரிந்து கொண்டு அவர் தமக்கு அதிகமான பரிசப் பொருள்களைக் கொடுக்குமாறு தமது ஆதரவாளர்களைத் தூண்டுகிறார் எனப் புத்தரிடம் முறையிட்டனர். இதைக் கேட்ட புத்தர், சான்றோர் பொருள்களுக்கு ஆசைப்படுவதில்லை, அவர்கள் தங்கள் தேவையின் பொருட்டுக் கேட்டுத் தங்கள் காலத்தை வீணாக்குவதில்லை. அனுருத்தர் குற்றமற்றவர் என விளக்கிக் கூறிய பாடல் இது.

*விளக்கம்*

1. குற்றங்கள் (āsavā )நான்கு

| | | |
|---|---|---|
| 1. | காமம்; | (Kāmāsava ) |
| 2 | உலக வாழ்வில் விருப்பம் | (Bhavāsava ) |
| 3. | பொய்க்காட்சி | (Micchādiṭṭhāsava) |
| 4. | அறியாமை | (avijjāsava ). |

5. Yass' indriyāni samathaṁ gatāni
assā yathā sārathinā sudantā
pahīṇamānassa anāsavassa
devā'pi tassa pihayanti tādino. (94)

**மொழிபெயர்ப்பு**

தேர்ப்பாகன் குதிரைகளை அடக்குவது போல்[1] தமது ஐம்புலன்களையும் அடக்கி நிலைப்படுத்திக் குற்றங்களை நீக்கிய சான்றோர்களைத் தேவர்களும் உயர்வாக மதிக்கிறார்கள்.

*சூழல்*

ஒரு முறை இந்திரன் புத்தரைக் கண்டு வணங்கும் பொருட்டு இராசகேகத்தில் உள்ள மூங்கில் காட்டிற்கு (Velluvana ) வந்தான். அங்கு அவன் புத்தரைக் கண்டு வணங்கியபின் அங்கு

அமர்ந்திருந்த கச்சாயனரைக் கண்டு ஐயா தங்களை நான் இப்பொழுதுதான் பார்க்கிறேன் என மகிழ்ச்சியுடன் கூறி வணங்கித் தான் கொண்டு வந்த மாலை மற்றும் மணப்பொருள்களை இருவரிடமும் கொடுத்து வணங்கிச் சென்றான். இதைப் பார்த்துக் கொண்டிருந்த பிற பிக்குகள், இந்திரனும் ஓரவஞ்சனையுடன் ஆள் பார்த்து மரியாதை செய்கிறான். இத்தனைத் துறவிகள் கூட்டத்தில் அவன் கச்சாயனரை மட்டும் மதித்து வணங்கியது குற்றமல்லவா என முணுமுணுத்தனர். இதையறிந்த புத்தர் புலனடக்கம் உள்ளவர்களை, குற்றங்களினின்றும் நீங்கியோரைத் தேவரும் போற்றுவர் என விளக்கிக் கூறிய பாடல் இது.

*விளக்கம்*

1. புலன்களை அடக்குவதைக் குதிரைகளை அடக்குவதற்கு ஒப்பிட்டுக் காட்டுவது சாதாரணமாக இந்தியத் தத்துவ நூல்கள் பலவற்றிலும் காணப்படுகிறது.

மேற்கோள்

வையத்துள் வாழ்வாங்கு வாழ்வான் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும். *(குறள்: 50)*

ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்க லாற்றின்
எழுமையும் ஏமாப் புடைத்து . *(குறள்: 126 )*

6. Paṭhavisamo no virujjhati
indakhilūpamo tādi subbato
Rahado' va apetakaddamo
saṁsārā na bhavanti tādino. (95)

**மொழிபெயர்ப்பு**

நிலத்தைப் போன்றும் காவல் மரத்தைப்[1] போன்றும் பொறுமையும் உறுதியும் கொண்டு, சேறற்ற குளத்து நீரைப் போன்று தூய்மையும் உள்ள, விருப்பு வெறுப்பற்ற சமநிலையுமுடைய[2] ஒருவருக்குப் பிறப்பிறப்பாகிய துன்பம் இல்லை.

*சூழல்*

ஒருமுறை சாரிபுத்தர் தம் மீது பொறாமை கொண்ட துறவி ஒருவரின் காதைக் கவனக் குறைவால் தொட்டுவிட்டார். அவர் மீது

பழி சுமத்த வாய்ப்பை எதிர்பார்த்திருந்த அத்துறவி, உடனே புத்தரிடம் சென்று சாரிபுத்தர் தம்மை அவமதிக்கும் வகையில் காதைத் தொட்டுவிட்டார் என முறையிட்டார். புத்தர் சாரிபுத்தரை அழைத்து விசாரித்தார். சாரிபுத்தரோ தமது கவனக் குறைவைக் கூறித் தம்மை நியாயப்படுத்த முனையாது தாம் துறவு பூண்டது முதல் காட்டிய பணிவையும் பண்பையும் எடுத்துரைத்தார். அவரது பணிவையும் பண்பையும் கண்டு மனம் திருந்திய அத்துறவி சாரிபுத்தரிடம் மன்னிப்பு வேண்டினார். பதிலாகத் தம் தவறுக்குத் தம்மை மன்னிக்குமாறு சாரிபுத்தரும் அவரை வேண்டினார். அப்பொழுது புத்தர் சாரிபுத்தரது இயல்பினைப் பாராட்டிக் கூறிய பாடல் இது.

*விளக்கம்*

1. Indakhīla என்னும் சொல்லிற்கு வாயில் என்றும் இந்திரனைப் போன்ற உறுதியுடைய என்றும் நகரத்திற்கு வெளியே அல்லது எல்லையில் அமைக்கப்படும் உயர்ந்த தூண் என்றும் பொருள்கள் உள. இவற்றில் தூணைக்குறிக்கும் பொருளையே உரைகாரர் எடுத்துக் கொள்கிறார். அந்தத் தூண் எண்முக வடிவினதாய் அமைக்கப்படும். பூமியின் மேலுள்ள பகுதியின் அளவிற்கு பூமிக்குள்ளே நடப்பட்டு உறுதியாக இருக்கும். இது செங்கல்லாலோ மரத்தாலோ செய்யப்பட்டிருக்கும். இது தன்னை அகத்தப்படுத்துவோர் மீதும் விருப்பு வெருப்புக் காட்டாதது போல பிறர் மீது விருப்பு வெறுப்புக் காட்டாதவர் சான்றோர் என விளக்குவார் உரைகாரர். இது தமிழ் மன்னர்கள் கோட்டைப் புறத்தே நட்டுவைத்த காவல்மரம் போன்றது எனலாம்.

2. Tādi என்பவர் விருப்பு வெறுப்பற்ற சமநிலையை உடையவர். நன்மையைக் கண்டு மகிழாமலும் தீமையைக் கண்டு கலங்காமலும் இருப்பவர். எண்வகையான உலகியல் உணர்வுகளினின்றும் விடுபட்டவர். எண் வகையான உலகியல் உணர்வுகளாவன வரவும் இழப்பும் , புகழும் இழிவும், பழியும் பாராட்டும் மகிழ்வும் துயரமும் ஆகும். அரகந்த நிலை எய்தியவர் எவ்வித உணர்விற்கும் அசையாது உறுதியாக இருப்பார்.

மேற்கோள்

அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை
இகழ்வார்ப் பொறுத்தல் தலை. *(குறள்: 151)*

நிறையுடைமை நீங்காமை வேண்டின் பொறையுடைமை
போற்றி ஒழுகப் படும். *(குறள்: 154)*

7. Santaṁ tassa manaṁ hoti
santā vācā ca kamma ca
Sammadaññā vimuttassa
upasantassa tādino. (96)

**மொழிபெயர்ப்பு**

நற்காட்சியுடையவருடைய மனமும் வாக்கும் காயமும் அமைதியடைந்துள்ளன. அவர் முற்றிலும் விடுதலையடைந்து முழு அமைதியடைந்தவராவார்.

*சூழல்*

ஆசிரிய பிக்கு ஒருவர் உறங்கும் தமது மாணவப் பிக்கு ஒருவனை, விசிறியால் தட்டி எழுப்ப முயலும்பொழுது அவ்விசிறி தவறுதலாக அம்மாணவரது கண்ணில் பட்டுவிட்டது. பின்னர் அவர் அறைக்கதவை மூட முயற்சிக்கும் பொழுது அவரது தலையிலும் அடிபட்டது. இதையெல்லாம் பொருட்படுத்தாமல் அம்மாணவர் தமக்குரிய கடமையை ஒழுங்காகச் செய்து வந்தார். இதை அறிந்த புத்தர் அந்த மாணவப் பிக்குவைப் பெரிதும் பாராட்டிக் கூறியது இப்பாடல்.

8. Assaddho akataññū ca
sandhicchedo ca yo naro
Hatāvakāso vantāso
sa ve uttamaporiso. (97)

**மொழிபெயர்ப்பு**

(பிறர் சொல்கின்றனர் என்பதற்காக எதையும்) நம்பாமல்[1], பிறரால் ஆக்கப்படாத நிர்வாணத்தை அறிந்து[2], பிறவிக்கான கட்டுகளை அறுத்து[3] நல்வினை தீவினைகளுக்கான வாய்ப்புகளைத் தவிர்த்து[4] வேட்கையைத் துறந்தவனே[5] மனிதர்களுள் உயர்ந்தவன்.

*சூழல்*

ஒரு சமயம் புத்தர் சாரிபுத்தரிடம் அவரது நம்பிக்கையைப் பற்றி வினாத்தொடுத்தார். சாரிபுத்தரோ தாம் புத்தர் சொன்னார் என்பதற்காகவன்றித் தம் சொந்த அனுபவத்தின் மூலம் அறிந்துணர்ந்தமையாலேயே புலன்கள் முதலானவற்றைப் பற்றிய உண்மைகளில் நம்பிக்கை வைத்திருப்பதாகக் கூறினார். இதைக் கேட்ட பிற பிக்குகள் சாரிபுத்தர், புத்தரை நம்பவில்லையே எனக் குற்றம் சாட்டத் தொடங்கினர். அவர்களுக்கு விளக்கம் கூறும் வகையில் அத்தகு குற்றச்சாட்டுகளுக்குச் சாரிபுத்தர் உரியவரல்லர் என்று புத்தர் விளக்கிக் கூறிய பாடல் இது.

*விளக்கம்*

இப்பாடல் முழுவதும் சிலேடைப் பொருளில் அமைந்து சாரிபுத்தரை இகழ்வது போன்று அவரது உயரிய தன்மைகளை எடுத்துக் காட்டுவதாக அமைந்துள்ளது. மொழிபெயர்ப்பில் சிலேடைப் பொருள் வெளிப்படவில்லை.

1. Asaddho என்பது நம்பிக்கையற்றவன் எனப் பொருள்படுவது. இங்குத் தன் சொந்த அனுபவத்தாலன்றிப் பிறர் கூறுவதற்காக நம்பாத தன்மையைக் குறித்தது.

2. Akata என்பது பிறரால் செய்யப்படாத என்பது ஒரு பொருள். அஃதாவது நிர்வாணம். Akataññu என்பது நன்றியற்றவன் என்றும் பொருள்படும்.

3. Sandhi என்பது இணைப்பு அதாவது பிறப்பு இறப்புகளை மனிதனோடு இணைப்பது. அதாவது கட்டுகள். Sandhicchedo என்பதற்குக் கன்னமிடும் திருடன் என்ற பொருளும் உண்டு.

4. Hatāvakāso - Hata + avakāso இரு வினைகளுக்கான வாய்ப்புகளைத் தவிர்த்தவர். இது நல்ல வாய்ப்புகளைச் சிதைத்தவன் என்றும் பொருள்படும்.

5. Vantā so - Vanta + āso வேட்கையைத் தின்றவன் (தீர்த்தவன்) என்னும் பொருள்படும். இது பிறர் உமிழ்ந்ததைத் தின்றவன் என்றும் பொருள்படும்.

மேற்கோள்

எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு. *(குறள்: 355)*

எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு. *(குறள்: 423)*

9. Gāme vā yadi vā rañ̃ñe
ninne vā yadi vā thale
Yattha arahanto viharanti
taṁ bhūmiṁ rāmaṇeyyakaṁ. (98)

**மொழிபெயர்ப்பு**

நாடாக இருப்பினும், காடாக இருப்பினும், பாதாளமாயினும், மலையுச்சியாயினும், எந்த இடத்தில் ஞானியர் வாழ்கின்றனரோ அந்த இடமே இன்பமயமானது.

*சூழல்*

சாரிபுத்தரின் தம்பியான ரேவதன் உலகைத் துறந்து பௌத்தத் துறவியாகிக் குறுகிய காலத்திலேயே ஞானமடைந்தான். அவன் நாட்டுப் பகுதியில் வாழ்வதாயினும் காட்டில் வாழ்வதாயினும் வேறுபாடற்ற மகிழ்ச்சியை அடைந்தான். துறவிகள் பலரும் புத்தருடன் சேர்ந்து விசாகையின் வீட்டில் உணவு உண்ணும் பொழுது விசாகை ரேவதன் வசிக்கும் காட்டைப் பற்றிக் கவலையுடன் விசாரித்தாள். அப்பொழுது புத்தர் ஞானியர்கள் இருக்குமிடம் ஏதுவாயினும் அதுவே அவர்களுக்கு இனிமையானது. பிறர்க்கும் அதுவே இன்பம் தரத்தக்கது என விளக்கி இப்பாடலைக் கூறினார்.

மேற்கோள்

நாடா கொன்றோ காடா கொன்றோ
அவலா கொன்றோ மிசையா கொன்றோ
எவ்வழி நல்லவ ராடவர்
அவ்வழி நல்லை வாழிய நிலனே. *(புறநானூறு: 187)*

10. Ramaṇīyāni araññāni
yattha na ramatī jano
Vītarāgā ramissanti
na te kāmagavesino. (99)

**மொழிபெயர்ப்பு**

உலகியல் இன்பங்களில் நாட்டமுள்ளவர்களுக்குக் காடு இனிமை தருவதில்லை. ஆனால் ஆசைகளை அறுத்த பெரியோர் காடுகளில் இனிமை காண்கின்றனர். ஏனெனில் அவர்கள் புலனின்பங்களில் நாட்டம் கொள்வதில்லை.

மேற்கோள்

பிக்கு ஒருவர் மனமகிழ் பூங்காவில் இருந்து தவம் இயற்றிக் கொண்டிருந்தார். அப்பொழுது அங்குப் பரத்தை ஒருத்தி தன் காதலனை எதிர்பார்த்து வந்தாள். ஆனால் நீண்ட நேரமாகியும் அவன் வாராமையால் பூங்காவைச் சுற்றி வந்த அவள் அங்கிருந்து தவமியற்றும் துறவியைக் கண்டாள். தன் தேவையை அத்துறவியிடம் நிறைவேற்றிக் கொள்ளக் கருதிய அவள் அவரை மயக்க முற்பட்டாள். ஆனால் இந்நிகழ்ச்சியைத் தன் ஞானக் கண்ணால் கண்ட புத்தர் உடனே அத்துறவியின் முன் தோன்றித் தனிமைக் காட்டின் சிறப்பினை எடுத்துரைத்து இப்பாடலைக் கூறினார்.

# 8. SAHASSA VAGGA

## 8. ஆயிரவியல்

1. Sahasaṁ api ce vācā
anatthapada saṁhiitā
Ekaṁ atthapadaṁ seyyo
yaṁ sutvā upasammati. (100)

**மொழிபெயர்ப்பு**

பொருளற்ற ஓராயிரம் சொற்களைவிட மன அமைதி தரக் கூடிய பொருளுடைய ஒரு சொல்லே மிகச் சிறந்ததாகும்.

*சூழல்*

இரத்த வெறி பிடித்த ஒருவன் கொள்ளையர் கூட்டத்தில் சேர்ந்து பல கொலைகளையும் குற்றங்களையும் இழைத்து வந்தான். பொது மக்களுக்குப் பல வகையிலும் துன்பம் கொடுத்து வந்த அவன் ஒரு சமயம் சாரிபுத்தரைச் சந்திக்க நேர்ந்தது. சாரிபுத்தர் அவனுக்கு அறம் உரைத்து அவனைத் தெளிவுபடுத்தினார். விரைவில் அவன் முற்றிலும் மாறுபட்ட தூய வாழ்க்கை வாழலானான். அவன் இறந்த பின்பு சுவர்க்க பூமியில் பிறந்து இன்பம் துய்த்தான். புத்தர் அவனது நிலையைப் பற்றிப் பேசும் பொழுது அவனுடைய அந்நிலைக்குக் காரணம் அவன் சாரிபுத்தன் சொன்ன அறிவுரையைப் பெரிதும் மதித்து நடந்ததுதான் என்றுரைத்து அத்தகு சிறிய அளவிலான அறிவுரையே பல்லாயிரம் வெற்றுரைகளிலும் பேரின்பம் பயக்க வல்லது என்று கூறிய பாடல் இது.

மேற்கோள்

பலசொல்லக் காமுறுவர் மன்றமா சற்ற
சிலசொல்லல் தேற்றா தவர். (குறள்: 649)

2. Sahassaṁ api ce gāthā
anatthapada saṁhitā
Ekaṁ gāthāpadaṁ seyyo
yaṁ sutvā upasammati. (101)

**மொழிபெயர்ப்பு**

பயனற்ற சொற்களால் புனையப்பட்ட ஆயிரம் செய்யுள்களை விட கேட்பதால் மன அமைதியைத் தரவல்ல பாடலின் ஒரு சொல்லே மேலானது.

சூழல்

கடலுள் சென்ற ஒருவன் கப்பல் உடைந்து நீரில் வீழ்ந்தான். கப்பலின் உடைந்த பலகை ஒன்றைப் பற்றிக் கொண்டு நீந்தி அவன் கரை சேர்ந்தான். உடுத்தத் துணியின்றி மரப்பட்டை முதலானவற்றை உடுத்துக் கொண்டு திரிந்த அவனைப் பெரிய ஞானி எனக் கருதிய மக்கள் அவனை வழிபடத் தலைப்பட்டனர். அவ்வகையிலேயே நாட்களைக் கடத்தி வந்த அவன் தன் தவற்றினை உணர்ந்து புத்தரிடம் வந்து அவரை வணங்கினான். புத்தர் அவனுக்கு அறிவுரைகள் கூறி பேரறிவின் திறம் பற்றித் தெளிவுபடுத்தினார். அதைக் கேட்டு அவன் மனம் அமைதியுற்றான். அவன் நிலைபற்றி புத்தர் கூறிய பாடல் இது.

3. Yo ca gāthā satam bhāse
anatthapadasaṁhitā
Ekaṁ Dhammapadaṁ seyyo
Yaṁ sutvā upasammati. (102)

**மொழிபெயர்ப்பு**

ஒருவன் பயனற்ற சொற்களாலான செய்யுள்கள் நூறு கற்பதனினும் அவன் மன அமைதி பெறும் வகையிலான அறவழிப்பட்ட ஒரு சொல்லே மிகச் சிறந்ததாகும்.

4. Yo sahassaṁ sahassena
saṅgāme mānuse jine
Ekeñ ca jeyyamattānaṁ
sa ve saṅgāmajuttamo. (103)

**மொழிபெயர்ப்பு**

போர்க்களத்தில் ஒருவன் ஆயிரமாயிரம் வீரர்களை வெல்வதனினும் தன்னைத் தானே வெல்வது சாலச் சிறந்த வெற்றியாகும்.

*சூழல்*

இராசகேகத்தில் பெருஞ்செல்வன் ஒருவன் இருந்தான். அவன் மகள் தன் பருவ வயதில் ஏழாவது மாடியின் உப்பரிகையில் இருக்கும் பொழுது, அரச தண்டனைக்குள்ளாகிக் கூண்டில் அடைக்கப்பட்டுத் தெருவில் கொண்டு செல்லப்படும் திருடனைக் கண்டு அவன் மீது காதல் கொண்டாள். அவளது காதலை அறிந்த அவள் தந்தை பெருந்தொகை செலவு செய்து அவனை மீட்டு வந்து அவளுக்கு மணமுடித்து வைத்தான், அக்கள்வனோ அவளழகில் நாட்டமின்றி. அவளது பொருளிலேயே அதிக நாட்டம் கொண்டிருந்தான், ஒரு சமயம் ஏராளமான நகைகளுடன் அவளை மலை உச்சிக்கு உல்லாசமாகச் செல்வது போல் அழைத்துச் சென்று அவளைக் கீது தள்ளிக் கொல்ல முயன்றான், அவனது கருத்தை அறிந்த அவள் தனது கடைசி விருப்பமாக அவனைச் சுற்றி வந்து வணங்க அனுமதி வேண்டினாள், அவனும் அவளை அனுமதிக்க வந்து அவளுக்கு மணமுடித்து வைத்தான். அக்கள்வனோ அவளழகில் நாட்டமின்றி, அவளது பொருளிலேயே அதிக நாட்டம் கொண்டிருந்தான். ஒரு சமயம் ஏராளமான நகைகளுடன் அவளை மலை உச்சிக்கு உல்லாசமாகச் செல்வது போல் அழைத்துச் சென்று கீழே தள்ளிக் கொல்ல முயன்றான். அவனது கருத்தை அறிந்த அவள் தனது கடைசி விருப்பமாக அவனைச் சுற்றி வந்து வணங்க அனுமதி வேண்டினாள். அவனும் அவளை அனுமதிக்க அவள் அவனுக்குப் பின்புறமாகச் சுற்றிவந்து அவனைக் கீழே தள்ளிக் கொன்றாள். கணவன் இறந்தபின் மீண்டும் வீட்டிற்குத் திரும்பிச் செல்ல மனமின்றித் தலையை மொட்டையடித்துக் கொண்டு துறவியானாள். அவள் தலையை

மொட்டையடித்த பின் வளர்ந்த குழல் சுருள் சுருளாக இருந்தமையின் அவள் குண்டலகேசி என்றழைக்கப் பெற்றாள். அவள் தன் சமயத்திற்குரிய தத்துவம் தர்க்கம் ஆகியன கற்றுத் தெளிவு பெற்று, பல சமயவாதிகளையும் வாதில் வென்று வந்தாள். கடைசியில் அவள் சாரிபுத்தரைக் கண்டு அவருடன் வாதிட்டுத் தோல்வியுற்று, பௌத்த சமயத்தைச் சார்ந்து பிக்குணியாகி விரைவில் அரகந்தநிலை எய்தினாள்.[1] அவளது வாதத் திறமையினையும் பல சமய வாதிகளையும் வாதில் தோற்கடித்த நேர்த்தியையும், சாரிபுத்தர் சில சொற்களில் உரைத்த அறத்தால் மெய்யறிவுற்று பௌத்த சமயம் தழுவி அரகந்த நிலையடைந்த தன்மையினையும் பிக்குகள் பேசி மகிழ்ந்தனர். இதுபற்றி புத்தர் கருத்துரைக்கும் பொழுது கூறிய பாடல்கள் இவை.

*விளக்கம்*

1. சூழலில் குறிப்பிட்டுள்ள கதையே தமிழில் ஐம்பெருங் காப்பியங்களுள் ஒன்றான குண்டலகேசியாக உருவானது. இந்நூல் தற்போது முழுமையாகக் கிடைக்கவில்லை. தற்போது ஒரு சில பாடல்கள் மட்டுமே கிடைத்துள்ளன.

5. Attā have jitaṁ seyyo
yā cā' yaṁ itarā pajā
Attadantassa posassa
niccaṁ saññatacārino. (104)

**மொழிபெயர்ப்பு**

தன்னை தானே நெறிப்படுத்திக் கட்டுப்பாட்டுடன் வாழ்ந்து தன்னை தானே வெல்லுதல் மற்றவர்களை வென்று அடக்குதலினும் மேலானது.

6. N'eva devo na gandhabbo
na māro saha brahmunā
Jitaṁ apajitaṁ kayirā
tathā rūpassa jantuno. (105)

**மொழிபெயர்ப்பு**

அவ்வாறு தன்னைத் தானே வென்று அடக்கியவனைத் தேவர்களும், கந்தர்வரும் மாரனும் பிரமனும் கூட வெல்ல முடியது

*சூழல்*

ஒரு சமயம் சூதாடிப் பிழைக்கும் பிராமணன் ஒருவன் புத்தரைக் காண வந்தான். தான் சூதாட்டத்தில் தோல்வியுறுவதன் காரணம் என்னவென்று அவன் புத்தரைக் கேட்டறிய விரும்பினான். புத்தர் அவன் எவ்வகையில் வாழ்க்கை நடத்துகிறான் என வினவினார். அவனோ தான் சூதாடிப் பிழைப்பதாகச் சொன்னான். அதில் அவனுக்குக் கிட்டுவது வெற்றியோ தோல்வியோ என வினவினார். அவன் சில சமயம் வெற்றியும் சிலசமயம் தோல்வியும் கிட்டுவதாகக் கூறினான். அப்பொழுது புத்தர் பிறரை வெல்லும் வெற்றி வெற்றியன்று. தன்னைத்தானே வெல்லும் வெற்றியே உயர்ந்தது என அவனுக்கு அறிவுரை கூறிய பாடல்கள் இவை.

7. Māse māse sahassena
   yo yajetha sataṁ samaṁ
Ekañ ca bhāvitattānaṁ
   muhuttaṁ api pūjaye
Sā yeva pūjanā seyyo
   yañ ce vassasataṁ hutaṁ. (106)

**மொழிபெயர்ப்பு**

நூறாண்டு காலமாக மாதந்தோறும் ஆயிரக் கணக்கான யாகங்களை ஒருவன் செய்யினும், தன்னைத்தானே வென்று அடக்கிய சான்றோரை அவன் ஒரு கணம் வழிபடுவானேயாகில் அதில் உண்டாகும் பலன் அந்த நூறாண்டு யாகப் பலனினும் உயர்ந்ததாகும்.

*சூழல்*

ஒரு சமயம் சாரிபுத்தர் தமது தாய்மாமனை அணுகி நீர் ஏதாகிலும் நல்வினை செய்கின்றீரோ என வினவினார். ஆம் ஐயா நான் மாதாமாதம் ஆயிரக் கணக்கான பொன்னை நிகண்டத்

துறவிகளுக்குத்[1] தானமாக அளிக்கிறேன் என்றார் அவர். அது எதன் பொருட்டு என வினவினார் சாரிபுத்தர். பிரம்ம உலகத்தை அடைதற் பொருட்டு என்றார் அவர். பிரம்ம உலகத்தை அடைய இதுதான் வழியோ என வினவினார் சாரிபுத்தர். ஆம் அவ்வாறுதான் குருமார் சொன்னார்கள் என்றார் அவர். உண்மை அஃதன்று. உமக்கு நல்வழி கிட்டுமிடம் நான் காட்டுகிறேன் என அழைத்துக் கொண்டு புத்தரிடம் வந்தார். புத்தர் சான்றோரை வழிபடுவதன் பலனை அறிவுறுத்தி இப்பாடலைக் கூறினார்.

*விளக்கம்*

1 நிகண்ட துறவிகள் நிர்வாணத் துறவிகளாவர். புத்தர் காலத்தில் இத்தகு துறவிகள் ஏராளமாக இருந்தனர்.

மேற்கோள்

To obey is better than sacrifice (Bible: Samual: XII:22 )

அறியவற்றுள் எல்லாம் அரிதே பெரியாரைப்
பேணித் தமராக் கொளல். *(குறள் : 443)*

8. Yo ca vassasataṁ jantu
aggiṁ paricare vane
Ekañ ca bhāvitattānaṁ
muhuttaṁ api pūjaye
Sā yeva pūjanā seyyo
yañ ce vassasataṁ hutaṁ. (107)

**மொழிபெயர்ப்பு**

காட்டுக்குச் சென்று ஒருவன் நூறாண்டு காலம் தீ வளர்த்து யாகம் செய்து வந்தாலும், அவன் தன்னைத் தானே வென்று அடங்கிய சான்றோரை ஒருகணம் வணங்கினாலும் அதன் பயன் நூறாண்டு யாகத்திலும் மேலானதாகும்.

*சூழல்*

சாரிபுத்தருடைய மருமகன் ஒருவன் மாதம் ஒரு விலங்கினைக் கொன்றுத் தீயிலிட்டு யாகம் செய்து வந்தான்.அதன்

மூலம் சுவர்க்கத்தை அடையலாம் என அவனுடைய ஆசிரியர் கூறியதை அவன் நம்பினான். அவனைச் சாரிபுத்தர் புத்தரிடம் அழைத்து வந்தார். புத்தர் அவனுக்கு நல்வழியைக் காட்டியருளி இப்பாடலைக் கூறினார்.

9. Yaṁ kiñci iṭṭhaṁ va hutaṁ va loke
saṁvaccharaṁ yajetha puññapekkho
Sabbaṁpi taṁ na catubhāgameti
abhivādanā ujjugatesu seyyo. (108)

**மொழிபெயர்ப்பு**

ஒருவன் இவ்வுலகில் புகழும் புண்ணியமும் அடையும் பொருட்டுப் பரிசுகளையும் தானங்களையும் [1]ஆண்டு முழுவதும் கொடுப்பினும் அதன் பலனானது ஞானியொருவரை[2] வழிபடுவதனால் கிட்டும் பலனில் கால் பங்குக்கும் ஈடாகாது.

*சூழல்*

சாரிபுத்தரது நண்பர் ஒருவர் புண்ணியம் பெறுவதற்கு விழாக் காலங்களிலும் சாதாரண நாள்களிலும் ஏராளமான பொருளைப் பிறருக்குக் கொடையாகக் கொடுத்து வந்தார். சாரிபுத்தர் அவரைப் புத்தரிடம் அழைத்து வந்தார். புத்தர் அவருக்குச் சரியான வழிமுறையைக் காட்டியருளி இப்பாடலைக் கூறினார்.

*விளக்கம்*

1. Iṭṭhaṁ என்பது விழாக் காலங்களில் பிறருக்குக் கொடுக்கும் பரிசு. hutam என்பது விருந்தினருக்கும் பிறருக்கும் வினையிலும் வினைப் பயனிலும் நம்பிக்கை கொண்டு கொடுக்கப்படுவது.

2. ujjugata - சோதபன்ன நிலையடைந்தோரும் உயர்நிலையடைந்தோரும் எனக் குறிப்பார் உரைகாரர் புத்தகோசர்.

10. Abhivādanasīlissa
niccaṁ vaddhā pacāyino
Cattāro dhammā vaḍḍhanti
āyu vaṇṇo sukhaṁ balaṁ. (109)

மொழிபெயர்ப்பு

ஞானத்திலும் வயதிலும் மூத்த சான்றோரை எப்பொழுதும் வணங்கும் ஒருவனுக்கு ஆயுளும் அழகும் இன்பமும் ஆற்றலும் ஆகிய நான்கும் அதிகரிக்கின்றன.

*சூழல்*

தன் மகன் இளமையிலேயே மரணம் அடைவான் என அறிந்த பிராமணன் ஒருவன் புத்தரை அணுகித் தன் துயரத்தை எடுத்துரைத்தான். புத்தரும் அச்சிறுவனின் முன்பு பிக்குகள் அற நூல்களை ஏழு இரவுகள் தொடர்ந்து பாட ஏற்பாடு செய்யும்படி அறிவுறுத்தினார். அவனும் அவ்வாறு ஏற்பாடு செய்தான். ஏழாம் நாள் புத்தரே அவ்வழிபாட்டில் கலந்து கொண்டார். புத்தரின் தொடர்பு நேரடியாக ஏற்பட்டதால் அச்சிறுவன் மரணத்தினின்றும் தப்பி நீண்ட ஆயுளும் வலிமையும் பெற்றான். இது குறித்து பிக்குகள் பேசுகையில் புத்தர் கூறிய பாடல் இது.

மேற்கோள்

பெரியோர்களை நாள்தோறும் வந்தனஞ்
செய்கிறவனாயும் அனுசரிக்கிறவனாயும் இருப்பவனுக்கு
ஆயுள், கல்வி, கீர்த்தி, பலம் இந்நான்கும் பெருகுகின்றன.

(மனுதர்ம சாத்திரம் : II: 121)

11. Yo ca vassa sataṁ jīve
dussīlo asamāhito
Ekāhaṁ jīvitaṁ seyyo
sīlavantassa jhāyino. (110)

மொழிபெயர்ப்பு

ஒருவன் ஒழுக்கமற்றவனாயும் மனக் கட்டுப்பாடு அற்றவனாயும் நூறாண்டுகள் வாழ்வதைவிட, ஒழுக்க நெறிமுறைகளுடன் தியானம் செய்கிற ஒருவனது ஒருநாள் வாழ்வே மேலானதாகும்.

*சூழல்*

சிலர் தங்களது வயதான காலத்தில் துறவு மேற்கொண்டு தவ நெறியில் செல்ல விருப்புற்றுப் புத்தரை அணுகித் தாங்கள் ஒரு காட்டிற்குச் சென்று தவமியற்ற அனுமதி வேண்டினர். அக்காட்டில் அவர்களுக்குள்ள ஆபத்தினை அறிந்த புத்தர் அவர்களுடன் சங்கிச்சன் என்னும் இளம் துறவி ஒருவரையும் அனுப்பினார். அவ்விளம் துறவி இளமையிலேயே ஞானம் அடைந்தவர். அவர்கள் அனைவரும் காட்டு வழியே செல்லும் பொழுது ஐந்நூறு திருடர்கள் கொண்ட கூட்டத்தினர் அவர்களை வழிமறித்து, அவர்களில் ஒருவரைப் பலியிடக் கொடுத்தால் ஏனையோரை விட்டுவிடுவதாகக் கூறினர். அனைவரும் தங்களை ஒப்புவிக்க முன் வந்தனர். ஆனால் இறுதியில் இளம் துறவியே அனைவரது ஒப்புதலின் பேரில் தம்மை ஒப்புக் கொடுத்தார். அவ்விளம் துறவியை அத்திருடர்கள் தங்கள் இருப்பிடத்திற்கு அழைத்துச் சென்று பலியிடும் வகையில் அவரைக் கொல்ல இருமுறை முயன்றனர். அப்பொழுது சங்கிச்சன் உயர்ந்த மோன நிலையை அடைந்திருந்ததால் அவர்கள் அம்முயற்சியில் தோல்வி அடைந்தனர். இதைக் கண்ணுற்ற திருடர் தலைவன் சங்கிச்சனைப் பணிந்து துறவியானான். அதைத் தொடர்ந்து ஏனைய திருடர்கள் அனைவரும் துறவியாயினர். சங்கிச்சன் அவர்களை அழைத்துக் கொண்டு திரும்பும்பொழுது ஏனையோர் இன்னும் தவமியற்றிக் கொண்டிருப்பதைக் கண்டார். சங்கிச்சன் புதுத் துறவியரைப் புத்தரிடம் அழைத்து வந்தார். புத்தர் அவர்களுக்கு அறிவுரை கூறிய பாடல் இது.

12. Yo ca vassa satam̐ jīve
duppañño asamāhito
Ekāham̐ jīvitam̐ seyyo
paññavantassa jhāyino. (111)

**மொழிபெயர்ப்பு**

மன அடக்கமற்ற அஞ்ஞானமுடைய ஒருவனுடைய நூறாண்டு வாழ்க்கையை விட ஞானமும் தியானமும் உடைய ஒருவனது ஒருநாள் வாழ்வே மேலானது.

*சூழல்*

பிக்கு ஒருவர் தவநெறி மேற்கொண்டுத் தனியாகச் சென்று தவமியற்றி ஞானம் பெற்றார். பின்னர் அவர் புத்தரைக் காணத் திரும்பி வந்து கொண்டிருந்தார். வழியில் இரவில் அவர் ஒரு பாறையில் அமர்ந்து தியானத்தில் மூழ்கினார். அப்பொழுது சில திருடர்கள் பக்கத்து ஊரில் திருடிக் கொண்டு வந்து அப்பாறையை அணுகி அங்கு ஓய்வெடுக்கத் தீர்மானித்தனர். இருளில் துறவியைச் சரியாகப் பார்க்க வியலாது மரம் எனவெண்ணி அவரது தலைமீதும் உடலிலும் தங்கள் திருட்டுப் பொருள்களை வைத்து விட்டு உறங்கினர். காலையில் எழுந்து பார்க்கும் பொழுது தங்கள் தவற்றை உணர்ந்து அத்துறவியைப் பணிந்து மன்னிப்பு வேண்டி அவரிடமே தாங்களும் துறவியாயினர். அவர்கள் தங்கள் ஆசிரியருடன் புத்தரைக் காண வந்தனர். அவர்களைப் பற்றிப் பிறர் பேசுவதை அறிந்த புத்தர் கூறிய பாடல் இது.

13. Yo ca vassasataṁ jīve
kusito hīnavīriyo
Ekāhaṁ jīvitaṁ seyyo
viriyaṁ ārabhato daḷhaṁ. (112)

**மொழிபெயர்ப்பு**

முயற்சியின்றியும் சோம்பலோடும் ஒருவன் நூறாண்டுகள் வாழ்வதைவிட ஆற்றலோடும் ஊக்கத்தோடும் முயலும் ஒருவனுடைய ஒருநாள் வாழ்வே மேன்மையுடையது.

*சூழல்*

நல்லெண்ணமும் ஊக்கமும் உள்ள இளைஞன் ஒருவன் பௌத்த நெறி தழுவித் துறவியானான். புத்த நெறியில் மிக்க நம்பிக்கையுடன் இருந்த அவன் ஏதோ காரணத்தால் தன் மீது வெறுப்புற்றுத் தன்னைத் தானே மாய்த்துக் கொள்ள முற்பட்டான். அம்முயற்சியில் முதலில் தன்னைப் பாம்பு கடிக்கவிட்டு அதனால் மரணமடைய முயன்றான். ஆனால் அப்பாம்பு அவனைக் கடிக்கவில்லை. பின்பு கத்தியால் தன் கழுத்தை அறுத்துக் கொண்டு உயிர்விடத் தீர்மானித்தான். அப்படி அவன் கழுத்தை அறுத்துக் கொள்ள முயன்றபோது அவனது குற்றமற்ற வாழ்வின் பயனாக அவன் திடீரென மோன நிலை எய்தி ஞானம் பெற்றான்.

இதையறிந்த ஏனைய பிக்குகள் தற்கொலைக்கு முயன்ற இவன் எவ்வாறு ஒரு நொடியில் அரகந்த நிலை எய்தினான் என்று புத்தரிடம் வினவினர். புத்தர் முயற்சியின் உயர்ந்த பலனை விளக்கி இப்பாடலைக் கூறினார்.

14. Yo ca vassasataṁ jīve
apassaṁ udayabbayaṁ
Ekāhaṁ jīvitaṁ seyyo
passato udayabbayaṁ. (113)

**மொழிபெயர்ப்பு**

உலகப் பொருள்களின் தோற்றமும் மறைவும்[1] அறியாது நூறாண்டுகள் ஒருவன் வாழும் வாழ்க்கையைவிட அவற்றின் ஆக்க அழிவுகளை அறிந்து ஒருநாள் வாழும் வாழ்க்கையே மேலானது.

*சூழல்*

படாச்சாரா என்னும் பெண் ஒருத்தி ஒரே நேரத்தில் தன் கணவன், குழந்தைகள், பெற்றோர், தன் ஒரே சகோதரன் ஆகியோர் அனைவரையும் இழந்தாள். இவ்விழப்பின் துயரத்தில் இருந்தவளைப் புத்தர் ஆறுதல் கூறித் தேற்றினார். புத்தரின் தேறுதல் உரைகளைக் கேட்டு மனம் தேறி அவள் பிக்குணியானாள். ஒரு சமயம் அவள் தன் கால்களைக் கழுவிக் கொண்டிருக்கும் பொழுது நீரின் போக்கினைக் கவனித்தாள். சில துளிகள் அவள் காலடியிலேயே நின்றன. சில அவளது காலினின்று சற்று தூரம் தள்ளி நின்றன. சிறிது நீர் வெகு தூரம் சென்று நின்றது. இவ்வாறு பல்வேறு நிலையில் அந்நீர் நின்று நிலத்தில் சார்ந்து மறைந்ததைக் கண்ணுற்ற அவள் உலகின் நிலையாமையை மனத்தில் கொண்டு தவமியற்றத் துணிந்தாள். அவளது மனப்போக்கினை ஞானத்தால் அறிந்த புத்தர் அவள் முன் தோன்றி இவ்வறவுரையைக் கூறி அருளினார். அவள் விரைவில் அரகந்த நிலை எய்தினாள்.

*விளக்கம்*

1. உலகியல் பொருள்களும் மனமும் மாறும் தன்மையன. எப்பொருளும் கண நேரத்திற்கு மேல் நிலைப்பதில்லை. விளக்கின் சுடர் எவ்வாறு தொடக்கத்திலிருந்து இறுதிவரை ஒன்றாகவே இருப்பதில்லையோ, எவ்வாறு

ஓடிக்கொண்டிருக்கும் ஆற்றுநீர் ஓரிடத்தில் கணத்துக்குக் கணம் மாறிக் கொண்டிருக்கிறதோ அதுபோல அனைத்துப் பொருள்களும் மாற்றம் அடைந்து கொண்டிருக்கிறது. ஒரு கணத்தில் இருப்பது மறு கணத்தில் இருப்பதில்லை புதிதாக வேறொன்றே இருக்கிறது. இது **கணபங்கவாதம்** எனப்படும்.

15. Yo ca vassasataṁ jīve
apassaṁ amataṁ padaṁ
Ekāhaṁ jīvitaṁ seyyo
passato amataṁ padaṁ. (114)

**மொழிபெயர்ப்பு**

இறப்பற்ற (பிறவா நிலை) வாழ்க்கையைக் கண்டறிந்த ஒருவனது ஒருநாள் வாழ்வானது அந்நிலையை அறியாத ஒருவனது நூறாண்டு வாழ்விலும் உயர்ந்ததாகும்.

*சூழல்*

கிசா கோதமி என்னும் பெண்ணின் ஒரே குழந்தை ஒருநாள் இறந்துவிட்டது. இப்பிறப்பின் தன்மையை அறியாத அவள் தன் குழந்தை ஏதோ நோயால் நினைவிழந்துள்ளது என எண்ணி அதற்கான மருத்துவம் தேடிப் பல இடங்களிலும் குழந்தையைத் தூக்கிக் கொண்டு அலைந்தாள். சிலர் அவளைப் புத்தரிடம் செல்லுமாறு வழிகாட்டினர். அவளும் புத்தரிடம் சென்று எவ்வாறேனும் தன் குழந்தையை எழுப்பித் தர வேண்டினாள். புத்தரும் அவளை இதுவரை இறப்பே நேராத ஒரு வீட்டிலிருந்து சிறிது கடுகு வாங்கி வரும்படிப் பணித்தார். ஆனால் அவள் எங்குத் தேடியும் இறப்பு நிகழாத வீட்டைக் கண்டறிய இயலவில்லை. எல்லா இடங்களிலும் இறப்பு என்பது பொதுவானது என்பதை அறிந்த அவள் மீண்டும் புத்தரிடம் சென்று பிக்குணியானாள். ஒருநாள் விளக்குச் சுடரின் தோற்றமும் அழிவும் கண்ணுற்ற அவள் உலகின் நிலையாமையை நன்குணர்ந்து தெளிந்தாள். அவள் முன் புத்தர் அருளுருவாகத் தோன்றி இப்பாடலைக் கூறினார்.

16. Yo ca vassasataṁ jīve
apassaṁ dhammamuttamaṁ
Ekāhaṁ jīvitaṁ seyyo
passato dhammamuttamaṁ. (115)

**மொழிபெயர்ப்பு**

உயர்ந்த அறத்தை[1] அறியாத ஒருவனுடைய நூறாண்டு வாழ்க்கையை விட அவ்வுயர்ந்த அறத்தை அறிந்த ஒருவனது ஒருநாள் வாழ்க்கை மேலானது.

*சூழல்*

பெரும் செல்வம் படைத்த ஒரு விதவைக்குப் பல மக்கள் இருந்தனர். அவள் தன்னைக் காப்பதாக உறுதியளித்த மக்களுக்குத் தன் செல்வத்தைப் பகிர்ந்தளித்தாள். ஆனால் மோசக்காரர்களான அப்பிள்ளைகள் அப்பொருளைப் பெற்றுக் கொண்டு அவளை ஏமாற்றித் துரத்திவிட்டனர். இதனால் வெறுப்புற்ற அவள் பிக்குணியானாள். அவள் அறநெறியில் மிகுந்த கவனமும் ஈடுபாடும் கொண்டொழுகினாள். புத்தர் அவளுக்கு அறநெறியின் சிறப்பினை எடுத்துரைத்தார். அவள் விரைவில் அரகந்த நிலை எய்தினாள்.

---

## 9. PĀPA VAGGA

### 9. தீவினை இயல்

1. Abhittharetha kalyāṇe
pāpa cittaṁ nivāraye
Dandhaṁ hi karoto puññaṁ
pāpasmiṁ ramati mano. (116)

**மொழிபெயர்ப்பு**

நல்வினை ஆற்றுவதில் விரைந்து செயல்பட வேண்டும் தீய எண்ணங்களைத்[1] தடுத்து நீக்க வேண்டும். புண்ணியச் செயல்களைச்[2] செய்வதில் காலதாமதம் செய்தால் மனம் தீய எண்ணங்களில் கவர்ச்சியுறுகிறது.

*சூழல்*

சாவத்தியில் ஏழை பிராமணன் ஒருவன் இருந்தான் அவனிடம் அவனும் அவன் மனைவியும் உடுத்துவதற்கு ஒவ்வொரு கீழாடையே இருந்தது. ஆனால், இருவருக்கும் பொதுவாக ஒரே ஒரு மேலாடையே இருந்தது. எங்காவது வெளியே போகும் பொழுது அதை யாராவது ஒருவர் அணிந்து கொள்வர். ஒருநாள் புத்தரது அறவுரையைக் கேட்ட அந்தப்பிராமணன் தனது மேலாடையைப் புத்தருக்குக் கொடுக்க விரும்பினான். ஆனால் அதைக் கொடுத்து விட்டால் தானோ தன் மனைவியோ அணிய வேறு உடை இல்லையே எனச் சிந்தித்தான். இவ்வாறு சிந்தித்தவன் அதைக் கொடுக்காமல் வீட்டிற்கு வந்து விட்டான். அன்று இரவு முழுவதும் அவனுள் அவனுடைய நல்லெண்ணத்திற்கும் தன்னலத்திற்கும் இடையில் பெரும்

போராட்டம் நிகழ்ந்தது. இறுதியில் அவன் அவ்வாடையைப் புத்தருக்கு அன்பளிப்பாகக் கொடுத்து விட்டான். அந்த மகிழ்ச்சியில் அவன் 'நான் வென்று விட்டேன், நான் வென்று விட்டேன்' எனக் கூவினான். அச் செயலைக் கண்ட அரசன் இவன் எதை வென்றுவிட்டான் என விசாரிக்க, அவன் தன்னலத்தை வென்று விட்ட வகையினை அறிந்தான். அவனது அந்த நல்லெண்ணத்தை அறிந்து அரசன் அவனுக்குப் பெரும்பொருள் பரிசளித்தான்.

*விளக்கம்*

1. Pāpa - தீவினை. இது ஆசை, கோபம்., மோகம், என்னும் மூன்று வேர்களினின்றும் கிளைப்பது. இது பத்து வகையாகப் பகுத்துக் காணப்படும். அப்பத்து வகையும் மனம், வாக்கு, என்னும் மூன்று வழிகளிலும் செயல்படும் பத்து வகையான தீவினைகள்.
(பார்க்க -பாடல் 42 விளக்கம்).

2 புண்ணியம் என்பன நல்வினைகள். இவையும் பத்து வகைப்பட்டு மனம், வாக்கு, காயத்தால் செய்யப்படுவன.
(பார்க்க - பாடல் 43 விளக்கம்).

மேற்கோள்

அன்றறிவாம் என்னா தறம்செய்க மற்றது
பொன்றுங்கால் பொன்றாத் துணை. *(குறள்: 36)*

மற்றறிவாம் நல்வினை யாமிளையம் என்னாது
கைத்துண்டாம் போதே கரவா தறம்செய்மின்
முற்றி யிருந்த கனிஒழியத் தீவளியால்
நற்காய் உதிர்தலு முண்டு. *(நாலடியார்: 19)*

2. Pāpañ ce puriso kayirā
na taṁ kayirā punappunaṁ
Na tamhi chandaṁ kayirātha
dukkho pāpassa uccayo (117)

மொழிபெயர்ப்பு

ஒருவன் தீச்செயல் ஒன்று செய்வானாகில் அதனை மீண்டும் மீண்டும் அவன் செய்யா தொழிவானாக. தீச்செயலைச் செய்வதில் விருப்பற்றவனாக வேண்டும். ஏனெனில் தீவினை அதிகரிப்பதால் அவனுக்குத் துன்பம் மிகுகிறது.

*சூழல்*

பிக்கு ஒருவர் தான் செய்த தவற்றிற்குப் பிக்கு சங்கத்தால்[1] அளிக்கப்பட்ட தண்டனையை[2] அனுபவித்த பின்பும் மீண்டும் அதே குற்றத்தைச் செய்து கொண்டிருந்தார். அவரது அவ்வியல்பினைக் கண்ட புத்தர் அவரைத் திருத்தும் வகையில் கூறிய பாடல் இது.

*விளக்கம்*

1. பிக்கு சங்கம் என்பது பௌத்தத்துள் மிகவும் முக்கியமான ஒன்றாகும். பிக்கு ஒவ்வொருவரும் புத்தனையும், தர்மத்தையும், சங்கத்தையும் சரணடைவது முத்திற மணியை வணங்குவதாகும். ஒரு சங்கம் அமைய குறைந்தது நான்கு பிக்குகள் வேண்டும். உயர் எல்லையாக எத்தனை பிக்குகளும் இருக்கலாம்.

2. பிக்குகள் எவ்வாறு ஒழுக வேண்டும் எனப் புத்தர் விதித்த விதிகளினின்றும் மீறி நடப்பவர்களைத் தண்டிக்க பிக்கு சங்கத்திற்கு அதிகாரம் உண்டு. இத்தண்டனை, குற்றத்தின் தன்மைக்கேற்ப மாறுபடும். உயர்நிலைத் தண்டனை சங்கத்தினின்றும் அவரை விலக்கி அவ்வாறு விலக்கப்பட்டதைப் பிற சங்கங்களுக்கும் தெரிவிப்பதாகும். குற்றங்களும் அதற்குரிய தண்டனைகளும் விநய பிடக நூல்களுள் விளக்கமாகக் கூறப்பட்டுள்ளன.

மேற்கோள்

தீயவை தீய பயத்தலால் தீயவை
தீயினும் அஞ்சப் படும். *(குறள் : 202)*

3. Puññaṁ ce puriso kayirā
kayirāth' etaṁ punappunaṁ
Tamhi chandaṁ kayirātha
sukho puññassa uccayo. (118)

மொழிபெயர்ப்பு

நல்வினை ஆற்றும் ஒருவன் மீண்டும் மீண்டும் நல்வினை ஆற்றுவானாக. அதில் அவன் பெரு விருப்பினனாக இருக்க வேண்டும். ஏனெனில் அது அவனுக்கு இன்பம் பயப்பதாகும்.

*சூழல்*

மகா கஸ்ஸபர் பிப்பாலிக் குகையில் தவம் செய்து ஞானம் பெற்று ஏழாம் நாள் அங்கிருந்து திரும்பி வரும் பொழுது அவருக்கு ஏழைப் பெண்ணொருத்தி உணவளித்து உபசரித்தாள். பின்னர் அவள் பாம்பு கடித்து இறந்து போனாள். அவள் ஞானி ஒருவருக்கு உணவளித்த நல்வினையின் பயனாகத் தேவருலகில் பிறந்தாள். தனது நல்வினையின் பயனை உணர்ந்த அவள் நல்வினையின் வலிமையைப் பெருக்கிக் கொள்ளும் வகையில் கஸ்ஸபரின் இருப்பிடம் சென்று இடத்தைச் சுத்தம் செய்தல், நீர் எடுத்து வைத்தல் முதலிய பணிவிடைகளைச் செய்தாள். இதைக் கண்ட கஸ்ஸபர் அவ்வாறு செய்வதனின்றும் அவளைத் தடுத்து விட்டார். இதனால் அவள் பெரிதும் கவலையுற்றாள். அவளது மனக் கவலையை அறிந்த புத்தர் அவளது அறச் செயலைப் பாராட்டிக் கூறிய பாடல் இது.

4. Pāpo'pi passati bhadraṁ
yāva pāpaṁ na paccati
yadā ca paccati pāpaṁ
atha pāpo pāpāni passati. (119)

மொழிபெயர்ப்பு

தீவினையாளன் தனது தீவினைகள் முதிர்ச்சியடையும் வரை இன்பத்தை அனுபவிக்கிறான். அவனது தீவினைகள் பக்குவமடைந்ததும் அவன் அதற்கான தீய பலன்களை அனுபவிக்கிறான்.

5. Bhadro pi passati pāpaṁ
yāva bhadraṁ na paccati
Yadā ca paccati bhadraṁ
atha bhadro bhadrāni passati. (120)

**மொழிபெயர்ப்பு**

நல்வினையாளனும் தனது நல்வினைகள் பக்குவ மடையும்வரைத் துன்பத்தை அனுபவிக்கிறான். ஆனால் அவனது நல்வினைகள் முதிர்ச்சியடைந்து பக்குவப் பட்ட பின்பு அவன் அதற்கான நற்பயன்களை அனுபவிக்கிறான்.

*சூழல்*

அநாத பிண்டிகன் புத்த சங்கத்தைப் பெரிதும் ஆதரித்து வேண்டிய உதவிகளும் உண்டி, உடை முதலானவையும் கொடுத்து ஆதரித்து வந்தான். ஆனால் அவன் தொடக்கத்தில் பல இழப்புகளுக்குள்ளானான். இதைப் பலரும் பலவாறாகப் பேசி அவனைக் கேலி செய்தனர். அவனோ எதைப் பற்றியும் கவலைப்படாமல் தன் வழியில் தீவிரமாக இருந்தான். அவனது இயல்பினைப் பாராட்டிப் புத்தர் கூறிய பாடல்கள் இவை.

மேற்கோள்

அவ்விய நெஞ்சத்தான் ஆக்கமும் செவ்வியான்
கேடும் நினைக்கப் படும். *(குறள்: 169)*

6. Māvamaññetha[1] pāpassa
na mam̐ tam̐ āgamissati
Udabindunipātena
udakumbho pi pūrati
Pūrati bālo pāpassa
thokathokam̐ 'pi ācinam̐. (121)

**மொழிபெயர்ப்பு**

இத்தீமை என்னை அணுகாது எனத் தீய செயல்களை எளிதாக எண்ண வேண்டாம். நீர் துளித் துளியாகச் சொட்டினாலும் முடிவில் குடம் நிறைந்து விடுகிறது. அதுபோல அறிவிலிகள் சிறிது சிறிதாகத் தீமையைச் சேர்த்துக் கொள்கின்றனர்.

*சூழல்*

பிக்கு ஒருவர் தான் செய்யும் சிறு தவறுகள் தனக்குத் தீமை பயவா என்ற எண்ணத்தில் மீண்டும் மீண்டும் அவற்றைச் செய்து

கொண்டிருந்தார். பிற பிக்குகள் அத்தவறுகளைச் சுட்டிக் காட்டிய போதும் அவர் தம்மைத் திருத்திக் கொள்ளவில்லை. இது குறித்து பித்தரிடம் பிற பிக்குகள் முறையிட்டனர். புத்தர் அவரை அழைத்து விசாரித்த போதும் அச்சிறு தவறுகளால் தமக்குத் தீங்கு ஏதும் நிகழாது எனக் கூறினார். அவரைக் கண்டித்துத் திருத்தும் வகையில் புத்தர் கூறிய பாடல் இது.

*விளக்கம்*

1. Māppa maññetha என்றும் பாடம் உண்டு. பொருள் வேறுபாடு இல்லை.

7. Māvamaññetha puññassa
   na maṁ taṁ āgamissati
Udabindunipātena
   udakumbho pi pūrati
Pūrati dhīro puññassa
   thokathokaṁ pi ācinaṁ. (122)

**மொழிபெயர்ப்பு**

இதன் பலன் என்னை அணுகாது என நற்செயல்களைப் பற்றி எளிதாக எண்ண வேண்டாம். நீர்த்துளித் துளியாகச் சொட்டினாலும் இறுதியில் குடம் நிறைந்து விடும். அது போல அறிஞர்கள் சிறிது சிறிதாக நல்வினைப் பயனைத் தேடித் தேடி நிரப்பிக் கொள்கின்றனர்.

*சூழல்*

புத்தரின் அறவுரைகளைக் கேட்டு ஒருவன் ஈகையின் பெருமையை அறிந்து தனது ஊர் மக்கள் அனைவரையும் பிக்குகளுக்குத் தானம் வழங்கும்படித் தூண்டினான். அவன் ஒவ்வொரு வீடாகச் சென்று பொருள்களைச் சேகரித்து வரும் பொழுது செல்வன் ஒருவன் அச்செயலைச் சரியாகப் புரிந்து கொள்ளாமல், மிகச் சிறிய அளவில் பொருள் கொடுத்தான். நன்கொடையாளர்களுக்கு நன்றி தெரிவிக்கும் கூட்டத்தின் போது தான் சிறிதே கொடுத்ததைத் குறிப்பிட்டு அவன் தன்னை

இழிவுபடுத்தினால் அவனைக் கொன்று விடும் எண்ணத்தில் அச்செல்வன் கூட்டத்திற்குச் சென்றான். ஆனால், கூட்டத்தில் அனைவருக்கும் சமமாகவே நன்றி தெரிவிக்கப்பட்டது. அதைக் கண்ட செல்வன் தனது எண்ணத்திற்கு நாணி மன்னிப்பு வேண்டினான். இக்கதையைக் கேட்ட புத்தர் நற்செயல்களின் சிறப்பினைப் பாராட்டிக் கூறிய பாடல் இது.

8. Vāṇijo' va bhayaṁ maggaṁ
appasattho mahaddhano
Visaṁ jīvitukāmo va
pāpāni parivajjaye, (123)

**மொழிபெயர்ப்பு**

வணிகன் ஒருவன் குறைந்த பாதுகாப்புடன் பெரும் செல்வம் கொண்டு செல்லும் பொழுது அச்சமுள்ள வழியை விலக்கிப் பாதுபாப்பான வழியிலேயே செல்வது போலவும், உயிர்வாழ விரும்புவோர் நஞ்சை உண்ணாமல் விலக்குதல் போன்றும் தீவினைகளை விட்டு விலக வேண்டும்.

*சூழல்*

வணிகன் ஒருவன் பல பிக்குகளைத் தன்னுடன் சேர்த்துக் கொண்டு வணிகப் பயணம் மேற்கொண்டான். அவர்கள் செல்லும் வழியில் திருடர்கள் சிலர் அவர்களை வழிமறித்துக் கொள்ளையிடத் திட்டமிட்டனர். ஆனால் அம்முயற்சி தோல்வியுற்றது. பின்னர் பிக்குகள் வணிகனை விட்டுப் பிரிந்து புத்தரிடம் வந்து நடந்ததைப் புத்தரிடம் கூறினர். அப்பொழுது புத்தர் இப்பாடலைக் கூறினார்.

மேற்கோள்

தீப்பால தான்பிறர்கண் செய்யற்க நோய்ப்பால
தன்னை அடல்வேண்டா தான். *(குறள் : 206)*

9. Pāṇimhi ce vaṇo nāssa
hareyya pāṇinā visaṁ
Nābbaṇaṁ visaṁanveti
natthi pāpaṁ akubbato. (124)

மொழிபெயர்ப்பு

கையில் காயம் ஏதும் இல்லையெனில் நஞ்சைக் கையில் எடுக்கலாம். நஞ்சு எந்தத் தீங்கும் இழைக்காது. அது போன்று தீவினையற்றவர்களைத் தீங்கு ஏதும் நெருங்காது.

*சூழல்*

செல்வன் ஒருவனது மகள் நில்லா உலகின் நிலைமையை உணர்ந்து சோதபன்னர் நிலையை அடைந்திருந்தாள். தன் முன்வினைப் பயனால் வேடன் ஒருவன் மீது காதல் கொண்டு அவனுடன் சென்று மணமுடித்து வாழத் தலைப்பட்டாள். அவர்களது இல்வாழ்க்கையில் அவள் பல மக்களைப் பெற்றாள். அவள் சோதபன்னர் நிலையை எய்தியிருந்தும் தன் கணவன் வேட்டைக்குச் செல்லும் பொழுது அவனுக்கு வில்லும் அம்பும் எடுத்துக் கொடுத்து வந்தாள். அவளது நிலையையும் செயலையும் அறிந்த பிக்குகள் சிலர் அவள் செயலின் பாபம் அவளைச் சேருமா என்பது குறித்துப் பேசிக் கொண்டிருந்தனர். அவர்களைத் தெளிவுபடுத்தும் பொருட்டு புத்தர் இப்பாடலைக் கூறி அவள் மனத்தளவில் எத்தீவினையும் செய்யவில்லை. அவள் வில்லும் அம்பும் எடுத்துக் கொடுத்தது தன் கணவனுக்குப் பணிவிடை செய்யும் கடமை குறித்துச் செய்தாளாகலின் அவளைத் தீவினைப் பயன் சேராது எனக் கூறினார்.

10. Yo appaduṭṭhassa narassa dussati
suddhassa posassa anaṅgaṇassa
Taṁ eva bālaṁ pacceti pāpaṁ
sukhumo rajo paṭivātaṁ 'va khitto. (125)

மொழிபெயர்ப்பு

தீங்கில்லாத, குற்றமற்ற தூய நல்லோரைத் துன்புறுத்தும் மூடன் மேல் காற்றுக்கு எதிராகத் தூற்றப்படும் தூசி போல் பாவம் விழுந்து படிகிறது.

*சூழல்*

வேடன் ஒருவன் வேட்டைக்குச் செல்லும் வழியில் பிக்கு ஒருவரைச் சந்தித்தான். அன்று அவனுக்கு வேட்டையில் எதுவும்

கிடைக்கவில்லை. அவன் சோர்வுடன் திரும்பி வருகையில் மீண்டும் அந்த பிக்குவைக் காண நேர்ந்தது. இந்த பிக்குவைக் கண்டதால் தான் தனக்கு வேட்டையில் ஏதும் கிடைக்கவில்லை எனத் தவறாக எண்ணிய அவன் தன் வேட்டை நாய்களைப் பிக்கு மேல் ஏவி விட்டான். அவற்றிடமிருந்து தப்பிக்க எண்ணிய பிக்கு மரத்தின் மேல் ஏறிக் கொண்டார். வேடன் அவர் மீது அம்பெய்துத் துன்புறுத்தினான். அவர் வேதனையால் துடித்துக் கொண்டிருந்த போது அவரது மேலாடை தவறிக் கீழே விழுந்தது. அது சரியாக வேடன் மேல் விழுந்து அவனை முழுதும் மறைத்துவிட்டது. நாய்கள் ஆடையைக் கண்டு பிக்குதான் கீழே விழுந்து விட்டார் எனக் கருதி அவனைக் கடித்துக் கொன்று விட்டன. பிக்கு பின்னர் புத்தரிடம் சென்று நடந்ததைக் கூறித் தன்மீது பாபம் வந்து சேருமோ எனக் கேட்ட போது அவருக்கு ஆறுதல் கூறி அவர் மீது தவறில்லை எனத் தேற்றிய பாடல் இது.

மேற்கோள்

பொறுப்பர் என்றெண்ணிப் புரைதீர்ந்தார் மாட்டு
வெறுப்பன செய்யாமை வேண்டும் - வெறுத்தபின்
ஆர்க்கும் அருவி அணிமலைநல் நாட
பேர்க்குதல் யார்க்கும் அரிது. *(நாலடியார்: 161)*

11. Gabbhaṁ eka uppajjanti
nirayaṁ pāpakammino
Saggaṁ sugatino yanti
parinibbanti anāsavā. (126)

**மொழிபெயர்ப்பு**

சிலர் கருவில் தங்கி (இவ்வுலகில்) பிறக்கின்றனர்[1]. பாவம் செய்தோர் நரகத்தில் பிறக்கின்றனர்[2]. நல்வழியிற் சென்றோர் சுவர்க்கத்தை[3] அடைகின்றனர். பற்றற்றோர் நிர்வாண நிலை அடைகின்றனர்.

*சூழல்*

பிக்கு ஒருவர் வைர வணிகன் ஒருவன் வீட்டிற்குப் பலகாலமாகப் பிச்சைக்குச் சென்று கொண்டிருந்தார். வணிகனின் மனைவி பிக்குவிற்குத் தேவையான உணவு கொடுத்து ஆதரித்து

வந்தாள். ஒரு நாள் பிக்கு பிச்சைக்குச் சென்றிருந்த போது வணிகன் வெளியிலிருந்து வைர மணிகளைச் சோதித்துக் கொண்டிருந்தான். அவன் ஏதோ வேலையாக உள்ளே சென்றபோது பறவை ஒன்று அம்மணிகளில் ஒன்றை விழுங்கி விட்டுச் சென்றது. உள்ளிருந்து வந்த வணிகன் ஒரு மணி குறைவதைக் கண்டு பிக்குவை வினவினான். பிக்கு தான் அதை எடுக்கவில்லை எனச் சொல்லியும் நம்பாமல் அவரை நையப் புடைத்தான். அவர் உடலினின்றும் குருதி பெருகியது. அப்பறவை குருதியைப் பருகும் பொருட்டு மீண்டும் வந்தது. வணிகன் கோபத்தில் அதை எட்டி உதைத்தான். அது இறந்து வீழ்ந்தது. பிக்கு மணியை விழுங்கியது அப்பறவைதான் எனக் கூற, வணிகன் அப்பறவையை அறுத்துப் பார்த்தான். உள்ளே மணியைக் கண்டு பிக்குவிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டான். பிக்கு இது குறித்து புத்தரிடம் கூறிய போது புத்தர் கூறிய பாடல் இது.

*விளக்கம்*

1. பிறவிகள் நான்கு வகைப்படும் என்பது பௌத்தக் கோட்பாடு.

| | | |
|---|---|---|
| 1. | முட்டைவழிப் பிறப்பு | (aṇḍaja) |
| 2. | தாய் வயிற்றுவழிப் பிறப்பு | (jalābuja) |
| 3. | வியர்வையில் பிறப்பு | (saṁsedaja) |
| 4. | தானே பிறத்தல் | (oppātika) |

இவற்றுள் தாய் வயிற்றிலிருந்து பிறப்பது என்பது மனிதப்பிறவி. ஈண்டுக் கருவில் தங்கிப் பிறத்தல் எனக் குறிப்பிடுவது வினைப் பயன் நுகர உலகில் வந்து பிறத்தல். நரகத்தில் பிறத்தல் என்பது தீவினையாளர் அதன் பயன் நுகர்தற் பொருட்டு நரகத்தில் வீழ்தலை. சுவர்க்கத்தில் பிறத்தல் என்பது நல்வினையாளர் தேவருலகினை அடைவர் என்பதாம். பற்றற்றோர்க்கு வினையில்லையாகலின் அவர்க்குப் பிறவியில்லை. எனவே அவர் நிர்வாணம் எய்துவர்.

2. நரகம் - Niraya - Ni + aya - இன்பமற்ற நிலை. நரகம் நால்வகைப்படும்.

1. துன்ப நிலை - apāya
2. விலங்குநிலை - Tiracchānayoni
3. பேய்ப் பிறவி - Peta yoni
4. அசுரப் பிறவி - Asura yoni.

இவற்றுள் எதிலும் ஒருவர் நிலையாகத் தங்கி விடுவதில்லை. அவரவர் தீவினைக் கேற்ப அத்துன்பங்களை அனுபவித்து விட்டு அவர்க்கு நல்வினைப் பயன் இருப்பின் தேவருலகம் சேர்வர்.

3. Sagga - சுவர்க்கம் - Su+agga - நல்ல உயர்ந்த நிலை. மனிதர் உலகுடன் மற்றும் ஓர் ஆறு உலகங்கள் சேர்ந்து ஏழுலகங்கள் சுவர்க்க நிலை எனப்படும். இவையும் நிரந்தரமில்லையாம்.

12. Na antaḷikkhe na samuddamajjhe
na pabbatānaṁ vivaraṁ pavissa
Na vijjatī so jagatippadeso
Yatthaṭṭhito muñceyya pāpakammā. (127)

**மொழிபெயர்ப்பு**

தீவினையாளர்கள் விண்ணில் சென்று மறைந்தாலும் கடல் நடுவுள் சென்று மறைந்தாலும், மலைக் குகையுள் சென்று ஒளிந்தாலும் தாங்கள் செய்த தீவினைப் பயன்களினின்றும் தப்பித்துக் கொள்ள இயலாது.

*சூழல்*

மூன்று வெவ்வேறு இடங்களிலிருந்து பிக்குகள் வெவ்வேறு வழியில் புத்தரைக் காண சாவத்திற்கு வந்தனர். ஒரு குழுவினர் வரும் வழியில் ஆகாயத்தில் பறந்து கொண்டிருந்த காகம் ஒன்று நெருப்பில் வீழ்ந்து மடிந்ததைக் கண்டனர். மற்றொரு குழுவினர் பெண்ணொருத்தி கடலுள் மூழ்கி இறந்ததைக் கண்டனர். மூன்றாவது

குழுவினர், ஏழு பிக்குகள் மலைக்குகை ஒன்றில் ஏழு நாள்கள் அடைபட்டுக் கிடந்ததைக் கண்டனர். இவற்றின் காரணத்தை அறிய விரும்பிய அவர்கள் புத்தரிடம் நடந்ததைக் கூறினர். புத்தர் அவர்கள் முற்பிறவியில் செய்த தீவினைகளை வெளிப்படுத்தினர்.

நெருப்பில் வீழ்ந்து இறந்த காகம் முற்பிறவியில் விவசாயியாகப் பிறந்திருந்தது. அவ்விவசாயி தன் சோம்பேறி எருதினை நெருப்பிலிட்டுக் கொன்றான். நீரில் மாய்ந்த பெண் முற்பிறவியில் நாய் ஒன்றை நீரில் அமிழ்த்துக் கொன்றாள். சிறைப்பட்ட பிக்குகள் சென்ற பிறவியில் உடும்பு ஒன்றை ஏழு நாள்கள் எறும்புப் புற்றிலிட்டு அடைத்திருந்தனர். எனவே அவர்கள் இப்பிறவியில் அவற்றின் பலன்களை அனுபவித்தனர் என விளக்கி இப்பாடலைக் கூறினார்.

13. Na antaḷikkhe na samuddamajjhe
na pabbatānaṁ vivaraṁ pavissa
Na vijjatisojagatippadeso
yatthaṭṭhitaṁ nappasahetha maccu. (128)

**மொழிபெயர்ப்பு**

மரணம் வரும்பொழுது ஒருவன் ஆகாயத்தில் சென்று ஒளிந்தாலும், கடல் நடுவுள் சென்று மறைந்தாலும் மலைக்குகையில் சென்று தங்கினாலும் அம்மரணத்தினின்றும் தப்பிவிட இயலாது.

*சூழல்*

மன்னன் சுப்பபுத்தன் தன் மகள் யசோதரைக்குப் புத்தர் துறவளித்தார் என்பதற்காக அவர்மேல் கடுங்கோபம் கொண்டிருந்தான். அதன் காரணமாக புத்தர் அங்கு வந்த போது அவரை இழிவு படுத்தித் துன்புறுத்தினான். மன்னனது தவறான போக்கைக் கண்ட புத்தர் சுப்பபுத்தனது இறப்பு விரும்பத் தகாத வகையில் துயரம் நிறைந்ததாக இருக்கும் எனத் தொலைவில் உணரும் ஆற்றலால் கண்டுரைத்தார். சுப்பபுத்தன் தனது துர்மரணத்தைத் தவிர்க்கப் பல வகையிலும் முயன்றாலும் புத்தர் உரைத்தபடியே அவன் மரணம் நிகழ்ந்தது. அது குறித்துப் புத்தர் கூறிய பாடல் இது.

## 10. DAṆḌA VAGGA

10. தண்டனை இயல்

1. Sabbe tasanti daṇḍassa
sabbe bhāyanti maccuno
Attānaṁ upamaṁ katvā
na haneyya na ghātaye. (129)

**மொழிபெயர்ப்பு**

அனைவரும் தண்டனைக்கு அஞ்சுகின்றனர். அனைவரும் மரணத்திற்கு அஞ்சுகின்றனர். எனவே ஒருவர் பிறரையும் தன்னைப் போல் கருதி யாரையும் கொல்லாமலும் கொலைக்குக் காரணமாக இல்லாமலும்[1] இருப்பாராக.

*சூழல்*

இரு குழுவினராக இருந்த பிக்குகளிடையே தோன்றிய மன வேறுபாடு சண்டையாக முற்றியது. அவர்களுள் ஆறு பிக்குகள் கொண்ட குழு ஒன்று பதினாறு பேர் கொண்ட குழுவினரைத் தாக்கியது. இந்நிகழ்ச்சியைக் கேள்விப்பட்ட புத்தர், பிக்குகள் சண்டையிடாதிருக்கும் பொருட்டு புதிய சட்டம் ஒன்று ஏற்படுத்தி விட்டு இப்பாடலைக் கூறினார்.

*விளக்கம்*

1. Na haneyya na ghātaye - இதற்கு உரையாசிரியர். புத்தகோசர் Na pahareyya na paharāpeyya (அடிக்காதே, அடிக்கக் காரணமாக இராதே ) என எழுதியுள்ளார். இதைக் கொண்டு சிலர் 'அடிக்காமலும் அடிக்கத் தூண்டாமலும் இருக்க' என மொழி பெயர்ப்பர். ஆனால் han என்னும்

வேர்ச்சொல் கொல் என்னும் பொருள் தருவதால் டாக்டர் இராதாகிருட்டிணன், பிக்கு சோமானந்தர் போன்றோர் கொல்லுதல் என்னும் பொருளிலேயே மொழிபெயர்த்துள்ளனர்.

மேற்கோள்

தன்னுயிர்க் கின்னாமை தானறிவான் என்கொலோ
மன்னுயிர்க் கின்னா செயல். *(குறள்: 318)*

2. Sabbe tasanti daṇḍassa
sabbesaṁ jīvitaṁ piyaṁ
Attānaṁ upamaṁ katvā
na haneyya na ghātaye. (130)

**மொழிபெயர்ப்பு**

அனைவரும் தண்டனைக்கு அஞ்சுகின்றனர். அனைவர்க்கும் வாழ்க்கை இனிமையானதே. எனவே ஒருவர் தன்னைப் போலவே பிறரையும் கருதி யாரையும் கொல்லாமலும் கொல்லத் தூண்டாமலும் இருப்பாராக.

*சூழல்*

ஆறு பிக்குகள் கொண்ட குழுவினர் பதினாறு பிக்குகள் கொண்ட குழுவினர் ஆகிய இரு குழுவினரிடையே ஏற்பட்ட சண்டையைத் தொடர்ந்து பதினாறு பிக்குகள் கொண்ட குழுவினர் மற்றவரைத் தாக்கத் திட்டமிட்டனர். இதை அறிந்த புத்தர் பிறர்க்குத் தீங்கிழைப்பதன் கேட்டினை எடுத்துரைத்து இப்பாடலைக் கூறினார்.

மேற்கோள்

நல்லா றெனப்படுவ தியாதெனின் யாதொன்றும்
கொல்லாமை சூழும் நெறி. *(குறள்: 324)*

3. Sukhakāmāni bhūtāni
yo daṇḍena vihiṁsati
Attano sukhaṁ esāno
pecca so no labhate sukhaṁ. (131)

மொழிபெயர்ப்பு

தனது இன்பத்தைக் கருதி, இன்பமாக வாழ விரும்பும் பிற உயிர்களைத் தண்டித்துத் துன்புறுத்துவோர் தனது மரணத்திற்குப் பின் இன்பமாக இருப்பதில்லை.

4. Sukhakāmāni bhūtāni
yo daṇḍena na hiṁsati
Attano sukhaṁ esāno
pecca so labhate sukhaṁ. (132)

மொழிபெயர்ப்பு

தனது சொந்த இன்பத்திற்காக இன்பமாக வாழ விரும்பும் பிற உயிர்களைத் தண்டித்துத் துன்புறுத்தாதிருப்போன் தனது மரணத்திற்குப் பின்பும் இன்பமாகவே இருக்கிறான்.

*சூழல்*

ஒரு சமயம் புத்தர் செல்லும் வழியில் சிறுவர்கள் சிலர் ஒரு பாம்பை அடித்துத் துன்புறுத்திக் கொண்டிருந்தனர். அதைக் கண்ட புத்தர் பிற பிக்குகளுக்கும் அக்காட்சியைக் காட்டி இப்பாடல்களைக் கூறினார்.

மேற்கோள்

தன்னூன் பெருக்கற்குத் தான்பிறிதூ னுண்பான்
எங்ஙனம் ஆளும் அருள். *(குறள்: 251)*

பிறர்க்கின்னா முற்பகல் செய்யின் தமக்கின்னா
பிற்பகல் தாமே வரும். *(குறள்: 319)*

5. Mā'voca pharusaṁ kañci
vuttā paṭivadeyyu taṁ
Dukkhā hi sārambhakathā
paṭidaṇḍā phuseyyu taṁ. (133)

மொழிபெயர்ப்பு

யாரிடத்தும் கடுஞ்சொற்கள் பேசாதே. கடுஞ்சொற்களால் பேசியவர் அதே கடுஞ்சொற்களால் திருப்பித் தாக்கப்படுவர்.

கடுஞ்சொற்கள் உண்மையாகவே துன்பம் தருவன. அடிக்கு அடி திருப்பித் தரப்படும்.

6. Sace neresi attānaṁ
kaṁso upahato yathā
Esa patto 'si nibbānaṁ
sārambho te na vijjati. (134)

**மொழிபெயர்ப்பு**

உடைந்த வெண்கல மணி ஓசையற்று இருப்பது போன்று உன்னை நீயே அடக்கி அமைதியாக இருந்தால் நீ நிர்வாண நிலையை அடைந்தவனாவாய். ஏனெனில் வினையாற்றும் நிலை உன்னிடத்தில் இல்லை.[1]

*சூழல்*

சில பிக்குகள் பிக்கு ஒருவரைக் கடுஞ்சொல்லால் பேசினர். பேசப்பட்ட பிக்கு பேசியோரை அதே கடுஞ்சொல்லால் திருப்பிப் பேசினர். இவர்களது இந்தச் சச்சரவைக் கேள்விப்பட்ட புத்தர் அவர்களை அழைத்து அறிவுரை கூறி இப்பாடலைக் கூறினார்.

*விளக்கம்*

1. வினையே பிறப்புக்கு வழி. வினையின்றேல் பிறப்பில்லை. பிறப்பின்றேல் அதுவே நிர்வாணம்.

மேற்கோள்

தீயினால் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே
நாவினால் சுட்ட வடு. *(குறள்: 129)*

7. Yathā daṇḍena gopālo
gāvo pāceti gocaraṁ
Evaṁ jarā ca maccū ca
āyuṁ pācenti pāṇinaṁ. (135)

**மொழிபெயர்ப்பு**

இடையன் தன் கைக்கோலால் பசுக்களை மேய்ச்சல் நிலத்திற்கு விரட்டுகிறான். அது போல முதுமையும் மரணமும் உயிர்களின் ஆயுளை விரட்டுகின்றன.

*சூழல்*

விசாகையின் வீட்டிலிருந்த பல்வேறு வயதினரான பெண்கள் ஒரு நன்னாளைக் கொண்டாடினர். அவர்கள் அந்நாளை மிகுந்த பக்தியுடன் கொண்டாடுவதன் காரணத்தை அவர்களிடம் கேட்டபோது ஒவ்வொருவரும் ஒவ்வொரு காரணத்தைக் கூறினர். அவர்களது பலவேறுபட்ட காரணத்தைக் கேட்ட புத்தர் உலகில் உயிர்களின் நிலையை விளக்கி இப்பாடலைக் கூறினர்.

8. Atha pāpāni kammāni
karaṁ bālo na bujjhati
Sehi kammehi dummedho
aggidaḍḍho' va tappati. (136)

**மொழிபெயர்ப்பு**

ஆனாலும் மூடன் தான் செய்யும் செயலின் பலனை உணராமலேயே தீய செயல்களைச் செய்து கொண்டேயிருக்கிறான். அந்த அறிவற்றவன் தீயால் தன்னைத் தானே எரித்துக் கொள்வது போலத் தன் செயல்களின் விளைவான துன்பமெனும் தீயால் எரிக்கப்படுகிறான்.

*சூழல்*

மொக்கலானர் ஒருசமயம் பாம்பு வடிவில் இருந்த பேய் ஒன்றைக் காண நேரிட்டது. அப்பேய் அவ்வடிவில் இருப்பதற்கான காரணத்தை அறிய விரும்பினார். அது குறித்து அவர் புத்தரிடம் வினவியபோது, அது முற்பிறவியில் செய்த தீவினையின் காரணமாக இப்பிறவியில் பாம்பு வடிவிலுள்ள பேயாகப் பிறந்துள்ளதாகத் தெளிவுபடுத்திப் புத்தர் கூறிய பாடல் இது.

9. Yo daṇḍena adaṇḍesu
appaduṭṭhesu dussati
Dasannaṁ aññataraṁ ṭhānaṁ
khippaṁ eva nigacchati . (137)

**மொழிபெயர்ப்பு**

தீமையற்றவரும் அமைதியானவருமாகிய நல்லவர் ஒருவரைத் தண்டித்துத் துன்புறுத்துகிறவர்கள் பின்வரும் பத்து நிலைகளை அடைவார்கள்.

10. Vedanaṁ pharusaṁ jāniṁ,
sarīrassa ca bhedanaṁ
Garukaṁ vā pi ābādhaṁ
cittakkhepaṁ va pāpuṇe. (138)

11. Rājato vā upassaggaṁ
abbhakkhānaṁ va dāruṇaṁ
Parikkhayaṁ va ñātinaṁ
bhogānaṁ va pabhaṅguraṁ (139)

12. Atha v'assa agārāni
aggi ḍahati pāvako
kāyassa bhedā duppañño
nirayaṁ so papajjati. (140)

**மொழிபெயர்ப்பு**

10. அவர்கள் மன வேதனையையாவது, இழப்பையாவது, உடல் துன்பத்தையாவது, துன்பம் தரும் நோயையாவது, மன மாறாட்டத்தையாவது.

11. அரச தண்டத்தை யாவது, சுடுவது போன்ற பழிச் சொல்லையாவது, சுற்றத்தாரை இழத்தலையாவது, பொருள் அழிவையாவது.

12. தன் வீடு தீப்பற்றி எரிதலையாவது அடைந்து துன்புறுவர். மேலும் அவர்கள் இறந்த பின்பு நரகத்தில் பிறப்பர்.

*சூழல்*

மொக்கலானர் தன் ஆற்றலால் பல உலகங்களுக்கும் சென்று வந்து அங்குத் தான் கண்டறிந்தனவற்றைக் கூறினார். அவர், புத்தரைப் பின்பற்றியவர்களெல்லாம் தேவருலகில் இன்பமாக வாழ்வதாகவும், ஏனைய சமயத்தினர் நரகத்தில் பிறந்து

துன்புறுவதாகவும் கூறினார். இதைக் கேட்ட ஏனைய சமயத்தினர் இவர் மேல் கோபம் கொண்டு இவரைத் தண்டிக்க முற்பட்டனர். இவர் காளசீலாவில் தங்கியிருந்த போது அவரது வீட்டைப் பகைவர்கள் சூழ்ந்து கொண்டனர். அவர் எவ்வாறோ அங்கிருந்துத் தப்பிவிட்டார். இவ்வாறு ஆறுமுறை தப்பியவர் ஏழாவது முறை அவர்களிடம் சிக்கிக் கொண்டார். அவர்கள் அவரை நையப்புடைத்து எலும்புகளை நொறுக்கிப் போட்டு விட்டுச் சென்றுவிட்டனர். அவர் மயக்கம் தெளிந்து எழுந்து ஊர்ந்து கொண்டே புத்தரிடம் வந்து சேர்ந்தார். மொக்கலானரது இந்நிலைக்குக் காரணம் அவர் முற்பிறப்பில் தன் மனைவியின் பேச்சைக் கேட்டுக் கண்ணற்ற தன் பெற்றோரைக் காட்டிற்கு அழைத்துச் சென்று சில கள்வர்களால் தாக்கப்படுவது போன்று தானே அவர்களை அடித்துக் கொன்றார். அவ்வினைப் பயனாக இப்பிறவியில் இத்தகு துன்பம் அவரை வந்தடைந்தது என புத்தர் விளக்கி இப்பாடல்களைக் கூறினார்.

(மொக்கலானர் முற்பிறப்பில் தன் பெற்றோரை அடித்த போது அவர்கள் கள்வர்கள் தம்மைத் தாக்குவதாக நினைத்துக் கதறி அழுது, தன் மகனை ஏதும் செய்யாது விட்டுவிடும் படிக் கேட்டுக் கொண்டதைக் கேட்ட அவர் மனம் நெகிழ்ந்து அவர்களை விட்டு விட்டார் என்றும் ஒரு மரபு உண்டு.)

13. Na naggacariyā na jaṭā na paṅkā
nānāsakā thaṇḍilasāyikā vā
Rajo ca jallaṁ ukkuṭikappadhānaṁ
sodhenti maccaṁ avitiṇṇakaṅkhaṁ. (141)

**மொழிபெயர்ப்பு**

மழித்த தலையுடன் திரிந்தாலும், சடை வளர்த்துத் திரிந்தாலும், அழுக்குடலுடன் இருந்தாலும், பட்டினி கிடந்து நோற்றாலும், வெறும் தரையில் படுத்தாலும், புழுதியிலும் சாம்பலிலும் புரண்டாலும், நின்றபடித் தவம் செய்தாலும், இவை யாவும் தங்கள் ஐயங்களைத் தீர்த்துக் கொள்ளாதவரைத் தூய்மைப்படுத்துவதில்லை.

*சூழல்*

பிக்கு ஒருவர் பல ஆடைகளை ஒரே நேரத்தில் அணிந்திருப்பதைக் கண்ட புத்தர் அவருக்கு அறிவுரை கூற முற்பட்டார். இதனால் கோபமுற்ற அந்த பிக்கு தன் மேலாடைகளைத் தூக்கியெறிந்து விட்டுக் கீழாடையுடன் நின்றார். அவரது அச்செயலைக் கண்டித்த புத்தர் இத்தகைய இவரது நடத்தை இவரது முற்பிறவியிலிருந்து தொடர்கிறது என்றுரைத்து இப்பாடலைக் கூறினார்.

மேற்கோள்

மழித்தலும் நீட்டலும் வேண்டா உலகம்
பழித்தது ஒழித்து விடின். *(குறள்: 280)*

14. Alaṅkato ce' pi samaṁ careyya
santo danto niyato brahmacārī
Sabbesu bhūtesu nidhāya daṇḍaṁ
so brāhmaṇo so sammaṇo sa bhikkhu. (142)

**மொழிபெயர்ப்பு**

அழகிய உடை யுடுத்தியவராக இருப்பினும்[1] அவர் அமைதியும், புலனடக்கமும், மனவடக்கமும் உடையவராய், (நெறிமுறைகளினின்றும் ) வழுவாதவராய் [2] தூய்மையராயும்[3] உயிர்களைத் துன்புறுத்தாமலும் இருப்பாரகில் அவரே பிராமணர்[4] அவரே சமணர்[5] அவரே பிக்கு[6] ஆவார்.

*சூழல்*

அமைச்சர் ஒருவர் ஒருநாள் தனது நாட்டியப் பெண்ணொருத்தி நடனமாடிக் கொண்டிருக்கும் பொழுதே இறந்து வீழ்ந்ததைக் கண்டு, அதனால் ஏற்பட்ட மனத் துயரத்தை மாற்ற புத்தரை நாடிச் சென்றார். யானை மீது ஏறிச் சென்ற அவர் புத்தரின் அறவுரைகளை யானை மீதிருந்தே கேட்டுக் கொண்டிருந்தார். அவ்வுரைகள் அவர் மனத்தைத் தூய்மை செய்து அவர் அரகந்தராகக் காரணமானது. அரகந்தரான அவர் யானை மீதிருந்தபடியே உலகைத் துறந்து நிர்வாணம் எய்தினார். அவருக்கு மரியாதை செய்யும்படி ஏனைய பிக்குகளிடம் புத்தர் கூறிய போது,

அவர்கள் அவ்வமைச்சரைப் புத்தர் சமணர் என்றழைத்தது பொருந்துமா எனக் கேட்டனர். அதற்கு ஒருவரது தூய உயர்நிலை அவர் அணிந்திருக்கும் ஆடையால் இல்லை என்றுரைத்து இப்பாடலைக் கூறினார்.

*விளக்கம்*

1. அழகிய உடையுடுத்தியவர் எனின் துறவு நெறியைத் தழுவாமலும் முனைந்து தவமியற்றாமலும் இருப்பவர் எனப் பொருள்படும்.

2. Nayata என்பது ஞான நெறியின் நான்கு நிலைகளையும் குறிப்பிடுவது. அவை 1. சோதபன்னர் 2. சகதாகாமி 3. அநாகமி 4. அரகந்தர்.

3. பிரம்மச்சரிய நிலையாவது தூய நிலையைக் குறிக்கும்.

4. பிராமண நிலை பிறப்பால் வருவதன்று. ஒருவரது ஒழுக்க நிலையைக் கொண்டு குறிப்பிடப்படுவது. புத்தரே இந்நூலின் இறுதியில் பிராமண இயலில் பிராமணர் எனப்படுவோர் யார் என வரையறுத்துக் கூறுகிறார். மேலும் சுத்த நிபாத என்னும் நூலில் பிராமண தம்மிக சுத்த என்னும் சுத்தத்தில் பிராமணரின் இயல்பினை விளக்குகிறார். சுருங்கக் கூறின் தீமைகளை விலக்கியோர் பிராமணர். அந்தணர் என்போர் அறவோர் என வள்ளுவரும் கூறக் காண்க.

5. Samana - தனது அசுத்தங்களையெல்லாம் கழுவியவர் சமணர் எனப்படுவார். தற்போது தமிழில் மகாவீரரின் கொள்கையினரைச் சமணர் எனக் கூறக் காண்கிறோம். புத்தர் காலத்தில் ஒரு குறிப்பிட்ட சமயத்தைச் சேர்ந்தவரைச் சமணர் என்பதில்லை. மனத்தூய்மையையும் ஒழுக்கத்தையும் குறிக்கும் துறவு நிலையினர் அனைவரும் சமணர் எனப்பட்டனர். தீமைகளை வரவொட்டாமல் தடுத்தவர் சமணர் எனக் குறிப்பிடப்பட்டார்.

6. பிக்கு (Bhikkhu ) ஆசைகளை அழித்தவர் பிக்கு. பௌத்தத்தின் உயரிய கோட்பாடு ஆசையைத் துறத்தல் என்பதாகும். எனவே பௌத்த நெறித் துறவிகள் பிக்கு எனப்பட்டனர். இச்சொல் பௌத்தர்களுக்கே உரிய சொல். தீமைகளை நீக்கியும் தடுத்தும் ஒழித்தும் விட்டவர் பிக்கு எனப்படுவார்.

15. Hirinisedho puriso
koci lokasmiṁ vijjati
Yo nindaṁ appabodhati
asso bhadro kasām iva. (143)

**மொழிபெயர்ப்பு**

(நன்கு பயிற்றுவிக்கப்பட்ட) குதிரை தன்மீது சாட்டையடி விழாதபடி நடந்து கொள்வது போலப் பழி பாவங்களுக்கு அஞ்சி, நிந்தனைக்கு நாணி நல்வழியில் ஒழுகுவோர் வெகுசிலரே.

16. Asso yathā bhadro kasāniviṭṭho
ātāpino saṁvegino bhavātha
Saddhāya sīlena ca viriyena ca
samādhinā dhammavinicchayena ca
Sampannavijjācaraṇā patissatā
pahassatha dukkham idaṁ anappakaṁ. (144)

**மொழிபெயர்ப்பு**

சாட்டையால் அடிபட்ட நல்ல குதிரையைப் போன்று உற்சாகமாகவும் தவறைத் திருத்திக் கொள்பவராகவும் இருக்க வேண்டும். மன உறுதியாலும், அறநெறியை ஆராய்வதனாலும், ஞானம், ஒழுக்கங்களை உடையவராய் இருத்தலானும்[1] விழிப்புணர்வுடன் இருத்தலானும் அளவற்ற துன்பங்களைப் போக்குவாயாக.

*சூழல்*

கந்தைத் துணியும் ஒரு பாத்திரம் மட்டும் தன் சொத்தாகக் கொண்ட ஏழை இளைஞன் ஒருவன் அவற்றை ஒரு மரக் கிளையில்

கட்டித் தொங்கவிட்டு விட்டுத் துறவியானான். அவன் சிலகாலம் பிக்கு சங்கத்தில் இருந்து விட்டுப் பின் அதனின்றும் நீங்கினான். இவ்வாறு பலமுறையும் துறவியாவதும் உலகியலுக்குச் செல்வதுமாக இருந்த அவன் இறுதியில் உலகியலில் தன்னுடைய ஆதரவற்ற நிலையை எண்ணித் துறவு நெறியிலேயே தங்கித் தவமியற்றி விரைவில் ஞான நிலையாம் அரகந்த நிலை எய்தினான். அவனுடைய நிலை குறித்து புத்தர் கூறிய பாடல் இது.

*விளக்கம்*

1. Vijjācaraṇa - ஞானமும் ஒழுக்கமும் உடையவராய் இருத்தல். ஞானம் எண் வகைப்படும். ஒழுக்கம் பதினைந்து வகைப்படும்.

**எண்வகை ஞானமானது**

1. மனத்தை இயக்கல் (iddhividha )
2. நுண்மையான அருளுடைய கேள்விப்புலன் (Dibba -sota)
3. பிறர் மனத்தை அறிதல்(ceto - pariya - ñāna)
4. அருட்காட்சி (Dibba - cakkhu)
5. முற்பிறவியறிவு (Pubbe -nivāsa -nussati)
6. குற்றமற்ற நிலை (Āsavakkhaya )
7. உள்ளொளி (Vipassanā)
8. உருவெளித் தோற்றம் ஏற்படுத்தும் சக்தி (Manomayiddhi )

**பதினைந்து வகை ஒழுக்கமாவது.**

1. அறநெறிப்படி நடத்தல்
2. புலனடக்கம்
3. அளவறிந்துண்ணல்

4. உற்சாகமுடன் இருத்தல்
5. நம்பிக்கை
6. பழி நாணல்
7. பழியஞ்சல்
8. ஆழ்ந்த கல்வி
9. ஆற்றலுடையராதல்
10. விழிப்புணர்வுடையராதல்
11. அறிவாற்றலுடன் இருத்தல்
12. 13. 14. 15. - நால்வகை ஞான நிலைகள்.

17. Uddakaṁ hi nayanti nettikā
usukārā namayanti tejanaṁ
Dāruṁ namayanti tacchakā
attānaṁ damayanti subbatā (145)

மொழிபெயர்ப்பு

பாசனக்காரர்கள் நீரைத் தாங்கள் விரும்பிய பக்கம் செலுத்திப் பாய்ச்சுகின்றனர். வில்லாளிகள் அம்புகளை வளைவின்றி நேராகச் செய்கின்றனர். தச்சர்கள் மரங்களைத் தங்கள் தேவைக்கேற்ப வளைக்கின்றனர். சான்றோர்கள் தம்மைத் தாமே அடக்கியாள்கின்றனர்[1].

*சூழல்*

செல்வக் குடியில் பிறந்த சிறுவன் ஒருவன் பௌத்தம் தழுவித் துறவியானான். ஒருநாள் அவன் தன் ஆசானுடன் பிச்சைக்குச் சென்றான். செல்லும் வழியில் நீர்ப்பாசனத் துறையையும் வில்லாளியையும் தச்சனையும் கண்டான். அவர்கள் அறிவற்ற பொருள்களைத் தங்கள் விருப்பப்படிச் செலுத்தும் தன்மையைக் கண்டு ஆற்றலுடைய மனிதன் தன் மனத்தைக் கட்டுப்படுத்துவது பற்றிச் சிந்தித்துத் தவமியற்றினான். விரைவில் அவன் ஞானம் பெற்று அரகந்தரானான். இவனது இந்த நன்னிலை குறித்து புத்தர் கூறிய பாடல் இது.

*விளக்கம்*

1. பார்க்க தம்மபதம் பாடல் 80. இப்பாடல் இறுதிச் சொல்லில் மட்டும் மாற்றத்துடன் 80 ஆவது பாடலாக இருப்பதைக் காணலாம்.

## 11. JARĀ VAGGA

11. மூப்பியல்

1. Ko nu hāso kimānando
niccaṁ pajjalite sati
Andhakārena onaddhā
padīpaṁ na gavessatha. (146)

**மொழிபெயர்ப்பு**

பற்றி எரிந்து கொண்டிருக்கும் இவ்வுலகில் சிரிப்பிற்கும் களிப்பிற்கும் என்ன இருக்கிறது. இருளினால் சூழப்பட்ட நீ ஏன் ஒளியை நாடக்கூடாது.

*சூழல்*

ஒருமுறை விசாகை புத்தரைக் காணவந்து கொண்டிருந்தாள். அவளுடன் வந்து கொண்டிருந்த பெண்களில் சிலர் அவளுக்குத் தெரியாமல் மது அருந்தியிருந்தனர். புத்தரின் திருமுன்பு அப்பெண்கள் மது மயக்கத்தால் சிறிதும் மரியாதையோ அடக்கமோ இன்றி எழுந்து நடனமாடத் தொடங்கினர். அவர்களது மது மயக்கத்தைக் கண்ட புத்தர் தனது பேராற்றலால் அவர்களை ஒரு பேரிருளில் ஆழ்த்தி அதன் மூலம் அவர்களைத் தன்னிலைக்குக் கொண்டு வந்தார். அவர்கள் தன் நிலையை அடைந்த பின்னர் புத்தர் இப்பாடலைப் பகர்ந்தார்.

*விளக்கம்*

1. பற்றி எரியும் நெருப்பு வேட்கை. ஆசையின் மூல காரணம் அறியாமை. அறியாமை என்னும் இருள் நிலை காரணமாகச் செயல் தோன்றும். செயலின் சார்பாய் உணர்ச்சியும் உணர்ச்சியின் சார்பாய் அருவுருவும் அருவுருவின் சார்பாய் வாயிலும் வாயில் சார்பாய் ஊறும்

ஊறு சார்ந்து நுகர்ச்சியும் நுகர்வின் சார்பாய் வேட்கையும் வேட்கையின் சார்பாகப் பற்றும் பற்று சார்பாகக் கருமத் தொகுதியும் கருமத் தொகுதி காரணமாகத் தோற்றமும் தோற்றம் சார்பாக மூப்புப் பிணி சாக்காடு அவலம் அரற்று கவலை கையாறு எனத் துன்ப வெள்ளம் பெருகி ஓடும். எனவே புத்தர் வேட்கை என்னும் நெருப்புப் பற்றி எரியும் பொழுது அறியாமை என்னும் இருள் சூழ்ந்துள்ளதாகக் கூறி அவ்விருளினின்றும் பேரறிவாம் ஒளி நாடிச் செல்லச் சொல்கிறார்.

2. Passa cittakataṁ bimbaṁ
 arukāyaṁ samussitaṁ
Āturaṁ bahusaṅkappaṁ
 yassa natthi dhuvaṁ ṭhiti (147)

**மொழிபெயர்ப்பு**

அலங்கரிக்கப்பட்ட தோற்றத்தையுடையதும், (முழுதும்) புண்ணானதும், எலும்புகளால் குவிக்கப்பட்டதும், நோயுள்ளதும், கணக்கிலடங்கா எண்ணங்களைக் கொண்டதும்[1], நிலையற்றதும், உறுதியற்றதுமான இந்த உடலைப்பார்.

*சூழல்*

இளம் பிக்கு ஒருவர் சிரிமா என்னும் பரத்தையைக் கண்டு அவள் மீது காதல் கொண்டார். ஆனால் அவள் எதிர்பாராத விதமாக மரணமடைந்தாள். இறந்த அவளது உடலைப் பாதுகாத்து வைத்திருக்க வேண்டுமென அந்நாட்டு மன்னன் கட்டளையிட்டான். ஆனால் அப்பிணத்தைக் காக்க யாரும் முன்வரவில்லை. அழிந்து அழுகி நாற்றமுடையதும் புழுக்கள் நிறைந்ததும் வெடித்ததுமான அந்த உடலை இளம் பிக்குவிற்கும் ஏனைப்பிக்குகளுக்கும் காட்டி இந்த உடலின் நிலையற்ற சீர்கேடான தன்மையை எடுத்துரைத்து இப்பாடலைக் கூறினார் புத்தர்.

*விளக்கம்*

1. மனத்தில் எழக் கூடிய எண்ணற்ற சிந்தனை அமைதியற்ற நிலையை ஏற்படுத்தி மோன நிலையாம் ஞான நிலையை அடைவதைத் தடுக்குமாகலின் பரந்து பட்ட

எண்ணங்கள் நிர்வாணம் வேண்டும் மனிதனுக்குத் தீங்கானதாகும்.

மேற்கோள்

குடரும் கொழுவும் குருதியும் என்பும்
தொடரும் நரம்பொடு தோலும் - இடையிடையே
வைத்த தடியும் வழும்பு மாம் மற்றிவற்றுள்
எத்திறத்தாள் ஈர்ங்கோதை யாள். - (நாலடியார் 46)

3. Parijiṇṇaṁ idaṁ rūpaṁ
roganiḍḍhaṁ pabhaṅguraṁ
Bhijjati pūtisandeho
maraṇantaṁ hi jīvitaṁ. (148)

**மொழிபெயர்ப்பு**

களைத்துத் தேய்ந்து போகும் தன்மையுடைய இவ்வுடல் நோய்களின் கூடு, அழியும் தன்மையது, அழுகிய இவ்வுடல் உடைந்து மறைந்து போகும். மனித வாழ்வு மரணத்தில் முடிவடையும்.

*சூழல்*

வயது முதிர்ந்த பெண் துறவி ஒருத்தி நடந்து வரும்பொழுது தள்ளாடித் தடுமாறிக் கீழே வீழ்ந்து விட்டாள். அதைக் கண்ட புத்தர் பிறருக்குக் கூறிய பாடலாகும் இது.

4. Yān'imāni apatthāni
alāpūn' eva sārade
Kāpotakāni aṭṭhīni
tāni disvāna kā rati. (149)

**மொழிபெயர்ப்பு**

புறாக்களைப் போன்று வெளுத்த இவ்வெலும்புகள் கூதிர் காலத்தில் வெளியே எறியப்படும் சுரைக்காய்களைப் போன்றன. இவற்றைப் பார்ப்பதில் என்ன மகிழ்ச்சி இருக்கிறது.

*சூழல்*

பிக்குகள் சிலர் தவநெறி மேற்கொண்டு தனியாகத் தவமியற்றச் சென்றனர். அவர்கள் தாங்கள் தவமியற்றுவதற்குத் தகுதியான இடமாக மயானத்தைத் தேர்ந்தெடுத்தனர். மயானத்தில் இருந்தால் இவ்வுலகின் நிலையாமை பற்றிய எண்ணம் உறுதிப்படும். அது தவத்திற்குப் பெருந்துணையாகும் எனக் கருதி மயானத்திற்குத் தவமியற்றச் சென்றனர். ஆனால் அங்கு அவர்கள் அமர்ந்த போது பற்றற்ற எண்ணம் தோன்றுவதற்குப் பதிலாக வேட்கை மிகுந்தது. இது பற்றி புத்தர் விளக்கும் பொழுது கூறிய பாடல் இது.

5. Aṭṭhīnaṁ nagaraṁ kataṁ
maṁsalohitalepanaṁ
Yattha jarā ca maccū ca
māno makkho ca ohito. (150)

**மொழிபெயர்ப்பு**

எலும்புகளால் கட்டப்பட்டு தசைகளும் குருதியும் கலந்த சாந்தால் பூசப்பட்டது (இவ்வுடலாகிய ) நகரம் , இதனுள் மூப்பும், சாக்காடும், அகந்தையும், வஞ்சகமும் நிறைந்துள்ளது.[1]

*சூழல்*

அழகிய பெண்ணொருத்தி துறவு மேற்கொண்டும் புத்தரிடத்து முழு நம்பிக்கையில்லாது இருந்தாள். புத்தர் தன்னைக் கண்டால் தன் அழகைப் பழித்துப் பேசுவார் என்ற எண்ணத்தில் அவள் புத்தரைச் சென்று காண்பதைத் தவிர்த்து வந்தாள். ஒரு நாள் அவள் பிற பெண்களுடன் புத்தர் அறவுரையாற்றும் அவைக்கு வந்தாள். அவளது மனநிலையை அறிந்த புத்தர் அவளுக்கு நிலையாமையை உணர்த்த விரும்பினார். அவள் அவைக்குள் நுழையும் பொழுது அழகிய பெண்ணொருத்தி தனக்கு விசிறிக் கொண்டிருப்பது போன்ற ஒரு பொய்த் தோற்றத்தை அவளுக்குக் காட்டிப் பின்னர் அப்பெண்ணின் அழகு குறைந்து முதுமையடைந்து மரணமடையும் பொழுது ஏற்படும் அழிவினையும் காட்டினார். இதைக் கண்ட அவள் நிலையாமை உண்மையை உணர்ந்து கொண்டாள். அப்பொழுது புத்தர் கூறிய பாடல் இது.

*விளக்கம்*

1. இவ்வுடல் எலும்புகளால் கட்டப்பட்ட மாளிகை என்பதைக் குறிக்கும் வகையில் விசுத்தி மக்க (Visuddhi Magga) என்னும் நூலில் ஒரு நிகழ்ச்சி குறிப்பிடப்பட்டுள்ளது. "திஸ்ஸ தேரர் ஒரு சமயம் அனுராதபுரத்திற்கு அருகில் நடந்து கொண்டே நிலையா வாழ்க்கையைக் குறித்துச் சிந்தித்துக் கொண்டிருந்தார். அப்பொழுது கணவனுடன் சண்டையிட்டுக் கொண்டு அப்பக்கமாக வந்த பெண்ணொருத்தி இவரைக் கண்டு, தளுக்கிக் குலுக்கிக் கொண்டு அவரெதிரே வந்து பல்லைக் காட்டி நகைத்தபடி சென்றாள். பின்னர் அவளைத் தேடிக் கொண்டு வந்த அவள் கணவன் அப்பக்கமாகப் பெண்ணொருத்தி சென்றாளோ என வினவ 'நான் ஒரு எலும்புக் கூட்டை மட்டும் பார்த்தேன். அது ஆணா பெண்ணா என எனக்குத் தெரியாது' என அவர் பதிலிருத்தார்". மனித உடலைக் கள்ளப் புலக் குரம்பை என மாணிக்க வாசகரும் குறிப்பிடுகிறார்.

மேற்கோள்

குடரும் கொழுவும் குருதியும் என்பும்
தொடரும் நரம்பொடு தோலும் - இடையிடையே
வைத்த தடியும் வழும்புமாம் மற்றிவற்றுள்
எத்திறத்தாள் ஈர்ங்கோதை யாள். *(நாலடியார்: 46)*

6. Jīranti ve rājarathā sucittā
atho sarīraṁ pi jaraṁ upeti
Sataṁ ca dhammo na jaraṁ upeti
santo have sabbhi pavedayanti. (151)

**மொழிபெயர்ப்பு**

நன்கு அலங்கரிக்கப்பட்ட, மன்னர்களின் தேர்களும் சிதைந்து படுகின்றன. அது போன்று உடலும் முதுமையுறுகின்றது. (ஆனால்) நல்லறம் ஒரு போதும் அழிவதில்லை.அது நல்லோர்க்கு நல்லோரால் கற்பிக்கப்படுகிறது.

*சூழல்*

அறநெறிப்பட்ட ஒழுக்கை வாழ்ந்த மல்லிகா என்னும் அரசி இறந்து விட்டாள். அவளது இறப்பிற்குப் பின் புத்தர்

அரண்மனைக்குச் சென்றார். மன்னன் புத்தரை வரவேற்று உபசரித்துப் போற்றினான். இறுதியில் இறந்த மல்லிகா மறு பிறவியில் எப்படிப் பிறந்துள்ளான் என அறிய விரும்பினான் மன்னன். புத்தர் அவனுக்கு அவளது மறுபிறப்பு பற்றிக் கூறிவிட்டு வெளியே வரும் பொழுது சிதைந்து கிடந்த தேரைக் கண்டு அது போன்றதே இவ்வுடல் என்றுரைத்து இப்பாடலைக் கூறினார் புத்தர்.

7. Appassutā yaṁ puriso
balivaddo' va jīrati
Maṁsāni tassa vaḍḍhanti
Paññā tassa na vaḍḍhati. (152)

**மொழிபெயர்ப்பு**

கல்வியறிவற்றவன் உழவு மாட்டைப் போன்று வளர்ந்து முதுமையடைகிறான். அத்தகையோனது உடல் வளர்கிறது. ஆனால் அறிவு வளர்வதில்லை.

*சூழல்*

துறவி ஒருவர் தகுதியற்ற சொற்களையே எப்பொழுதும் பேசி வந்தார். அவரைப் பற்றி புத்தரிடம் கூறிய போது புத்தர் அவரை அழைத்துக் கண்டித்து அறிவுரை கூறும் வகையில் இப்பாடலைக் கூறினார்.

மேற்கோள்

கண்ணுடையார் என்பார் கற்றார் முகத்திரண்டு
புண்ணுடையார் கல்லா தவர். *(குறள்: 393)*

8. Anekajāti saṁsāraṁ
sandhāvissaṁ anibbisaṁ
Gahakārakaṁ gavesanto
dukkhā jāti punappunaṁ. (153)

**மொழிபெயர்ப்பு**

பல பிறவிகள் பிறந்து இந்த வீட்டைக் (உடலைக்) கட்டியவனைத் தேடித் தேடிக் காணவில்லை. மீண்டும் மீண்டும் பிறப்பது பெருந்துன்பமானது.

9. Gahakāraka diṭṭho' si
puna gehaṁ na kāhasi
Sabbā te phāsukā bhaggā
gahakūṭaṁ visaṅkhitaṁ
Visaṅkhāragataṁ cittaṁ
taṇhānaṁ khāyaṁ ajjhagā. (154)

**மொழிபெயர்ப்பு**

ஓ! வீட்டைக் கட்டியவனே உன்னை நான் கண்டு கொண்டேன். மீண்டும் நீ வீட்டைக் கட்டாதே. உன் வீட்டில் (இவ்வுடலின்) மரச்சட்டங்கள் முறிந்தன. உத்தரங்கள் தகர்ந்தன. என் மனம் கட்டுகளினின்றும் விடுபட்டது, வேட்கை அழிந்தது[1].

*சூழல்*

புத்தர் ஞானம் பெற்றவுடன் இவ்விரு பாடல்களும் சொல்லப்பட்டன. இப்பாடல்கள் வேறு திரிபிடக நூல்கள் எதிலும் காணப்படவில்லை. புத்தரிடமிருந்து நேரடியாகக் கேட்ட ஆனந்தர் சொல்ல இவை இங்குச் சேர்க்கப்பட்டன.

*விளக்கம்*

1 புத்தர் மீண்டும் மீண்டும் பல பிறவிகள் பிறந்து வந்ததைப் புத்த சாதகக் கதைகள் மூலம் அறியலாம். பல பிறவிகளிலும் பிறவியின் காரணத்தைத் தேடியும் புலப்படாமல் இறுதியில் இப்பிறவியில் அவர் பிறவிக்குக் காரணமான வேட்கை தனக்குள்ளேயே இருப்பதைக் கண்டு கொண்டார், வேட்கை நீங்கின் பிறவியில்லை என்பதைக் கண்டறிந்தார்.

| | | | |
|---|---|---|---|
| பேதமை | மீளச் | செய்கை | மீளும் |
| செய்கை | மீள | உணர்ச்சி | மீளும் |
| உணர்ச்சி | மீள | அருவுரு | மீளும் |
| அருவுரு | மீள | வாயின் | மீளும் |
| வாயின் | மீள | ஊறு | மீளும் |
| ஊறு | மீள | நுகர்ச்சி | மீளும் |

நுகர்ச்சி மீள வேட்கை மீளும்
வேட்கை மீள பற்று மீளும்
பற்று மீள கருமத் தொகுதி
மீளும் கருமத் தொகுதி மீளத்
தோற்றம் மீளும் தோற்றம் மீளப்
பிறப்பு மீளும் பிறப்பு பிணி மூப்புச்
சாக்காடு அவலம் மரற்றுக் கவலை
கையா றென்றிக் கடையில் துன்பம்
எல்லாம் மீளும். . . . . .

(மணிமேகலை 30 : 119 - 133)

இவ்வாறு சார்பில் தோன்றி மீட்சியில் முடியும் விதத்தைப் புத்தர் ஞானம் பெற்றவுடன் அறிந்துணர்ந்ததாக மகா வக்க (Mahāvagga) என்னும் நூல் கூறுகிறது. (சார்பில் தோன்றும் வகையினைப பாடல் 146 இன் விளக்கத்தில் காண்க.)

மேறகோள்

வேற்று விகார விடக்குடம்பி னுட்கிடப்ப
ஆற்றேனெம் மையா அரனே (திருவாசகம் : சிவபுராணம்)

10. Acaritvā brahmacariyaṁ
aladdhā yobbane dhanaṁ
Jiṇṇākoñcā' va jhāyanti
khīṇamacche' va pallale. (155)

**மொழிபெயர்ப்பு**

இளமையில் தூய வாழ்க்கை வாழாமலும், இளமையில் செல்வம் சேர்க்காமலும் உள்ளவன் மீன் இல்லாத குளத்தில் இரை தேடும் கிழட்டுக் கொக்கு போன்று ஏங்கித் திரிவான்.

11. Acaritvā brahamcariyaṁ
aladdhā yobbane dhanaṁ
Senti cāpatikhīṇā' va
purāṇāni anutthunaṁ. (156)

மொழிபெயர்ப்பு

இளமையில் தூய வாழ்க்கை வாழாமலும், இளமையில் செல்வம் சேர்க்காமலும் உள்ளவன் சிதைந்த வில்லைப் போன்று கடந்த காலத்தை எண்ணி ஏக்கம் கொள்வான்.

*சூழல்*

பெருஞ்செல்வனின் மகன் இளமையில் ஏற்பட்ட தீ நட்புக் காரணமாகத் தன்னுடைய பெருஞ்செல்வத்தையும் தொலைத்து விட்டு வறுமையை அடைந்தான். அவனுடைய அத்துயர் நிலை குறித்துப் புத்தர் இவ்விரு பாடல்களையும் கூறினார்.

---

## 12. ATTA VAGGA

### 12. ஆன்ம இயல்[1]

1. Attānaṁ ce piyaṁ jaññā
rakkheyya naṁ surakkhitaṁ
Tiṇṇaṁ aññataraṁ yāmaṁ
paṭijaggeyya paṇḍito. (157)

**மொழிபெயர்ப்பு**

தம்மைத் தாமே நேசிக்கிறவர்கள் தம்மைத் தாமே காத்துக் கொள்ளக் கடவர். அறிஞர்கள் மூன்று யாமத்தும் தம்மைத் தாமே காத்துக் கொள்ள[2] வேண்டும்.

*சூழல்*

ஓர் அரச குலத் தம்பதியருக்குக் குழந்தைச் செல்வம் இல்லை. தங்கள் குறையை அவர்கள் புத்தரிடம் சொல்லித் தங்கள் குறை தீரும் வழியைக் கூற வேண்டினர். அவர்களது குழந்தையில்லா நிலைக்கு அவர்கள் முற்பிறவியில் பிற உயிர்களுக்குத் தீங்கு செய்து வாழ்ந்தமையும், விழிப்புணர்வின்றி அசட்டை மனப்பான்மையுடன் வாழ்ந்தமையும் தான் காரணம் எனக் கூறி விழிப்புணர்வுடன் வாழ அறிவுறுத்திக் கூறிய பாடல் இது.

*விளக்கம்*

1. பௌத்தர்கள் கோட்பாட்டின்படி ஆன்மா என ஒன்றில்லை. Atta என்னும் சொல் 'தான்', 'நான்' என்னும் சொல்லின் பொருளுக்கிணையான சொல். ஈண்டு Atta என்னும் சொல் வினைகளைச் செய்து பயனை அனுபவிக்கும் பொருளைக் குறிக்க வந்தது. அப்பொருள் பற்றி அஃது ஆன்மா என மொழிபெயர்க்கப் பட்டது.

2 தன்னைத் தானே காத்துக் கொள்வது என்பது விளக்கம் 1 - இல் குறிப்பிடும் ஆன்மாவைக் காத்துக் கொள்வதாகும்.

மேற்கோள்

தன்னைத்தான் காதல னாயின் எனைத்தொன்றும்
துன்னற்க தீவினைப் பால். *(குறள் : 209)*

2. Attānameva paṭhamaṁ
patirūpe nivesaye
Ath' aññaṁ anusāseyya
na kilisseyya paṇḍito. (158)

மொழிபெயர்ப்பு

ஒருவன் முதலில் தன்னைத் தானே நெறியில் நிறுத்திக் கொள்ள வேண்டும். பின்னரே மற்றவர்களுக்கு உபதேசிக்க வேண்டும். அத்தகு அறிஞன் பிறரால் பழிக்கப்படுவதில்லை.

சூழல்

நன்கு கற்ற பிக்கு ஒருவர் தான் கற்றதைப் பிறருக்கு உபதேசித்து வந்தார். அவர் ஒவ்வொரு ஊருக்கும் ஒவ்வொரு விகாரத்திற்கும் சென்று தனது அறவுரைகளை நிகழ்த்தி வந்தார். அச்சமயங்களில் அவர் பேராசையுடன் அங்குக் கொடுக்கும் பரிசுகளைச் சேகரித்து வந்தார். ஒரு நாள் இரு இளம் துறவிகள் இரு ஆடைகளையும் ஒரு கம்பளிப் போர்வையும் சமமாகத் தங்களுக்குள் பங்கிட்டுக் கொள்ள இயலாமல் சண்டையிட்டுக் கொண்டிருந்தனர். அங்குச் சென்ற பேராசைக்கார பிக்கு அவர்களுக்குள்ள வழக்கைத் தீர்த்து வைப்பதாகக் கூறி இரண்டு ஆடைகளை ஆளுக்கு ஒன்றாகக் கொடுத்து விட்டுப் போர்வையைத் தானே வைத்துக் கொண்டார். இது குறித்து அவர்கள் இருவரும் புத்தரிடம் முறையிட்டனர். அச்சமயம் புத்தர் அந்தப் பிக்குவிற்கு அறிவுரை கூறும் வகையில் கூறிய பாடல் இது.

3. Attānaṁ ce tathā kayirā
yathaññamanusāsati
Sudanto vata dammetha
attā hi kira duddamo. (159)

மொழிபெயர்ப்பு

பிறருக்கு உபதேசிப்பவர் முதலில் தான் அதன்படி நடக்கக் கடவர். முதலில் தன்னை முழுதும் நன்னெறியில் நிலை நிறுத்திக் கொண்டு பின்னரே அடுத்தவரை நிலை நிறுத்த வேண்டும். ஏனெனில் ஒருவன் தன்னை நிலை நிறுத்துவது மிகவும் கடினம்.

*சூழல்*

ஒரு பிக்கு தியானம் செய்யும் பொழுது மிகவும் கவனமாகவும் கருத்துடனும் அசட்டையின்றியும் இருக்க வேண்டும் எனப் பிறர்க்கு அறிவுறுத்தினார். ஆனால் தான் மட்டும் அவ்வாறின்றித் தான் நினைத்த நேரத்தில் தூங்குவது போன்ற செயல்களைச் செய்து கொண்டிருந்தார். அவரைத் திருத்தும் வகையில் புத்தர் கூறிய பாடல் இது.

4. Attā hi attano nātho
ko hi nātho paro siyā
Attanā'va sudantena
nāthaṁ labhati dullabhaṁ. (160)

மொழிபெயர்ப்பு

தனக்குத் தானே ஒருவன் தலைவனாகிறான். அவனுக்கு வேறு யார் தலைவனாக முடியும். ஒருவன் தன்னைத்தானே அடக்கியாளக் கற்றுக்கொண்டால் அவன் பெறற்கரிய தலைவனைப் பெற்றவனாகிறான்.

*சூழல்*

பெண்ணொருத்தி கருவுற்ற பின் துறவியாகி ஓர் ஆண்மகனைப் பெற்றெடுத்தாள். அந்தக் குழந்தையை மன்னன் எடுத்து வளர்த்து வந்தான். அக்குழந்தை வளர்ந்து இளமைப் பருவம் எய்தியது. அவ்விளைஞன் துறவு பூண்டுத் தவமியற்றி அரகந்தனானான். ஆனால் அத் தாய்க்குத் தன் மகன் மேலுள்ள பாசத்தை நீக்க இயலவில்லை. ஒரு நாள் தன் மகன் பிச்சைக்குச் சென்று கொண்டிருந்த போது எதிரே சந்தித்த தாய்த் துறவி அவனைப் பாசத்துடன் அணுகினாள். ஆனால் அம்மகனோ அவளது பாசத்தைக் கவனித்தாகக் காட்டிக் கொள்ளவில்லை.

இதனால் அதிர்ச்சியுற்ற தாய் தன் பாசத்தை உதறிவிட்டு விரைவில் ஞானம் எய்தினாள். அவளுடைய சிறந்த மனமாற்றத்தை அறிந்த புத்தர் கூறிய பாடல் இது.

5. Attanā'va kataṁ pāpaṁ
attajaṁ attasambhavaṁ
Abhimanthati dummedhaṁ
vajiram'va'smamayaṁ maṇiṁ. (161)

மொழிபெயர்ப்பு

ஒருவனது பாவம் அவனுள் தோன்றி அவனாலேயே செய்யப்படுகிறது. கடினமான மணிகளை வைரம் அறுப்பது போன்று மூடர்களை அவர்களது பாவம் அறுக்கிறது.

*சூழல்*

இல்லறத்தான் ஒருவன் இரவு முழுதும் நல்லறவுரைகளைக் கேட்டுக் கொண்டிருந்து விட்டு அதிகாலையில் ஒரு குளத்திற்குச் சென்று அதில் கை கால் முகம் கழுவிக் கொண்டிருந்தான். அப்பொழுது திருடன் ஒருவன் தன்னைத் துரத்திக் கொண்டு வருவோரிடமிருந்து தப்புவதற்குத் தன்னிடமுள்ள திருட்டுப் பொருளை அவனருகில் போட்டுவிட்டு ஓடிவிட்டான். திருடனைத் துரத்திக் கொண்டு வந்தவர்கள் இவனைத் திருடன் எனக் கருதி அடித்துக் கொன்றனர். இதைக் கேள்விப்பட்ட புத்தர், உண்மையில் அப்பொருளை அவன் திருடவில்லை. எனினும் முற்பிறவியில் அவன் செய்த வினைப் பயனாக இப்பிறவியில் அவனுக்கு இத்துன்பம் வந்தது என்று விளக்கி இப்பாடலைக் கூறினார்.

மேற்கோள்

தீதும் நன்றும் பிறர்தர வாரா *(புறநானூறு: 92)*

எனைப்பகை உற்றாரும் உய்வர் வினைப்பகை
வீயாது பின்சென் றடும். (குறள் 207)

6. Yassa accantadussīlyaṁ
māluvā sālamiv'otataṁ
Karoti so tatha'ttānaṁ
yathā naṁ icchati diso. (162)

**மொழிபெயர்ப்பு**

ஒருவனுடைய தொடர்ந்த தீய செயல்கள் சாலமரத்தில்[1] மாலுவாக் கொடி படர்ந்தது போன்று அவன் மீது படிகிறது. அவனுடைய பகைவர்கள் அவனுக்குச் செய்யும் தீமைகளை அவனே செய்து கொள்கிறார்கள்.

*சூழல்*

தேவதத்தன் புத்தரைக் கொல்லப் பலவகையிலும் முயன்றான். ஆனால் அவனது முயற்சிகள் அனைத்தும் தோல்வியில் முடிந்தன. அவனுடைய அத்தகு தீய மனப்பான்மை குறித்துப் புத்தர் கூறிய பாடல் இது.

*விளக்கம்*

(1) சாலமரம் என்பது ஆச்சாமரம்.

மேற்கோள்

எனைப்பகை உற்றாரும் உய்வர் வினைப்பகை
வீயாது பின்சென் றடும். *(குறள் : 207)*

7. Sukarāni asādhūni
attano ahitāni ca
Yaṁve hitañ ca sādhuñ ca
taṁ ve paramadukkaraṁ. (163)

**மொழிபெயர்ப்பு**

நலம் பயக்காதனவும் இதமற்றதுமான செயல்களைச் செய்வது எளிது. ஆனால் ஆக்கத்தைத் தருவனவும் இதமானதுமான செயல்களைச் செய்வது மிகமிகக் கடினம்.

*சூழல்*

புத்தரைக் கொன்றுவிட்டுத் தானே புத்த சங்கத்திற்குத் தலைவனாக முயன்ற முயற்சி தோல்வியடைந்த பின் தேவதத்தன் புத்த சங்கத்தை இரண்டாக உடைத்து ஒரு பிரிவிற்குத் தானே தலைவனாகத் திட்டமிட்டான். இதையறிந்த புத்தர் கூறிய பாடல் இது.

8. Yo sāsanaṁ arahataṁ
ariyānaṁ dhammajīvinaṁ
Paṭikkosati dummedho
diṭṭhiṁ nissāya pāpikaṁ
Phalāni kaṭṭhakass'eva
attaghaññāya phallati. (164)

**மொழிபெயர்ப்பு**

அறிவிலிகள் மூடக் கொள்கையினராகலின் ஞானியரும், உயர்ந்தோரும், அறநெறிப்பட்ட வாழ்க்கையினருமான சான்றோர்களது அறிவுரைகளைப் பழிக்கின்றனர். அவர்கள் கட்டகப் பூண்டு தன் கனியாலேயே தன் முடிவைத் தேடிக் கொள்வது போன்று தன்னைத்தானே அழித்துக் கொள்கின்றனர்.

*சூழல்*

பொறாமை கொண்ட பிக்கு ஒருவன் தன்னை ஆதரிக்கும் பெண்ணிடம் புத்தரின் அறவுரைகளைக் கேட்பதைத் தவிர்க்கும்படி கூறிக் கொண்டிருந்தான். ஆனால் அவரது அச்செயலுக்கு மாறாக அப்பெண் புத்தரின் அறவுரைக் கூட்டத்திற்குச் சென்றாள். அவள் புத்தரிடம் சென்றதை அறிந்த அவன் உடனே புத்தரிடம் சென்று அவரது வழிபாட்டு முறைகள் அறம் மற்றும் ஒழுக்கம் பற்றிய உபதேசங்களில் சில மாற்றங்கள் தேவை எனக் கருத்துத் தெரிவித்தான். அப்பிக்குவின் தீய எண்ணத்தைத் தெரிந்து கொண்டு புத்தர் கூறிய பாடல் இது.

மேற்கோள்

எரியால் சுடப்படினும் உய்வுண்டாம் உய்யார்
பெரியாரைப் பிழைத்தொழுகு வார். *(குறள் : 896)*

9. Attanā' va katam pāpaṁ
attanā' samkilissati
Attanā akataṁ pāpaṁ
attanā' va visujjhati
Suddhi asuddhi paccattaṁ
n'añño aññaṁ visodhaye. (165)

**மொழிபெயர்ப்பு**

பாபம் உன்னாலேயே செய்யப்படுகிறது. அது உன்னை அசுத்தப்படுத்துகிறது. பாபம் செய்வது உன்னாலேயே தவிர்க்கப்படுகிறது. அது உன்னைத் தூய்மைப்படுத்துகிறது. தூய்மையும் அசுத்தமும் உன்னாலேயே ஆகிறது. ஒருவரை மற்றொருவர் தூய்மை செய்ய இயலாது.

*சூழல்*

இல்வறத்தான் ஒருவன் இரவு முழுவதும் புத்தரின் அறவுரைகளைக் கேட்டுக் கொண்டிருந்துவிட்டுக் காலையில் ஒரு குளத்தில் இறங்கி முகம் கழுவிக் கொண்டிருந்தான். அப்பொழுது பொதுமக்களால் துரத்திவரப்பட்ட திருடன் ஒருவன் அவர்களிடமிருந்து தன்னைக் காத்துக் கொள்ளத் தன்னிடமிருந்த திருட்டுப் பொருளை இவனருகே போட்டுவிட்டு ஓடிவிட்டான். திருடனைத் தொடர்ந்து வந்தவர்கள் இவனையே திருடன் எனக் கருதித் துன்புறுத்தினர். அப்பொழுது அப்பக்கமாக வந்த கணிகையர் சிலர் அவனைக் காப்பாற்றினர். இதனைக் கேள்விப்பட்ட புத்தர் கூறிய பாடல் இது.

10. Attadattaṁ paratthena
bahunā' pi na hāpaye
Attadatthaṁ abhiññāya
sadattha pasuto siyā. (166)

**மொழிபெயர்ப்பு**

பிறருடைய நலனுக்காக - அவர்கள் எவ்வளவு பெரியவர்களாக இருப்பினும் - தன்னுடைய சொந்த நலனை[1] இழக்கத் துணியக் கூடாது. தன்னுடைய சொந்த நலன் எதுவென நன்கு தெரிந்து கொண்டபின் அதிலேயே கருத்துடன் இருந்து முயல்தல் வேண்டும்.

*சூழல்*

இன்னும் மூன்று மாதங்களுக்குள் புத்தர் நிர்வாணம் அடையவிருக்கிறார் என்பதை அறிந்தவுடன் நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் பிக்குகள் வந்து புத்தரைக் கண்டு வணங்கினர்.

ஆனால் அத்தத்தா என்னும் பிக்கு மட்டும் அவ்வாறு செய்யாமல் தனியறையில் சென்று தவமியற்றத் தொடங்கினார். இவரது இச்செயல் குறித்துப் பிறர் புத்தரிடம் சென்று முறையிட்டனர். இது குறித்துப் புத்தர் அந்தப் பிக்குவை அழைத்து விசாரித்த போது பகவானே, தாங்கள் இன்னும் மூன்று மாதங்களுக்குள் நிர்வாணம் அடையவிருக்கிறீர்கள். இந்தச் சமயத்தில் தங்களுக்குச் செய்யும் உண்மையான வழிபாடு, தாங்கள் நிர்வாணம் எய்துமுன் நான் ஞானம் அடைவதுதான் என நான் கருதுகிறேன் எனக் கூறினார். அவரது உயரிய கோட்பாட்டினைப் பாராட்டி புத்தர் கூறிய பாடல் இது.

*விளக்கம்*

1 சொந்த நலனாவது நிர்வாணம் அடைதல். இவ்வடிகளைக் கொண்டு சயநலமான வாழ்க்கையை புத்தர் கூறுவதாக தவறான கருத்து (Micchādiṭṭhi) கொள்ளக் கூடாது.

## 13. LOKA VAGGA

### 13. உலகவியல்

1. Hīnaṁ dhammaṁ na seveyya
pamādena na saṁvase
Micchādiṭṭhiṁ na seveyya
na siyā lokavaddhano. (167)

**மொழிபெயர்ப்பு**

தீய செயல்களைச் செய்யாதே[1]. அசட்டையான வாழ்வு வாழாதே. தவறான கண்ணோட்டம் கொள்ளாதே[2]. உலகத் தொடர்பை வளர்த்துக் கொள்பவனாக இராதே[3].

*சூழல்*

இளம் துறவி ஒருவன் தன்னைச் சவரக்காரன் எனப் பிறர் சொல்வதைக் கேட்டு மனம் பெரிதும் துன்புற்றிருந்தான். அவனது மனவாட்டத்தைப் போக்கி அவனை உற்சாகப்படுத்தப் பலர் முயன்றும் அவன் மனம் தேறினானில்லை. இறுதியில் புத்தர் அத்துறவியை அழைத்து நட்புறவுடன் பழகிப் பேசியபின் அவன் மனம் தேறி ஆறுதலடைந்தான். அவனுக்குப் புத்தர் ஆறுதல் கூறும் வகையில் கூறிய பாடல் இது.

*விளக்கம்*

1. தீய செயல்களாவன - புலன் வழி வாழும் வாழ்க்கை.

2. தவறான கொள்கைகளாவன - உலக வாழ்வே நிரந்தரம், அதுவே உண்மை யெனக் கருதி முழுமையாக உலகியல் இன்பங்களில் மூழ்கலும், இவ்வுலகத் தொடர்பு மிகவும் தீமை பயப்பது எனக் கருதித் தம்மைத் தாமே

வருத்திக் கொள்வதுமான இருவகை உச்சநிலைக் கோட்பாடுகள். இவ்விரு கொள்கைகளிலும் செல்லாது சமநிலைக் கோட்பாட்டையே புத்தர் கற்பித்தார்.

3. உலகத் தொடர்பை வளர்த்துக் கொள்ளலாவது மீண்டும் மீண்டும் இவ்வுலகில் வந்து பிறத்தற்கு விரும்புதலும் பிறவிக்கு ஏதுவான செயல்களைச் செய்வதுமாம்.

2. Uttiṭṭhe nappamajjeya
dhammaṁ sucaritaṁ care
Dhammacāri sukhaṁ seti
asmiṁ loke paramhi ca. (168)

**மொழிபெயர்ப்பு**

விழித்தெழுக. அசட்டையாக நிற்காதே. நல்ல நெறியில் உறுதியாகச் செல்க. நல்லற நெறியில் செல்பவர்கள் இவ்வுலகினும் மறுவுலகிலும் இன்பமடைகின்றனர்.

3. Dhammaṁ care sucaritaṁ
na naṁ duccaritaṁ care
Dhammacāri sukhaṁ seti
asmiṁ loke paramhi ca (169)

**மொழிபெயர்ப்பு**

நல்லற நெறிகளில் உறுதியாகச் செல்க. தீய நெறிகளில் செல்லாதே. அற நெறியைக் கைக்கொண்டவன் இவ்வுலகிலும் மறுவுலகிலும் இன்பமடைகிறான்.

*சூழல்*

புத்தர் ஞானம் பெற்ற பின் தான் பிறந்த ஊரான கபிலவத்துவிற்குச் சென்றார். அங்கு அவர் நகருள் வீடுவீடாகச் சென்று பிச்சை எடுத்து வந்தார். இவர் பிச்சையெடுத்துக்

கொண்டிருப்பதைக் கேள்விப்பட்ட இவர் தந்தை சுத்தோதனர் உடனே அங்கு விரைந்து சென்று தங்கத் தட்டில் உண்டு கொண்டிருந்தவன் பிச்சையெடுப்பது தன்னை மிகவும் இழிவுபடுத்துவதாக உள்ளது என முறையிட்டார். அதற்குப் புத்தர் துறவு நெரியினர்க்குரிய முறை இஃதெனக் கூறி இவ்விரு பாடல்களையும் பகர்ந்தார்.

4. Yathā bubbulakaṁ passe
yathā passe marīcikaṁ
Evaṁ lokaṁ avekkhantaṁ
maccurājā na passati. (170)

**மொழிபெயர்ப்பு**

நீர் மேல் குமிழ் போன்றும் கானல் நீர் போன்றும் இவ்வுலகத்தைக் கருதிப் பார்ப்பவனை மரணத்தின் தலைவன் கண்ணெடுத்தும் பார்ப்பதில்லை.

புத்தர் வாழ்ந்த காலத்தில் புத்தர் தம் நெறியைப் பின்பற்றித் துறவு பூண்ட பலரும் இவ்வுலகினை நீர்க்குமிழ் போன்றும் கானல் நீர் போன்றும் கருதித் துறந்து தவமியற்றி ஞானம் பெற்றனர். அவர்களைக் குறித்துச் சொல்லும் பொழுது புத்தர் இப்பாடலைக் கூறினார்.

மேற்கோள்

நீரில் குமிழி இளமை நிறைசெல்வம்
நீரில் சுருட்டும் நெடுந்திரைகள் - நீரில்
எழுத்தாகும் யாக்கை நமரங்காள் என்னே
வழுத்தாத தெம்பிரான் மன்று.

*( நீதிநெறி விளக்கம் : கடவுள் வாழ்த்து )*

5. Etha passath' imaṁ lokaṁ
cittaṁ rājarathūpamaṁ
Yattha bālā visīdanti
natthi saṅgo vijānataṁ. (171)

மொழிபெயர்ப்பு

வாருங்கள், அரசனுடைய அலங்கரிக்கப்பட்ட தேரினைப் போன்ற இவ்வுலகினைப் பாருங்கள்[1]. மூடர்கள் இதன்மேல் பற்றுக்கொண்டு அழிந்து போகின்றனர். ஆனால் அறிவுடையோர் இதைப் புரிந்து கொண்டு பற்றுகளைத் தவிர்த்து விடுகின்றனர்.

*சூழல்*

ஓர் அரசனுடைய அவையில் இருந்த நாட்டியக்காரி இறந்து விட்டாள். அவளது ஆடலிலும் பாடலிலும் இன்பம் கண்ட இளவரசன் அவள் இறந்தது குறித்துப் பெரிதும் துயருற்றான். தன் துயரம் தீர்ந்து தனக்கு அமைதி ஏற்படும் பொருட்டு அவன் புத்தரை அணுகினான். புத்தர் அவனுக்கு ஆறுதல் கூறி உலக நிலையாமையை அறிவுறுத்திக் கூறிய பாடல் இது.

*விளக்கம்*

1. அரசனுடைய தேர் மிகுந்த வலிமையுடன் செய்யப்பட்டு அலங்கரிக்கப் பட்டதாயினும் அதுவும் ஒருநாள் அழிந்து படுவது என்பது உலக நீதி. எனவே தான் புத்தர் இவ்வுவமையைக் கூறினார். (பார்க்க பாடல் -151)

மேற்கோள்

மலைமிசைத் தோன்றும் மதியம்போல் யானைத்
தலைமிசைக் கொண்ட குடையர் - நிலமிசைத்
துஞ்சினார் என்றெடுத்துத் தூற்றப்பட் டாரல்லால்
எஞ்சினாரிவ் வுலகத் தில். *(நாலடியார் : 21)*

6. Yo ca pubbe pamajjitvā
pacchā so nappamajjati
So imaṁ lokaṁ pabhāseti
abbhā mutto' va candimā. (172)

மொழிபெயர்ப்பு

முன்னர் விழிப்புணர்வின்றி அசட்டையாக இருந்த ஒருவன் பின்னர் விழிப்புணர்வு பெற்றானாகில் அவன் மேகத்தால் மறைக்கப்பட்ட நிலவு, பின்னர் மேகம் விலகியவுடன் ஒளிவிடுவது போல் ஒளிர்வான்.

*சூழல்*

துறவி ஒருவர் தவநெறியிற் சென்றொழுகாமல், துறவிகள் மடத்துள்ள அறைகளைக் கூட்டித் தூய்மை செய்யும் பணியையே மேற்கொண்டிருந்தார். பின்னர் ஒருநாள் ஞானம் பெற்ற பிக்கு ஒருவரின் அறிவுரைப்படி அவர் தவமியற்றி விரைவில் அவரும் ஞானம் பெற்று அரகந்தரானார். அவரது இந்த நல்ல மாற்றம் குறித்துப் புத்தர் கூறிய பாடல் இது.

7. Yassa pāpaṁ kataṁ kammaṁ
kusalena pithīyati
So imaṁ lokaṁ pabhāseti
abbhā mutto' va candimā. (173)

**மொழிபெயர்ப்பு**

தான் முன்னால் செய்த தீய செயல்கள் அனைத்தையும் தன் நற்செயலால்[1] மறைத்துவிட்ட ஒருவர் மேகத்தால் மறைப்புண்ட நிலவு மேகம் விலகியதும் ஒளிர்வது போன்று இவ்வுலகில் ஒளிர்வார்.

*சூழல்*

அங்குலிமாலா என்னும் வழிப்பறிக் கொள்ளையன் வழிச்செல்வோர் அனைவரையும் கொன்று அவர்களது பொருள்களைக் கவர்ந்து கொண்டு அவர்களைக் கொன்று அவர்களது கட்டை விரலை வெட்டி மாலையாகக் கட்டி அணிந்து கொண்டிருந்தான். (விரல் மாலை அணிந்ததால் அவன் அங்குலி மாலா என்றழைக்கப்பட்டான்.). ஒரு சமயம் அவன் புத்தரைத் தொடர்ந்து சென்று அவரைக் கொல்ல முற்பட்டான். அப்போது புத்தரது அருட் பார்வையால் கவரப்பட்டுத் தனது கொலைத் தொழிலை விட்டுத் துறவு பூண்டு ஞானம் பெற்று அரகந்தராகி முக்திநிலையாம் நிர்வாணமும் எய்தினான். இத்தகு கொடூரமான கொலைகாரன் நிர்வாணமடைந்தது எவ்வகையில் பொருந்தும் எனப் பிற பிக்குகள் கேட்டதற்குப் புத்தர் கூறியது இப்பாடல்.

*விளக்கம்*

1 நற்செயலாவது தவமியற்றி ஞானம் எய்துதல். ஞானமடைந்தோர்க்குத் துன்பமில்லை.

8. Andhabhūto ayaṁ loko
tanuk'ettha vipassati
sakunto jālamutto'va
appo saggāya gacchati. (174)

மொழிபெயர்ப்பு

இவ்வுலகம் அறியாமையாகிய இருள் சூழ்ந்தது.[1] இதில் அறிவுடன் பார்ப்பவர் வெகு சிலரே. வலையினின்றும் பறவை தப்பிச் செல்வது போன்று[2] சிலரே இவ்வுலகினின்றும் விடுபட்டு நிர்வாணம் எய்துகின்றனர்.

*சூழல்*

புத்தரின் நெறியில் நம்பிக்கை கொண்ட ஒரு நெசவாளியின் மகள் புத்தரின் அறவுரைகளைக் கேட்பதற்கு ஒருநாள் வந்தாள். அப்பொழுது புத்தர் அவளிடம் நான்கு நுணுக்கமான கேள்விகளைக் கேட்டார். அந்நான்கு வினாக்களையும் அவையிலிருந்த ஏனையோர் புரிந்து கொள்ளவும் இயலாதிருந்த போது அவள் அவ்வினாக்களுக்குச் சரியான விடை பகர்ந்தாள். இத்தன்மையைப் பாராட்டிப் புத்தர் கூறிய பாடல் இது.

*விளக்கம்*

1. Andhabhūto என்பது குருட்டு உலகம் எனப்படும். குருட்டுத் தன்மை என்பது இருள் சூழ்ந்த நிலை. இங்கு அறியாமை என்னும் இருள் குறிக்கப்படுகிறது.

2. வலையில் சிக்குண்ட பறவைகள் அனைத்தும் தப்பிச் சென்று விடுவதில்லை. அவற்றுள் விழிப்புணர்வுள்ள ஒரு சில பறவைகள் மட்டும் தப்பிச் செல்கின்றன. அது போன்று விழிப்புணர்வுள்ள ஒரு சிலரே இவ்வுலகமாம் வலையிலிருந்து தப்பி நிர்வாண மடைகின்றனர்.

9. Haṁsādicca pathe yanti
ākāse yanti iddhiyā
Nīyanti dhīrā lokamhā
jetvā māraṁ savāhiniṁ. (175)

**மொழிபெயர்ப்பு**

அன்னப் பறவைகள் சூரியனின் பாதையில் (வானத்தில்) பறக்கின்றன. சித்தி பெற்றவர்கள்[1] ஆகாயத்தில் பறக்கின்றனர். மாரனை அவனுடைய படையுடன் சேர்த்து[2] வென்றவர்கள் இந்த உலகத்தையே கடந்து சென்று [3] நிர்வாணத்தை அடைகின்றனர்.

*சூழல்*

பிக்குகள் சிலர் புத்தரைக் காணவந்தனர். புத்தரின் அறவுரைகளைக் கேட்டுக் கொண்டிருந்த அவர்கள் ஞானம் பெற்றதுடன் சில சித்திகளும் கைவரப்பெற்றனர். பின்னர் அவர்கள் தங்களிடத்திற்கு ஆகாய வழியாகப் பறந்து சென்றனர். அவர்கள் புத்தரிடம் வருவதை மட்டும் பார்த்த ஆனந்தர் அவர்கள் சென்ற விதத்தைப் பார்க்கவில்லை. எனவே கூட்டத்தில் அவர்களைக் காணாது அவர் புத்தரிடம் கூறி விளக்கம் கேட்டார். அதே சமயத்தில் அன்னங்கள் சில வானத்தில் பறந்து சென்று கொண்டிருந்தன. அதை ஆனந்தருக்குச் சுட்டிக் காட்டி, ஞானம் பெற்றுச் சித்திகள் கைவரப் பெற்றவர்கள் அன்னத்தைப் போன்று ஆகாயத்தில் பறந்து செல்ல வல்லவர்கள் என விளக்கிக் கூறிய பாடல் இது.

*விளக்கம்*

1. சித்தி (iddhi) என்பது தவத்தோர்க்குறும் சில அரிய சக்தி. இச்சக்திகளைப் பெற்ற சான்றோர்கள் வானில் பறக்கவும், நீரில் நடக்கவும், நிலத்துள் அமிழ்ந்திருக்கவும் வல்லவர்கள். இவை மனிதர்க்குரிய பேராற்றல்களே யன்றி மந்திரமன்று.
2. மாறனின் படைகள் பத்து வகையானவாகக் கூறப்படும்.

| | | |
|---|---|---|
| 1. | உலகியல் இன்பம் | (kāma) |
| 2. | தூய வாழ்வில் வெறுப்பு | (arati) |
| 3. | பசியும் தாகமும் | (khuppipāsā) |
| 4. | வேட்கை | (Taṇhā) |
| 5. | சோம்பலும் மந்தமும் | (Thina middha) |
| 6. | அச்சம் | (Bhaya) |

7. ஐயம் (vicikicchā)
8. கோபமும் வஞ்சனையும் (makkha - thambha)
9. இலாபம் (Lābha)
பாராட்டு (Siloka)
பெருமை (Sakkhāra)
தீய வழியில் கொண்ட புகழ் (Yasa)
10. தன்னைப் பற்றி உயர்வாகப் பேசிப் பிறரைக் குறைத்துப் பேசுதல் (Attukkaṁsana - paravambana)

3. இவ்வுலகைக் கடத்தல் என்பது பிறவிப் பெருங்கடலைக் கடத்தலாகும்.

10. Ekaṁ dhammaṁ atītassa
musāvādissa jantuno
Vitiṇṇaparalokassa
natthi pāpaṁ akāriyaṁ. (176)

**மொழிபெயர்ப்பு**

அறங்களை மதியாதவனும் பொய்யையே துணையாகக் கொண்டவனும் மறு உலகத்தைப் பற்றிச் சிந்திக்காது வாழ்பவனுமான ஒருவனுக்குச் செய்யவியலாத பாவச்செயல்கள் ஏதும் இல்லை.[1]

*சூழல்*

கபட மனம் கொண்ட பெண்ணொருத்தி கருவுற்று அதன் காரணமாக மயக்கமடைந்தாள் திருமணமின்றிக் கருவுற்ற அவளது நிலைக்குக் காரணம் யார் என அறவோர் அவையில் விசாரிக்க, தன் நிலைக்குக் காரணம் புத்தரே என அவள் வெளிப்படையாக பொய்யுரை பகர்ந்தாள். ஆனால் விரைவில் மக்கள் அவளுடைய பொய்க் கூற்றினைக் கண்டுகொண்டு உண்மையை உலகிற்கு வெளிப்படுத்தினர். அவளது பொய்க்கூற்றினைப் பற்றி புத்தர் கருத்துரைக்கும்பொழுது இப்பாடலைக் கூறினார்.

*விளக்கம்*

1. பொய்யர்கள் தன் சுயமரியாதையை ஒதுக்கித் தள்ளியவர்கள். அவர்கள் இவ்வுலகம் மற்றும் மறுவுலக வாழ்வு, அறம், பாவம் இவற்றைப் பற்றிச் சிறிதும் கவலைப்படாமல் பாவச்செயல்களைச் செய்வர். அவர்களுக்கு முத்தி, நிர்வாணம், தேவர் உலக வாழ்வு முதலியன பொருட்டல்ல.

மேற்கோள்

தேவ ரனையர் கயவ ரவருந்தாம்
மேவன செய்தொழுக லான். *(குறள் : 1073)*

11. Nave kadariyā devalokaṁ vajanti
bālā have nappasaṁsanti dānaṁ
Dhīro ca dānaṁ anumodamāno
ten'eva so hoti sukhī parattha. (177)

**மொழிபெயர்ப்பு**

கஞ்சர்கள் தேவர் உலகத்திற்குப் போக மாட்டார்கள். கொடை கொடுப்பதைப் பாராட்ட மாட்டார்கள். அறிவுடையோர் கொடுப்பதில் மகிழ்ச்சிடைகின்றனர். பின்னர் அவர்கள் இன்பத்தையும் அடைகின்றனர்.

*சூழல்*

மன்னன் ஒருவன் புத்தருக்கும் புத்த சங்கத்திற்கும் ஏராளமான பொருள் கொடையாகக் கொடுத்து மகிழ்ந்தான். இதைக் கண்ட அமைச்சன் ஒருவன் இது தேவையற்ற செயல் எனக் கூறித் தனது வெறுப்பினைக் காட்டினான். மற்றொரு அமைச்சனோ இவ்வறச் செயல் கண்டு பெரிதும் மகிழ்ச்சியுற்றான். இவ்விருவரது வேறுபட்ட மனப்பான்மையைக் குறித்துப் புத்தர்கருத்துத் தெரிவிக்கையில் இப்பாடலைக் கூறினார்.

12. Pathavyā ekarajjena
saggassa gamanena vā
Sabbalokādhipaccena
sotāpattiphalaṁ varaṁ. (178)

மொழிபெயர்ப்பு

இவ்வுலகத்திற்குத் தனித்தலைவனாக முடிசூட்டிக் கொள்வதனினும், சுவர்க்கத்திற்குச் செல்வதனினும், பிரபஞ்சத்தின் அனைத்து உலகங்களுக்கும் தலைவனாவதனினும் சிறந்தது ஞானநெறியின் முதல் நிலையான சோதபன்ன நிலையடைதல்.[1]

*சூழல்*

அநாதபிண்டிகன் தன் மகனைப் புத்தரின் அறவுரைகளைக் கேட்கச் செய்ய விரும்பி, அவன் புத்தரிடம் சென்று அறம் கேட்டபின் ஆயிரம் பொன் கொடுப்பதாக ஆசை காட்டினான். அப்பொருளுக்கு ஆசைப்பட்டு அவன் புத்தரிடம் சென்றான். புத்தரின் அருள் மொழிகளைக் கேட்ட அவன் சோதபன்னர் நிலையடைந்தான். அது பற்றி புத்தர் கருத்துரைக்கும் பொழுது ஆன்மீக வளர்ச்சியே உலகியல் இன்பத்தினும் பெரிது என விளக்கி இப்பாடலைக் கூறியருளினார்.

*விளக்கம்*

1 மன்னனாவதும் சுவர்க்கம் செல்வதும் இந்திர பதவியும் ஒருவனது நல்வினைப் பயனே. அத்தகு வினைப்பயனின் முடிவில் மீண்டும் பிறந்து ஏனைய வினைகளையும் அனுபவிக்க வேண்டியவனே. அவன் முத்தியடைந்தவனல்லன். எனவேதான் புத்தர் ஆன்மீக வளர்ச்சியின் சிறப்பினைக்கூறினார்.

மேற்கோள்

பச்சைமா மலைபோல் மேனி
பவளவாய்க் கமலச் செங்கண்
அச்சுதா அமரர் ஏறே
ஆயர்தம் கொழுந்தே என்னும்
இச்சுவை தவிர யான்போய்
இந்திர லோகம் ஆளும்
அச்சுவை பெறினும் வேண்டேன்
அரங்கமா நகருள் ளானே

*(தொண்டரடிப் பொடியாழ்வார்)*

யானேதும் பிறப்பஞ்சேன் இறப்பதனுக் கென்கடவேன்
வானேயும் பெறில் வேண்டேன் மண்ணாள்வான் மதித்துமிரேன்
தேனேயு மலர்க்கொன்றைச் சிவனே யெம்பெரு
மானேயுன் அருள்பெருநாள் என்றென்றே வருந்துவனே.

*(திருவாசகம் : திருச்சதகம் : 12 )*

## 14. BUDDHA VAGGA

### 14. புத்தர் இயல்

1. Yassa jitaṁ n'āvajīyati
Jitamassa no yāti koci loke
Taṁ buddhaṁ anantagocaraṁ
apadaṁ kena padena nessatha. (179)

**மொழிபெயர்ப்பு**

ஆசைகளின் மீது தோல்வியற்ற வெற்றியைக் கொண்டவனும்[1] அவனால் வெல்லப்பட்ட ஆசைகள் அவனை மீண்டும் தொடர வழிவிடாதவனும்[2] அத்தகைய வழித்தடமற்ற அளவற்ற ஞானம் பூண்டவனுமானவனை உலகியலில் எவ்வழியில் உன்னால் செலுத்த இயலும்.

2. Yassa jālinī visattikā
taṇhā natthi kuhiñci netave
Taṁ buddhaṁ anantagocaraṁ
apadaṁ kena padena nessatha. (180)

**மொழிபெயர்ப்பு**

கட்டுகளும் சிக்க வைக்கும் வலையும் போன்ற ஆசைகளால்[3] எத்தகு உலகியல் வழியிலும் செலுத்தப்பட இயலாதவனும், வழித்தடமற்றவனும் அளவற்ற ஞானம் பூண்டவனுமானவனை[4] (உலகியலில் ) எவ்வழியில் உன்னால் செலுத்த இயலும்.

*சூழல்*

புத்தரின் மீது பேரன்பு கொண்ட ஒருவன் தனது அன்பின் வெளிப்பாடாக மாகந்தியா என்னும் தன் அழகிய மகளைப் புத்தருக்கு மனைவி போல் பணிவிடை செய்வதற்குத் தானமாகக் கொடுக்க முன்வந்தான். அப்பொழுது புத்தர், தான் எவ்வித ஆசைகளுக்கும் கட்டுப்படாதவன் உலகியல் கட்டுகள் எதிலும் சிக்காதவன், மாரன் தனது முப்படைகளாலும் முயன்றும் தன்னை அகப்படுத்தவியலாத போது பெண் மயக்கத்தால் தன்னை உலகியலில் செலுத்தவியலாது எனத் தெளிவுபடுத்திக் கூறிய பாடல் இது.

*விளக்கம்*

1. முழு ஞானம் பெற்றவர் (புத்தரானவர்) ஆசை, கோபம், மயக்கம், ஆகியவற்றை முற்ற முழுக்கத் துறந்து அவற்றின் மேல் வெற்றிகண்டவராகலின் மீண்டும் அவை அவர்மேல் வெற்றி கொள்ள வியலாது.

2. ஆசைகளை முற்றத் துறந்து அவற்றை அழித்தவராகலின் அவை மீண்டும் தோன்றா. எனவே அவை மீண்டும் தொடர இயலாது.

3. ஆசைகள் பிறவிக்குக் காரணமாகலின் அவற்றை நீக்கியவன் உலகக் கட்டுகளினின்றும் (வலையினின்றும்) தப்பியவனாகிறான்.

4. புத்தர் என்னும் சொல் ஞானி என்னும் பொருள் தருவது. உண்மையான அறிவை முழுமையாகப் பெற்றவர் புத்தர் எனப்பட்டார். கௌதம புத்தருக்கு முன் எண்ணில் புத்தர்கள் இருந்தனர் எனக்கூறும் பௌத்தம். இறந்த காலத்து எண்ணில் புத்தரும் என மணிமேகலை ஆசிரியரும் கூறினார். மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவரும் புத்தனாக வேண்டியவரே. புத்தராகப் பிறப்பது என்பது அவதாரமன்று. அஃது அறநெறிப்பட்ட நடத்தையோடு தவம் செய்வதன் மூலம் அனைவரும் அடையக்கூடிய ஒரு உயர்ந்த நிலையே ஆகும்.

3. Ye jhānapasutā dhīrā
nekkhammūpasame ratā
Devāpi tesaṁ pihayanti
sambuddhānaṁ satimataṁ. (181)

மொழிபெயர்ப்பு

தவநெறியிற் சிறந்தவனும்[1] நிர்வாண அமைதியில்[2] பெரிதும் இன்பம் காண்பவனுமானவனைப் பேரறிவுடைய ஞானியைத் தேவர்களும் விரும்பி ஏற்பர்.

*சூழல்*

புத்தர் தேவர்களிடம் அபிதம்மக் கோட்பாட்டை நிறுவுதற்குத் தாவதிம்ச உலகத்திற்குச்[3] சென்றார். அங்குத் துடித உலகத்தில்[4] பிறந்தஉள அவரது தாயும் வந்திருந்து அறம் கேட்டு மகிழ்ந்தாள். அங்குப் புத்தர் மூன்று மாதம் கழித்தபின் மீண்டும் மண்ணுலகிற்குத் தேவர் சூழ வந்தார். இதைக் கண்ட சாரிபுத்தர் தேவர்களும் புத்தரின் வழியே நடக்கின்றனர் எனக் கூறினார். அதைக் கேட்ட புத்தர் கூறிய பாடல் இது.

*விளக்கம்*

1. தியானம் (தவம்) இரண்டு நிலைகளைக் கொண்டது.
   1 மன ஓர்மை (samatha)
   2 உள்ளொலி (Vipassanā)

2. Nekkhamma என்னும் சொல் நிர்வாண நிலையைக் குறிக்க வந்தது. நிர்வாண நிலை பேரின்பமானதும் ஆழ்ந்த அமைதியைத் தரவல்லதுமாகும்.

3., 4. பௌத்தக் கோட்பாட்டின்படி கூறப்படும் பிரபஞ்சத்தில் தாவதிம்ச உலகமும் துடித உலகமும் நல்லோர் சென்றடையும் தேவருலகமாகும்.

மேற்கோள்

தன்னுயிர் தானறப் பெற்றானை ஏனைய
மன்னுயிர் எல்லாம் தொழும். *(குறள் : 268)*

4. Kiccho manussapaṭilābho
kiccham maccāna jīvitam
Kiccham saddhammasavaṇam
kiccho buddhānam uppādo. (182)

**மொழிபெயர்ப்பு**

மானிடராய்ப் பிறத்தல் அரிது. மரணத்திற்குட்பட்ட மனித வாழ்வு மிகவும் கடினமானது. (அதனினும்) உயரிய உண்மைகளைக் கேட்டல் மிகக் கடிது. அவர்களுள் சிலரே புத்தராகத் தோன்றுவர்.

*சூழல்*

புத்த பிக்குவாகத் துறவு பூண்ட ஒருவர் ஞானம் பெறாமலேயே இறந்து விட்டார். அவர் தன் வினையின் வலிமையால் மறு பிறவியில் மிருகமாகப் பிறந்தார். அந்த பிக்குவைப் பற்றிக் கூறும்பொழுது புத்தர் இப்பாடலைக் கூறினார்.

அரிதரிது மானிடராய்ப் பிறத்த லரிது
மானிட ராகப் பிறந்த காலையும்
கூன்குருடு செவிடுபேடு நீங்கிப் பிறத்தலரிது.
பேடு நீங்கிப் பிறந்த காலையும்
ஞானமும் கல்வியும் நயத்த லரிது
ஞானமும் கல்வியும் நயந்த காலையும்
தானமும் தவமும் தான்செய லரிது
தானமும் தவமும் தான்செய்வ ராகில்
வானவர் நாடு வழிதிறந் திடுமே. (ஔவையார்)

5. Sabbapāpassa akaraṇam
kusalassa upasampadā
Sacittapariyodapanam
etam buddhāna sāsanam. (183)

**மொழிபெயர்ப்பு**

எவ்வகைப் பாவமும் செய்யாதொழிக, நல்லனவற்றைப் பெருக்குக, மனத்தைத் தூய்மைப் படுத்துக. இவையே புத்தர்களின் அறிவுரைகள்.

6. Khantī paramaṁ tapo titikkhā
nibbānaṁ paramaṁ vadanti buddhā
Na hi pabbajito parūpaghāti
samaṇo hoti paramaṁ viheṭhayanto. (184)

**மொழிபெயர்ப்பு**

பொறுமையைக் கடைப்பிடித்தல் மிகச் சிறந்த துறவாகும். நிர்வாணம் அடைவதே (அடையத் தகுந்தவற்றுள்) மேலானதாகும் என்று புத்தர்கள் கூறுகின்றனர். பிற உயிரைக் கொல்பவன் துறவியாக மாட்டான். பிறரைத் துன்புறுத்துபவன் சமணன் ஆக மாட்டான்.

7. Anūpavādo anūpaghāto
pātimokkhe ca saṁvaro
Mattaññutā ca bhattasmiṁ
panthañ ca sayanāsanaṁ
Adhicitte ca āyogo
etaṁ bhuddhāna sāsanaṁ. (185)

**மொழிபெயர்ப்பு**

பிறரைப் பழிக்காதே, பிற உயிர்களைக் கொல்லாதே. பாதிமொக்க [1] நெறியைப் பின்பற்றி நட. மிதமான உணவே உட்கொள்க. தனிமையில் இருந்து தியானத்தைப் பழகு. இவையே புத்தர்களின் போதனைகளாகும்.

*விளக்கம்*

ஒருசமயம் ஆனந்தருக்குக் கௌதம புத்தருக்கு முந்தைய புத்தர்கள் உபோசத [2] நாளை எவ்வாறு கொண்டாடினர். என்று அறியும் எண்ணம் ஏற்பட்டது. அது குறித்துப் புத்தரிடம் ஆனந்தர் வினவிய போது அவர் இம்மூன்று பாடல்களைக் கூறி முந்தைய புத்தர்களும் இந்நெறிகளையே அறிவுறுத்தியும் பின்பற்றியும் வந்தனர் எனக் கூறினார்.

1 பாதி மொக்க (Pātimokkha) என்பது பௌத்த சமயத் துறவியர் எவ்வெவற்றைக் கைக்கொண்டு எவ்வெவற்றை நீக்க வேண்டும் என்பதைத் தெளிவுறுத்தும் தலையாய விதிகளைக் கொண்டதாகும். ஒவ்வொரு பிக்குவும் இவற்றைக் கடுமையாகப் பின்பற்றக் கடமைப்பட்டவராவர்.

2 உபோசத (Uposatha) என்பது துறவியர்க்கு ஒரு புனித நாளாகும். இது மாதம் நான்குமுறை துறவியரால் கொண்டாடப்படுவதாகும். புத்தர் காலத்தில் ஏனைய சமயத் துறவியர் வளர்பிறையில் இருநாளும், தேய் பிறையில் இருநாளும் என மாதத்தில் நான்கு நாள்களை உபோசத நாளாகக் குறித்தனர். இந்நாள்களில் இவர்கள் ஒருங்கு கூடி வழிபாடு முதலியன நிகழ்த்தினர். பௌத்த சமயம் தோன்றிய பின்பு புத்தர் இந்த நான்கு நாள்களை இரண்டு நாள்களாக மாற்றினார். ஒவ்வொரு மாதமும் பௌர்ணமியும் அமாவாசையுமான நாள்களில் பிக்கு சங்கம் கூடி பாதிமொக்க இசைத்து அவ்விதிகளின்படி நடவாதோர்க்கு உரிய தண்டனையளித்து அவர்களைத் தூய்மை செய்வது மரபாக்கப்பட்டது. இதுபற்றிய விரிவான விளக்கம் மகாவக்க (Mahāvagga) என்னும் நூலில் உபோசத கந்தக என்னும் பிரிவில் காணலாம்.

மேற்கோள்

நிறையுடைமை நீங்காமை வேண்டின் பொறையுடைமை
போற்றி ஒழுகப் படும். *(குறள் : 154)*

உற்றநோய் நோன்றல் உயிர்க்குறுகண் செய்யாமை
அற்றே தவத்திற் குரு. *(குறள் : 261)*

கொல்லா நலத்தது நோன்மை பிறர்தீமை
சொல்லா நலத்தது சால்பு. *(குறள் : 984)*

8. Na kahāpaṇa vassena
tiṭṭi kāmesu vijjati
Appassādā dukhā kāmā
iti viññāya paṇḍito. (186)

**மொழிபெயர்ப்பு**

பொற்காசுகளால் காமம் முதலிய புலனின்ப உணர்வுகள் நிறைவு செய்யப்படுவதில்லை. இக்காம உணர்வுகள் யாவும் சிறுபோது இன்பமாகத் தோன்றிப் பெரும்பொழுதும் துன்பத்தையே தரவல்லது என்றறிபவனே அறிஞன்.

9. Api dibbesu kāmesu
ratiṁ so n'ādhigacchati
Taṇhakkhayarato hoti
sammāsambuddhasāvako. (187)

**மொழிபெயர்ப்பு**

(இதை உணர்ந்த அறிஞர்கள்) தேவர் உலக இன்பங்களையும் விரும்புவதில்லை. முழுஞானம் பெற்றவர்களின் மாணவர்கள் வேட்கையை அழிப்பதிலேயே முனைப்புடையவர்களாக உள்ளனர்.

*சூழல்*

துறவு வாழ்க்கையில் சலிப்படைந்த பிக்கு ஒருவர் துறவினைத் துறந்து தன் தந்தை விட்டுச் சென்ற மிகச் சிறிய செல்வத்தைக் கொண்டு வாழத் தீர்மானித்தார். அவரது மன நிலையை அறிந்த புத்தர் அவருக்கு அறிவுரை கூறுமுகமாக உலகியல் பொருள்கள் புலனுணர்வுகளுக்கு நிறைவு தர வல்லனவல்ல என்று அறிவுறுத்தி இப்பாடல்களைக் கூறினார்.

மேற்கோள்

சிற்றின்பம் சில்நீர தாயினும் அஃதுற்றார்
மற்றின்பம் யாவையும் கைவிடுப முற்றும்தாம்
பேரின்ப மாக்கட லாடுவார் வீழ்பவோ
பாரின்பப் பாழ்க்கும்பி யில்

*(நீதிநெறி விளக்கம் : 87)*

10. Bahuṁ ve saraṇaṁ yanti
pabbatāni vanāni ca
Ārāma rukkha cetyāni
manussā bhayatajjitā. (188)

மொழிபெயர்ப்பு

மனிதர்களிடத்து அச்சங் கொண்ட பலரும்[1] மலைகளையும், காடுகளையும், சோலைகளையும், மரத்தடிகளையும், துறவிகளின் வாழிடங்களையும் அடைக்கலமாகச் சென்றடைகின்றனர்.

11. N'etaṁ kho saraṇaṁ khemaṁ
n'etaṁ saraṇaṁ uttamaṁ
N'etaṁ saraṇaṁ āgamma
sabbadukkhā pamuccati. (189)

மொழிபெயர்ப்பு

அத்தகைய அடைக்கலங்கள் பாதுகாப்பானவை அல்ல. அத்தகைய அடைக்கலங்கள் உயர்ந்தனவுமல்ல. அத்தகைய இடங்களை அடைக்கலமாக அடைந்தால் அவை நமது துக்கத்தை நீக்க வல்லனவுமல்ல.

12. Yo ca buddhañ ca dhammañ ca
saṅghañ ca saraṇaṁ gato
Cattāri ariyasaccāni
sammappaññāya passati. (190)

13. Dukkhaṁ dukkhasamuppādaṁ
dukkhassa ca atikkamaṁ
Ariyañ' aṭṭhaṅgikaṁ maggaṁ
dukkhūpasamagāminaṁ. (191)

14. Etaṁ kho saraṇaṁ khemaṁ
etaṁ saraṇaṁ uttamaṁ
Etaṁ saraṇaṁ āgamma
sabbadukkhā pamuccati. (192)

மொழிபெயர்ப்பு

12. புத்தரையும் புத்தர் உரைத்த அறங்களையும் புத்தரது அடியார் கூட்டத்தையும் அடைக்கலமாகச் சென்றடைந்து, நான்கு பேருண்மைகளையும் தூய அறிவினால் கண்டறிந்தவர்கள்.....

13. துன்பத்தையும் துன்பத்தின் தோற்றத்தையும், துன்ப நீக்கத்தையும் துன்ப நீக்க நெறிகளையும் துன்ப நீக்க நெறிக்கு இட்டுச் செல்லும் எண்வகைப் பெரு வழிகளையும் கண்டவர்கள்..

14. உண்மையான பாதுகாப்பான புகலிடத்தைச் சென்றடைகின்றனர். இத்தகைய அடைக்கலமே உயர்ந்தது. இத்தகைய அடைக்கலமே ஒருவனை அனைத்துத் துன்பங்களினின்றும் விடுவிக்கிறது.

*சூழல்*

பிற சமய ஆசிரியர் ஒருவர் தன் மாணவர்களை மலைகளிடத்தும் காடுகளிடத்தும் இன்ன பிறவற்றையும் அடைக்கலமாகச் சென்றடையின் துன்பம் நீங்கும் என அறிவுறுத்தினார். புத்தர் அத்தகைய அறிவுரைகளை மறுத்துத் தனது மாணவர்களுக்கு உண்மையான அடைக்கலத்தை அறிவுறுத்தும் வகையில் கூறிய பாடல்கள் இவை.

15. Dullabho purisājañño[1]
na so sabbattha jāyati
Yattha so jāyati dhīro
taṁ kulaṁ sukhamedhati. (193)

மொழிபெயர்ப்பு

உலகில் பெரும் ஞானியரைக் (புத்தரைக்) காண்பது அரிது. அவர்கள் எல்லாவிடங்களிலும் பிறப்பதில்லை. அப்படிப்பட்ட ஞானிகள் உலகில் வந்து பிறந்தால் அவர்கள் பிறந்த குலம் அவரால் பெரிதும் மேன்மையடைகிறது.

*சூழல்*

ஆனந்தர் ஒருமுறை புத்தரைப் போன்ற ஞானியர் எங்குப் பிறக்கின்றனர் என அறிய விரும்பிப் புத்தரைக் கேட்டார். அதற்குப் புத்தர் இப்பாடலைக் கூறி விளக்கமளித்தார்.

*விளக்கம்*

1. Purissājañño என்பது மனிதருள் ஞானி - புத்தர் எனப் பொருள்படும். அதுவே உலகில் பெரும் ஞானியர் என மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

16. Sukho buddhānaṁ uppādo
sukhā saddhammadesanā
Sukhā saṅghassa sāmaggī
sammaggānaṁ tapo sukho. (194)

**மொழிபெயர்ப்பு**

புத்தர்களின் தோற்றம் இனிமையானது. உயரிய அறக் கோட்பாடுகளைப் போதித்தல் இன்பமானது. துறவோர் கூட்டத்தின்[1] சேர்க்கை இன்பமானது. துறவோர் கூட்டத்துத் தூநெறி இன்பமானது.

*சூழல்*

ஒருமுறை பிக்குகள் பலர் கூடி உலகில் இன்பமானது எது என்பது குறித்துத் தங்களுக்குள் பேசிக் கொண்டிருந்தனர். அவர்களது பல்வேறுபட்ட கருத்துக்களுக்கும் முடிவு கூறும் வகையில் புத்தர் இப்பாடலைக் கூறினார்.

*விளக்கம்*

1. துறவோர் கூட்டம் என்பது இங்கு மெய்ஞ்ஞானத்தை உணர்ந்த புத்தரின் வழியைப் பின்பற்றித் துறவிகளானவர்தம் கூட்டம். இதுவே சங்கம் எனப்படுவது. புத்தரின் வழிகளையும் கோட்பாடுகளையும் தம் வாழ்வில் தெளிவாகவும் உறுதியாகவும் கடைப்பிடித்து வரும் உண்மையடியார் கூட்டமே சங்கம்.

17. Pūjārahe pūjayato
buddhe yadi va sāvake
Papañcasamatikkante
tiṇṇasoka pariddave. (195)

**மொழிபெயர்ப்பு**

ஆசை, பொய்க்காட்சி, அகந்தை ஆகிய குற்றங்களை நீக்கி, அவலம், அரற்றுக் கவலை ஆகியவற்றைக் கடந்து வந்த புத்தர்களையும், அவரது மாணவர்களையும் வணங்கி வழிபடுவது மேலானது.

18. Te tādise pūjayato
nibbute ākutobhaye
Na sakkā puññaṁ saṅkhātuṁ
im'ettaṁ iti kena ci. (196)

**மொழிபெயர்ப்பு**

நிர்வாணமாகிய பேரமைதியை அடைந்து அச்சங்கள் அனைத்தையும் நீக்கியவர்களை வணங்கி வழிபடுவோர் இம்மட்டு என்று அளவிட்டுச் சொல்ல இயலாத அளவிற்குப் புண்ணியவான்கள் ஆவார்.

*சூழல்*

ஒருமுறை புத்தர் பழைய கோவில் ஒன்றில் தங்கியிருக்க நேர்ந்தது. அப்பொழுது ஓர் அந்தணன் அங்கு வந்து கோவிலில் வழிபட்டான். அப்பொழுது புத்தர் ஞானிகளையும் சான்றோர்களையும் வழிபடுவது மிகப் பெருஞ் சிறப்பானது என அறிவுறுத்திக் கூறிய பாடல்கள் இவை.

மேற்கோள்

சீவன் முத்தரைச் சேவித்தோர் சிவனயனொடு மாலான
மூவரு மகிழ நோன்பு முழுவதுஞ் செய்துசன்ம
பாவன மானா ரென்று பழமறை முழங்கும். . . .
*(கைவல்லிய நவநீதம் : 1 : 104)*

17. Buddhe ... sāvake
Papañcasamatikkante
tiṇṇasokapariddave (195)

## 15. SUKHA VAGGA

### 15. இன்ப இயல்

1. Susukhaṁ vata jīvāma
Verinesu averino
Verinesu manussesu
Viharāma averino. (197)

**மொழிபெயர்ப்பு**

நம்மைப் பகைப்போரிடத்தும் அன்பு செலுத்தி நாம் இன்பமுடன் வாழ்கிறோம். நம்மைப் பகைப்போரிடையே நாம் பகையின்றி வாழ்கிறோம்.

2. Susukhaṁ vata jīvāma
āturesu anātura
Āturesu manussesu
Viharāma anāturā. (198)

**மொழிபெயர்ப்பு**

நோயுற்றுத் துன்புற்றோரிடையே[1] நோயின்றி இன்பமாக உள்ளோம். நோயுற்றவர்களிடையே நோயின்றி வாழ்கிறோம்.

3. Susukhaṁ vata jīvāma
ussukesu anussukā
Ussukesu manussesu
viharāma anussukā. (199)

மொழிபெயர்ப்பு

வேட்கை யுடையோரிடையே வேட்கையின்றி இன்பமுடன் வாழ்கிறோம். ஆசையுடைய மக்களிடையே ஆசையின்றி வாழ்கிறோம்.

*சூழல்*

ஒரு சமயம் ஆற்று நீரைப் பயன்படுத்துவதில் இருவேறு இனத்தாரிடையே தகராறு தோன்றி முற்றியது. புத்தர் அவர்களிடையே சென்று இருவரையும் சமாதானப் படுத்தி இருவரும் பகையின்றி வாழும்படி அறிவுரை கூறினார். அப்பொழுது கூறிய பாக்களே இம்மூன்றும்.

மேற்கோள்

உணர்வே யருவுரு வாயி லூறே
நுகர்வே பிறப்பே பிணிமூப்புச் சாவே
அவல மரற்றுக் கவலைகை யாறென
நுவலப் படுவன நோயா கும்மே.
*(மணிமேகலை: 30 :179-182)*

4. Susukhaṁ vata jīvāma
Yesaṁ no natthi kincanaṁ
Pītibhakkhā bhavissāma
devā ābhassarā yathā. (200)

மொழிபெயர்ப்பு

குற்றங்கள்[1] இல்லாமல் நாம் இன்பமாக வாழ்கிறோம். ஒளிரும் உடல்களையுடைய ஆபஸ்ஸர தேவர்களைப் போல[2] நம்முடைய உடல்களும் ஒளி வீசகின்றன.

*சூழல்*

ஒரு சமயம் புத்தர் பிச்சைக்காக ஊருக்குள் சென்றார். அன்று மாரனுடைய சூழ்ச்சியின்படி புத்தருக்கு ஏதும் கிடைக்கவில்லை. அப்பொழுது மாரன் புத்தரிடம் வந்து பசியாக உள்ளீரோ என வினவினான். அப்பொழுது புத்தர் ஆசை முதலிய குற்றங்களைத் துறந்தாரது மன நிலையை எதுவும் பாதிக்காது என விளக்கிக் கூறிய பாடல் இது.

*விளக்கம்*

1. குற்றங்கள் மூன்று- காமம், வெகுளி, மயக்கம்.

2. ஆபஸ்ஸர தேவர்கள் என்போர் பிரம்மனின் உலகத்தில் வாழக்கூடிய மின்னலொத்த ஒளி மிகு கடவுளர். இவர்கள் சாதாரணமாக உயர்ந்த அன்புக்கும் நட்புக்கும் எடுத்துக் காட்டாகக் கூறப்படுவார்கள்.

5. Jayaṁ veraṁ pasavati
dukkhaṁ seti parājito
Upasanto sukhaṁ seti
hitvā jayaparājayaṁ. (201)

மொழிபெயர்ப்பு

வெற்றி பகையை வளர்க்கிறது. தோற்றவன் துன்பத்தில் வாழ்கிறான். மன அமைதியுள்ளவன் வெற்றியையும் தோல்வியையும் துறந்து இன்பமாக வாழ்கிறான்.

*சூழல்*

மன்னன் ஒருவன் தன் பகைவரால் மும்முறை போரில் தோற்கடிக்கப்பட்டான். அவன் தன் தோல்வியை எண்ணி எண்ணி மிக்க மனத் துயரத்துடன் இருந்தான். அவனது துயரத்தின் காரணத்தை அறிந்த புத்தர் வெற்றி மற்றும் தோல்வி ஆகிய இரண்டுமே எவ்வாறு துன்பம் பயப்பதாகிறது என இப்பாடல் மூலம் அறிவுறுத்தினார்.

6. Natthi rāgasamo aggi
natthi dosasamo kali
Natthi khandhasamā dukkhā
natthi santiparaṁ sukhaṁ. (202)

மொழிபெயர்ப்பு

ஆசையைவிடப் பெரிய நெருப்பு வேறொன்றில்லை. பகையைப் போன்ற குற்றம் மற்றொன்றில்லை. ஐந்து கந்தங்களைப்[1] போன்ற துன்பம் வேறொன்றில்லை. மன அமைதியினும்[2] மேம்பட்ட இன்பம் மற்றொன்றில்லை.

*சூழல்*

இளம் பெண்ணொருத்தியின் திருமண விழாவின் பொருட்டுப் புத்தரையும் அவரது சங்கத்தாரையும் விருந்திற்கு அழைத்திருந்தனர் மணமகளின் குடும்பத்தினர். விருந்து நேரத்தில் புத்தருக்கும் அவரது மாணவர்களுக்கும் நடக்கும் பணிவிடைகளைப் பார்த்து மணமகள் உள்ளத்தில் பேராசை தோன்றியது. அவளது மனநிலையை அறிந்த புத்தர் இப்பாடலைக் கூறினார்.

*விளக்கம்*

1. ஐந்து கந்தங்களாவன

| | | |
|---|---|---|
| 1. | உருவம் | (Rūpa khandha) |
| 2. | நுகர்ச்சி | (Vedanā khandha ) |
| 3. | குறிப்பு | (Saññā khandha) |
| 4. | பாவனை | (Saṁkhārā khandha) |
| 5. | உள்ளவறிவு | (Viññāṇa khandha ) |

'உருவ நுகர்ச்சி குறிப்பே பாவனை
உள்ள வறிவிவை யைங்கந்த மாவன'

*(மணிமேகலை 30 : 189 190)*

2. மன அமைதியாவது நிர்வாண நிலை.

7. Jighacchā paramā rogā
saṅkhārā paramā dukhā
Etaṁ ñatvā yathā bhūtaṁ
nibbāṇaṁ paramaṁ sukhaṁ. (203)

**மொழிபெயர்ப்பு**

பசியே மிகப் பெரிய நோய்[1]. புலன்கள் மிகப் பெரும் துன்பமாகும். இவ்வாறு பொருள்களின் உண்மையை உணர்ந்து நிர்வாணமே பெரும் பேரின்பம் (எனத் தெளிகிறான் அறிவுடையோன்).

*சூழல்*

ஏழை உழவன் ஒருவன் மிகுந்த பசியுடன் புத்தரின் அறவுரைகளைக் கேட்க வந்தான். அவனது நிலையை அறிந்த புத்தர் தனது அறவுரைக்கு முன் பசியுடனிருக்கும் அவனுக்குச் சிறிது உணவு கொடுக்குமாறு வேலையாளைக் கேட்டுக் கொண்டார். புத்தரின் இச்செயலை ஏனைய பிக்குகள் வியப்புடன் பார்த்தனர். அவர்களுக்கு அறிவுரை கூறி விளக்கும் வகையில் புத்தர் இப்பாடலைக் கூறினார்.

*விளக்கம்*

1. சாதாரணமாக எந்த நோயும் உரிய மருந்து கொடுத்தால் நோய் முழுதும் விலகிப் பின் வாராதொழியும். ஆனால் பசி நோய் மட்டும் ஆயுள் முழுதும் ஒவ்வொரு வேளையும் மருந்து (உணவு) கொடுத்துக்கொண்டே இருப்பிலும் மீண்டும் மீண்டும் வந்து கொண்டே இருக்கும். எனவே தான் பசிப்பிணியே மிகப் பெரும் பிணி என்றார் புத்தர்.

மேற்கோள்

"பசிப்பிணி மருந்துவன் இல்லம்

அணித்தோ சேய்த்தோ கூறுமி னெமக்கே"

*( புறநானூறு : 173 )*

பசிப்பிணி- ( மணி : 12 : 118 )

பசிப்பிணி மருந்து - ( மணி : 28 : 217 )

பசிப்பிணி யென்னும் பாவி - ( மணி : 11 : 80 )

8. Ārogya paramā lābhā
santuṭṭhi paramaṁ dhanaṁ
vissāsa paramā ñāti
nibbāṇaṁ paramaṁ sukhaṁ. (204)

**மொழிபெயர்ப்பு**

நோயற்ற வாழ்வே குறைவற்ற பேறு. மன நிறைவே மிகப்பெரும் செல்வமாகும். நம்பிக்கையே மிகப்பெரும் உறவு. நிர்வாணமே பெரும் பேரின்பம்.

*சூழல்*

மன்னன் ஒருவன் மிகுதியாக உண்ணும் வழக்கத்தினால் நோயுற்று வருந்தினான். அவன் புத்தரை அணுகித் தன் துன்பத்தைக் கூறி அத்துன்பத்திற்கு மாற்று வேண்டினான். புத்தர் அவனது பெருந்தீனி வழக்கத்தை உணர்ந்து அளவான உணவு உண்ணும்படி அறிவுரை கூறினார். புத்தரின் அறிவுரையை ஏற்று நடந்து நோய்கள் நீங்கப் பெற்று அவன் புத்துணர்வடைந்தான். பின்னர் அவன் புத்தரிடம் சென்று நோயற்ற தனது நிலையைக் கூற புத்தர் அவனுக்கு இப்பாடல் மூலம் நால்வகைப் பேற்றினையும் தெளிவுபடுத்தினார்.

9. Pavivekarasaṁ pitvā
rasaṁ upasamassa ca
Niddaro hoti nippāpo
dhammapītirasaṁ pibaṁ. (205)

**மொழிபெயர்ப்பு**

தனிமையில் இனிமையும் அமைதியில்[1] ஆனந்தத்தையும் நுகர்ந்து அறநெறியில் இன்பத்தைக் கண்டறிந்து அதில் நாட்டமுடையவர் எல்லாவித அச்சத்தினின்றும் பாவத்தினின்றும் விடுபட்டவராவார்.

*சூழல்*

புத்தர் விரைவில் நிர்வாணம் அடையப் போகிறார் என்று அறிந்தவுடன் பிக்கு ஒருவர் ஏனைய பிக்குகளைப் போல் புத்தரைச் சென்று வணங்கி மரியாதை செய்யாது தனியாக ஒதுங்கி இருந்து தவமியற்றத் தொடங்கினார். அவரது அச்செயலுக்குக் காரணம் என்னவென்று புத்தர் அவரை வினவ, புத்தரின் நிர்வாணத்திற்கு முன் தான் ஞானமடைந்திட விரும்புவதாக அவர் கூறினார். அம்மறுமொழியில் மகிழ்ந்த புத்தர் கூறிய பாடல் இது.

*விளக்கம்*

1. அமைதியாவது நிர்வாணம்.

10. Sādhu dassanaṁ ariyānaṁ
sannivāso sadā sukhā
Adassanena bālānaṁ
niccaṁ eva sukhī siyā. (206)

மொழிபெயர்ப்பு

சான்றோரைக் காண்பதுவும் நன்று. நல்லாரோடு உடன் வாழ்வது என்றும் மகிழ்வானது. மூடரைக் காணா திருத்தல் மூலம் ஒருவர் என்றும் இன்பத்தை அடைகிறார்.

11. Bālasaṅgatacārī hi
dīgharh addhāna socati
Dukkho bālehi saṁvāso
amitten' eva sabbadā
Dhiro ca sukhasaṁvāso
ñātinaṁ' va samāgamo. (207)

12. Tasma hi :-
Dhīrañ ca paññañ ca bahussutañ ca
dhorayhasīlaṁ vatavantaṁ āriyaṁ
Taṁ tādisaṁ sappurisaṁ sumedhaṁ
bhajetha nakkhatta pathaṁ'va candimā.
(208)

மொழிபெயர்ப்பு

11. மூடர்களுடன் தொடர்பு கொள்வது நீண்ட காலம் துன்பம் தரத்தக்கதாகும். மூடர்களுடன் இணைந்து வாழ்வதும் பகைவருடன் சேர்ந்திருப்பது போன்று துன்பம் தரத்தக்கதாகும். அறிஞர்களுடன் சேர்ந்து வாழ்வது உறவினர்களுடன் சேர்ந்து வாழ்வது போன்று இன்பமானதாகும்.

12. எனவே,

சிந்தனையாளரும் அறிஞரும் கற்றோரும் நல்லொழுக்கமாம் நுகத்தடியைச் சுமந்தவரும் கடமையை அறிந்து நடப்பவருமான உயர்ந்தவர்களின் தொடர்பைக் கொண்டு நடப்பாயாக. அப்படிப்பட்ட சான்றோர்களை விண்மீன் பாதையில் செல்லும் நிலவைப் போன்று பின்பற்றிச் செல்வாயாக.

*சூழல்*

ஒருமுறை புத்தர் உடல்நலமின்றி இருந்தபோது தேவேந்திரன் ஒரு சாதாரண மனித உருக்கொண்டு புத்தரின் அறவுரைகளைக் கேட்க வந்தான். ஏனைய பிக்குகள் மனிதவுருக் கொண்ட தேவேந்திரனின் தனித் தன்மைகளைக் கண்டு வியக்க அவர்களுக்குப் புத்தர் கூறிய பாடல்கள் இவை.

மேற்கோள்

நல்லாரைக் காண்பதுவும் நன்றே நலமிக்க
நல்லார்சொல் கேட்பதுவும் நன்றே – நல்லார்
குணங்கள் உரைப்பதுவும் நன்றே அவரோடு
இணங்கி இருப்பதுவும் நன்று. *(வாக்குண்டாம் : 8)*

தீயாரைக் காண்பதுவும் தீதே திருவற்ற
தீயார்சொல் கேட்பதுவும் தீதே – தீயார்
குணங்கள் உரைப்பதுவும் தீது அவரோடு
இணங்கி யிருப்பதுவும் தீது. *(வாக்குண்டாம் : 9)*

கொம்புளதற் கைந்து குதிரைக்குப் பத்துமுழம்
வெம்புகரிக் காயிரந்தான் வேண்டுமே – வம்புசெரி
தீங்கினர் தங்கண்ணில் தெரியாத தூரத்து
நீங்குவதே நல்ல நெறி. *(நீதி வெண்பா :20)*

பழுதெண்ணு மந்திரியின் பக்கத்துட் தெவ்வர்
எழுபது கோடி யுறும். *(குறள் : 639)*

---

## 16. PIYA VAGGA

## 16. அன்பு இயல்

1. Ayoge yuñjaṁ attānaṁ
yogasmiñ ca ayojayaṁ
Athaṁ hitvā piyaggāhī
pihet' attānuyoginaṁ. (209)

**மொழிபெயர்ப்பு**

விரும்பத் தகாதனவற்றில் விருப்பங் கொண்டு, விரும்பத் தக்கனவற்றை விரும்பாது வெறுத்து, உண்மையை நாடுவதைத் தவிர்த்து, தன் மனத்திற்கு உகந்ததைச் செய்து கொண்டிருப்பவன் நல்லன மட்டும் செய்கின்றவரைக் கண்டு பொறாமைப் படுகிறான்.

2. Mā piyehi samāgañchi
appiyehi kudācanaṁ
Piyānaṁ adassanaṁ dukkhaṁ
appiyānañ ca dassanaṁ. (210)

**மொழிபெயர்ப்பு**

இவ்வுலகின் எதையும் விருப்புடனோ, வெறுப்புடனோ அணுகாதே. விருப்பமானவற்றைப் பார்க்காதிருந்தாலும் துன்பம், வெறுப்பானவற்றைப் பார்த்தாலும் துன்பமே.

3. Tasmā piyaṁ na kayirātha
piyāpāyo hi pāpako
Ganthā tesaṁ na vijjanti
Yesaṁ natthi piyāppiyaṁ. (211)

மொழிபெயர்ப்பு

எனவே எதன் மீதும் பற்று வைக்காதே. ஏனெனில் விருப்பமானதைப் பிரியும் பொழுது துன்பம் ஏற்படுகிறது.விருப்பு வெறுப்புகளினின்றும் நீங்கியவர்களுக்குத் தளைகள் இல்லை.

சூழல்

தன் பெற்றோர்களால் பெரிதும் அன்பு செலுத்தப்பட்ட இளைஞன் ஒருவன் ஒருநாள் துறவு மேற்கொண்டான். அவன் துறவி ஆனதை அறிந்த அவனது பெற்றோரும் அவனுடன் துறவியாயினர். எனினும் அவர்கள் ஒருவர் மீது ஒருவர் கொண்டிருந்த பாசம் காரணமாக அவர்கள் தனித்தனியாகவன்றிச் சேர்ந்தே வாழத் தலைப்பட்டனர். இவர்களது இத்தகைய நிலையைக் கேள்விப்பட்ட புத்தர் கூறிய பாடல்கள் இவை.

மேற்கோள்

யாதனின் யாதனின் நீங்கியான் நோதல்
அதனின் அதனின் இல். (குறள் : 341)
பற்றி விடாஅ இடும்பைகள் பற்றினைப்
பற்றி விடாஅ தவர்க்கு (குறள் : 347)

4. Piyato jāyati soko
piyato jayati bhayaṁ
Piyato vippamuttassa
natthi soko kuto bhayaṁ. (212)

மொழிபெயர்ப்பு

பற்றினின்றும் பிறப்பது துயரம். பற்றினின்றும் பிறப்பது அச்சம். பற்றிலிருந்து முழுமையாக விடுபடுவோனுக்குத் துயரமில்லை. அச்சமும் ஏது?

சூழல்

தன்மகனின் இளமைக்கால மரணத்தைக் குறித்து தந்தை ஒருவர் அழுது புலம்பிக் கொண்டிருந்தார். புத்தர் அங்குச் சென்று துன்பப்படும் அவருக்கு ஆறுதல் கூறி உண்மையைத் தெளிவுபடுத்திய பாடல் இது.

மேற்கோள்

பற்றி விடாஅ இடும்பைகள் பற்றினைப்
பற்றி விடாஅ தவர்க்கு (குறள் 347)

5. Pemato jāyati soko
pemato jāyati bhayaṁ
Pemato vippamuttassa
natthi soko kuto bhayaṁ. (213)

**மொழிபெயர்ப்பு**

**பாசத்தினின்றும் தோன்றுவது துயரம். பாசத்தினின்றும் தோன்றுவது அச்சம். பாசத்தை முற்றமுழுக்கத் துறந்தவனுக்குத் துயரமில்லை. அச்சமும் ஏது.**

*சூழல்*

**விசாகை தன்னுடைய மிக்க அன்பான பேத்தி இறந்தது குறித்துப் பெரிதும் கவலையுற்றிருந்தாள். அவள் புத்தரைக் காண வந்தபோது பாசம் கொள்வதனால் ஏற்படும் தீமையை விளக்கிக் கூறிய பாடல் இது.**

மேற்கோள்

**யாதனின் யாதனின் நீங்கியான் நோதல்
அதனின் அதனின் இல்.** *(குறள் : 341)*

6. Ratiyā jāyati soko
ratiyā jāyati bhayaṁ
Ratiyā vippamuttassa
natthi soko kuto bhayaṁ. (214)

**மொழிபெயர்ப்பு**

**வாஞ்சையினால் துயரம் உண்டாகிறது. வாஞ்சையினால் அச்சம் உண்டாகிறது. வாஞ்சையை முற்றமுழுக்கத் துறந்தவர்களுக்குத் துயரம் இல்லை. அச்சமும் ஏது.**

*சூழல்*

**ஒரு கணிகையின் மீது காதல் கொண்ட அரச குமாரர்கள் சிலர் ஒருவர் மீது ஒருவர் பொறாமை கொண்டு ஒருவரையொருவர் தாக்கிச் சண்டையிடத் தொடங்கினர். இவர்களுக்குப் புத்தர் கூறிய அறிவுரையே இப்பாடல்.**

7. Kāmato jāyati soko
kāmato jāyati bhayaṁ
Kāmato vippamuttassa
natthi soko kuto bhayaṁ. (215)

**மொழிபெயர்ப்பு**

காமத்திலிருந்து தோன்றுவது துயரம். காமத்திலிருந்து தோன்றுவது அச்சம். காமத்திலிருந்து முற்றமுழுக்க விடுபட்டவர்களுக்குத் துயரமும் இல்லை. அச்சமும் ஏது.

*சூழல்*

இளவரசன் ஒருவன் தான் முன்னர்க் காணாத, தனக்காக வரிக்கப்பட்ட மணமகள் மீது பெரிதும் காதல் கொண்டிருந்தான் அவளை அவனுக்கு மணமுடித்துக் கொடுக்க அழைத்து வந்தபோது எதிர்பாராத விதமாக அவள் இறந்துவிட்டாள். அவள் இறப்பைக் குறித்து அந்த இளவரசன் பெரிதும் துயரிற்றிருந்தான். அவனுக்கு ஆறுதல் கூறித் தெளிவுறுத்தும் போது புத்தர் கூறிய பாடல் இது.

மேற்கோள்

சிற்றின்பம் வெஃகி அறனல்ல செய்யார்
மற்றின்பம் வேண்டு பவர். (குறள் : 173)

8. Taṇhāya jāyati soko
Taṇhāya jāyati bhayaṁ
Taṇhāya vippamuttassa
natthi soko kuto bhayaṁ (216)

**மொழிபெயர்ப்பு**

வேட்கையினின்றும் பிறப்பது துயரம், வேட்கையினின்றும் பிறப்பது அச்சம். வேட்கையினின்றும் முற்றமுழுக்க விடுபட்டோர்க்குத் துயரமும் இல்லை. பயமும் ஏது.

*சூழல்*

பிராமணன் ஒருவன் தன் நிலத்தை உழுது விதைத்தான். புத்தர் அவனை அதற்கு முன்பிருந்தே தினமும் சென்று கண்டுவந்தார். அந்தப் பிராமணன் அறுவடை முடிந்ததும் கிடைக்கும் வருவாயில் பாதியைப் புத்தருக்குத் தருவதாக உறுதி

கொண்டிருந்தான். ஆனால் எதிர்பாராத விதமாக பெரும் புயலின் காரணமாகப் பயிரெல்லாம் அழிந்தது. தான் எண்ணியபடி புத்தருக்குக் கொடுக்க இயலவில்லையே என்ற எண்ணத்தில் அவன் பெரும் துயரத்தில் மூழ்கினான். அவனைத் தேற்றி புத்தர் கூறிய பாடல் இது.

மேற்கோள்

அறனறிந்து வெஃகா அறிவுடையார்ச் சேரும்
திறனறிந் தாங்கே திரு. *(குறள் : 179)*

9. Sīladassanasampannaṁ
dhammaṭṭhaṁ saccavedinaṁ
Attano kammakubbānaṁ
taṁ jano kurute piyaṁ. (217)

**மொழிபெயர்ப்பு**

நல்லொழுக்கமும் மெய்ஞ்ஞானமும் நிறைவாகப் பெற்றவர்களும், அறநெறியில் நிலை நின்றவர்களும், உண்மையை உணர்ந்து கடைப்பிடித்தவர்களும்[1], தன் கடமையை நிறைவேற்றியவருமான[2] சான்றோர்களை மக்கள் அன்புடன் போற்றுவர்.

*சூழல்*

இளைஞர் சிலர் சுவைப் பண்டங்களுடன் புத்த விகாரத்திற்குச் சென்றனர். அங்கு அவர்கள் புத்தரையும் பிற பிக்குகளையும் விட்டு விட்டுக் கடைசியில் அமர்ந்திருந்த கஸ்ஸப தேரரைக் கண்டு அவருக்குச் சில திண்பண்டங்களைக் கொடுத்தனர். கஸ்ஸபர் அவர்களிடம் புத்தருக்கும் பிற பிக்குகளுக்கும் கொடுக்கும்படிக் கேட்டுக் கொண்டார். இதைக் கண்ட பிக்குகள் அவ்விளைஞர்கள் பாகுபாடு பார்த்துக் கொடுக்கின்றனர் என முணுமுணுத்தனர். இதைக் கேட்ட புத்தர் கஸ்ஸபர் போன்ற நல்லொழுக்கமும் மெய்ஞ்ஞானமும் உடையவர்கள் தேவர்களுக்கும் மிகுந்த விருப்பினர் என விளக்கிக் கூறிய பாடல் இது.

*விளக்கம்*

1. உண்மையாவது நான்கு உயரிய உண்மைகள்

அவையாவன.

1. உலகில் பிறப்பது துன்ப மயமானது என்பது.
2. அத்துன்பத்தின் தோற்றம்.
3. அத்துன்பத்தின் நீக்கம்.
4. அத்துன்ப நீக்கத்தின் வழிமுறைகள் என்பனவாம்.

2 கடமைகள் மூன்று அவையாவன

1. ஒழுக்கம் (sila)
2. தியானம் (Samādhi)
3. ஞானம் (Pañña)

மேற்கோள்

நயனொடு நன்றி புரிந்த பயனுடையார்
பண்புபா ராட்டும் உலகு. (குறள் : 994)

10. Chandajāto anakkhāte
manasā ca phuṭo siyā
Kāmesu ca appaṭibaddhacitto
uddhaṁsoto'ti vuccati. (218)

மொழிபெயர்ப்பு

சொல்லொணாததன் மேல் (நிர்வாணம்)[1] விருப்பினை வளர்த்துக் கொண்டு, மூன்று பயன்களில்[2] மனம் நிறைந்து திளைத்து, உலகியல் கட்டுகளில் செல்லாத மனத்தினர் நீரோட்டத்தின் மேல் நிலையை அடைந்தவராவர்.[3]

*சூழல்*

தவநெறியின் மூன்றாம் நிலையான அனாகமி நிலையை (மீண்டும் வராதவர்) அடைந்த பிக்கு ஒருவரிடம் இல்லறத்தார் சென்று அவரைத் தங்கள் வழிகாட்டியாகக் கொண்டு ஒழுகி வந்தனர். அவர்கள் அவரிடம் ஞான நெறியில் நீங்கள் எந்நிலையை அடைந்துள்ளீர்கள் என வினவினர். அவரோ, இல்லறத்தாரும் இனிதே அடைதற்குரிய அனாகமி நிலையை

தான் அடைந்துள்ளதாகக் கூறின் அவர்கள் தன்னிடம் கொண்டுள்ள மதிப்பு குறையக்கூடும். எனவே ஞான நிலையை (அரகந்த நிலை) எட்டிய பின் கூறலாம் எனக் கருதி ஏதும் பதில் கூறாமல் இருந்தார். ஆனால் எதிர்பாராதவிதமாகத் திடீரென அவர் இறந்து விட்டார். அவர்கள் இவரது மரணம் குறித்து வருந்தி நின்றனர். புத்தர் அவர்களை அழைத்து அவர்களது துயரத்திற்கு ஆறுதல் கூற அவர்களோ தங்கள் ஆசிரியர் தங்கள் கேள்விக்கு எந்த விடையும் கூறாது இறந்துவிட்டாரே எனத் தங்கள் வருந்துவதாகக் கூறினர். அவர்களுக்கு உண்மையை அறிவுறுத்துமுகமாக புத்தர் கூறிய பாடல் இது.

*விளக்கம்*

1. Anakkhāta சொல்லொணாதது. நிர்வாணம் என்பது ஒருவரால் செய்யப்பட்டதன்று. அது இவ்வண்ணமுடையது என யாராலும் சொல்லவியலாதது ஆதலின் அது சொல்லொணாதது என்றார்.

2. மூன்று பயன்களாவன
   1. சோதபன்னர்
   2. சகதாகாமி,
   3. அநாகமி நான்காவது நிலையே ஞானம்.

   இவையே எய்துதற்குரியன ஆதலின் பயன் எனப்பட்டது.

3. உலக வாழ்வு ஒரு நீரோட்டம் போன்றது. அதனை அறிந்து தெளிந்தவர்கள் நீரோட்டத்தை வென்றவர் என்றும் அதனை அறிந்து மீளுதற்குரிய வழியை நாடியவர்கள் ஒரு முறை மீள்வோர் (Sakadāgami ) என்றும் அதனின்றும் மீண்டவர்கள் மேல் நிலையுற்றவர்கள் அல்லது மீண்டும் வாராதவர் (anāgami ) என்றும் கூறப்படுவர். அனாகமி நிலையை அடைந்தவர்கள் இறந்தபின் தூய உலகில் பிறந்து அங்கிருந்தே நிர்வாணமடைவர். மீண்டும் இவ்வுலகில் பிறக்கமாட்டார்கள்.

மேற்கோள்

ஓர்த்துள்ளம் உள்ள துணரின் ஒருதலையாப்
பேர்த்துள்ள வேண்டா பிறப்பு. *(குறள் : 357)*

11. Cirappavāsiṁ purisaṁ
dūrato sotthiṁ āgataṁ
Ñātimittā suhajjā ca
abhinandanti sagataṁ. (219)

மொழிபெயர்ப்பு

நெடுந் தூரத்திலிருந்து நீண்ட நாள்களுக்குப் பின் நலமாக வந்து சேர்ந்தவரைக் கண்டு அவரது உறவினர்கள் நண்பர்கள் மற்றும் அன்பர்களும் மிகவும் மகிழ்ச்சியுடன் வரவேற்பார்கள்.

12. Tatth 'eva katapuññaṁ pi
asmā lokā paraṁ gataṁ
Puññani paṭiganhanti
piyaṁ ñātiṁ'va āgataṁ. (220)

மொழிபெயர்ப்பு

அது போல புண்ணியம் செய்தவர் இவ்வுலகிலிருந்து மறுவுலகிற்குச் செல்லும் பொழுது அவரது நல்வினைகள் அவரைத் தங்கள் உறவினர் போன்று மகிழ்ந்து வரவேற்கும்.

*சூழல்*

துறவோரிடத்து பக்தியும் மரியாதையும் உடைய செல்வனொருவன் ஏராளமான பொருளை அறக் கொடையாகச் செலவு செய்தான். அவனது கொடையின் பலனாய் மறுவுலகில் அவனுக்கென நல்லிடம் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டது. அவன் இவ்வுலகில் அவனுக்காகக் காத்திருக்கும் நன்னிலையை அறிந்து புத்தர் கூறிய பாடல்கள் இவை.

மேற்கோள்

செல்விருந் தோம்பி வருவிருந்து பார்த்திருப்பான்
நல்விருந்து வானத் தவர்க்கு. *(குறள் : 86)*

## 17. KODHA VAGGA

### 17. சினவியல்

1. Kodhaṁ jahe vippajaheyya mānaṁ
saññojanaṁ sabbaṁ atikkameyya
Taṁ nāmārūpasmiṁ asajjamānaṁ
akiñcānaṁ nānupatanti dukkhā (221)

**மொழிபெயர்ப்பு**

சினத்தைக் கைவிடுக. நான் என்னும் அகந்தையை நீக்கி, ஆசைகளாம் தளைகள் அனைத்தையும் கடந்து நாமரூபமாகிய அருவுருவத்தின் பற்றறுத்துவிடின் ஒரு சிறிதும் துன்பம் தொடராது.

*சூழல்*

மொக்கலான தேரரின் சகோதரி தோல்நோயால் பெரிதும் துன்புற்றிருந்தாள். அவளது நிலையைக் கண்ட மொக்கலானர் பிக்குகள் கூடும் பெரிய மண்டபம் ஒன்று கட்டும்படி அவளுக்கு அறிவுறுத்தினார். தன் சகோதரனின் அறிவுரைப்படி அவள் ஒரு மண்டபம் கட்டினாள். அவ்வறச் செயலின் பலனாக விரைவில் அவள் முழுவதும் குணமடைந்தாள். இதையறிந்த புத்தர் அவளது தோல் நோயைச் சினத்திற்குச் சமமாகக் கூறிச் சினத்தை நீக்கின் துன்பம் நீங்கும் என்று அறிவுரை கூறிய பாடல் இது.

மேற்கோள்

யான்என தென்னும் செருக்கறுப்பான் வானோர்க்
குயர்ந்த உலகம் புகும். *(குறள் : 346)*

2. Yo ve uppatitaṁ kodhaṁ
rathaṁ bhantaṁ 'va dhāraye
Taṁ ahaṁ sārathiṁ brūmi
rasmiggāho itaro jano. (222)

மொழிபெயர்ப்பு

கட்டுபாடற்று (தவறான வழியில்) செல்லும் தேரைக் கட்டுப்பாட்டுடன் சரியாகச் செலுத்துவது போலத் தன்னுள் எழும் சினத்தை எவனொருவன் அடக்குகிறானோ அவனையே நான் சரியான தேர்ப்பாகன் எனக் கூறுவேன். ஏனையோர் அனைவரும் வெறுமே கடிவாளத்தைக் கையில் பிடித்திருப்போரே.

*சூழல்*

பிக்கு ஒருவர் தாம் தங்குவதற்காகக் குடில் ஒன்று அமைப்பதற்காக மரம் ஒன்றை வெட்டிக் கொண்டிருந்தார். அப்பொழுது அந்தமரத்தில் குடியிருந்த மர தேவதை ஒன்றனது குழந்தையைத் தவறுதலாகக் காயப்படுத்தி விட்டார். இதைக் கண்ட தேவதை கடும் சினமுற்று அந்தப் பிக்குவைக் கொல்லத் துணிந்தது. ஆனால், உடனே தனது சினத்தை அடக்கிக் கொண்டது. பின்னர் இந்நிகழ்ச்சி பற்றி அது புத்தரிடம் முறையிட்டது. அதன் நல்லியல்பைப் பாராட்டி, புத்தர் கூறிய பாடல் இது.

மேற்கோள்

தன்னைத்தான் காக்கின் சினங்காக்க காவாக்கால்
தன்னையே கொல்லும் சினம். *(குறள் : 305)*

3. Akkodhena jine kodhaṁ
asādhuṁ sādhunā jine
Jine kadariyaṁ dānena
saccena alikavādinaṁ. (223)

மொழிபெயர்ப்பு

கோபத்தை அன்பால் வெல்க. தீமையை நன்மையால் வெல்க. கஞ்சத் தனத்தைக் கொடையால் வெல்க. பொய்யை உண்மையால் வெல்க.

*சூழல்*

ஒருவனது இளைய மனைவி தன் மூத்தாள் மீது பொறாமை கொண்டு அவளுக்குப் பல வகையிலும் தீமைகளைச் செய்தாள். ஆனாள் மூத்தாள் எவ்வகையிலும் அவள் மீது

ஆத்திரப்பட வில்லை. சிறிது காலத்திற்குப் பின் இளையாள் தனது தவறுகளை நினைத்துப் பெரிதும் மனம் வருந்தினாள். தன் மூத்தாளிடம் சென்று தனது தவறுகளுக்கு மன்னிக்க வேண்டினாள். மூத்தாளோ புத்தரிடம் சென்று இளையவள் மன்னிப்புப் பெற்றுவரின் தானும் மன்னிப்பதாகக் கூறினாள். அவளும் புத்தரிடம் சென்று தனது தவறுகளைக் கூறி மன்னிப்பு வேண்டி நின்றாள். புத்தர் அவளை மன்னித்து இருவரது இயல்பினையும் பாராட்டி இப்பாடலைக் கூறினார்.

மேற்கோள்

இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர்நாண
நன்னயம் செய்து விடல். *(குறள் : 314)*

4. Saccaṁ bhaṇe na kujjheyya
dijjā' ppasmiṁ pi yācito
Etehi tīhi thānehi
gacche devāna santike. (224)

மொழிபெயர்ப்பு

உண்மையே பேசுக. சினம் கொள்ளற்க. தன்னிடமிருப்பது மிகச் சிறிதேயெனினும் இரந்தார்க்கு இல்லையெனாது கொடுக்க. இம்மூன்று வழிகளிலும் செல்வோர் தேவர்களிடத்திற்குச் செல்கின்றனர்.

சூழல்

ஒரு சமயம் மொக்கலானர் தேவர்களைக் கண்டபோது அந்நிலை அடைவதற்கு அவர்கள் செய்த நல்வினை யாதோ என வினவினார். தேவர்களும் தங்களது உயர் நிலைக்குக் காரணம் தாங்கள் உண்மையே பேசியதும், பொறுமையைக் கடைப்பிடித்ததும் பிறர்க்கீயும் பெருந்தன்மை கொண்டிருந்ததுமே காரணம் என்றனர். மொக்கலானர் இக்கூற்றினைப் புத்தரிடம் கேட்டு உறுதிப்படுத்திக் கொள்ள விரும்பி புத்தரிடம் கேட்டார். புத்தரும் மொக்கலானருக்கு விளக்கம் அளிக்கும் வகையில் இப்பாடலைக் கூறினார்.

மேற்கோள்

வையத்துள் வாழ்வாங்கு வாழ்வான் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும். *(குறள் : 50)*

5. Ahiṁsakā ye munayo
niccaṁ kāyena saṁvutā
Te yanti accutaṁ thānaṁ
yattha gantvā na socaro. (225)

**மொழிபெயர்ப்பு**

அகிம்சையைக் கடைப்பிடித்து உடலின் மீதான பற்றுகளை நிரந்தரமாகத் துறந்து விட்ட முனிவர்கள் இறவாப் பெறும் பேறு பெற்றுத் துன்பமற்றிருப்பர்.

*சூழல்*

ஒரு சமயம் கணவனும் மனைவியுமான இருவர் புத்தரைத் தங்கள் மகனாகக் கருதி வாழ்த்தினர். புத்தர் முன்னொரு பிறவியில் அவர்களது மகனாகத் தான் இருந்தமையைக் குறிப்பிட்டுக் கூறினார். பின்னர் அவர்கள் புத்தரிடம் அறவுரை கேட்டு ஞானம் (அரகந்த நிலை) எய்தினர். பின்னர் தங்கள் மரணத்திற்குப் பின் தாங்கள் அடையும் நிலைபற்றி அறிய விரும்பினர். அவர்கள் நிர்வாணம் அடைந்த பின்னர் புத்தர் கூறிய பாடல் இது.

மேற்கோள்

கொல்லாமை மேற்கொண் டொழுகுவான் வாழ்நாள்மேல்
செல்லா துயிருண்ணும் கூற்று. *(குறள் : 326)*

6. Sadā jāgaramānānaṁ
ahorattānusikkhinaṁ
Nibbānaṁ adhimuttānaṁ
atthaṁ gacchanti āsavā. (226)

**மொழிபெயர்ப்பு**

எப்பொழுதும் விழிப்புணர்வுடன் இருந்து இரவும் பகலும் தம்மை நல்வழியில் நிறுத்தி வைத்துக் கொண்டு நிர்வாணத்தின் மீது மிகுந்த நாட்டமுடையவர்களது குற்றங்கள்[1] அழிந்து விடுகின்றன.

*சூழல்*

வேலைக்காரப் பெண்ணொருத்தி நள்ளிரவுக்குப் பின்னும் நெடுநேரம் வேலை செய்துவிட்டு வீட்டை விட்டு வெளியேறிச் செல்லும் பொழுது பிக்குகள் சிலர் அருகிலுள்ள மலையை நோக்கிச்

செல்வதைக் கவனித்தாள். தான் நீண்ட நேரம் வேலை செய்வதால் தன்னால் தூங்க இயலவில்லை. ஆனால் இந்தப் பிக்குகள் ஏன் இன்னும் தூங்காமல் இருக்கின்றனர் என்று தனக்குள் சிந்தித்துக் கொண்டிருந்தாள். ஒரு சமயம் புத்தரைக் கண்ட போது தனது குழப்பத்தை அவரிடம் சொல்லி விளக்கம் கேட்ட போது அவளுக்கு விளக்கம் சொல்லி புத்தர் கூறிய பாடல் இது.

*விளக்கம்*

1. āsavā – குற்றங்கள் நான்காகும்.
    1. காமம் (kāma )
    2. உலகில் விருப்பம் (Bhava )
    3. பொய்க்காட்சி (Micchā diṭṭhi)
    4. அறியாமை (avijjhā)

மேற்கோள்

உயிர்களனைத்துக்கும் எது இரவோ அதில்
யோகி விழித்திருக்கிறான். உயிர்களெல்லாம்
துய்த்துணரும் நிலை தத்துவ ஞானிக்கு இரவு.
*(கீதை : 269)*

7. Porāṇaṁ etaṁ Atula
n' etaṁ ajjatanām iva
Nindanti tuṇhim āsīnaṁ
nindanti bahu bhāṇinaṁ
Mitabhāṇinaṁ pi nindanti
natthi loke anindito. (227)

**மொழிபெயர்ப்பு**

இது தொன்று தொட்டு வருவதாகும் அதுல. இன்று மட்டும் நடப்பதன்று. இகழ்வோர், பேசாமல் அமைதியாக இருப்பவரையும் இகழ்கின்றனர். அதிகமாகப் பேசுபவர்களையும் குறைவாகப் பேசுபவர்களையும் இகழ்கின்றனர். இவ்வுலகில் இகழப்படாதோர் யாரும் இல்லை.

8. Na cāhu na ca bhavissati
na c'etarahi vijjati
Ekantaṁ nindito poso
ekantaṁ vā pasaṁsito. (228)

மொழிபெயர்ப்பு

இவ்வுலகில் முழுதும் புகழப் பட்டோரும் முழுதும் இகழப்பட்டோரும் அன்றும் இருந்ததில்லை இன்றும் இருக்கவில்லை. இனி என்றும் இருக்கப் போவதுமில்லை.

9. Yañ ce viññū pasaṁsanti
anuvicca suve suve
Acchiddavuttiṁ medhāviṁ
paññasīlasamāhitaṁ. (229)

மொழிபெயர்ப்பு

குற்றமற்ற வாழ்வும் ஞானமும் அறிவும் ஒழுக்கமும் உடையவரை அறிஞர்கள் தினம் தினம் ஆராய்ந்து பாராட்டுகின்றனர்.

10. Nekkhaṁ jambonadass' eva
ko taṁ ninditum arahati
Devā' pi taṁ pasaṁsanti
brahmunā'pi pasaṁsito. (230)

மொழிபெயர்ப்பு

சம்புநாதம் என்னும் பைம்பொன்னையொத்த தன்மையினரை இகழ்ந்துரைக்க எவருளர். தேவர்களும் அவர்களைப் பாராட்டுகின்றனர். பிரமனும் கூடப் புகழ்கிறான்.

மேற்கோள்

அதுலன் என்பவன் இரேவதத் தேரரிடமிருந்து நல்லறத்தை அறிந்து கொள்ள விரும்பினான் அவன் அவரிடம் சென்று தன் விருப்பத்தைக் கூறினான். ஆனால் அவரோ தன் தனிமையை

விரும்பி அமைதியாக இருந்தார். அதனால் அவர் மீது கோபம் கொண்டு சாரிபுத்தத் தேரரிடம் சென்றான். சாரிபுத்தரோ மிக நீளமான விளக்கம் கொடுத்துக் கொண்டிருந்தார். இதனாலும் வெறுப்புற்ற அவன் ஆனந்தரிடம் சென்றான். ஆனந்தரோ மிகக்குறைந்த சொற்களில் விளக்கமளித்தார். இதனாலும் நிறைவுறாத அதுலன் நேராக புத்தரிடமே சென்ற முறையிட்டு வேண்டினான். புத்தர் அவனது இயல்பைச் சுட்டிச் காட்டி பிறரால் குறை கூறப்படாதார் எவருமிலர் என எடுத்துக் காட்டி இப்பாடல்களைக் கூறினார்.

11. Kāyappakopaṁ rakkheyya
kāyena saṁvuto siyā
Kāyaduccaritaṁ hitvā
kāyena sucaritaṁ care. (231)

**மொழிபெயர்ப்பு**

உடலால் உண்டாகும் குற்றங்களை அடக்கியாள்க. உடலைக் கட்டுப்படுத்திக் காக்க. உடலினால் ஏற்படும் தீச்செயல்களைத் தவிர்த்து அதனால் நற்செயல்களைச் செய்க.

12. Vacīpakopaṁ rakkheyya
vācāya saṁvuto siyā
Vacīduccaritaṁ hitvā
vācāya sucaritaṁ care. (232)

**மொழிபெயர்ப்பு**

சொல்லினால் உண்டாகும் குற்றங்களை அடக்கிக் காக்க. சொல்லைக் கட்டுப்படுத்தியாள்க. சொல்லினால் ஏற்படும் தீமைகளைத் தவிர்த்து நல்வாக்கினராய்த் திகழ்க.

13. Manopakopaṁ rakkheyya
manasā saṁvuto siyā
Manoduccaritaṁ hitvā
manasā sucaritaṁ care. (233)

மொழிபெயர்ப்பு

மனத்தால் உண்டாகும் குற்றங்களை அடக்கிக் காக்க. மனத்தைக் கட்டுப் படுத்தியாள்க. மனம் தீயவழியில் செல்வதைத் தவிர்த்து மனத்தால் நற்செயல்கள் செய்க.

14. Kāyena saṁvutā dhīrā
atho vācāya saṁvutā
Manasā saṁvutā dhīrā
te ve suparisaṁ vutā. (234)

மொழிபெயர்ப்பு

அறிஞர்கள் உடலைக் கட்டுப்படுத்தி ஆள்கின்றனர். சொல்லைக் கட்டுப்படுத்தியாள்கின்றனர். மனத்தைக் கட்டுப்படுத்தியாள்கின்றனர். இவர்களே உண்மையாகவே நல்ல அடக்கம் உடையவர்கள்.

*சூழல்*

பிக்குகள் சில மரக்கட்டையால் செய்த காலணிகளை அணிந்து கொண்டு நடந்தனர். அது பெரிய ஒலியை எழுப்பி மடத்தின் அமைதியைக் குலைத்தது. அவர்கள் அவ்வாறு செய்வதைக் கண்டித்து அவர்களுக்கு அறிவுரை சொல்லும் வகையில் மனம், வாக்கு, காயம் மூன்றையும் அடிக்கியாள்பவரது சிறப்பினை எடுத்துரைத்து இந் நான்கு பாக்களையும் கூறியருளினார்.

மேற்கோள்

நிலையின் திரியா தடங்கியான் தோற்றம்
மலையினும் மாணப் பெரிது. *(குறள் : 124)*

ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்க லாற்றின்
எழுமையும் ஏமாப் புடைத்து. *(குறள் : 126)*

யாகாவா ராயினும் நாகாக்க காவாக்கால்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு. *(குறள் : 127)*

## 18. MALA VAGGA

### 18. குற்றவியல்

1. Paṇḍupalāso' va dāni'si
        yamapurisā' pi ca taṁ upaṭṭhitā
    Uyyogamukhe ca tiṭṭhasi
        Pātheyyaṁ pi ca te na vijjati. (235)

**மொழிபெயர்ப்பு**

தற்போது நீ முதிர்ந்து பழுத்த இலை போன்று இருக்கிறாய். எமதூதரும் உன்னை அணுகியுள்ளனர். சாவிடை முனையில் நீ நிற்கிறாய். நீ செல்லும் வழிக்குத் தேவையான உணவும் (ஆற்றுணா ) உன்னிடத்தில் இல்லை.

2. So karohi dīpaṁ attano
        khippaṁ vāyama paṇḍito bhava
    Niddhanta malo anaṅgaṇo
        dibbaṁ ariyabhūmiṁ ehisi. (236)

**மொழிபெயர்ப்பு**

உன்னுடைய தீவை நீ உருவாக்கு[2] முனைந்து செயல்படு அறிவுடன் விளங்கு. உன்னுடைய மாசுகள் துடைக்கப்பட்டுக், குற்றமற்றவனாய் ஒளியுடன் கூடிய உயர்ந்தோர் உலகத்திற்கு நீ செல்வாய்.

3. Upanītavayo va dāni'si
        sampayāto'si yamassa santike
    Vāso'pi ca te natthi antarā
        Pātheyyaṁ pi ca te na vijjati. (237)

மொழிபெயர்ப்பு

உன்னுடைய வாழ்வு முடிவுறும் நிலையில் உள்ளாய். இயமனின் முன்னிலையில் நீ நிற்கிறாய். நீ செல்லும் வழியில் உனக்குத் தங்க இடமும் இல்லை, உண்ண உணவும் இல்லை.

4. So karohi dīpaṁ attano
khippaṁ vāyama paṇḍito bhava
Niddhantamalo anaṅgaṇo
na puna jātijaraṁ upehisi. (238)

மொழிபெயர்ப்பு

நீ உன் தீவை உருவாக்கிக் கொள். முனைந்து செயல்படு. அறிவுடன் விளங்கு. உன்னுடைய மாசுகள் துடைக்கப்பட்டுக் குற்றமற்றவனாகி, நீ மீண்டும் பிறக்கப் போவதுமில்லை.

*சூழல்*

நற்செயல் ஏதும் செய்யாமல் ஒருவன் முதுமையடைந்தான். அவனுடைய மருமகன் புத்தரையும் சங்கத்தினரையும் அழைத்து, தன் மாமனின் பெயரில் அறக்கொடை நிகழ்த்தினான். புத்தர் அந்த முதியவனுக்கு அறமுரைக்கும் வகையில் இந்நான்கு பாடல்களையும் கூறினார்.

*விளக்கம்*

1. பயணத்திற்குத் தேவையான உணவு என்பது மரணத்திற்குப்பின் உடன் வரும் நல்வினையையே. தீய வினையும் உடன் வருமாயினும் அஃது உணவு போல் நற்பயன் தராதாகலின் நற்பயன் தரத்தக்க நல்வினைகளையே கொள்ள வேண்டும்.

2. பாவங்கள் வந்து அணுகவியலாதபடி நல்வினைகளாம் கடலால் அரண் செய்க. தனித்திருந்து நல்வினையாற்றுக.

மேற்கோள்

வீணாள் படாஅமை நன்றாற்றின் அஃதொருவன்
வாணாள் வழியடைக்குங் கல். *(குறள் : 38)*

5. Anupubbena medhāvi
thokathokaṁ khaṇe khaṇe
Kammāro rajatass' eva
niddhame malaṁ attano. (239)

**மொழிபெயர்ப்பு**

தட்டான் பொன்னிலுள்ள அழுக்குகளைப் போக்குவது போல, வினாடிக்கு வினாடி சிறிது சிறிதாகத் தன்னிடமுள்ள அழுக்குகளைக் கழுவிக் களைகிறான் அறிவுடையோன்.

*சூழல்*

அன்பன் ஒருவன் பிக்குகள் பெரும் புல்தரையில் இருந்து கொண்டு ஆடை அணிவதில் உள்ள இடையூறுகளைக் கண்டறிந்து அவர்களுக்கு வசதியாக ஒரு பெரிய மண்டபம் கட்டத் தொடங்கினான். சிறிது சிறிதாக அம்மண்டபத்தைக் கட்டி முடித்த பின்பு புத்தரிடம் அதை ஒப்படைப்பதற்காக, புத்தரையும் சங்கத்தாரையும் அழைத்தான். அங்கு வந்த சங்கத்தாரிடம் தான் சிறுகச் சிறுக அம்மண்டபத்தைக் கட்டி முடித்தது பற்றி விளக்கமாகக் கூறினான். புத்தர் அவனது அறவழிப்பட்ட உள்ளத்தைப் பாராட்டி அவனது தீவினைகளும் அவ்வாறே சிறுகச் சிறுகக் கழிந்தன எனக் கூறி இப்பாடலைப் பகர்ந்தார்.

மேற்கோள்

சென்ற இடத்தால் செலவிடா தீதொரீஇ
நன்றின்பால் உய்ப்ப தறிவு. *(குறள் : 422)*

6. Ayasā'va malaṁ samuṭṭhitaṁ
taduṭṭhāya tam eva khādati
Evaṁ atidhonacārinaṁ
Sakakammāni nayanti duggatiṁ. (240)

**மொழிபெயர்ப்பு**

இரும்பிலிருந்து தோன்றி துரு சிறுகச்சிறுக இரும்பையே தின்று தீர்த்து விடுவது போல உரிய நெறியின் நீங்கியார்[1] தன் தீய நெறியாலேயே அழிந்து விடுகின்றனர்.

*சூழல்*

இளம் துறவி ஒருவர் மிகுதியாக உண்ணும விருப்பினால் அதிகம் உண்டு அதன் விளைவாக உணவு செரிக்காமல் துன்புற்று இறந்தார். இறக்கும் நேரத்திலும் அவர் தமது புதிய ஆடையின் மேலிருந்த பற்றினை விட முடியாமல் அதே நினைவில் இறந்தார். புத்தர் இத்துறவியின் மனநிலையால் ஏற்பட்ட இழிநிலையை வெளிப்படுத்திப் பேராசையின் தீமையைப் பற்றி விளக்கி இப்பாடலைக் கூறினார்.

*விளக்கம்*

1. dona என்பது துறவிகளின் அடிப்படைத் தேவையான நீர், உணவு, உடை, உறையுள் என்னும் நான்கு பொருள்களையும் குறிப்பது. இந்நான்கையும் தம் வாழ்விற்குக் குறைந்தது எவ்வளவு தேவையோ அவ்வளவு மட்டும் பயன்படுத்திக் கொள்வதே பௌத்தத் துறவிகளுக்கு வகுக்கப்பட்ட நெறி. அஃதன்றி ஆசைவயப்பட்டு அவ்வளவிற்கு மீறிப் பயன்படுத்துவோரை Atidonacāri எனபர். இவர் தமக்கு வகுக்கப்பட்ட நெறியினின்றும் பிறழ்ந்தவராகி அதற்கான துன்பத்தை அனுபவிப்பார்.

7. Asajjhāya malā mantā
anuṭṭhānamalā gharā
Malaṁ vaṇṇassa kosajjaṁ
pamādo rakkhato malaṁ. (241)

**மொழிபெயர்ப்பு**

மந்திரத்திற்கு அதனை ஓதாதிருத்தல் குற்றமாகும். [1] பழுது பாராதிருத்தல் வீட்டிற்குக் குற்றமாகும். அழகிற்குச் சோம்பல் குற்றமாகும். காவலாளிக்கு அசட்டையாக இருப்பது குற்றமாகும்.

*சூழல்*

சாரிபுத்தரும் மொக்கலானருமாகிய இரு தலைமை மாணாக்கருக்கும் அவர்கள் புத்தரின் அறக் கோட்பாடுகளை விளக்கியுரைக்கும் திறமையால் பெரும் பாராட்டுக் கிட்டுவதைக்

கண்டு பிக்கு ஒருவர் மிகுந்த பொறாமை கொண்டார். அவர்கள் இருவருக்கும் கொடுக்கும் மதிப்பிற்குச் சமமாகத் தம்மையும் மதிக்க வேண்டும் என அவர் வற்புறுத்தினார். ஆனால் அவரது தகுதியை மெய்ப்பிக்க அவரை அழைத்தபோது அவரால் நிலைக்க முடியவில்லை. அவரது அவ்வியல்பு குறித்து புத்தர் கூறிய பாடல் இது.

*விளக்கம்*

1. குற்றம் என்பது மாசு. இரும்பிற்குத் துரு குற்றம் என்பது போல. துரு இரும்பிற்குக் குற்றமாகி இரும்பையே அழித்து விடுவதுபோல மந்திரத்தை ஓதாதிருப்பின் அது தன் பெருமையை இழந்து விடும். வீட்டைப் பழுது பாராதிருப்பின் வீடு பாழடைந்து விடும். சோம்பியிருப்பின் அழகு பாழாகும். காவலாளி அசட்டையாயிருப்பின் காவலால் பலனில்லை.

8. Mal' itthiyā duccaritaṁ
 maccheraṁ dadato malaṁ
Malā ve pāpakā dhammā
 asmiṁ loke paramhi ca. (242)

**மொழிபெயர்ப்பு**

தவறான நடத்தை பெண்ணுக்குக் குற்றமாகும். கஞ்சத்தனம் கொடுப்போர்க்குக் குற்றமாகும். இக்குற்றங்கள் இவ்வுலகிலும் மறுவுலகிலும் கேடு பயப்பனவாகும்.

9. Tato malā malataraṁ
 avijjā paramaṁ malaṁ
Etaṁ malaṁ pahatvāna
 nimmalā hotha bhikkhavo. (243)

**மொழிபெயர்ப்பு**

இவையனைத்தினும் மிகவும் மோசமான குற்றம் அறியாமை. எனவே பிக்குகளே இம்மாசினைக் களைக. மாசற்றவராகுக.

*குழல்*

புதிதாகத் திருமணமான ஒருவன் தன் மனைவி முன்னரே கற்புநெறியினின்றும் வழுவியவள் என்பதை அறிந்து கொள்கிறான். அதனால் அவன் தன் மனைவி மீது மிகுந்த வெறுப்படைந்தான். அவன் தன் மனநிலையை புத்தரிடம் வெளிப்படுத்தி ஆறுதல் வேண்டியபோது புத்தர் கூறிய பாடல் இது.

10. Sujīvaṁ ahirikena
kākasūrena daṁsinā
Pakkhandinā pagabbhena
saṁkiliṭṭhena jīvitaṁ. (244)

**மொழிபெயர்ப்பு**

புறங்கூறலும், அகந்தையும், இறுமாப்புடைமையும் குற்றமுடைய செயல்களையும் உடைய வெட்கம் கெட்டவர்களுக்கு[1] வாழ்க்கை எளிமையானதுதான்.

11. Hirīmatā ca dujjīvaṁ
niccaṁ sucigavesinā
Alīnen' appagabbhena
suddhājīvena passatā. (245)

**மொழிபெயர்ப்பு**

நாணமும் தூய்மையும் பற்றற்ற மனமும் எளிமையும் குற்றமற்ற வாழ்வும், நற்சிந்தனையும் உள்ள உயர்ந்தோர்க்கு வாழ்க்கை கடினமானதுதான்.

*குழல்*

இளம் துறவி ஒருவர் தமக்குக் கிடைத்த சுவையான உணவை மற்றொரு துறவிக்குக் கொடுத்து மீண்டும் அத்தகு உணவு கிடைக்கும் பொழுதெல்லாம் கொடுப்பதாகவும் வாக்களித்தார். ஆனால் அத்துறவியோ எந்தப் பதிலும் கூறாமல், நன்றியும் தெரிவிக்காது அவ்விடத்தை விட்டு அகன்றார். இந்நிகழ்ச்சியைக்

கேள்விப்பட்ட புத்தர் பெருந்தன்மையான மனத்தையும் காட்டுமிராண்டித் தனமான மனத்தையும் பற்றி விளக்கி இப்பாடல்களைக் கூறினார்.

*விளக்கம்*

1. Kākasūra என்னும் சொல்லிற்கு காக்கைகளுள் வலிமையுடைய என்பது சொல் பெயர்ப்பு. ஆனால் அத்தொடரின் மரபுப் பொருளாவது வெட்கம் கெட்ட என்பதாகும்.

12. Yo pāṇaṁ atipāteti
musāvādañ cā bhāsati
Loke adinnaṁ ādiyati
Paradārañ ca gacchati. (246)

**மொழிபெயர்ப்பு**

இவ்வுலகில் எவரொருவர் உயிர்க்கொலை செய்கின்றனரோ பொய்யுரைக்கின்றனரோ திருடுகின்றனரோ, பிறன் மனைவியை நயக்கின்றனரோ .....

13. Surāmerayapānañ ca
yo naro anuyuñjati
Idh'evaṁ eso lokasmiṁ
mūlaṁ khanati attano. (247)

**மொழிபெயர்ப்பு**

மது அருந்துகின்றனரோ, அவர்கள் இவ்வுலகில் தங்கள் வேரைத் தாங்களே துணித்துக் கொள்கின்றனர்.

14. Evaṁ bho purisā jānāhi
pāpadhammā asaññata
Mā taṁ lobho adhammā ca
ciraṁ dukkhāya randhayuṁ. (248)

மொழிபெயர்ப்பு

ஓ மானிடனே! இதனை அறிவாயாக. தீமைகளைக் கட்டுப்படுத்துவது சற்றுக் கடினமானதுதான். பேராசையும் வஞ்சனையும் உன்னைத் தீராத் துயரத்தில் இழுத்துச் செல்ல விடாதே.

*சூழல்*

புத்தரின் அறிவுரைகளில் ஒன்றையும் முறையாகப் பின்பற்ற இயலவில்லையே எனப் பல பிக்குகள் வருந்திச் சொல்ல, அவர்களது குறைகளைக் கேட்ட புத்தர் அறக் கோட்பாடுகளைப் பின்பற்றுவது மிகவும் கடினமானதுதான். அவற்றில் உயர்ந்தது தாழ்ந்தது என வேறுபாடு கருதாது அவற்றைப் பின்பற்ற முயல்வது அறிவுடைமை எனக் கூறும் வகையில் இப்பாடல்களைக் கூறினார்.

15. Dadāti ve yathāsaddhaṁ
yathā pasādanaṁ jano
Tattha yo maṅku bhavati
paresaṁ pānabhojane
Na so divā vā rattiṁ vā
samādhiṁ adhigacchati. (249)

மொழிபெயர்ப்பு

கொடுக்கும் மக்கள் தங்கள் மனமகிழ்விற்கு உகந்தபடி கொடுக்கின்றனர். அவ்வாறு பிறருக்கு உணவும் நீரும் கொடுப்பது கண்டு பொறாமையைப் படுபவன் இரவிலும் பகலிலும் மன அமைதியடைய மாட்டான்.

16. Yassa c'etaṁ samucchinnaṁ
mūlaghaccaṁ samūhataṁ
Sa ve divā vā rattiṁ vā
samādhiṁ adhigacchati. (250)

மொழிபெயர்ப்பு

ஆனால், இத்தகு உணர்வினை அடியோடு பெயர்த்தெடுத்து முழுவதும் அழித்து விட்டவர்கள் இரவிலும் பகலிலும் மன அமைதி பெறுகின்றனர்.

*சூழல்*

வாயில் காவலரின் மகனான இளம் துறவி ஒருவர் தன் உறவினர்களைத் தவிர ஏனைய இல்லறத்தாரைப் பற்றி அவர்கள் தானம் செய்வதைக் குறை கூறி வந்தார். அவர் கூற்றைப்பற்றி மற்றத் துறவிகள் ஆராய்ந்து பார்த்து அவரது கூற்றில் உண்மை இல்லாமையைக் கண்டறிந்து புத்தருக்குத் தெரிவித்தனர். புத்தர் அவர்களுக்கு நல்மனத்தோருடைய உயர்வான இயல்புகளையும், தீய மனத்தோருடைய இழிவையும் பற்றி விளக்கி இப்பாடல்களைக் கூறினார்.

17. Natthi rāgasamo aggi
natthi dosasamo gaho
Natthi mohasamaṁ jalaṁ
natthi tanhāsamā nadī. (251)

**மொழிபெயர்ப்பு**

ஆசையைப் போன்ற நெருப்பில்லை. பகைமையைப் போன்ற உறுதியான பிடி இல்லை. மோகத்தைப் போன்று வேறு வலையில்லை. வேட்கையைப் போன்று (பெருகியோடும்) நதியுமில்லை.

*சூழல்*

ஒரு சமயம் புத்தர் ஆறு பேர்களுக்கு அறம் உரைத்துக் கொண்டிருந்தார். அப்பொழுது அவர்களில் ஐவர் அவ்வுரையில் கவனமின்றி இருந்தனர். ஒருவர் மட்டும் ஆழ்ந்த கவனத்துடன் கேட்டுக் கொண்டிருந்தார். அவர்களது இந்நிலைக்கு காரணம் முற்பிறவிச் செயல்களே என்று புத்தர் அறிந்து கொண்டார். பின்பு ஆனந்தர், புத்தரிடம் அவர்களது அசட்டைக்குக் காரணம் கேட்டபோது அவர்களிடமிருந்த காமம், பகையுணர்வு, மோகம், அறியாமை, பேராசை ஆகிய குணங்களே காரணம் என்று விளக்கி இப்பாடலைக் கூறினார்.

18. Sudassaṁ vajjaṁ aññesaṁ
attano pana duddasaṁ
Paresaṁ hi so vajjāni
opuṇāti yathā bhusaṁ
Attano pana chādeti
kaliṁ' va kitavā saṭho. (252)

மொழிபெயர்ப்பு

பிறருடைய குற்றங்களைக் காண்பது மிக எளிது. ஆனால் தன்னுடைய குற்றத்தைக் காண்பது மிக அரிது. பிறருடைய குற்றங்களைப் பதரைத் தூற்றுவது போலத் தூற்றுபவர்கள், தவறாக விளையாடும் சூதாடி சூதுக் காய்களை மறைத்து விடுவது போலத் தன்னுடைய குற்றங்களை மறைத்து விடுகின்றனர்.

*சூழல்*

செல்வன் ஒருவன் புத்தரைக் காண மிக விருப்பத்துடன் இருந்தான். ஆனால் பிற சமயத்துறவிகள் புத்தரைப் பற்றி மிக இழிவாகக் கூறி, புத்தரைச் சந்திக்க விடாமல் அவனைத் தடுத்து வந்தனர். இதைக் கேள்விப்பட்ட புத்தர் கூறிய பாடல் இது.

மேற்கோள்

ஏதிலார் குற்றம்போல் தங்குற்றம் காண்கிற்பின்
தீதுண்டோ மன்னும் உயிர்க்கு. *(குறள் : 190)*

பிறன்பழி கூறுவான் தன்பழி யுள்ளும்
திறன்தெரிந்து கூறப் படும். *(குறள் : 186)*

துன்னியார் குற்றமும் தூற்றும் மரபினர்
என்னைகொல் ஏதிலார் மாட்டு. *(குறள் : 188)*

19. Paravijjānu passissa
niccaṁ vijjhānasaññino
Āsavā tassa vaḍḍhanti
ārā so āsavakkhayā. (253)

மொழிபெயர்ப்பு

பிறருடைய குற்றங்களையே பார்ப்பவர்கள் எப்பொழுதும் சினம் கொள்பவர்களாகவே உள்ளனர். அவர்கள் தங்கள் குற்றங்களை வளர விடுகின்றனர். அவர்கள் தங்கள் குற்றங்களைக் களைவதனின்றும் வெகு தூரத்திலுள்ளனர்.

*சூழல்*

பிக்கு ஒருவர் எப்பொழுதும் பிறருடைய குற்றங்களையே கண்டு புறம் பேசிக் கொண்டே இருந்தார். அவருடைய இயல்பு குறித்துப் புத்தர் கூறிய பாடல் இது.

20. Akāse padaṁ natthi
samaṇo natthi bāhire
Papañcā bhiratā pajā
nippapañcā Tathāgatā. (254)

**மொழிபெயர்ப்பு**

ஆகாயத்தில் எங்கும் வழித்தடம் இல்லை. வேறு சமயத்தில் (உண்மையான) துறவிகள்[1] இல்லை. மக்கள் உலகத்தில் ஆசையை வளர்க்கின்றனர். ததாகதர் (புத்தர்)[2] ஆசைகளைத் துறந்தவர்.

21. Akāse padaṁ natthi
samaṇo natthi bāhire
Sankhārā assatā natthi
natthi buddhānaṁ iñjitaṁ. (255)

**மொழிபெயர்ப்பு**

ஆகாயத்தில் எங்கும் வழித்தடம் இல்லை. பிற சமயத்தில் (உண்மையான ) துறவிகள் இல்லை. உலகில் நிலையான பொருள் ஏதும் இல்லை[3]. புத்தனிடத்தில் நிலை தடுமாற்றம் என்பதுமில்லை.

*சூழல்*

புத்தர் நிர்வாணம் அடையவிருக்கும் தறுவாயில் சுபத்தர் என்னும் துறவி ஒருவர் புத்தரிடம் வந்தார். அவர் பிற சமயங்களில் உள்ள துறவியரையும் ஆசிரியர்களையும் பற்றியும் அவர்களது தன்மைகளைப் பற்றியும் புத்தரிடமிருந்து அறிய விரும்பினார். அவருக்குப் புத்தர் கூறிய விளக்கமே இப்பாடல்கள்.

*விளக்கம்*

1. துறவிகள் எனக் குறிப்பிடுவது இங்கு ஞானியர்களை.

2. ததாகதர் – Tathāgata - - - - Tathā + gata அவ்வழியில் சென்றவர். முன்னைய புத்தர்கள் சென்ற வழியில் சென்றவர் என்பது பொருள்.

3. உலகப் பொருள்கள் ஏதும் நிலையானதல்ல. கணத்திற்கு கணம் மாறிக்கொண்டே இருப்பது. எப்பொருளும் ஒரு கணத்திற்கு மேல் நிலைத்திருப்பதில்லை. ஒன்றன் அழிவில் மற்றொன்று தோன்றும் இம்மாற்றத்தின் விளைவால் நமக்குப் பொருள்கள் நிலைத்திருப்பதுபோல் தோன்றுகிறது என்பது பௌத்த சமயக் கோட்பாடு.

---

## 19. DHAMAṬṬHA VAGGA[1]

### 19. சான்றோர் இயல்

1. Na tena hoti dammaṭṭho
 yen' attaṁ sahasā naye
Yo ca atthaṁ anatthañ ca
 ubho nicceyya paṇḍito. (256)

**மொழிபெயர்ப்பு**

வழக்குகளில் விரைந்து தீர்ப்பளிப்பவர் (நல்ல) நீதிபதியாகமாட்டார். வழக்குகளின் மெய்யும் பொய்யுமாகிய இருதரப்பினையும் நன்கு ஆராய்ந்து உறுதி செய்பவரே அறிஞர்.

2. Asāhasena dhammena
 samena nayati pare
Dhammassa gutto medhāvī
 dhammaṭṭo' ti pavuccati. (257)

**மொழிபெயர்ப்பு**

பிறருக்கு நிதானத்துடன் கூடிய சிந்தனையுடனும் நடுநிலையுடனும் நேர்மையுடனும் தீர்ப்பளிப்பவரும் நீதியைக் காப்பவருமானவரே சான்றோர் எனப்படுவார்.

*சூழல்*

புத்தர் காலத்தில் சில நீதிபதிகள் இலஞ்சம் வாங்கிக்கொண்டு வழக்கில் தீர்ப்பளித்துக் கொண்டிருந்தனர். அவர்களது அச்செயல் பற்றிச் சில பிக்குகள் கண்டறிந்து புத்தருக்குத் தெரிவித்தனர். அப்பொழுது புத்தர் கூறிய பாடல்கள் இவை.

1. Dhammattha என்பது அறநெறியில் நின்றவர் என்னும் பொருள் தருவது. அறநெறியில் நின்றவரைச் சான்றோர் எனச் சொல்லும் மரபு பற்றி இங்குச் சான்றோர் என மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. சமன்செய்து சீர்தூக்கும் கோல் போன்றவரைச் சான்றோர் என வள்ளுவரும் குறித்தல் காண்க.

மேற்கோள்

குணம்நாடிக் குற்றமும் நாடி அவற்றுள்
மிகைநாடி மிக்க கொளல். *(குறள் : 504)*

சமன்செய்து சீர்தூக்கும் கோல்போல் அமைந்தொருபால்
கோடாமை சான்றோர்க் கணி. *(குறள் : 118)*

3. Na tena paṇḍito hoti
yāvatā bahu bhāsati
Kemī averī abhayo
paṇḍito 'ti pavuccati. (258)

**மொழிபெயர்ப்பு**

ஒருவர் அதிகமாகப் பேசுவதாலேயே அவர் அறிஞர் ஆகிவிட மாட்டார். எவரொருவர் அமைதியும்[1] வெறுப்பின்மையும் அச்சமின்மையும் உடையவராக இருக்கிறாரோ அவரே அறிஞர் எனப்படுவார்.

*சூழல்*

பிக்குகளின் குழு ஒன்று தாங்கள் கற்ற நூலின் எண்ணிக்கையைக் கொண்டு தாங்களே பேரறிஞர்கள் எனக் கூறிக்கொண்டு எங்கும் குழப்பத்தை ஏற்படுத்திக் கொண்டே சென்றனர். அவர்களது இயல்பு பற்றி புத்தர் கூறிய பாடல் இது.

*விளக்கம்*

1 அமைதியானவர் என்பது தான் மட்டும் அமைதியாக இருப்பது மட்டுமன்றி பிறரையும் குழப்பத்திலும் கலக்கத்திலும் ஆழ்த்தாதிருப்பவர்கள் என்ற பொருளில் இங்குக் குறிக்கப்படுகிறது.

மேற்கோள்

எண்பொருள வாகச் செலச்சொல்லித் தான்பிறர்வாய்
நுண்பொருள் காண்ப தறிவு. *(குறள் : 424)*

சென்ற இடத்தால் செலவிடா தீதொரீஇ
நன்றின்பால் உய்ப்பதறிவு. *(குறள் : 422)*

4. Na tāvatā dhammadharo
yāvatā bahu bhāsati
Yo ca appaṁ pi sutvāna
dhammaṁ kāyena passati
Sa ve dhammadharo hoti
yo dhammaṁ nappamajjati. (259)

**மொழிபெயர்ப்பு**

ஒருவர் அதிகமாகப் பேசுவதனாலேயே அவர் அறத்தை நன்கு அறிந்தவராகிவிடமாட்டார். எவரொருவர் மிகக் குறைந்த அளவே கேட்டிருப்பினும் அதைத் தன் மனத்தில் உணர்ந்து கற்று[1] அறத்தை விட்டு விலகாமல் நிற்கின்றாரோ அவரே உண்மையில் அறத்தை நன்கு அறிந்தவராகிறார்.

*சூழல்*

பிக்கு ஒருவர் புத்தநெறிப்பாடல்களுள் ஒரே ஒரு பாடலை மட்டும் தெரிந்துகொண்டு காட்டிற்குச் சென்று தனிமையில் இருந்து முழு நம்பிக்கையுடனும், அன்புடன் அப்பாடலைப் பாடிக் கொண்டிருந்தார். அவரது அச்செயலைத் தேவதைகளெல்லாம் பாராட்டின. வேறு இரு பிக்குகள் அற நூல்களையெல்லாம் நன்கு கற்றுக்கொண்டு அதே காட்டிற்குச் சென்று அப்பாடல்களையெல்லாம் இசைத்தனர். ஆனால் அத்தேவதைகள் அவர்களைப் பாராட்டவில்லை. இதனால் கோபம் கொண்ட அவர்கள் புத்தரிடம் வந்து முறையிட்டனர். புத்தர் அவர்களுக்கு விளக்கமளிக்கும் வகையில் இப்பாடல்களைக் கூறினார்.

*விளக்கம்*

1. Kāyena என்னும் சொல்லிற்கு nāmakāyena என்று பொருள் கூறுவார். அஃதாவது மன உணர்வு அல்லது தன்னுணர்வு என்பது பொருள். உணர்ந்து கற்றல் என்பதாகும்.

மேற்கோள்

கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக. (குறள் : 391)

5. Na tena thero hoti
yen' assa palitaṁ siro
Paripakko vayo tassa
moghajiṇṇo' ti vuccati. (260)

மொழிபெயர்ப்பு

ஒருவரின் தலை நரைத்ததனாலேயே அவரைத் தேரர்[1] எனச் சொல்வதற்கில்லை. அவர் வயதால் முதியவராக இருக்கிறார். ஆனால் அவர் வீணாக வளர்ந்தவராகத்தான் சொல்லப்படுவார்.

6. Yamhi saccañ ca dhammo ca
ahiṁsā saññamo damo
Sa ve vantamalo dhīro
thero iti pavuccati. (261)

மொழிபெயர்ப்பு

எவரிடத்து உண்மையும், அறமும், அகிம்சையும், அடக்கமும் உள்ளதோ அந்தக் குற்றமற்ற அறிஞரே தேரர் எனச் சொல்லப்படுபவராவர்.

சூழல்

ஒரு சமயம் இளம் பிக்கு ஒருவரை அவரது உயரிய பண்புகள் குறித்துத் தேரர் எனப் புத்தர் குறிப்பிட்டார். ஆனால், அவரைத் தேரர் எனக் குறிப்பிட்டது எங்ஙனம் எனப் பிற பிக்குகள் புத்தரை வினவினர். அப்பொழுது தேரர் என்பதற்கான விளக்கத்தைத் தந்து இப்பாடலைக் கூறினார்.

விளக்கம்

1 தேரர் என்பது ஒருவர் உயர்நிலைத்துறவு பெற்றது முதல் பத்தாண்டுகள் துறவு வாழ்க்கை வாழ்ந்தவரைக்

குறிப்பிடும் சொல். அஃதாவது முதியவர் என்பது பொருள். ஒருவர் துறவியாகும் பொழுது அவருக்கு முதல் நிலைத் துறவு அளிக்கப்படும். பின்னர் ஐந்தாண்டுகள் கழித்து அவருக்கு உயர்நிலைத் துறவு அளிக்கப்படும். இப்பொழுதுதான் அவர் முழுத் துறவியாகிறார். இப்பாடலின் சூழலில் குறிப்பிடப்படும் துறவி முதல் நிலைத் துறவியிலேயே இருப்பவர்.

7. Nā vākkaraṇamattena
   vaṇṇapokkharatāya vā
Sādhurūpo naro hoti
   issukī maccharī saṭho. (262)

**மொழிபெயர்ப்பு**

பொறாமையும் தன்னலமும் வஞ்சகமும் உள்ளவர்கள் இனிமையான பேச்சும் அழகிய தோற்றமும் கொண்டு இருப்பதாலேயே நல்லியல்பினர் ஆகிவிட மாட்டார்கள்.

8. Yassa c' etaṁ samucchinnaṁ
   mūlaghaccaṁ samūhataṁ
Sa vantadoso medhāvī
   sādhurūpo' ti vuccati. (263)

**மொழிபெயர்ப்பு**

எவரொருவர் இவற்றையெல்லாம் [1] வேரோடு களைந்து எறிந்து விடுகின்றனரோ அந்த அறிஞரோ பகைமையை அழித்து விட்ட நல்லியல்பினர் என்று சொல்லப்படுவார்.

*சூழல்*

இளம் துறவியர் சிலர் தங்கள் ஆசிரியருக்கு உரிய மரியாதையை முறைப்படிச் செலுத்தி வந்தனர். இதைக் கண்ட நூல்வல்லார் சிலருக்குப் பொறாமை ஏற்பட்டது. அவ்விளம் துறவியர் தங்களையும் வணங்க வேண்டும் என்ற ஆசையால் அவர்கள் புத்தரிடம் சென்று புதிய மாணவத் துறவிகள் தங்களிடம் வந்து அறக்கோட்பாடுகளைச் சரி செய்து கொண்ட பின்னரே பிற

பயிற்சிகளைச் செய்ய வேண்டும் என்னும் விதியை வகுக்கும்படிக் கேட்டுக் கொண்டனர். அவர்களது தவறான எண்ணத்தை அறிந்து கொண்ட புத்தர் கூறிய பாடல் இது.

*விளக்கம்*

1. இவற்றை எனக் கூறியது முன் பாடலில் கூறியுள்ள பொறாமை, தன்னலம், வஞ்சகம் ஆகியவற்றை இவற்றை நீக்கினார்க்குப் பகையில்லையாகலின் பகையை அழித்துவிட்ட அறிஞர் என இப்பாடலில் குறிப்பிடுகிறார்.

மேற்கோள்

வஞ்ச மனத்தான் படிற்றொழுக்கம் பூதங்கள்
ஐந்தும் அகத்தே நகும். *(குறள் : 271)*

வானுயர் தோற்றம் எவன்செய்யும் தன்னெஞ்சம்
தானறி குற்றப் படின். *(குறள் : 272)*

மனத்தது மாசாக மா டார்நீ ராடி
மறைந்தொழுகு மாந்தர் பலர். *(குறள் : 278)*

9. Na muṇḍakena samaṇo
abbato alikaṁ bhaṇaṁ
Icchālobhasamāpanno
samano kiṁ bhavissati. (264)

**மொழிபெயர்ப்பு**

ஒழுக்கமில்லாதவரும், பொய் பேசுபவரும் தன் தலையை மழித்துக் கொள்வதாலேயே[1] துறவியாகார். வேட்கையை விடாதவர் எவ்வாறு துறவியாக முடியும்.

10. Yo ca sameti pāpāni
aṇuṁ thūlāni sabbaso
Samitattā hi pāpānaṁ
samaṇo' ti pavuccati. (265)

மொழிபெயர்ப்பு

சிறியனவும் பெரியனவுமான தீமைகளை எவரொருவர் களைகிறாரோ அவரே உண்மைத் துறவியாவார். ஏனெனில் அவர் எல்லாத் தீமைகளையும் வென்றவராவார்.

*சூழல்*

ஒரு துறவி மற்றொரு துறவியிடம் வாதத்தில் தோற்றுவிட்டார். தோற்றவர் வென்றவரை குறிப்பிட்ட நாளில் குறிப்பிட்ட இடத்தில் மீண்டும் வாதமிட அழைத்தார். ஆனால் அந்த நாளில் குறிப்பிட்ட நேரத்திற்கு முன்னரே அவர் அங்குச் சென்று இருந்து கொண்டு, காலத்தில் வராத துறவி தோல்வியடைந்தவர் எனக் கூறித் தானே வென்றதாக அறிவித்துக் கொண்டார். சிலர் இது பற்றி புத்தரிடம் தெரிவிக்க உண்மைத் துறவியின் இயல்பைக் கூறும் வகையில் புத்தர் இப்பாடல்களைக் கூறினார்.

*விளக்கம்*

1. துறவு நெறியில் செல்பவர்கள் தங்கள் தலையை மழித்துக் கொள்வது மரபு. துறவுச் சின்னங்களுள் இதுவும் ஒன்று.

மேற்கோள்

மழித்தலும் நீட்டலும் வேண்டா உலகம்
பழித்தது ஒழித்து விடின். *(குறள் : 280)*

நெஞ்சில் துறவார் துறந்தார்போல் வஞ்சித்து
வாழ்வாரின் வன்கணார் இல். *(குறள் : 276)*

11. Na tena bhikkhu hoti
yāvatā bhikkhate pare
Vissaṁ dhammaṁ samādāya
bhikkhu hoti na tāvatā. (266)

மொழிபெயர்ப்பு

பிறரிடத்தில் பிச்சையெடுப்பதாலேயே ஒருவர் பிக்கு ஆகமாட்டார்[1] அறநெறியிலிருந்து வழுவினோர்[2] பிச்சையெடுக்கும் தன்மையாலேயே பிக்கு ஆகமாட்டார்.

12. Yo' dha puññañ ca pāpañ ca
bāhetvā brahmacariyavā
Saṅkhāya loke carati
sa ve bhikkū' ti vuccati. (267)

மொழிபெயர்ப்பு

நன்மை தீமை இரண்டையும் கடந்தவர்களும் பிரம்மச்சரிய நெறியில் நிற்பவர்களும் இவ்வுலக இயல்பை உணர்ந்தவர்களுமே பிக்கு எனச் சொல்லப்படுவர்.

*சூழல்*

பிராமணன் ஒருவன் இல்லறத்தைத் துறந்து ஒரு சமயத்தைச் சார்ந்து பிச்சையெடுத்து வாழ்ந்து வந்தான். அவன் ஒரு சமயம் புத்தரைச் சந்தித்துத் தானும் பிச்சையெடுப்பதால் தன்னையும் பிக்கு எனக் கூற வேண்டும் எனக் கேட்டுக் கொண்டான். ஆனால் பிச்சையெடுப்பதாலேயே ஒருவர் பிக்கு ஆகமாட்டார் என்னும் கருத்தில் புத்தர் கூறிய பாடல்கள் இவை.

*விளக்கம்*

1. Bhikkhu என்னும் சொல் பிச்சை என்னும் பொருளுடைய Bhikkhā என்னும் சொல்லினின்று வந்தது. எனவே பிச்சையெடுப்போர் பிக்கு என ஆனது. பிக்குகள் தானாக வாய் திறந்து எதுவும் கேளார். அன்பர்கள் தானாகக் கொடுப்பதையே ஏற்றுக் கொள்வர். இச்சொல் பௌத்த சமயத் துறவியரை மட்டுமே குறிப்பதாக உள்ளது.

2. Vissaṁ dhamma - Vissaṁ என்னும் சொல்லிற்கு இரு பொருள் உண்டு. 1. ஒட்டு மொத்தமாக . 2. தீய நாற்றம். தம்மபத உரையில் Vissaṁ dhammaṁ-Vissaṁ gandhaṁ Vā kāyakāmmādikaṁ dhammaṁ எனக் குறிப்பதால் உரைகாரர் இரண்டாம் பொருளையே எடுத்துக் கொள்கிறார், எனத் தெரிகிறது. எனவே உரையில் குறிப்பிட்டபடி அறநெறியினின்றும் வழுவியோர் பிக்கு ஆகமாட்டார் எனப்

பொருள் கொள்ள வேண்டியுள்ளது. எனினும் V:ssaṁ dhammaṁ samādāya bhikkhu hoti எனக் கொண்டு முதல்பொருள் வழியில் அறநெறியை ஒரு பகுதி மட்டுமின்றி முழுக்கக் கடைபிடிப்பவரே பிக்கு ஆவார் எனப் பொருள் கூறுவோரும் உளர்.

13. Na monena munī hoti
mūḷharūpo aviddasu
Yo ca tulaṁ' va paggayha
varaṁādāya paṇḍito. (268)

14. Pāpāni parivajjeti
sa munī tena so munī
Yo munāti ubho loke
munī tena pavuccati. (269)

**மொழிபெயர்ப்பு**

மடமையும் அறியாமையும் கொண்ட ஒருவர் மௌனமாக இருப்பதாலேயே முனிவராகிவிட மாட்டார். எவரொருவர் துலாக்கோல் போன்றிருந்து நல்லவற்றைக் கொண்டு....

பாவங்களைக் கைவிட்டு இருக்கிறாரோ அவ்வறிஞரே முனிவர் எனப்படுவார். இரு உலகங்களையும்[1] அளந்தறிந்து தெரிந்து கொள்வதனாலேயே அவர்கள் முனிவர் எனச் சொல்லப்படுகின்றனர்.

*சூழல்*

இல்லறத்தோர் அளிக்கும் விருந்தினை உண்டு முடித்தவுடன் பௌத்தரல்லாத பிற துறவியர் உணவளித்தோரை வாழ்த்தினர். ஆனால் பௌத்தத் துறவிகள் அவ்வாறு வாழ்த்தாது அமைதியாகத் திரும்பினர். இதைக் கண்ட பொது மக்கள் புத்தரிடம் கேட்டுக் கொண்டதற்கிணங்க புத்தரும் தன் சமயத்தாரிடம் மக்களை வாழ்த்தும்படிக் கேட்டுக் கொண்டார். அதன்படி பிக்குகள் உண்டபின் உணவளித்தோரை வாழ்த்தினர். பின்னர் பிற துறவிகள்

அமைதியாகச் செல்லத் தொடங்கினர். மேலும் நீண்ட உரையாற்றும் பௌத்தர்களைப் பழித்தும் பேசினர். அப்பொழுது உண்மையான முனிவர்களின் தன்மையை விளக்க இவ்விரு பாடல்களையும் கூறினார்.

விளக்கம்

1. இருவுலகங்களாவன இம்மை, மறுமை என்னும் இரண்டையும் குறிக்கும். ஆனால் உரைகாரர் உள்கந்தம், வெளிக்கந்தம் எனக் குறிப்பதால் அவ்வாறும் கொள்ளலாம்.

15. Na tena ariyo hoti
yena pāṇāni hiṁsati
Ahiṁsā sabbapāṇānaṁ
ariyo'ti pavuccati. (270)

மொழிபெயர்ப்பு

பிற உயிர்களுக்குத் துன்பம் இழைப்பவர்கள் உயர்ந்தோராக மாட்டார்கள். பிற உயிர்களைத் துன்புறுத்தாது அன்பைச் செலுத்துவோரே உயர்ந்தோர் எனச் சொல்லப்படுவார்.

சூழல்

தன்னை உயர்ந்தோன் (Āriya) எனப் பெயரிட்டு அழைத்துக் கொண்ட ஒருவன் மீன் பிடித்துக் கொண்டிருந்தான். அவன் உயிர்க் கொலை செய்வதைக் கண்ட புத்தர் கூறிய பாடல் இது.

மேற்கோள்

அந்தணர் என்போர் அறவோர்மற் றெவ்வுயிர்க்கும்
செந்தண்மை பூண்டொழுக லான். (குறள் : 30)

16. Na sīlabbatamattena
bāhusaccena vā puna
Athavā samādhi lābhena
vivicca sayanena vā. (271)

17. Phusāmi nekkhammasukhaṁ
aputhujjanasevitaṁ
Bhikkhu vissāsaṁ āpādi
appatto āsavakkhayaṁ. (272)

**மொழிபெயர்ப்பு**

(பிக்குகளுக்குரிய ) ஒழுக்க நெறிகளாலும், விதியின்படி நடப்பதாலும் [1] அதிகமான கல்வியினாலும்,[2] சமாதி நிலை எய்துவதாலும், ஏகாந்த நிலையிருப்பதாலும்

சாதாரண மக்கள் அடையவியலாத பேரின்பத்தை அடைந்தேன் என்று சொல்வதாலும்[3] மட்டும் சாந்தியை [4] அடைய முடியாது. குற்றங்களை (ஆசவங்களை ) ஒழித்தால் மாத்திரமே அமைதியை அடைய முடியும்.

*சூழல்*

பிக்குகள் சிலர் வெவ்வேறு வகையான சித்திகளை அடைந்து அதனால் தருக்கி அரகந்த நிலையை அடைய முயலாது இருந்தனர். தாங்கள் அச்சித்திகளை அடைந்தமையாலேயே எப்பொழுதும் அரகந்தராகி விடலாம் என்பது அவர்களது எண்ணம். அவர்கள் எய்திய நிலைக்கு மகிழ்வுற்ற புத்தர் அவர்கள் தொடர்ந்து முன்னேறி அரகந்தநிலையை அடைய வேண்டும் என ஊக்கமூட்டும் வகையில் கூறிய பாடல்கள் இவை.

*விளக்கம்*

1. பிக்குகளுக்கு விதிக்கப்பட்ட நெறிமுறைகள். இவை பாதி மொக்க (Pātimokkha ) என்னும் நூலில் தொகுத்துக் கூறப்பட்டுள்ளன.

2. அதிகமான கல்வியாவது திரிபிடகங்களைக் கற்றல் என உரைகாரர் கூறுவார். எனினும் திரிபிடகங்கள் புத்தர் காலத்து இல்லையாகலின், இவ்விளக்கம் பொருந்தாது. எனவே உயர்ந்த அறங்கள் என அக்காலத்துச் சான்றோரால் உரைக்கப்பட்ட அறங்கள் என்பதே பொருந்தும்.

3. அஃதாவது மீண்டும் வாரா (anāgami) நிலையை அடைந்தவர்கள் என்பது உரை.

4. அரகந்த நிலையும், நிர்வாண நிலையும். குற்றங்கள் (ஆஸவங்கள்) உள்ள மனம் அலைந்து திரியும் தன்மை உடையது. குற்றங்கள் நீங்கின் மனம் அமைதியடைகிறது.

## 20. MAGGA VAGGA

### 20. நெறியியல்

1. Maggān' aṭṭhaṅgiko seṭṭho
saccānaṁ caturo padā
Virāgo seṭṭho dhammānaṁ
dipadānañ ca cakkhumā. (273)

**மொழிபெயர்ப்பு**

நெறிகளுள் எண் வகை நெறியே[1] உயர்ந்தது. வாய்மைகளுள் நான்கு வாய்மைகளே[2] மேலானவை. அறங்கள் அனைத்திலும் வேட்கையற்ற (நிர்வாண) அறமே உயர்ந்தது. மனிதருள்[3] (ஞானக்) கண்ணுள்ளோனே (புத்தன்) தலை சிறந்தவன்.

2. Eso va Maggo natth' añño
dassanassa visuddhiyā
Etamhi tumhe paṭipajjatha
mārass' etaṁ pamohanaṁ. (274)

**மொழிபெயர்ப்பு**

நற்காட்சி பெறுவதற்கு இதைத் தவிர வேறு நெறி இல்லை. இந்நெறியையே நீ பின்பற்று. இந்நெறியே மாரனை ஏமாற்றமடையச் செய்கிறது.

3. Etamhi tumhe paṭipannā
dukkhassantaṁ karissatha
Akkhāto ve mayā maggo
aññāya sallasanthanaṁ. (275)

மொழிபெயர்ப்பு

இந்நெறியில் செல்வதன் மூலம் நீ துன்பத்திற்கு முடிவு கட்டுகிறாய். நான் காட்டிய இந்நெறிகளின் மூலம் (உன்மேல் தைத்த) அம்புகளைக் களைந்தெறியத் தெரிந்து கொள்.

4. Tumhehi kiccaṁ ātappaṁ
akkhātāro tathāgatā
Paṭipannā pamokkhanti
jhāyino mārabandhanā. (276)

மொழிபெயர்ப்பு

நீங்களே செயற்பட முனைய வேண்டும் ததாகதர்கள் வெறும் போதகர்கள் மட்டுமே. இந்நெறியில் நுழைந்து தவமியற்றுவோர் இயமனுடைய கட்டிலிருந்து விடுபடுகின்றனர்.

*சூழல்*

புத்தர் பல ஊர்களுக்கும் சென்று அறநெறிகளை அறிவுறுத்தி இறுதியாகச் சாவத்தியில் ஜேதவனத்திற்கு வந்து சேர்ந்தார். அப்பொழுது புத்தரது மாணவர்கள் சிலர் இதுவரைத் தாங்கள் நடந்து வந்த வழியின் கடினத்தையும் எளிமையையும் பற்றிப் பேசிக் கொண்டிருந்தனர். அவர்களது உரையாடலைக் கேட்ட புத்தர் அவர்கள் குறிப்பிடும் வழியனைத்தும் வீடு பேற்றிற்கு உகந்தனவல்ல. உயர்நெறியாம் எண்வகை வாழ்நெறியே வீடுபேற்றிற்கு உகந்தது என்றுரைத்து இந்நான்கு பாடல்களையும் கூறினார்.

*விளக்கம்*

1. எண் வகை நெறிகளாவன,

1. நற்காட்சி 2. நல்லூற்றம் 3. நல்வாய்மை
4. நற்செய்கை 5. நல்வாழ்க்கை 6. நன்முயற்சி
7. நற்கடைப்பிடி 8. நல்லுளத்து ஓர்தலைப் பாடு.

இவை எட்டுமே வீடு பேற்றிற்கு உரிய (துன்ப நீக்கத்திற்குரிய) வழிகளாகும் என்பார் புத்தர்.

2. வாய்மை நான்காவன :

பிறந்தோர் உறுவது பெருகிய துன்பம்
பிறவார் உறுவது பெரும்பே ரின்பம்
பற்றின் வருவது முன்னது பின்னது
அற்றோர் உறுவது. *(மணி : 2 : 64 - 67)*

இவையே துன்பம், துன்பத் தோற்றம், துன்ப நீக்கம், துன்ப நீக்க நெறி என நான்காகக் கூறப்படுவன.

3. dipada என்பது இரு காலிகள் எனப் பொருள் தரும். இருகாலுடைய உயிர்களுள் தலையாயவன் மனிதனேயாதலின் இங்கு அப்பொருளைக் குறித்து நின்றது.

மேற்கோள்

கண்ணுடையர் என்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர். *(குறள் : 393)*

5. Sabbe saṅkhārā aniccā'ti
yadā paññāyā passati
Atha nibbindati dukkhe
esa maggo visuddhiyā. (277)

மொழிபெயர்ப்பு

தோன்றும் பொருள்கள் அனைத்தும்[1] அழியக் கூடியவை எனத் தன் அறிவால் கண்டு, பின்பு துன்பத்தை ஒருவன் வெறுத்தானாகில் அதுவே தூய நெறியாகும்.

*சூழல்*

பல பிக்குகள் வாழ்வின் நிலையற்ற தன்மையை உணர்ந்து தவமியற்றியதைப் புத்தர் தன் ஞானத்தால் அறிந்து அவ்வாறே தவமியற்றும்படிப் பிற பிக்குகளுக்கு அறிவுறுத்திக் கூறிய பாடல் இது.

*விளக்கம்*

1. Sankhārā என்பது பல பொருள் தரும் ஒருசொல் ஆகும். இவ்விடத்தில் sabbe sankhārā என்றதனால்

காட்சிக்குட்பட்ட தோற்றமுடைய பொருள்கள் என்னும் பொருளைத் தந்து நிற்கிறது.

மேற்கோள்

நாச்செற்று விக்குள்மேல் வாராமுன் நல்வினை
மேற்சென்று செய்யப் படும். *(குறள் : 335)*

குற்றமும் வினையும் பயனும் துன்பம்
பெற்ற தோற்றப் பெற்றிகள் நிலையா
எப்பொரு ளுக்கு மான்மா விலையென
இப்படி யுணரு மிவைவீட் டியல்பாம்.
*(மணிமேகலை : 30 : 175 = 178)*

6. Sabbe saṅkhārā dukkhā' ti
yadā paññāya passati
Atha nibbindati dukkhe
esa maggo visuddhiyā. (278)

**மொழிபெயர்ப்பு**

**தோற்றத்திற்குட்பட்ட பொருள்கள் அனைத்தும் துன்பம் தருவன என்று ஒருவன் தன் அறிவினால் கண்டுணர்ந்து, துன்பத்தை வெறுப்பானாகில் அதுவே தூய நெறியாகும்.**

*சூழல்*

பல பிக்குகள் தம் வாழ்வில் முன்புற்ற துன்பங்களை உணர்ந்து அதனின்றும் விடுபடத் தவமியற்றினர் எனவறிந்து அவ்வாறே தவமியற்றும்படி ஏனைய பிக்குகளுக்கு அறிவுறுத்திய பாடல் இது.

மேற்கோள்

குற்றமும் வினையும் பயனும் துன்பம்
பெற்ற தோற்றப் பெற்றிகள் நிலையா
எப்பொரு ளுக்கு மான்மா விலையென
இப்படி யுணரும் இவை வீட் டியல்பாம்,
*(மணிமேகலை : 30 : 175 : 178)*

7. Sabbe dhammā anattā' ti
yadā paññāya passati
Atha nibbindati dukkhe
esa maggo visuddhiyā. (279)

**மொழிபெயர்ப்பு**

எப்பொருளுக்கும்[1] ஆன்மா இல்லையெனத்[2] தன்னறிவால் கண்டுணர்ந்து துன்பத்தை வெறுப்பானாகில் அதுவே தூய நெறியாகும்.

*சூழல்*

பிக்குகள் பலரும் எப்பொருளுக்கும் ஆன்மா இல்லை எனத் தங்கள் அறிவால் கண்டுணர்ந்து தவமியற்றியதைப் புத்தர் தம் ஞானத்தால் அறிந்து அவ்வாறே தவமியற்றும்படி ஏனைய பிக்குகளுக்கும் கூறியது இப்பாடல்.

*விளக்கம்*

1 dhamma என்னும் சொல் சாதாரணமாக அறம் என்னும் பொருள் தந்தாலும் இவ்விடத்தில் அது பொருள்களைக் குறிக்க வந்தது.

2 இவ்வுடல் கந்தங்களாலானது இதற்கு ஆன்மா என ஒன்றில்லை. வினைகளின் பயனாய் இன்ப துன்பங்களை அனுபவித்து இறுதியில் நிர்வாணம் அடைவதே வாழ்வின் பயன் என்பது புத்த சமயக் கோட்பாடு.

மேற்கோள்

எப்பொரு ளுக்கும் ஆன்மா இலையென
இப்படி யுணரு மிவைவீட் டியல்பாம்
*(மணிமேகலை : 30 : 177 - 178)*

8. Uṭṭhānakālamhi anuṭṭhahāno
yuvā balī ālasiyaṁ upeto
Saṁsannasaṅkappamano kusīto
Paññāya maggaṁ alaso na vindati. (280)

மொழிபெயர்ப்பு

உழைக்கக் கூடிய காலத்தில் உழைக்காமலும் இளமையும் வலிமையும் உள்ள காலத்தில் சோம்பலும் மந்தமான புத்தியும் உள்ளவர்கள் அறிவின் வழியைக் காண மாட்டார்கள்.

*சூழல்*

மடத்திலிருந்த பல பிக்குகளும் தவமியற்றக் காட்டிற்குச் சென்றனர். ஒருவர் மட்டும் மடத்திலேயே தங்கி விட்டார். காட்டிற்குச் சென்றவர் அனைவரும் ஞானம் பெற்றுத் திரும்பினர். திரும்பிய அனைவரையும் அன்புடனும் நட்புரிமையுடனும் புத்தர் வாழ்த்தி வரவேற்றார். ஆனால் மடத்திலேயே தங்கியவரை அவர் கண்டு கொள்ளவில்லை. இது அந்தப் பிக்குவின் மனத்தை வெகுவாகப் பாதித்தது. தானும் ஏனையவரைப் போல் ஞானம் பெற விழைந்து முனைந்து செயல்படத் தொடங்கினார். ஆனால் எதிர்பாராத விதமாக ஒரு விபத்தில் சிக்கிப் பிற பிக்குகளின் உதவியை எதிர்பார்க்க வேண்டியவரானார். அவரது அந்தச் சோம்பல் நிலையைக் குறித்து புத்தர் கூறிய பாடல் இது.

மேற்கோள்

அன்றறிவாம் என்னா தறஞ்செய்க மற்றது
பொன்றுங்கால் பொன்றாத் துணை. *(குறள் : 36)*

9. Vācānurakkhī manasā susaṁvuto
kāyena ca akusalaṁ na kayirā
Ete tāyo kammapathe visodhaye
ārādhaye maggaṁ isippaveditaṁ. (281)

மொழிபெயர்ப்பு

சொற்காத்தல், மனத்தை அடக்கியாள்தல், உடலால் தீய செயல்களைச் செய்யாமல் தவிர்த்தல்[1] ஆகிய இம்மூன்று செயல்களையும் தூய்மை செய்து, முனிவர்கள் கண்ட நெறியினை போற்றிக் கொள்க.

*சூழல்*

பிக்கு ஒருவர் புறங்கூறும் இயல்புடையவராக இருந்தார். அவர் ஒரு சமயம் தன் புறங்கூறும் இயல்பால நண்பர்களாக இருந்த இரு பிக்குகள் பிரிவதற்குக் காரணமானார். இவ்வினையின் பயனாக இவர் இறந்த பின்பு கொடிய பேய் வடிவமுற்றார். ஒரு சமயம் தேரர் மொக்கலானர் அப்பேயினைச் சந்திக்க நேர்ந்தது. அது குறித்து அவர் புத்தரிடம் கூறினார். அப்பொழுது புத்தர், புறங்கூறும் இயல்பின் தீய விளைவுகளை எடுத்துரைத்து இப்பாடலைக் கூறினார்.

*விளக்கம்*

1. மனம் வாக்கு காயம் இம்மூன்றாலும் தீமைகள் செய்யாதொழிதல் வேண்டும் என்பது கருத்து.

10. Yogā ve jāyati bhūri
ayogā bhūrisaṅkhayo
Etaṁ dvedhā pathaṁ ñatvā
bhavāya vibhavāya ca
Tath' attānaṁ niveseyya
yathā bhūri pavaḍḍhati. (282)

**மொழிபெயர்ப்பு**

தியானத்தால் ஞானம் பெருகுகிறது. தியானம் செய்யாமையால் ஞானம் தேய்கிறது. (எனவே) ஆக்கமும் இழப்புமான இவ்விரு வழிகளைத் தெரிந்து கொண்டு ஞானம் வளரும் வழியில் செல்வாயாக.

*சூழல்*

பொட்டிலன் என்னும் பிக்கு அறநூல்களில் மிகுந்த புலமை பெற்றவராக இருந்தார். இருப்பினும் புத்தர் அவரைக் காலியான பொட்டிலன் என்றே அழைத்தார். அவ்வாறு அழைத்தாலாவது ஞானமடையும் நெறியினை அவர் சிந்திக்கட்டும் எனப் புத்தர் கருதினார். இக்குறிப்பினை உணர்ந்த பொட்டிலன் உடனே

தனிமையான ஓரிடத்திற்குச் சென்று தவமியற்றத் தலைப்பட்டார். அவர் இளம் துறவி ஒருவரது அறிவுரையை ஏற்றுத் தவமியற்றினார். அவரது நிலையைத் தன் ஞானத்தால் கண்டறிந்து புத்தர் அவர் முன் தோன்றி அவருக்கு உரிய வழிமுறைகளைக் காட்டி இப்பாடலைக் கூறினார்.

11. Vanaṁ chindatha mā rukkhaṁ
vanato jāyati bhayaṁ
Chetvā vanañ ca vanathañ ca
nibbanā hotha bhikkhavo. (283)

மொழிபெயர்ப்பு

பிக்குகளே தனி மரத்தையன்று, காட்டையே[1] வெட்டி வீழ்த்துங்கள். காட்டிலிருந்து அச்சம் தோன்றுகிறது. பெருமரங்களையும்[2] புதர்களையும்[3] வெட்டி வீழ்த்திக் காடுகளற்ற[4] நிலையை ஏற்படுத்துங்கள்.

12. Yāvaṁ hi vanatho na chijjati
aṇumatto pi narassa nārisu
Paṭibaddhamano va tāva so
vaccho khīrapako' va mātari. (284)

மொழிபெயர்ப்பு

பெண்களின் மேல் ஆண்களுக்குள்ள பற்று[5] சிறு அணுவின் அளவினதாயினும் அதனை அழிக்காது விடின், அது தாய்ப்பசவிடம் பால் குடிக்கும் கன்று போல வளர்ந்து விடும்.

*சூழல்*

தங்களுக்குத் தொண்டு செய்து வந்த மூதாட்டி ஒருத்தி இறந்து விட்டது குறித்து பிக்குகள் சிலர் கண்ணீர் விட்டு அழுதனர். அவர்கள் தம் இந்நிலையைக் கண்ட புத்தர் பற்றினை நீக்க அறிவுறுத்தி இப்பாடல்களைக் கூறினார்.

*விளக்கம்*

1. காடு என்பது ஆசை, கோபம் , மயக்கம் என்னும் குற்றங்களை.

2 Vana என்னும் சொல் பெரிய மரங்கள், காடு ஆகிய இரண்டையும் குறிக்கும். இங்கு பெரிய மரங்களைக் குறித்தது அஃதாவது பெரிய பற்றுகள்.

3 Vanatha என்பது சிறிய மரங்கள், புதர்கள் ஆகிய இரண்டையும் குறிக்கும் சொல். அஃதாவது சிறிதான பற்றுகளை இங்குக் குறித்து நிற்கிறது.

4 காடுகளற்ற நிலையாவது பற்றுகளற்ற நிலை.

5. Vanatha என்னும் சொல்லின் உட்பொருள் பற்று என்பது. சாதாரணமாக இச்சொல் சிறுமரங்கள் மற்றும் புதர்களைக் குறிக்கும். எனினும் புத்த இலக்கியங்களில் இது பற்றினையே குறித்து நிற்கும்.

13. Ucchinda sinehaṁ attano
kumudaṁ sāradikaṁ' va pāṇinā
Santimaggaṁ eva brūhaya
nibbāṇaṁ sugatena desitaṁ. (285)

**மொழிபெயர்ப்பு**

கூதிர் காலத்துக் குமுத மலரை (எளிதாகக்) கையால் பறிப்பது போன்று உன்னுடைய பாசத்தை அறுத்திடுக. அமைதி நிலையைப் பயில்க. நிர்வாண நிலை சுகதரால் அறிவுறுத்தப்பட்டது.

*சூழல்*

இளம் துறவி ஒருவர் உடலின் அழுக்குகளை எண்ணி தவமியற்றினார். எனினும் அதன் பயனை அவர் அடைய முடியவில்லை. புத்தர் அவர் முன் தோன்றி மனத்தின் பற்றுகளை அறுப்பதைக் குறிக்கும் வகையில் குமுத மலர் ஒன்றைக் கொடுத்தார். புத்தரின் குறிப்பை நன்கு உணர்ந்து கொண்ட அத்துறவி தன் மனத்தை ஏற்ற வகையில் பக்குவப்படுத்தித் தவம் செய்சு ஞான நிலையை எய்தினார்.

14. Idha vassaṁ vasissāmi
        idha hemantagimhisu
    Iti bālo vicinteti
        antarāyaṁ na bujjhati. (286)

மொழிபெயர்ப்பு

நான் மழைக் காலத்தில் இங்கு வசிப்பேன். குளிர் காலத்தில் இங்கு வசிப்பேன், கோடைக்காலத்தில் இங்கு வசிப்பேன் என மூடர்கள் சிந்தித்துக் கொண்டிருக்கின்றனர். ஆனால், அவர்களது இறுதிக்காலத்தை அவர்கள் உணர்வதில்லை.

*சூழல்*

வணிகன் ஒருவன் ஓர் ஆற்றங்கரையில் தன் உதவியாளர்களுடன் தங்கினான். அப்பொழுது அங்குப் பெரு மழை பொழிந்தது. அவ்வணிகன் தன்னுடன் கொண்டு வந்த பொருள்கள் அனைத்தையும் அருகிலுள்ள ஊர்களில் விற்று அங்கேயே பல காலமும் தங்கலாம் எனத் திட்டமிட்டான். ஆனால் அவனது இறுதிக்காலம் இன்னும் ஏழு நாளில் உள்ளது என அறிந்து புத்தர் இப்பாடலைக் கூறினார். இதைக் கேட்ட ஆனந்தர் அவ்வணிகனிடம் சென்று அவனது இறுதிக்காலம் பற்றிக் கூறினார். உடனே அவ்வணிகன் துயரமுற்று புத்தரையும் ஏனைய சங்கத்தாரையும் அழைத்துப் பணிவிடை செய்தான். புத்தர் அவனுக்குத் தியானம் செய்யும்படி அறிவுரை கூறினார். அவனும் அப்படியே செய்து ஞான நெறியின் முதல் நிலையான சோதபன்னர் நிலையை அடைந்தான். பின்னர் புத்தர் கூறிய படி ஏழாம் நாள் உயிர் துறந்தான்.

15. Taṁ puttapasusammattaṁ
        byāsatta manasaṁ naraṁ
    Suttaṁ gāmaṁ mahogho' va
        maccu ādāya gacchati. (287)

மொழிபெயர்ப்பு

தன் மக்கள் மீதும் பசு கன்று காலிகள் மீதும் பற்று கொண்ட மனத்தினராய் ஒரு மனிதன் வாழ்வானாகில் தூங்கிக்

கொண்டிருக்கும் ஊரை வெள்ளம் அடித்துப் போவது போன்று மரணம் அவனை அடித்துக் கொண்டு போய் விடும்.

*சூழல்*

கிசா கோதமி, இறந்த தன் குழந்தையைப் புத்தரிடம் கொண்டு வந்து அக்குழந்தையை எழுப்பித் தர வேண்டி நின்றாள். புத்தர் அவளிடம் இறப்பே நிகழாத வீட்டினின்றும் சிறிது கடுகு வாங்கி வரச் சொன்னார். எங்கெங்கு அலைந்தும் அப்படி ஒரு வீட்டைக் கண்டுபிடிக்க இயலாத நிலையில் அவள் உலக இயல்பினை அறிந்து துறவு நெறி மேற்கொண்டாள். அப்பொழுது புத்தர் அவளுக்குக் கூறிய பாடல் இது.

16. Na santi puttā tāṇāya
na pitā na' pi bandhavā
Antakenādhipannassa
natthi ñātisu tāṇatā. (288)

**மொழிபெயர்ப்பு**

மரணத்தினால் இழுத்துக் கொண்டு போகப் படுவோனுக்கு அவனுடைய மக்களும் தந்தையும் பிற சுற்றத்தினரும் பாதுகாப்பளிப்பதில்லை. (அச்சமயத்தில்) உறவினர்கள் பாதுகாவலர்களாவதில்லை.

17. Etaṁ atthavasaṁ ñatvā
paṇḍito sīlasaṁvutō
Nibbāṇa gamanaṁ maggaṁ
khippaṁ eva visodhaye. (289)

**மொழிபெயர்ப்பு**

ஒழுக்க நிலையை நன்கறிந்த அறிஞன் ஒருவன் இதனை நன்கறிந்து, நிர்வாண நிலைக்குச் செல்லும் வழியினை விரைந்து செம்மைப்படுத்த வேண்டும்.

*சூழல்*

ஒரு துயரமான சூழலில் தன் நெருங்கிய உறவினர்களையும் சுற்றத்தினரையும் ஒரு சேர இழந்த படாச்சாரா என்னும் பெண்ணொருத்தி மனம் கலங்கித் தெருவில் இங்குமங்கும் ஓட ஆரம்பித்தாள் அவளது நிலையை அறிந்த புத்தர் அவளைக் கட்டுப் படுத்தி அவளுக்கு ஆறுதல் கூறி இவ்விரு பாடல்களையும் கூறியருளினார்.

மேற்கோள்

அத்தமும் வாழ்வும் அகத்துமட் டேவிழியம் பொழுக
மெத்திய மாதரும் வீதிமட் டேவிம்மி விம்மியிரு
கைத்தலை மேல்வைத் தழுமைந் தரும்சுடு காடுமட்டே
பற்றித் தொடரும் இருவினை புண்ணிய பாவமுமே.

(பட்டினத்தார் )

---

## 21. PAKIṆṆAKA VAGGA

### 21. பொதுவியல்

1. Mattā sukhapariccāgā
passe ce vipulaṁ sukhaṁ
Caje mattā sukhaṁ dhīro
sampassaṁ vipulaṁ sukhaṁ. (290)

**மொழிபெயர்ப்பு**

**சிறிய** இன்பத்தை விடுவதன் மூலம் பேரின்பம் கிடைப்பதாக இருப்பின் அறிஞர்கள் பேரின்பத்தைக் கருதிச் சிற்றின்பத்தை விட்டொழிப்பாராக.

*சூழல்*

**ஒருமுறை** வைசாலி நாட்டில் பெரும் வறட்சி ஏற்பட்டு கொடிய பஞ்சமும் தீய சக்திகளின் கொடுமையும் மிகுதியாகத் தோன்றி நாட்டு மக்களைப் பெரிதும் துன்புறுத்தின. இத்துன்பத்திலிருந்து மக்களைக் காக்க அந்நாட்டினர் புத்தரை அழைத்தனர். அவர்களது அழைப்பினை ஏற்றுப் புத்தர் வைசாலிக்குச் சென்றார். அவர் வைசாலிக்குள் நுழைந்தவுடன் பெரும் அற்புதங்கள் நிகழ்ந்தன. வறுமை தீர்ந்தது. நாட்டு மக்கள் நலம் பெற்றனர். இந்நிகழ்ச்சி போல் முன்னொரு பிறவியில் புத்தர் சில சிறிய வசதிகளைத் துறந்ததன் மூலம் பிறருக்குக் கிட்டிய பெரும் இன்பத்தைக் குறிப்பிட்டு விளக்கி இப்பாடலைக் கூறினார்.

மேற்கோள்

சிற்றின்பம் சில்நீர சாயினும் அஃதுற்றார்
மற்றின்பம் யாவையும் கைவிடுப – முற்றும்தாம்
பேரின்ப மாக்கடல் ஆடுவார் வீழ்பவோ
பாரின்பப் பாழ்ங்கும்பியில்.

*(நீதிநெறி விளக்கம் : 87)*

2. Paradukkhūpadānena
attano sukhamicchati
Verasaṁsaggasaṁsaṭṭho
verā so na parimuccati. (291)

**மொழிபெயர்ப்பு**

பிறருடைய துன்பத்தில் தன்னுடைய இன்பத்தை ஒருவன் நாடுவானாகில் அவன் பகை என்னும் தளையில் அகப்பட்டு அப்பகைமையினின்றும் விடுபடுவதில்லை.

*சூழல்*

ஒருவருக்கொருவர் கடுமையாகப் பகைமை பாராட்டி வந்தனர் இருவர். இவர்களுடைய பகை அப்பிறவி மட்டுமன்றிப் பல பிறவிகளிலும் தொடர்ந்தது. பல பிறவிகளுக்குப் பின்னர் புத்தரது காலத்தில் அவர்களிருவரும் பிறந்திருந்த போது புத்தர் அவர்களிருவரையும் சமாதானப்படுத்தி அவர்களது பகைமையைத் தீர்த்து ஒற்றுமைப் படுத்தினார். அப்பொழுது புத்தர் கூறிய பாடல் இது.

மேற்கோள்

மறந்தும் பிறன்கேடு சூழற்க சூழின்
அறம்சூழும் சூழ்ந்தவன் கேடு. *(குறள் : 204)*

3. Yaṁ hi kiccaṁ tadapaviddhaṁ
akiccaṁ pana kayirati
Unnaḷānaṁ pamattānaṁ
tesaṁ vaḍḍhanti āsavā. (292)

மொழிபெயர்ப்பு

செய்ய வேண்டியவற்றைச் செய்யாமல் விடுவதும்[1] செய்யக் கூடாதனவற்றைச் செய்வதுமாக உள்ள அசட்டைத் தனம் கொண்டவர்களிடத்துக் குற்றங்கள் மிகுகின்றன.

4. Yesañ ca susamāvaddhā
niccaṁ kayagata sati
Akiccaṁ te na sevanti
kicce sātaccakārino
Satānaṁ sampajānānaṁ
atthaṁ gacchanti āsavā. (293)

மொழிபெயர்ப்பு

உடலைச் சோம்பலின்றிப் பழக்கும் சிந்தனையாளர்கள் செய்யக் கூடாதனவற்றைத் தவிர்த்துச் செய்ய வேண்டுவனவற்றைச் செய்கின்றனர். அப்படிப்பட்ட விழிப்பும் சிந்தனையும் உடையவர்களது குற்றங்கள் அழிகின்றன.

*சூழல்*

பிக்குகள் சிலர் தங்கள் கடமையாகிய தியானம் செய்தல் போன்ற செயல்களைச் செய்யாது, தங்கள் குடை, செருப்பு, உடை ஆகியவற்றை அழகு செய்யும் தேவையற்ற செயல்களைச் செய்து கொண்டிருந்தனர். அவர்களது செயலைக் கண்டித்துப் புத்தர் கூறிய பாடல் இது.

*விளக்கம்*

1. செய்ய வேண்டுவனவாவது நிர்வாணம் அடைதற்குரிய நெறிகள். அஃதாவது தியானம் செய்தல் முதலியனவாம்.

மேற்கோள்

செய்தக்க அல்ல செயக்கெடும் செய்தக்க
செய்யாமை யானும் கெடும். *(குறள் : 466)*

5. Mātaraṁ pitaraṁ hantvā
rājāno dve ca khattiye
Raṭṭhaṁ sānucaraṁ hantvā
anīgho yāti brāhmaṇo. (294)

**மொழிபெயர்ப்பு**

(ஆசை என்னும்) தாயையும்[1] (ஆணவம் என்னும்) தந்தையும்[2] கொன்று, (நிலைவாதம், சூனியவாதம் என்னும்) இருஅரசர்களையும் கொன்று[3], (புலன்கள் புலன் நுகர்ச்சிகள்) என்னும் நாட்டை[4] அதன் (பற்றாகிய) படைகளுடன்[5] அழித்த பிராமணன்[6] துன்பமின்றிப் போகிறான்.

6. Mātaraṁ pitaraṁ hantvā
rājāno dve ca sotthiye
Veyyaggha pañcamaṁ hantvā
anīgho yāti brāhmaṇo. (295)

**மொழிபெயர்ப்பு**

**தாய் தந்தையரைக் கொன்று இரு அரசர்களையும் அழித்து ஆபத்து நிறைந்த ஐந்து வழிகளையும் (தடைகளையும்) அழித்த[7] பிராமணன் துன்பமின்றிப் போகின்றான்.**

*சூழல்*

**புறத்தோற்றத்தில் மிகக் குள்ளமாக இருந்த ஞானி ஒருவர் செல்வதைக் குறிப்பிட்டுக் காட்டி அவர் ஞானியான தன்மையைப் பாராட்டிக் கூறிய பாடல் இது.**

*விளக்கம்*

**1. வேட்கையே மீண்டும் பிறப்பதற்குக் காரணம் ஆகலின் அது தாய் எனப்பட்டது.**

**2 நான் என்னும் அகந்தை வேட்கைக்கும் பிறவிக்கும் மூலகாரணமாகலின் அது தந்தை எனப்பட்டது.**

3. உலகம் நிலையானது என்னும் கொள்கையும், உலகம் சூனியமானது என்னும் கொள்கையும் பெரிதும் அறிவை மயக்கி ஆட்டிப் படைப்பவையாகலின் அவை இரண்டும் அரசர்கள் எனப்பட்டன.

4. புலன்களும் புலன் நுகர்ச்சியு மாகிய இவையே அனைத்துச் செயல்களுக்கும் நிலைக்களன்களாகலின் இவை நாடு எனப்பட்டது.

5. பற்றே செயல்களுக்குக் கருவியாகலின் அது படை எனப்பட்டது.

6. அரகந்தரையே பிராமணர் எனக் குறித்தார்.

7. Veyyaggha pañcamaṁ - இது ஐந்து தடைகளைக் குறிப்பது. ஐந்தனுள் ஐந்தாவது ஐயம் (Vicikicchā). Veyyaggha என்பது புலி திரியும் காடு. ஐயம் கொண்டிருத்தல் புலி திரியும் காட்டிற்குள் செல்வது போல் ஆபத்தினைத் தரவல்லது.

ஐந்து தடைகளாவன (Pañaca Nīvaraṇā)

1. புலனுகர் வேட்கை (Kāmacchanda)
2. தீய நோக்கம் (Vyāpāda)
3. கோபமும் வெறுப்பும் (Uddhacca - kukkucca)
4. சோம்பலும் அசட்டையும் (Thīna - middha)
5. ஐயம் (Vicikicchā)

இவ்வைந்தும் உயர்நிலையாம் ஞானம் பெறுதற்குரிய நெறியினை மறைக்கும் தடைக்கற்கள் போலிருத்தலின் தடைகள் எனப்பட்டன.

7. SuppaBuddhaṁ pabujjhanti
sadā Gotama sāvakā
Yesaṁ divā ca ratto ca
niccaṁ Buddhagatā sati. (296)

மொழிபெயர்ப்பு

கௌதமருடைய[1] விழிப்புணர்வுள்ள மாணவர்கள் புத்தருடைய[2] பெருமையை இரவும் பகலும் இடைவிடாது சிந்தித்துக் கொண்டிருந்து ஞானியாகின்றனர்.

8. SuppaBuddhaṁ pabujjhanti
sadā Gotama sāvakā
Yesaṁ divā ca ratto ca
niccaṁ dhammagatā sati. (297)

மொழிபெயர்ப்பு

கௌதமருடைய விழிப்புணர்வுள்ள மாணவர்கள் அறத்தின் பெருமையை இரவும் பகலும் இடைவிடாது சிந்தித்துக் கொண்டிருந்து ஞானியராகின்றனர்.

9. SuppaBuddhaṁ pabujjhanti
sadā Gotama sāvakā
Yesaṁ divā ca ratto ca
niccaṁ saṅghagatā sati. (298)

மொழிபெயர்ப்பு

கௌதமருடைய விழிப்புணர்வுள்ள மாணவர்கள் சங்கத்தின் பெருமையை இரவும் பகலும் இடைவிடாது சிந்தித்துக் கொண்டிருந்து ஞானியராகின்றனர்.

10. SuppaBuddhaṁ pabujjhanti
sadā Gotama sāvakā
Yesaṁ divā ca ratto ca
niccaṁ kāyagatā sati. (299)

மொழிபெயர்ப்பு

கௌதமருடைய விழிப்புணர்வுள்ள மாணவர்கள் உடலைப் பற்றி இரவும் பகலும் இடைவிடாது சிந்தித்துக் கொண்டிருந்து ஞானியராகின்றனர்.

11. SuppaBuddhaṁ pabujjhanti
sadā Gotama sāvakā
Yesaṁ divā ca ratto ca
ahiṁsāya rato mano. (300)

மொழிபெயர்ப்பு

கௌதமருடைய விழிப்புணர்வுள்ள மாணவர்கள் கொல்லாமையில் (அகிம்சையில்) இரவும் பகலும் இடைவிடாமல் மனமகிழ்வு கொண்டிருந்து முழு ஞானியராகின்றனர்.

12. SuppaBuddhaṁ pabujjhanti
sadā Gotamasāvakā
Yesaṁ divā ca ratto ca
bhāvanāya rato mano. (301)

மொழிபெயர்ப்பு

கௌதமருடைய விழிப்புணர்வுள்ள மாணவர்கள் இரவும் பகலும் இடைவிடாமல் தியானத்தில் மனமகிழ்வு கொண்டிருந்து ஞானியராகின்றனர்.

*சூழல்*

இளைஞன் ஒருவன் ஒரு சமயம் ஒரு பேயின் வயப்பட்டான். அவன் அப்பொழுது 'புத்தன் திருவடிபோற்றி 'எனக் கூறியதன் பயனாக அப்பேயின் பிடியினின்றும் விடுபட்டான். இதையறிந்த அந்நாட்டு மன்னன் புத்தரை அணுகிப் புத்தரைப் போற்றுவதே தீய சக்திகளிடமிருந்து விடுபடுவதற்குப் போதுமானதா எனக் கேட்டான். அப்பொழுது புத்தர் கூறியவை இப்பாடல்கள்.

*விளக்கம்*

1. கௌதமன் என்பது கௌதம புத்தரை.

2. புத்தர் எனக் குறிப்பது கௌதம புத்தர் உள்ளிட்ட இறந்த காலத்து எண்ணில் புத்தரை. இவருள் கௌதமரன்றி இருபத்தெழுவர் பெயர் தெரியவருகிறது.

| | | |
|---|---|---|
| 1. தண்ணகாரர் (திண்ணங்கரர்) | | 2. மேதங்கரர் |
| 3. சரணங்கரர் | 4. தீபங்கரர் | 5. கொண்டஞ்ஞர் |
| 6. மங்கலர் | 7. சமனர் | 8. இரேவதர் |
| 9. சோபிதர் | 10.அனோமதஸ்ஸி | 11. பதுமர் |
| 12. நாரதர் | 13. பதுமுத்தரர் | 14. சுமேதர் |
| 15. சுஜாதர் | 16. பியதஸ்ஸி | 17. அத்தஸ்ஸி |
| 18. தம்மதஸ்ஸி | 19. சித்தத்தர் | 20. திஸ்ஸர் |
| 21. புஸ்ஸர் | 22. விபஸ்ஸீ | 23. சிகி |
| 24. வெஸ்ஸபூ | 25. ககசந்தர் | 26. கோனகமனர் |
| 27. கஸ்ஸபர். | | |

இவர்களையடுத்து இருபத்தெட்டாவது கௌதமர்.

3.சங்கம் எனப்படுவது பௌத்த சமயத் துறவியர் கூட்டம்.

13. Duppabbajjaṁ durabhiramaṁ
durāvāsa gharā dukha
Dukkho samānasaṁvāso
dukkhānupatitaddhagū
Tasmā na c'addhagū siyā
na ca dukkhānupatito siyā. (302)

**மொழிபெயர்ப்பு**

துறவு பூணுவது கடினமானது. அதில் இன்பம் காண்பதும் கடினமானதுதான். (ஆனால்) இல்லறத்தில் இருப்பது கடினமும் துன்பமுமானது. தனக்கு இணையற்றாரோடு தொடர்பு கொள்வதும்

துன்பமானது. பிறப்பு இறப்பு எனத் திரிந்துழல்வதும் கடினமானது. எனவே பிறப்பு இறப்பில் உழன்று திரிந்து துன்பத்தைத் தேடி ஓடுவோனாக இராதே.

கதை

இளவரசன் ஒருவன் துறவு மேற்கொண்டு தவநெறி பற்றிக் காட்டினுள் சென்று தனித்திருந்து தவமியற்றினான். ஓரிரவில் அவன் பக்கத்து ஊரில் நடைபெற்ற திருவிழாவின் இசையைக் கேட்க நேர்ந்தது. உடனே அவனுக்குத் துறவு நெறியில் இருந்த ஆர்வம் குறைந்தது. ஆனால் அங்கிருந்த ஒரு மர தேவதை அவனை உற்சாகப்படுத்தி மேலும் தொடர்ந்து தவமியற்றும்படிக் கூறியது. ஆனாலும் அவன் அங்கிருந்து புறப்பட்டு வந்து புத்தரை அணுகி நடந்ததைக் கூறினான். அப்பொழுது புத்தர் கூறிய பாடல் இது.

மேற்கோள்

துன்பம் பலநாள் உழந்தும் ஒருநாளை
இன்பமே காமுறுவர் ஏழையார் - இன்பம்
இடைதெரிந்து இன்னாமை நோக்கிமனை யாறு
அடைவொழிந்தார் ஆன்றமைந் தார். *(நாலடியார் : 54)*

துன்பமே மீதூரக் கண்டும் துறவுள்ளார்
இன்பமே காமுறுவர் ஏழையர் - இன்பம்
இசைதொறும் கற்றதன் இன்னாமை நோக்கி
பசைதல் பரியாதாம் மேல். *(நாலடியார் : 60)*

14. Saddho sīlena sampanno
yasobhogasamappito
Yaṁ yaṁ padesaṁ bhajati
tattha tatth'eva pūjito. (303)

**மொழிபெயர்ப்பு**

முழு நம்பிக்கையும்[1] தூயநெறிகளும் உடைய ஒருவன் பெரும் புகழும் பெரும் செல்வமும் பெறுகிறான். அவன் எங்கெங்குச் சென்றாலும் அங்கங்கெல்லாம் பிறரால் வணங்கப்படுகிறான்.

*சூழல்*

மெய்யன்பன் ஒருவன் புத்தரைக் காணவந்த போது அவன் பெரிதும் மதித்துப் போற்றி வரவேற்கப்பட்டான். அப்பொழுது தேரா் ஆனந்தா் புத்தரை அணுகி அவ்வன்பன் இங்கு மட்டுமன்றி வேறு சமயத்திற்குச் சென்றாலும் அதே பெருமையை அடைவானா அல்லது இங்கு மட்டுமே அப்பெருமையை அடைகிறானா எனக் கேட்டார். அதற்கு புத்தா் கூறிய பாடல் இது.

*விளக்கம்*

1. Saddha - உண்மையில் உள்ள அசையாத அறிவு சார்ந்த நம்பிக்கை. பௌத்த சமயம் குருட்டு நம்பிக்கையை ஏற்றுக் கொள்ளாது

15. Dūre santo pakāsenti
himavanto'va pabbato
Asant'ettha na dissanti
ratti khittā yathā sarā. (304)

**மொழிபெயர்ப்பு**

இமயம் போன்று வெகு தூரமான இடத்திலிருப்பினும் சான்றோர் எங்கும் ஒளி விட்டுத் திகழ்கின்றனர். ஆனால் தீயோர் மிக அருகிலிருப்பினும் இருட்டில் எய்த அம்பு போல வெளியே தெரியாமல்[1] இருக்கின்றனர்.

*சூழல்*

அநாதபிண்டிகனுடைய மகள் சூளசுபத்தா (இளைய சுபத்தரை) என்பவள் பௌத்தரல்லாத ஒருவருக்கு மணமுடித்து வைக்கப்பட்டாள். அவள் தன் கணவன் வீட்டில் வாழச் சென்று விட்டாள். அங்கு அவளது நலனுக்காகக் கணவன் வீட்டினர் நிர்வாணத் துறவிகளுக்கு விருந்து படைத்து உபசரித்தனர். அவர்கள் இவளையும் சென்று அத்துறவிகளுக்குப் பணிவிடை செய்யும்படிக் கேட்டுக் கொண்டனர். ஆனால் இவள் அதை மறுத்துப் புத்தரின் பெருமைகளையும் அவர்தம் மாணவர்களையும் பற்றி எடுத்துரைத்தாள். உடனே அவளது மாமியார் புத்தரையும் அவரது மாணவர்களையும் மறுநாள் உணவிற்கு வரவழைக்கும்படிக்

கேட்டுக்கொண்டார். ஆனால் அவர்களோ அங்கிருந்து நெடுந்தொலைவில் இருந்தனர். எனினும்அவள் கலங்காது தன் அறைக்குள் சென்று தன் எண்ண அலைகளைச் செலுத்திப் புத்தரை அழைத்தாள். அப்பொழுது அநாதபிண்டிகள் புத்தரிடம் அமர்ந்து அறம் கேட்டுக் கொண்டிருந்தான். இறுதியில் அவன் புத்தரை மறுநாள் உணவிற்கு வரும்படி அழைத்தான். ஆனால் புத்தர் மறுத்து அவனது மகளின் வேண்டுகோளை ஏற்றுக் கொண்டிருப்பதாகக் கூறினார். இதனால் அவன் வியந்து தூரமான இடத்தில் உள்ள தன் மகள் எவ்வாறு அழைப்பு விடுத்தாள் எனக் கேட்க, புத்தர் கூறிய பாடல் இது.

*விளக்கம்*

1. வெளியே தெரியாது இருத்தல் என்பது புகழ்வழிப் பட்டு வெளியே தெரியாதிருத்தல்.

மேற்கோள்

பரந்த திறலாரைப் பாசிமேல் இட்டு
கரந்து மறைக்கலும் ஆமோ - நிரந்தெழுந்த
வேயின் திரண்டதோள் வேற்கண்ணாய் விண்ணியங்கும்
ஞாயிற்றைக் கைம்மறைப்பார் இல். *(பழமொழி : 34)*

16. Ekāsanaṁ ekaseyyaṁ
eko caramatandito
Eko damayaṁ attānaṁ
vanante ramito siyā. (305)

**மொழிபெயர்ப்பு**

தனியே இருந்து, தனியே அமர்ந்து, தனியே நடந்து, சோம்பலின்றிச் சுறுசுறுப்புடனிருந்து, தானே தன்னைக் கட்டுப்படுத்தி இருப்பவனுக்குக் காடு மிகவும் இன்பகரமானதாகும்.

*சூழல்*

துறவியர் பலரும் காட்டில் தனித்திருந்து தவமியற்றி இன்பம் கண்டு கொண்டிருந்தனர். அவர்களது அவ்வியல்பைப் பாராட்டிப் புத்தர் கூறிய பாடல் இது.

[illegible]

விளக்கம்

1. [illegible]

மேற்கோள்

[illegible]

16. Ekāsanaṁ ekaseyyaṁ
eko caramatandito
Eko damayaṁ attānaṁ
vanante ramito siyā (305)

பொழிப்புரை

[illegible]

விளக்கம்

[illegible]

## 22. NIRAYA VAGGA

### 22, ந ;கவியல்

1. Abhūtavādī ı rayaṁ upeti
yo c' āpi katvā na karomī' ti c'āha
Ubho' pi te pecca samā bhavanti
nihīnakammā manujā parattha. (306)

**மொழிபெயர்ப்பு**

**பொய்யன் நரகம் செல்கிறான். ஒன்றைச் செய்துவிட்டு இதை நான் செய்யவில்லை என்று சொல்பவனும் நரகத்திற்குச் செல்கிறான். இழிவினராகிய இவ்விருவரும் ஒரே தன்மையராக மறுவுலகில் கீழ்மைப்பட்ட செயல்களைச் செய்து கொண்டு துன்புறுகின்றனர்.**

*சூழல்*

பிற சமயத்தைச் சேர்ந்த சிலர் புத்தரின் பெருமையைக் குறைக்க வேண்டிச் சில ஆள்களை ஏவி ஒரு பெண்ணைக் கொன்று அந்த உடலைப் புத்தரின் குடிலுக்கு அருகிலிருந்த புதரில் இட்டனர். ஆனால், கொலையாளிகள் தங்கள் தவறை உணர்ந்து தாங்கள் செய்த கொலையை ஒப்புக் கொண்டு கொலை செய்ய ஏவியவர்களையும் காட்டிக் கொடுத்தனர். இத்தகைய தவறான நடவடிக்கைகளைக் குறித்துப் புத்தர் கூறிய பாடல் இது.

2. Kāsāvakaṇṭhā bahavo
pāpadhammā osaññatā
Pāpā pāpehi kammehi
nirayaṁ te upapajjare. (307)

மொழிபெயர்ப்பு

தோளில் துவராடை சுமந்தவர்களுள்ளும் தீயோரும் அடக்கமற்றோரும் பலர் உளர். தீவினையாளர் தங்களது தீவினையின் பயனாக நரகத்திற்குச் செல்கின்றனர்.

*சூழல்*

தேரர் மொக்கலானர் எலும்புக்கூடு வடிவான உடல் முழுவதும் தீயுடன் கூடிய ஒரு பேயைக் கண்டார். அவர் அது குறித்துப் புத்தரிடம் கூறிய போது தீய நெறியில் சென்ற துறவி ஒருவரே தன் தீவினையின் பயனாக அத்தகு பேயானதாகக் கூறி இப்பாடலைக் கூறினார்.

மேற்கோள்

மனத்தது மாசாக மாண்டார்நீ ராடி
மறைந்தொழுகு மாந்தர் பலர். *(குறள் : 276)*
வஞ்ச மனத்தான் படிற்றொழுக்கம் பூதங்கள்
ஐந்தும் அகத்தே நகும். *(குறள் : 271)*

3. Seyyo ayoguḷo bhutto
tattho aggisikhūpamo
Yañ ce bhuñjeyya dussīlo
raṭṭhapiṇḍaṁ asaññato. (308)

மொழிபெயர்ப்பு

அடக்கமற்ற தீய ஒழுக்கமுடைய துறவிகள் நாட்டுள் சென்று பிச்சையெடுத்து உண்பதைக் காட்டிலும் தீயின் சுடர் போன்று சிவக்கக் காய்ந்த இரும்புக் குண்டை விழுங்கலாம்.

*சூழல்*

துறவிகள் சிலர் தங்கள் வயிற்றை வளர்ப்பதற்காகத்

தங்களுக்குள் ஒருவருக்கொருவர் அவர்கள் அடையாத உயர் சிறப்பினை அடைந்ததாகப் பாராட்டிப் பிறரிடம் கூறிக்கொண்டிருந்தனர். கேவலமான இவ்வியல்பினைக் கண்டித்துப் புத்தர் கூறிய பாடல் இது.

4. Cattāri ṭhānāni naro pamatto
āpajjati paradārūpasevi
Apuñña lābhaṁ na nikāmaseyyaṁ
nindaṁ tatiyaṁ nirayaṁ catutthaṁ. (309)

**மொழிபெயர்ப்பு**

பிறன்மனை நயக்கும் பேதையரை நான்கு விதத் துன்பங்கள் சேர்கின்றன. அவை தீவினைப்பயன், அமைதியான தூக்கமின்மை பிறரால் பழிக்கப்படல், நரகம் ஆகிய நான்காகும்.

5. Apuñña lābho ca gati ca pāpikā
bhītassa bhītāya rati ca thokikā
Rājā ca daṇḍaṁ garukaṁ paṇeti
tasmā naro paradāraṁ na seve. (310)

**மொழிபெயர்ப்பு**

(பிறன்மனை நயந்தோனுக்குத்) தீவினைப்பயன் சேர்கிறது. அச்சத்தில் இருக்கும் அவர்கள் அடையும் இன்பமும் மிகவும் சிறிதே. மன்னனும் அவர்களுக்குக் கடுமையான தண்டனையளிக்கிறான். எனவே, மனிதன் பிறன்மனையை நோக்காதிருப்பானாக.

*சூழல்*

அழகிய இளைஞன் ஒருவன் பிறன் மனைவி மேல் ஆசை கொண்டு அவளைச் சேர்ந்தான். அவனது தீய செயலுக்காக அவன் பலமுறை கைது செய்யப்பட்டு அரசனிடம் கொண்டு செல்லப்பட்டான். ஆனால், செல்வந்தரான அவனது தந்தையின் காரணமாக ஒவ்வொரு முறையும் அரசன் அவனை எச்சரித்து விடுவித்தான். இறுதியில் அவன் தந்தை அவனைப் புத்தரிடம் அழைத்துச் சென்றனர். புத்தர் அவனுக்குக் கூறிய அறிவுரை இது.

மேற்கோள்

பகைபாவம் அச்சம் பழியென நான்கும்
இகவாவாம் இல்லிறப்பான் கண். *(குறள் : 146)*

அச்சம் பெரிதால் அதற்கின்பம் சிற்றளவால்
நிச் ல் ினையுங்கால் கோக்கொலையால் - நிச்சலும்
கும்பிக்கே கூர்த்த வினையால் பிறன்தாரம்
நம்பற்க நாணுடை யார். *(நாலடியார் : 81)*

அறம்புகழ் கேண்மை பெருமையிந் நான்கும்
பிறன்தாரம் நச்சுவார்ச் சேரா - பிறன்தாரம்
நச்சுவார் சேரும் பகைபழி பாவமென்
றச்சத்தோ டிந்நாற் பொருள். *(நாலடியார் : 82)*

6. Kuso yathā duggahito
hatthaṁ evānukantati
Sāmaññaṃ dupparāmaṭṭhaṁ
nirayāyūpakaḍḍhati. (311)

**மொழிபெயர்ப்பு**

**தருப்பைப் புல்லைத் தவறான முறையில் பற்றியிழுத்தால் அது கையை அறுத்துவிடும். அதுபோல் துறவறத்தைத் தவறாகப் பயன்படுத்துபவர்கள் நரகத்திற்கு இழுத்துச் செல்லப்படுகிறார்கள்.**

7. Yaṃ kiñci sithilaṁ kammaṁ
saṅkiliṭṭhañ ca yaṁ vataṁ
Saṅkassaraṁ brahmacariyaṁ
na taṁ hoti mahapphalaṁ. (312)

**மொழிபெயர்ப்பு**

**குறைகளுடன் கூடியதும், சரியான முறையில் செய்யப்படாததும் ஆன செயல்கள், ஒழுக்கமற்ற பிரம்மசரியம், இவை உயர்ந்த பலனைத் தாரா.**

8. Kayirā ce kayirāthenaṁ
dalhaṁ enaṁ parakkame
Sithilo hi paribbājo
bhiyyo ākirate rajaṁ. (313)

மொழிபெயர்ப்பு

செய்ய வேண்டிய செயல்களைச் சரியாகச் செய்ய வேண்டும். அதை முறையோடு வளர்த்துக் கொண்டே போக வேண்டும். ஒழுக்கம் தவறிய துறவி அழுக்கையே (தீமையையே) எங்கும் பரப்புகிறான்.

*சூழல்*

ஆணவம் மிக்க பிக்கு ஒருவன், அறிந்தே புல்லின் இதழ்களைப் பறித்து எறிந்தான்[1]. புத்தர் அவனது தவறான செயலைக் கண்டித்து இப்பாடல்களைக் கூறினார்.

*விளக்கம்*

1. பௌத்த நெறிப்படி எந்தவொரு பிக்குவும் தாவரங்களைக் கூடத் துன்புறுத்தக் கூடாது, பல்துலக்கும் குச்சிக்காகத் தவிர தாவரங்களின் கிளைகளை உடைத்தல் முதலாயின குற்றமாகும்.

9. Akataṁ dukkataṁ seyyo
pacchā tapati dukkataṁ
Katañ ca sukataṁ seyyo
yaṁ katva nānutappati. (314)

**மொழிபெயர்ப்பு**

**தீயசெயல்களைச் செய்யாமல் விடல் நன்று. ஏனெனில் பின்னர் அது துன்பத்தைத் தருகிறது. நல்ல செயல்களைச் செய்தல் நன்று. ஏனெனில் அதைச் செய்வதால் எவரும் துன்புறுவதில்லை.**

*சூழல்*

பொறாமை கொண்ட பெண்ணொருத்தி தன் கணவனுடன் தவறான உறவு கொண்ட வேலைக்காரியை மிகக் கொடுமையாகத் தண்டித்தாள். ஒரு சமயம் அக்கணவன் மனைவியர் புத்தரின் அறவுரையைக் கேட்டுக் கொண்டிருந்த போது அந்த வேலைக்காரி அங்கு வந்து நடந்ததனைத்தையும் புத்தரிடம் கூறினாள். அப்பொழுது புத்தர் தவறான செயல்களைச் செய்யற்க என அவர்களுக்குக் கூறிய அறிவுரைப் பாடல் இது.

மேற்கோள்

தீயவை தீய பயத்தலால் தீயவை
தீயினும் அஞ்சப் படும். *(குறள் : 202)*

10. Nagaraṁ yathā paccantaṁ
guttaṁ santarabāhiraṁ
Evaṁ gopetha attānaṁ
khaṇo ve mā upaccagā
Khaṇātītā hi socanti
nirayamhi samappitā. (315)

**மொழிபெயர்ப்பு**

எல்லைப்புற நகரத்தை உள்ளும் புறமும் எச்சரிக்கையாகக் காப்பது போல ஒருவன் தன்னைத் தானே காத்துக் கொள்ள வேண்டும். கணப்பொழுதையும் வீணாக்கக் கூடாது. கணப்பொழுதையும் காக்காதவன் நரகத்தை அடைகிறான்.

*சூழல்*

சில துறவிகள் எல்லைப்புற நகரத்திற்கருகில் வசித்து வந்தனர். நகரமக்கள் பகைவர்களிடமிருந்தும், கள்வர்களிடமிருந்தும் தங்களைக் காத்துக் கொள்வதில் அதிகக் கவனத்துடன் இருந்ததால் அப்பகுதியில் தங்கியிருந்த துறவிகளுக்கு வேண்டிய வசதிகள் கிடைக்கவில்லை. அந்தத் துறவிகள் புத்தரிடம்

தங்கள் நிலையைப் பற்றிக் கூறிய போது தங்களைத் தாங்களே கட்டுப்படுத்திக் காத்துக் கொள்ளும்படி புத்தர் அவர்களுக்குக் கூறிய அறிவுரைப்பாடல் இது.

மேற்கோள்

> வீணாள் படாஅமை நன்றாற்றின் அஃதொருவன்
> வாணாள் வழியடைக்குங் கல். *(குறள் : 38)*

11. Alajjitāye lajjanti
    lajjitāye na lajjare
    Micchādiṭṭhi samādānā
    sattā gacchanti duggatiṁ. (316)

**மொழிபெயர்ப்பு**

வெட்கப்படக் கூடாததற்கு வெட்கப்பட்டும், வெட்கப்பட வேண்டியதற்கு வெட்கப் படாமலும் இருப்பவன் தவறான காட்சியினனாய் நரகத்தை அடைகிறான்.

12. Abhaye ca bhayadassino
    bhaye cābhayadassino
    Micchādiṭṭhi samādānā
    sattā gacchanti duggatiṁ. (317)

**மொழிபெயர்ப்பு**

அஞ்சக் கூடாததற்கு அச்சமும் அஞ்சுவதற்கு அஞ்சாமையும் கொண்டவன் தவறான காட்சியினனாய் நரகத்திற்குச் செல்கிறான்.

ஆ. ப

நிகண்டவாதிகள்[1] அசேலகர்களைவிடச் சற்றுப் பரவாயில்லை. ஏனெனில், நிகண்டவாதிகள் தங்கள் மறையுறுப்பையேனும் மறைத்துக் கொள்கின்றனர் எனச் சில பிக்குகள் தங்களுக்குள் பேசிக் கொண்டனர். அவர்களது உரையாடலைக் கேட்ட புத்தர் கூறிய அறவுரை இது.

*விளக்கம்*

1. நிகண்டர்கள் எனப்படுபவர்கள் சமண சமயத்துறவிகள்.

2. அசேலகர்கள் ஆடை ஏதும் அணியாத நிர்வாணத் துறவிகள்.

மேற்கோள்

அஞ்சுவ தஞ்சாமை பேதைமை அஞ்சுவ
தஞ்சல் அறிவார் தொழில். *(குறள் : 428)*

13. Avajje vajjadassino
vajje cāvajjadassino
Micchādiṭṭhisamādānā
sattā gacchanti duggatiṁ. (318)

**மொழிபெயர்ப்பு**

தவறல்லாதனவற்றைத் தவறானதாகவும் தவறானவற்றைச் சரியானதாகவும் கருதுபவர்கள் தீக்காட்சியினராகி நரகத்திற்குச் செல்கின்றனர்.

14. Vajjañ ca vajjato ñatvā
avajjañ ca avajjato
Sammādiṭṭhisamādāna
sattā gacchanti suggatiṁ. (319)

**மொழிபெயர்ப்பு**

தவறானவற்றைத் தவறானதாகவும் தவறல்லாதனவற்றைச் சரியானதாகவும் காண்போர் நாற்காட்சியுடையராகி நற்கதியடைகின்றனர்.

*சூழல்*

பிற சமயத்தைச் சார்ந்தவர்களது மக்களுக்கு அவர்களது ஆசிரியர்கள், புத்தபிக்குகளுக்கு வணக்கம் செலுத்தக் கூடாது என்றும், புத்த மடத்திற்குள் செல்லக் கூடாது என்றும் அறிவுறுத்தி

இருந்தனர். ஒரு நாள் புத்த சமயக் குடும்பத்துக் குழந்தைகளும் பிற சமயத்துக் குழந்தைகளும் விளையாடிக் கொண்டிருந்தனர். அப்பொழுது அவர்களுக்குத் தாகம் ஏற்பட்டது. அவர்களுள் புத்த சமயச் சார்புக் குழந்தையை மடத்துக்குள் சென்று நீர் கொண்டு வரும்படி பிறர் கேட்டுக் கொண்டனர். அச்சிறுவனோ உள்ளே சென்று புத்தரிடம் செய்தியைக் கூறினான். புத்தர் அனைவரையும் உள்ளே அழைத்து வரும்படிக் கூறினார். அவனும் வெளியே வந்து அனைவரையும் உள்ளே அழைத்துச் சென்றான். அங்கு அவர்களது தாகத்தைத் தீர்த்தபின் புத்தர் அவர்களுக்கு அறிவுரை கூறினார். அவர்கள் மனம் புத்தர்பால் சென்றது. அவர்களது உரையாடலைக் கேட்ட பிற சமயப் பெற்றோர் முதலில் மனவருத்தம் கொண்டனர். பின்னர் அவர்களும் புத்தரிடம் வந்து அவரைப்பின் பற்றத் தொடங்கினர். அப்பொழுது புத்தர் அவர்களுக்குக் கூறிய அறிவுரை இது.

மேற்கோள்

பொருளல்ல வற்றைப் பொருளென் றுணரும்
மருளானாம் மாணாப் பிறப்பு. *(குறள் : 351)*

---

[illegible]

மேற்கோள்

சிதைவிடத்து ஒல்கார் உரவோர் புதையம்பிற்
பட்டுப்பாடு ஊன்றும் களிறு. (குறள் : 597)

## 23 NĀGA VAGGA

## 23 யானை இயல்

1. Ahaṁ nāgo'va saṅgāme
cāpāto patitaṁ saraṁ
Ativākyaṁ titikkhissaṁ
dussīlo hi bahujjano. (320)

**மொழிபெயர்ப்பு**

போர்க்களத்தில் யானை தன்மீது எய்யப்பட்ட அம்புகளைத் தாங்கிக் கொண்டு நிற்பது போல நான் (என் மீது தொடுக்கப்படும்) வசைச் சொற்களைத் தாங்கிக் கொள்கிறேன். ஏனெனில் உலகில் தீயவர்களே அதிகம்.

2. Dantaṁ nayanti samitiṁ
dantaṁ rajābhirūhati
Danto seṭṭho manussesu
yo' tivākyaṁ titikkhati. (321)

**மொழிபெயர்ப்பு**

பழக்கப்படுத்தப்பட்ட யானையையே ஊர்வலத்தில் கொண்டு செல்கின்றனர். பழகிய யானை மீது தான் அரசர் ஏறிச் செல்கிறார். பிறர் கூறும் வசைச் சொற்களைத் தாங்குவதற்குத் தங்களைப் பழக்கப்படுத்திக் கொண்டவர்கள் மனிதருள் மேலானவர்கள்.

3. Varaṁ assatarā dantā
āj̄āniyā ca sindhavā
Kuñjarā ca mahānāgā
attadanto tato varaṁ. (322)

**மொழிபெயர்ப்பு**

பழக்கப்படுத்தப்பட்ட கோவேறு கழுதைகள் நல்லன. அதுபோன்று நன்கு பழக்கிய சிந்து தேசத்துக் குதிரையும் நல்லது. பழக்கப்பட்ட குஞ்சரங்களும், மகாநாகாஎன்னும் யானையும்[1] நல்லன. ஆனால் தன்னைத்தானே கட்டுப்படுத்திக் கொண்டவன் மனிதர்களுள் உயர்ந்தவன்.

*சூழல்*

கோசாம்பியின் அரசி மாகந்தியா புத்தரின் மீது மிகுந்த பகைமை கொண்டு சிலருக்குக் கையூட்டுக் கொடுத்து புத்தரின் மீது வசைச் சொற்களைப் பரப்பச் செய்தான். அவர்கள் புத்தர் மீது கடுமையான வசைமொழிகளைப் பரப்பினர். அவ்வசைச் சொற்களைக் கேட்ட ஆனந்தர் மனம் தாளாமல் புத்தரிடம் சென்று கூறி அந்த நகரத்தை விட்டு வேறு நகரத்திற்குச் செல்ல வேண்டினர். ஆனால் புத்தர் அதுபற்றிக் கவலைப்படாது, இத்தகு வசைச் சொற்களையெல்லாம் தாங்குவதற்குப் பழக்கப்படுத்திக் கொள்ள வேண்டும் எனக் கூறித் தன்னை யானைக்கு உவமையாகக் கூறி, போர்களத்துள் புகுந்த யானை அம்புகளைத் தாங்குவது போன்று தான் வசைச் சொற்களைத் தாங்குவதாகக் கூறினார்.

*விளக்கம்*

1 மகாநாக என்னும் யானை அஜாதசத்துருவின் பட்டத்து யானையாகும். இதற்குத் தனபாலக என்னும் பெயரும் உண்டு.

4. Na hi etahi yānehi
gaccheyya agataṁ disaṁ
Yathā' ttanā sudantena
danto dantena gacchati. (323)

**மொழிபெயர்ப்பு**

புலன்களை அடக்கி உயர்நெறியில்[1] செல்லத் தம்மைப் பழக்கப்படுத்தி, அடக்கமுள்ள ஞானியர் நிர்வாண நிலைக்குச்[2] செல்வது போல இத்தகு வாகனங்களில்[3] ஏறி அந்நிலைக்குச் செல்ல ஒருவராலும் இயலாது.

*சூழல்*

யானைப் பாகன் ஒருவன் தன் யானையைக் கட்டுப்படுத்த இயலாமல் திணறிக் கொண்டிருந்தான். அதைப் பார்த்துக் கொண்டிருந்த பிக்கு ஒருவர் முன்னர் தான் யானைப்பாகனாக இருந்த அனுபவத்தைக் கொண்டு அவ் யானையை அடக்கும் வகை பற்றி மற்றொரு பிக்குவிடம் சொல்லிக் கொண்டிருந்தார். அதைக் கேட்டுக் கொண்டிருந்த பாகன் அம்முறையைப் பின்பற்றி யானையை அடக்குவதில் வெற்றி கண்டான். இதுபற்றி புத்தரிடம் கூறிய போது புத்தர் யானையை அடக்குவது போல் மனத்தை அடக்கக் கூறிய அறிவுரைப் பாடல் இது.

*விளக்கம்*

1. Sudantena - உயரிய நான்கு நெறிகளில் தன் மனத்தைக் கட்டுப்படுத்திப் பழக்கப்படுத்தல்.
2. agataṁ disaṁ - வாரா நிலை - நிர்வாண நிலை.
3. வாகனங்கள் - இங்கு யானை முதலியனவற்றைக் குறிக்க வந்தது.

5. Dhanapālako nāma kunjaro
katukappabhedano dunnivārayo
Baddho kabalaṁ na bhuñjati
sumarati nāgavanassa kunjaro. (324)

**மொழிபெயர்ப்பு**

காட்டிலிருந்து பிடிக்கப்பட்ட, அடக்கவியலாத, மதநீர் வழியும் தனபாலக[1] என்னும் யானை உணவுக் கவளத்தை உண்ணாமல் தான் முன்பு வாழ்ந்த யானைக் காட்டையே நினைத்துக் கொண்டிருக்கும்.

*சூழல்*

முதியவன் ஒருவன் தன் மக்களால் பாதுகாக்கப்படாமல் கைவிடப்பட்டு வருந்தியிருந்தான். ஒருநாள் அவன் புத்தரைச் சந்தித்துத் தன் குறைகளைச் சொன்னான். புத்தர் அவனுக்குச் சில அறிவுரை கூறி அதன்படி நடக்கச் சொன்னார். அவனும் அவ்வறிவுரையை ஏற்றுச் செயல்படுத்த, அவனுடைய மக்கள் அவனைக் காக்கத் தலைப்பட்டனர். அதனை அறிந்த புத்தர் பழக்கப்பட்ட யானை தன் தாயை நினைப்பது போல இம்மக்கள் தம் தந்தையை நினைத்துக் காக்கின்றனர் என்றுரைத்து இப்பாடலைக் கூறினார்.

*விளக்கம்*

1 தனபாலக என்னும் யானை அஜாதசத்துருவின் பட்டத்துயானை. ஒரு சமயம் தேவதத்தனின் சூழ்ச்சியினால் அவ்யானையைப் புத்தர் மீது ஏவிய போது அது புத்தரிடம் வந்து, பணிந்தது. அதனால் மகிழ்வுற்ற மக்கள் எறிந்த ஆபரணங்கள் அவ் யானையின் உடல் முழுதும் விழுந்திருந்தமையால் அது இப்பெயர் பெற்றது.

6. Middhī yadā hoti mahagghaso ca
niddāyitā samparivattasāyī
Mahā varāho' vā nivāpapuṭṭho
punappunaṁ gabbhaṁ upeti mando. (326)

**மொழிபெயர்ப்பு**

பெருந்தீனியுடன் தூக்கமும் கொண்டு, பன்றிகள் சேற்றில் புரள்வது போல் படுக்கையில் சோம்பலுடன் புரண்டு கொண்டு இருக்கும் மூடர்கள் மீண்டும் மீண்டும் பிறந்து கொண்டிருக்கிறார்கள்.

*சூழல்*

கோசல மன்னன் பெருந்தீனி தின்றதனால் நோய்வாய்ப்பட்டுத் துன்புற்றிருந்தான். அவனது துன்பத்தைக் கண்ட புத்தர் அவனது பெருந்தீனியை விடுமாறு கூறினார். புத்தரின் அறிவுரையை ஏற்று அவன் நடந்தமையின் உடல் நலம் பெற்று மகிழ்ந்தான். அச்சமயத்தில் புத்தர் கூறிய பாடல் இது.

மேற்கோள்

நெடுநீர் மறவி மடிதுயில் நான்கும்
கெடுநீரார் காமக் கலன். *(குறள் : 605)*

7. Idaṁ pure cittamacāri cārikaṁ
yen'icchakaṁ yatthakāmaṁ yathāsukhaṁ.
Tadajj' ahaṁ niggahessāmi yoniso
hatthippabhinnaṁ viya aṅkusaggaho. (326)

**மொழிபெயர்ப்பு**

முன்னர் மனமானது தான் விரும்பிய இடத்திற்கு விரும்பியவாறு விரும்பிய வழியில் அலைந்து கொண்டிருந்தது. இன்று யானைப்பாகன் அங்குசத்தால் யானையை அடக்குவது போல நான் மனத்தை முழுவதும் கட்டுப்படுத்திவிட்டேன்.

*சூழல்*

நல்லொழுக்கமும் நன்னெறியும் உடைய இளம் துறவி ஒருவன் தன் துறவு நிலையை விட்டுவிடத் துணிந்தான். ஆனால் அவனுடைய தாய் அவன் அவ்வாறு செய்வதைத் தடுத்து அவனுக்கு அறவுரை கூறினார். இறுதியில் துறவு வாழ்வில் உள்ள உயர்ந்த பலன்களை எண்ணித் தெளிந்து அந்நெறியிலேயே வாழத் தீர்மானித்தான். புத்தர் அவனது மனமாற்றத்ததைப் பாராட்டிக் கூறிய பாடல் இது.

மேற்கோள்

உரனென்னும் தோட்டியான் ஓரைந்துங் காப்பான்
வரனென்னும் வைப்பிற்கோர் வித்து. *(குறள் : 24)*

8. Appamādaratā hotha
sacittaṁ anurakkhatha
Duggā uddharath' attānaṁ
paṅke satto' va kuñjaro. (327)

மொழிபெயர்ப்பு

விழிப்புடன் இரு. உன் மனத்தை நல்ல முறையில் காத்துக் கொள். சேற்றில் சிக்கிய யானை அதனினின்றும் மீண்டுவருவது போல, தவறான நெறியினின்றும் மீண்டு வருக.

*சூழல்*

யானை ஒன்று சேற்றில் சிக்கிக் கொண்டது. யானைப்பாகன் போர்க்காலத்தைப் போலப் போர்ப்பறையை முழக்கினான். அதைக் கேட்ட யானை வெகுண்டெழுந்து சேற்றினின்றும் வெளியே வந்து விட்டது. இது புத்தரிடம் தெரிவிக்கப்பட்டது. புத்தர் யானையைப் போல உலகியல் சேற்றிலிருந்து வெளிவரும்படி பிக்குகளுக்குக் கூறிய அறிவுரை இது.

மேற்கோள்

சிதைவிடத் தொல்கார் உரவோர் புதையம்பிற்
பட்டுப்பா டூன்றும் களிறு. *(குறள் : 597)*

9. Sace labetha nipakaṁ sahāyaṁ
saddhiṁ caraṁ sādhuvihāridhīraṁ
Abhibhuyya sabbāni parissayāni
careyya ten' attamano satimā. (328)

மொழிபெயர்ப்பு

நல்லொழுக்கமும் நல்லறிவும் உள்ள விவேகமான துணைவன் கிடைப்பின் அத்துணைவனுடன் தீமைகளையெல்லாம் வென்று மகிழ்வுடனும் முழுமனத்துடனும் பழகுக.

10. No ce labetha nipakaṁ sahāyaṁ
saddhiṁ caraṁ sādhuvihāridhīraṁ
Rājā'va raṭṭhaṁ vijitaṁ pahāya
eko care mātaṅg' araññ' eva nāgo. (329)

மொழிபெயர்ப்பு

நல்லொழுக்கமும் நல்லறிவும் உள்ள விவேகமான துணைவன் கிடைக்காவிடின், தன்னை வென்ற பகைவரிடம் நாட்டைவிட்டுத்

தனியே வாழும் அரசன் போன்றும், யானைக் காட்டில் யானை தனியே திரிவது போன்றும் தனியே வாழ்வாயாக.

11. Ekassa caritaṁ seyyo
natthi bāle sahāyatā
Eko care na ca pāpāni kayirā
appossukko mātaṅgaraññ'eva nāgo. (330)

**மொழிபெயர்ப்பு**

மூடருடன் தொடர்பு கொண்டிருப்பதனினும் தனியே வாழ்தல் நன்று. யானைக் காட்டுள் யானை அச்சமின்றித் திரிவது போன்று பாவங்களைத் தவிர்த்து தனியே வாழ்வாயாக

*சூழல்*

கோசாம்பியில் பிக்குகளின் இரு குழுவினரிடையே நடந்த தகராறால் ஊர் மக்களும் இரு குழுவினராகப் பிரிந்து சண்டையிடத் தொடங்கினர். புத்தர் அவர்களுக்கு எவ்வளவோ அறிவுரை கூறியும் அவர்கள் அவ்வறிவுரையை ஏற்றுக் கொள்ளும் மன நிலையில் இல்லை இதனால் மனவருத்தம் கொண்ட புத்தர் அவர்கள் அனைவரையும் விட்டுத் தனியே காட்டிற்குச் சென்று சில காலம் வாழ்ந்தார். அப்பொழுது அவருக்குப் பறவைகளும் குரங்குகளும் யானைகளும் பணிவிடை செய்தன. பின்னர் பிக்குகள் மனம் திருந்தி புத்தரிடம் மன்னிப்புக் கேட்க, தனது தனிமை விரதத்தை விட்டார் புத்தர். அவர் காட்டில் தனியாக வாழ்ந்த வகையினைக் கூறுமுகமாக இப்பாடல்களைக் கூறினார் புத்தர்.

12. Atthamhi jātamhi sukha sahāyā
tuṭṭhī sukhā yā itarītarena
Puññaṁ sukhaṁ jīvitasaṅkhayamhi
sabbassa dukkhassa sukhaṁ pahānaṁ.
(331)

**மொழிபெயர்ப்பு**

தேவை ஏற்படும் பொழுது (துன்பமுற்ற காலத்து) உதவும் நண்பர்களைப் பெறல் இனிது. (உள்ளத்தைக் கொண்டு)

எவ்வகையிலும் நிறைவடைவது இனிது. வாழ்வின் இறுதிக்காலத்தில் புண்ணியம் உடன் வருதல் இனிது. பாவங்களையெல்லாம் விட்டொழித்தல் இனிது.

13. Sukhā matteyyatā loke
atho petteyyatā sukhā
Sukhā sāmaññatā loke
atho brahmaññatā sukhā. (332)

**மொழிபெயர்ப்பு**

தாயைப் போற்றிப் பணிவிடை செய்தல் இனிது[1]. தந்தையைப் போற்றிப் பணிவிடை செய்தல் இனிது. துறவோரைப் போற்றிப் பணி செய்தல் இனிது. சான்றோரைப் போற்றிப் பணிவிடை செய்தல் இனிது.

14. Sukhaṁ yāva jarā sīlaṁ
sukhā saddhā patiṭṭhitā
Sukho paññāya paṭilābho
Pāpānaṁ akaraṇaṁ sukhaṁ (333)

**மொழிபெயர்ப்பு**

முதுமை வரையிலும் ஒழுக்கத்துடன் இருத்தல் இனிது. அறநெறியில் நம்பிக்கை கொண்டொழுகல் இனிது. ஞானம் பெறுதல் இனிது. தீவினையைத் தவிர்த்தல் இனிது.

*சூழல்*

மாரன் புத்தரைத் துறவு நெறியினின்றும் திருப்பி உலகியலில் செலுத்த முயலும் முயற்சியில் புத்தரைப் பெரும் மன்னனாக்கி மிகுந்த இன்பங்களைத் தருவதாகக் கூறினான். அப்பொழுது புத்தர் இன்பம் என்பது தன்னைப் பொறுத்த மட்டில் மாரன் கூறுவனவல்ல என்றும், இவ்விவைதாம் இன்பம் என்றும் விளக்கும் வகையில் கூறும் பாடல்கள் இவை.

*விளக்கம்*

1. Matteyyatā - உரைகாரரின் விளக்கப்படி தாயிடம் நல்வகையில் நடந்து கொள்ளல். அஃதாவது தாயைப் போற்றிப் பணிவிடை செய்தல் என்பது பொருள்.

## 24 TANHĀ VAGGA

## 24 வேட்கை இயல்

1. Manujassa pamattacārino
   taṇhā vaḍḍhanti māluvā viya
   So plavati hurāhuraṁ
   phalāṁ icchaṁ' va vanasmiṁ vānaro. (334)

**மொழிபெயர்ப்பு**

விழிப்பற்றவனிடம் வேட்கை [1] மாலுவாக் கொடியைப் போன்று விரைந்து படர்கிறது. பழத்தை விரும்பிய குரங்கு காட்டில் மரத்திற்கு மரம் தாவுவது போன்று அவன் பிறவிக்குப் பிறவி தாவுகின்றான்.

2. Yaṁ esā sahatī jammī
   taṇhā loke visattikā
   Sokā tassa pavaḍḍhanti
   abhivaṭṭhaṁ' va bīraṇaṁ. (335)

**மொழிபெயர்ப்பு**

இழிவானதும் பற்றிக் கொள்வதுமான வேட்கையால் இவ்வுலகில் வெல்லப்பட்டவர்களின் துயரம் மழைக்காலத்தில் வெட்டிவேர்ப்புல் வளர்வது போன்று விரைந்து வளர்கிறது.

3. Yo c'etaṁ sahatī jammiṁ
tanhaṁ lo'-e duraccayaṁ
Sokā tanl a papatanti
udabindū'va pokkharā. (336)

மொழிபெயர்ப்பு

இழிவானதும் நீக்குதற்கு அரியதுமான வேட்கையை இவ்வுலகில் யார் வென்று விடுகின்றாரோ அவரது துன்பங்கள் தாமரையிலைத் தண்ணீர்த்துளி போன்று அவரை ஒட்டாமல் ஓடிவிடுகின்றன.

4. Taṁ vo vadāmi bhaddaṁ vo
yāvant' ettha samāgatā
Taṇhāya mūlaṁ khaṇatha
usīrattho' va bīraṇaṁ
Mā vo naḷaṁ va sota' va
māro bhañji punappunaṁ. (337)

மொழிபெயர்ப்பு

எனவே இங்குக் கூடியுள்ள உங்கள் அனைவருக்கும் நல்வாக்குக் கூறுகிறேன். வெட்டிவேர்ப் புல்லின் கிழங்கை அதன் நறுமணத்திற்காகத் தோண்டி எடுப்பது போன்று வேட்கையைத் தோண்டி எடுங்கள். நாணல் புல்லை வெள்ளம் மீண்டும் மீண்டும் கீழே அழுத்துவது போல் நீங்கள் மாரனால் மீண்டும் மீண்டும் நசுக்கப்படாதீர்கள்.

*சூழல்*

அறநூல்களை நன்கு கற்றுத் தேர்ந்த பிக்கு ஒருவர் மிகுந்த அகந்தையுடன் இருந்தார். அவர் தன் ஆணவத்தால் பிறரை இழிவு படுத்தி வந்தார். அவரது இயல்பு குறித்துப் புத்தர் பேசும் பொழுது கூறிய பாடல்கள் இவை.

*விளக்கம்*

1. வேட்கை மூவகைப்படும்.

1. காம வேட்கை (Kāma taṇhā) 2. உலக வாழ்வில் வேட்கை (Bhava taṇhā ) 3. அழித்தல் வேட்கை (Vibhavataṇhā) இம்மூன்றும் தொழிற்கருவிகளான மெய், வாய், கண், மூக்கு, செவி, மனம் என்னும் ஆறுடனும் அறிகருவிகளான ஊறு, சுவை, ஒளி, நாற்றம், ஓசை, எண்ணம், என்றும் ஆறுடனும் ஆக மொத்தம் பன்னிரண்டுடனும் சேர்ந்து முப்பத்தாறாகிறது. இம்முப்பத்தாறும் கடந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் என்னும் முக்காலங்களுடனும் சேர்ந்து நூற்றெட்டாகிறது.

மேறகோள்

அகந்தைக் கிழங்கை யகழ்ந் தெடுக்கும் தொழும்பர்.
(மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ் : வருகைப் பருவம்)

அவாஎன்ப எல்லா உயிர்க்குமெஞ் ஞான்றும்
தவாஅப் பிறப்பீனும் வித்து. *(குறள் : 361)*

அவாஇல்லார்க் கில்லாகும் துன்பம்அஃ துண்டேல்
தவாஅது மேன்மேல் வரும். *(குறள் : 368)*

5. Yathā' pi mūle anupaddave daḷhe
cinno' pi rukkho punareva rūhati
Evaṁ pi taṇhānusaye anūhate
nibbattati dukkhaṁ idaṁ punappunaṁ. (338)

**மொழிபெயர்ப்பு**

வேர் சிதையாமலும் உறுதியாகவும் இருக்கும்படி விட்டு வெட்டப்பட்ட மரம் மீண்டும் மீண்டும் துளிர்ப்பது போன்று வேட்கை முழுவதுமாகக் களையப் படாவிடின் மீண்டும் மீண்டும் அவனைத் துன்பம் தொடர்கிறது.

6. Yassa chattiṁsatī sotā
manāpassavanā bhusā
Vāhā vahanti duddiṭṭhiṁ
saṅkappā rāganissitā. (339)

மொழிபெயர்ப்பு

நற்காட்சியற்றவனும் புலனின்ப வழியாக முப்பத்தாறு கிளைகளாகப் பாயும் வேட்கையென்னும்[1] வெள்ளத்தையுடையவனுமாகிய ஒருவன் காமமாகிய வெள்ளத்தால் அடித்துப் போகப்படுகிறான்.

7. Savanti sabbadhi sotā
latā ubbhijja tiṭṭhati
Tañ ca disvā lataṁ jātaṁ
mūlaṁ paññāya chindatha. (340)

மொழிபெயர்ப்பு

அவாவென்னும் வெள்ளம் எங்கும் பாய்கிறது. ஆசையென்னும் கொடி துளிர்த்து படர்கிறது. இக்கொடியின் வளர்சசியை அறிந்து அதை வேரோடு பிடுங்கி எறியுங்கள்.

8. Saritāni sinehitāni ca
somanassāni bhavanti jantuno
Te sātasitā sukhesino
te ve jātijarūpagā narā. (341)

மொழிபெயர்ப்பு

உலக இன்பங்களில் நாட்டம் கொண்டு ஒருவோன் வேட்கையின் வயப்படுகிறான். புலன் வழி இன்பத்தால் கவரப்பட்டவன் அதைத் தேடியலைகிறான். அத்தகையோன் நிச்சயமாக இவ்வுலகில் பிறந்து மூப்படைந்து இறக்கிறான்.

9. Tasiṇāya purakkhatā pajā
parisappanti saso' va bādhito
Saññojanasaṅgasattā
dukkhaṁ upenti punappunaṁ cirāya.(342)

மொழிபெயர்ப்பு

வேட்கையினால் கட்டப்பட்ட மனிதன் கட்டப்பட்ட முயல் போன்று இங்குமங்கும் அலைகிறான். அவன் தளைகளால் கட்டப்பட்டு[2] மீண்டும் மீண்டும் துன்பத்தில் வீழ்கின்றான்.

10. Tasiṇāya purakkhatā pajā
parisappanti saso' va bādhito
Tasmā tasiṇaṁ vinodaye
bhikkhu ākaṅkhī virāgamattano. (343)

மொழிபெயர்ப்பு

வேட்கையினால் கட்டப்பட்ட மனிதன் கட்டப்பட்ட முயல் போன்று இங்குமங்கும் அலைகிறான். எனவே வேட்கையினின்றும் விடுபட விரும்பும் பிக்குகள் தங்களது ஆசையை விட்டொழிப்பாராக.

சூழல்

புத்தர் ஒரு சமயம் ஒரு மரத்தடியில் ஒரு பெண் பன்றிக் குட்டியைப் பார்த்தார். அவர் அப்பன்றியின் முற்பிறவிகளைத் தன் ஞானத்தால் உணர்ந்து, அது முற்பிறவிகளில் சிலவற்றில் உயர்ந்த நிலையில் இருந்தமையையும் ஏனையவற்றில் மிக இழிவான நிலையில் துன்புற்றமையையும் எடுத்துக் கூறி வேட்கையினால் ஏற்படக்கூடிய பலவகைத் துன்பங்களையும் குறித்து இந்த ஆறு பாடல்களிலும் கூறினார்.

விளக்கம்

1. பார்க்க பாடல் எண் 334. இன் விளக்கம்.
2. தளைகள் ஐந்து. அவை. ஆசை, வெறுப்பு, மயக்கம், அகந்தை, தவறான கோட்பாடு என்பனவாம்.

ஒப்புநோக்கற்கோள்

அவாவினை ஆற்ற அறுப்பின் தவாவினை
தான்வேண்டும் ஆற்றான் வரும். (குறள் : 367)

ஆரா இயற்கை அவாநீப்பின் அந்நிலையே
பேரா இயற்கை தரும். (குறள் : 370)

11. Yo nibbanatho vanādhimutto
vanamutto vanaṁ eva dhāvati
Taṁ puggalaṁ etha passatha
mutto bandhanaṁ eva dhāvati . (344)

மொழிபெயர்ப்பு

இல்லற வாழ்க்கையின் விருப்பத்தைத் துறந்து தனித்து வாழும் காட்டு வாழ்க்கையில் (துறவு வாழ்வில்) விருப்புற்றவர் ஆசையிலிருந்து விடுபட்டவராக இருந்தும், மீண்டும் இல்லற வாழ்வில் நாட்டம் கொண்டு பழைய கட்டுகளுக்குள் செல்வதைப் பாருங்கள்.

*சூழல்*

இல்லற வாழ்வைத் துறந்து துறவியானான் ஓர் இளைஞன். அவன் புத்தரது வழியில் நம்பிக்கையுடன் இருந்தும் மீண்டும் புலனுகர் இன்பத்தில் நாட்டம் கொண்டு இல்லறத்திற்குத் திரும்பினான். அவனைக் குறித்து புத்தர் சொன்னது இப்பாடல்.

12. Na taṁ daḷhaṁ bandhanaṁ āhu dhīrā
yadāyasaṁ dārujaṁ babbajañ ca
Sārattarattā maṇikuṇḍalesu
puttesu dāresu ca yā apekkhā. (345)

மொழிபெயர்ப்பு

இரும்பினாலோ, மரத்தினாலோ சணலினாலோ செய்யப்பட்ட விலங்குகள் (கட்டுகள்) உறுதியான கட்டுகள் என அறிஞர்கள் கூற மாட்டார்கள். ஆனால், பொன், மணிகளால் செய்யப்பட்ட அணிகலன்கள், மக்கள் , மனைவியர் மீது வைக்கும் ஆசையே மிகப் பெரிய கட்டு.

13. Etaṁ daḷhaṁ bandhanaṁ āhu dhīrā
ohārinaṁ sithilaṁ duppamuñcaṁ
Etaṁ pi chetvāna vajanti dhīrā
anapekkhino kāmasukhaṁ pahāya. (346)

**மொழிபெயர்ப்பு**

**இக்கட்டினையே உறுதியானது என அறிஞர்கள் சொல்வர், இது அறுக்கக் கூடியதும் தளர்ந்ததுமாக இருப்பினும் இதனினின்றும் விடுபடுவது மிக அரிது. ஆனால் அறிவுடையோர் ஆசையையும் உலக சுகங்களில் உள்ள நாட்டத்தையும் விடுவதனால் இத்தளையிலிருந்தும் விடுபடுகின்றனர்.**

*சூழல்*

**சில பிக்குகள் சிறைக்கோட்டத்தின் வழியாகச் செல்லும்பொழுது குற்றவாளிகள் அங்குக் கட்டப்பட்டிருப்பதைக் கண்டனர். அவர்கள் புத்தரிடம் அக்கட்டுகளிலும் வலிய கட்டு ஏதேனும் உண்டோ என வினவியதன் பேரில் புத்தர் இவ்விரு பாடல்களையும் கூறியருளினர்.**

14. Ye rāgarattānupatanti sotaṁ
    sayaṁ kataṁ makkaṭako' va jālaṁ
Etaṁ pi chetvāna vajanti dhīrā
    anapekkhino sabbadukkhaṁ pahāya.(347)

**மொழிபெயர்ப்பு**

**சிலந்தி தான் கட்டிய வலையில் தானே வீழ்வது போல வேட்கை வயப்பட்டவர்கள் (பிறப்பிறப்பாகிய) வெள்ளத்தில் வீழ்கின்றனர். இவ்வெள்ளத்தினின்றும் மீண்ட அறிஞர்கள் வேட்கையை விலக்கித் துன்பத்தைத் தவிர்த்து வாழ்கின்றனர்.**

*சூழல்*

**ஒரு நாட்டின் அரசி தன்னுடைய அழகால் மிகவும் பெருமையும் அகந்தையும் கொண்டிருந்தாள். புத்தர் அவளுக்குச் சில அறிவுரைகள் கூறி, அழகின் நிலையாமையை உணர்ந்து கொள்ளச் சில வழிமுறைகளைக் கூறினார். அம்முறையில் அவள் வாழ்வின் நிலையாமையை உணர்ந்து கொண்டாள். அவளது மனமாற்றத்தைப் பாராட்டிய புத்தர் கூறிய பாடல் இது.**

15. Muñca pure muñca pacchato
    majjhe muñca bhavassa pāragū
Sabbattha vimuttamānaso
    na puna jatijaraṁ upehisi. (348)

மொழிபெயர்ப்பு

இறந்த காலம்,[1] எதிர்காலம்,[2] நிகழ்காலம்,[3] ஆகிய மூன்று காலங்களையும் கடந்து உலக வாழ்வெனும் கடலின் மறுகரைக்குச் செல்க. மனம் எல்லாவற்றையும் துறந்திருக்க, பிறப்பு இறப்பிற்குள் மீண்டும் செல்லமாட்டாய்.

*சூழல்*

இளைஞன் ஒருவன் கழைக்கூத்தாடிப் பெண் ஒருத்தி மேல் காதல் கொண்டு வீட்டை விட்டு அவளுடன் கழைக்கூத்தாடியாக ஊர் ஊராகச் சென்று திரிந்தான். ஒரு நாள் அவனைச் சந்தித்த புத்தர், அவனது இயல்பு குறித்துச் சொன்ன பாடல் இது.

*விளக்கம்*

1. Pure - முன்னால்
2. Paccato - பின்னால்
3. Majjhe - இடையில்

இம்மூன்றும் கடந்தகாலம், எதிர்காலம், நிகழ்காலம் எனக் குறிக்க வந்தன.

16. Vitakkapama thitassa jantuno
tipparāgassa subhānupassino
Bhiyyo taṇhā pavaḍḍhati
esa kho dalhaṁ karoti bandhanaṁ. (349)

மொழிபெயர்ப்பு

தீய எண்ணங்களில் மூழ்கி மிகுந்த காமவேட்கை வயப்பட்டுப் புலனுகர் இன்பங்களில் மனத்தைச் செலுத்தியவர்களின் வேட்கை மேலும் மேலும் வளர்ந்து கொண்டே போகிறது. அவர்கள் நிச்சயமாக (மாரனின்) கட்டுகளை இறுக்குகின்றனர்.

17. Vitakkūpasame ca yo rato
asubhaṁ bhāvayati sadā sato
Esa kho vyantikāhiti
eso checchati mārabandhanaṁ. (350)

மொழிபெயர்ப்பு

தீய எண்ணங்களை வெல்வதில் இன்பம் கண்டு உடலின் அசுத்தங்களை எண்ணித் தவம் செய்து எப்பொழுதும் சிந்தனை வயப்பட்டவர்கள் வேட்கையை வென்று விடுவார்கள் அவர்கள் மாரனின் கட்டுகளைத் தளர்த்தி விடுவர்.

*சூழல்*

இளம் துறவி ஒருவர் பெண்ணொருத்தியின் காதல் வலையில் வீழ்ந்தார். துறவு நெறியிலிருந்து கொண்டு அதற்கு இழுக்கு நேரும் வகையில் நடந்து கொண்ட அவரைப் பிறர் புத்தரிடம் அழைத்துச் சென்று முறையிட்டனர். புத்தர் அத்துறவியின் முற்பிறவியிலும் அப்பெண் அவரைக் காதல் வலையில் வீழ்த்தி ஏமாற்றியதைக் குறிப்பிட்டுக் கூறி இவ்விருபாடல்களையும் கூறினார்.

18. Niṭṭhaṅgato asantāsī
    vītataṇho anaṅgano
Acchindi bhavasallāni
    antimo' yaṁ samussayo. (351)

மொழிபெயர்ப்பு

குறிக்கோளை[1] அடைந்தவர்க்கு அச்சமில்லை, வேட்கையில்லை, காமம் இல்லை. அவர் மறுபிறப்பு என்னும் அம்புகளைக்[2] களைந்திட்டார். இதுவே அவர் எடுக்கும் கடைசி உடல்[3].

19. Vītataṇho anādāno
    niruttipadakovido
Akkharānaṁ sannipātaṁ
    jaññā pubbaparāni ca
Sa ve antimasarīro
    mahāpañño mahāpuriso' ti vuccati. (352)

மொழிபெயர்ப்பு

வேட்கையும் பற்றுமற்றவரும், சொல் பொருளும் அதன் மூலமும் அறிந்தவரும்[4], எழுத்துகளின் சேர்க்கையும் அதன் முன் பின் தொடர்பும் தெளிந்தவருமானவருக்கு இதுவே கடைசிப்பிறப்பு. அவர்களே பேரறிஞர்கள், மனிதருள் உயர்ந்தவர் எனப் படுவார்கள்.

*சூழல்*

இளம் துறவி ஒருவர் தன் தவ முயற்சியால் ஞானம் பெற்றுத் திகழ்ந்தார். ஒருநாள் அவர் புத்தரின் நறுமணக் குடிலின் முன்னால் உறங்கிவிட்டார். அவர் உறங்குவதைக் கண்ட மாரன் அவரைப் பற்ற வந்தான். மாரனைக் கண்ட புத்தர் அவ்விளம் துறவி வேட்கையையழித்து அச்சத்தினின்றும் நீங்கியவர் எனச் சொல்லி இப்பாடலைக் கூறினார்.

*விளக்கம்*

1. குறிக்கோள் என்பது வீடுபேறு என்பதைக் குறிக்கும்.

2. பிறப்பு ஒருவருக்கு அம்புகளைப் போலத் துன்பம் தரவல்லனவாகலின் அது பிறப்பாகிய அம்புகள் (Bhavasallāni) எனப்பட்டது.

3. இது கடைசி உடல் என்பது கடைசிப் பிறவி என்பதைக் குறிக்க வந்தது. இனி அவர்க்குப் பிறவியில்லை என்பதாம்.

4. Niruttipadakovido - நால்வகைப் பகுத்தறிவில் (Paṭisambhidā) தெளிந்திருத்தல்.

நால்வகையாவன 1. பொருள் (Attha)
2. அறநூல் (Dhamma)
3. அறத்தின் மூலம் (nirutti)
4. விளக்கம். (paṭibhāna)

20. Sabbābhibhū sabbavidū' haṁ asmi
sabbesu dhammesu anūpalitto
Sabbañjaho taṇhakkhaye vimutto
sayaṁ abhiññāya kamuddiseyyaṁ. (353)

**மொழிபெயர்ப்பு**

நான் அனைத்தையும் கடந்தவன். எல்லாம் அறிந்தவன். எல்லாவற்றையும் விட்டு விலகியுள்ளேன். எல்லாவற்றையும் துறந்து விட்டேன். நான் வேட்கையைத் துறந்து அதனினின்றும் விடுபட்டவன். எல்லாவற்றையும் நானே அறிந்து கொண்டபின் எனக்கு யார் ஆசிரியராவார்?

*சூழல்*

புத்தர் ஞானம் பெற்றவுடன் தான் கண்டறிந்த உண்மைகளை உலகத்திற்கு எடுத்துரைக்கும் பொருட்டு வாராணசிக்கு வந்து கொண்டிருந்தார். வழியில் அவரது முகத்தில் ஒளிரும் ஞான ஒளியைக் கண்டு வியந்து மகிழ்ந்த உபகன் என்னும் ஆசீவக சன்னியாசி புத்தரிடம் வந்து ஐயா, தங்கள் புலன்கள் தூய்மைபெற்றுத் துலங்குகின்றன. தங்கள் ஆசிரியர் யார் என வினவினார். அதற்கு புத்தர் அளித்த மறுமொழியே இப்பாடல் ஆகும்.

21. Sabbadānam dhammadānaṁ jināti
sabbaṁ rasaṁ dhammaraso jināti
Sabbaṁ ratiṁ dhammaratī jināti
taṇhakkhayo sabbadukkhaṁ jināti. (354)

**மொழிபெயர்ப்பு**

கொடைகள் அனைத்தையும் உண்மையைக் கொடுத்தல் என்னும் கொடை வெல்கிறது. சுவைகள் அனைத்தையும் உண்மையறச் சுவை வெல்கிறது. இன்பங்கள் அனைத்தையும் உண்மையற இன்பம் வெல்கிறது. வேட்கையை அழிப்பது துக்கங்கள் அனைத்தையும் வெல்கிறது.

*சூழல்*

தேவேந்திரன் ஒரு முறை புத்தரிடம் வந்து நான்கு கேள்விகள் கேட்டான். அவை கொடைகளில் சிறந்தது எது? சுவைகளில் சிறந்தது எது? இன்பத்தில் சிறந்தது எது? துன்பத்தைத் துடைப்பது எது? இந்த நான்கு கேள்விகளுக்கும் புத்தர் அளித்த விடையே இப்பாடல்.

22. Hananti bhogā dummedhaṁ
no ve pāragavesino
Bhogataṇhāya dummedho
hanti aññe' va attanaṁ. (355)

மொழிபெயர்ப்பு

செல்வத்தின் இன்பங்கள் மூடர்களை அழிக்கின்றன. ஆனால், மறுகரையை அடைந்தவர்களை[1] அணுகுவதில்லை. செல்வ சுகத்தின் வேட்கையால் மூடர்கள் பிறரைப் போன்று தங்களைத் தாங்களே அழித்துக் கொள்கின்றனர்.

*சூழல்*

பிள்ளைகளற்ற செல்வன் ஒருவன் பெரும் செல்வத்தை விட்டு விட்டு இறந்து விட்டான். மன்னன் அச்செல்வம் அனைத்தையும் கைப்பற்றி அரச நிதியாக்கி விட்டான். பின்னர் அம்மன்னன் புத்தரைக் காணவந்த போது அச்செல்வன் பற்றியும் அவன் புத்தரின் வாழிடத்திற்கு மிக அருகிலேயே இருந்தும் புத்தத் துறவிகளுக்கு எக்கொடையும் கொடாதான் என்றும் குறிப்பிட்டார். அப்பொழுது புத்தர் கூறிய பாடல் இது.

*விளக்கம்*

1. மறுகரையடைதல் என்பது பிறவிப் பெருங்கடல் நீந்தி நிர்வாணமாகிய மறுகரையை அடைதல் ஆகும்.

23. Tiṇadosāni khettāni
rāgadosā ayaṁ pajā
Tasmā hi vītarāgesu
dinnaṁ hoti mahapphalaṁ. (356)

**மொழிபெயர்ப்பு**

களைகள் வயல்களைக் கெடுக்கின்றன. காமவேட்கை மனிதனைக் கெடுக்கிறது. எனவே வேட்கையை வென்றார்க்கு வேண்டியன கொடுப்பது (கொடுத்தார்க்குப் ) பெரும் பயனை நல்குகிறது.

24. Tiṇadosāni khettāni
dosadosā ayaṁ pajā
Tasmā hi vītadosesu
dinnaṁ hoti mahaphalaṁ. (357)

**மொழிபெயர்ப்பு**

களைகள் வயல்களைக் கெடுக்கின்றன. சினம் மனிதனைக் கெடுக்கின்றது. எனவே சினத்தைத் தவிர்த்தார்க்குக் கொடுப்பது மிகப் பெரும் பயனை நல்கும்.

25. Tiṇadosāni khettāni
mohadosā ayaṁ pajā
Tasmā hi vītamohesu
dinnaṁ hoti mahaphalaṁ. (358)

**மொழிபெயர்ப்பு**

களைகள் வயல்களைக் கெடுக்கின்றன. மாயை (மயக்கம்) மனிதனைக் கெடுக்கின்றது. எனவே மயக்கத்தை வென்றவர்க்குக் கொடுப்பது மிகப்பெரும் பலனை நல்குகிறது.

26. Tiṇadosāni khettāni
icchādosāni ayaṁ paja
Tasmā hi vigaticcchesu
dinnaṁ hoti mahapphalaṁ. (359)

**மொழிபெயர்ப்பு**

களைகள் வயல்களைக் கெடுக்கின்றன. வேட்கை மனிதனைக் கெடுக்கிறது. எனவே வேட்கையை அழித்தவர்க்குக் கொடுப்பது மிகப்பெரும் பலனை நல்குகிறது.

சூழல்

தூய நெறிகளை உடைய சான்றோர்களுக்கு மக்கள் உணவு முதலிய பல பொருள்களையும் கொடுத்து ஆதரித்து வந்தனர். அத்தகைய சான்றோர்க்குக் கொடுப்பது கொடுப்போர்க்குப் பெரும்பலனை நல்கவல்லது எனக்குறித்துப் புத்தர் கூறியவை இப்பாடல்கள்.

மேற்கோள்

அற்றார் அழிபசி தீர்த்தல் அஃதொருவன்
பெற்றான் பொருள்வைப் புழி. (குறள் : 220)

## 25 BHIKKHU VAGGA

## 25 பிக்கு இயல்

1. Cakkhunā saṁvaro sādhu
   sādhu sotena saṁvaro
   Ghāṇena saṁvaro sādhu
   sādru jivhāya saṁvaro. (360)

**மொழிபெயர்ப்பு**

கண்களை அடக்குதல்[1] நன்று. காதுகளைக் கட்டுப்படுத்தல்[2] நன்று. மூக்கினைக் கட்டுப்படுத்துதல்[3] நன்று. நாக்கினைக் கட்டுப்படுத்துதல்[4] நன்று.

2. Kāyena saṁvaro sādhu
   sādhu vācāya saṁvaro
   Manasā saṁvaro sādhu
   sādhu sabbattha saṁvaro
   Sabbattha saṁvuto bhikkhu
   sabbadukkhā paṃuccati. (361)

**மொழிபெயர்ப்பு**

உடலைக் கட்டுப்படுத்துதல்[5] நன்று. சொல்லைக் கட்டுப்படுத்துதல் நன்று. மனத்தை அடக்குதல் நன்று. அனைத்தையும் கட்டுப்படுத்தி அடக்குதல் நன்று. அனைத்து வழிகளையும் கட்டுப்படுத்தி அடக்கிய பிக்கு[6] துன்பத்திலிருந்து விடுபட்டவனாகிறான்.

*சூழல்*

ஐம்புலன்களில் ஒவ்வொன்றைக் கட்டுப்படுத்திப் பழக்கிய ஐந்து பிக்குகள் புத்தரிடம் வந்து எப்புலனை கட்டுப்படுத்துவது மிக கடினம் என்று வினவினர். அதற்குப் புத்தர் நேரடியாக விளக்கம் தராமல் அவர்களில் ஒருவன் முற்பிறவியில் புலனடக்கமின்மையால் மீண்டும் பிறந்து வந்த கதையைக் கூறி ஐம்புலனடக்கத்துடன் மனம், சொல் ஆகிய அனைத்தையும் அடக்குதலே சிறந்தது என்றுரைத்து இப்பாடல்களைக் கூறினார்.

1. கண்ணை அடக்குதல் என்பது கண் வழியாகப் பெறும் இன்பங்களைத் தவிர்த்தல். இவ்வாறே 2, 3, 4, 5 க்கும் பொருள் கொள்க.

2. பிக்கு என்னும் சொல் துறவியைக் குறிக்கும். இது பௌத்தர்களுக்கே உரிய சொல். எனவே பிக்கு எனின் பௌத்தத் துறவி எனப்பொருள்படும்.

மேறகோள்

ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்க லாற்றின்
எழுமையும் ஏமாப் புடைத்து. (குறள் : 126)

3. Hattha saññato pādasaññato
vācāya saññato saññatuttamo
Ajjhattarato samāhito
eko santusito taṁ āhu bhikkhuṁ. (362)

**மொழிபெயர்ப்பு**

**கைகள், கால்களை அடக்கிச் சொற்காத்து ஏனைய தலையானவற்றையும் காத்து, சமாதி நிலையில்[1] விருப்புற்று, மனத்தை ஒருமுகப்படுத்தித் தனிமையில் இன்பம் காண்பவரையே பிக்கு என்பர்.**

*சூழல்*

**பௌத்தத் துறவி ஒருவர் ஆகாயத்தில் அன்னம் ஒன்று பறந்து போவதைப் பார்த்தார். உடனே ஒரு கல்லை எடுத்து எறிந்து அதன் கண்ணைச் சிதைத்துக் கொன்றார். அவரது அச்செயலைக் கண்டித்து அறிவுரை கூறிய புத்தர் சொன்ன பாடல் இது.**

*விளக்கம்*

1 ajjhatta என்பது ஒருவனுக்குச் சொந்தமான என்ற பொருளை நேரடியாகத் தரவல்லது. இங்குத் தியானம், சமாதி என்னும் பொருளைத் தந்து நிற்கிறது.

மேற்கோள்

அடல்வேண்டும் ஐந்தன் புலத்தை விடல்வேண்டும்
வேண்டிய வெல்லாம் ஒருங்கு. (குறள் : 393)

4. Yo mukhasaññato bhikkhu
mantabhāṇi anuddhato
Atthaṁ dhammañ ca dīpeti
madhuraṁ tassa bhāsitaṁ. (363)

**மொழிபெயர்ப்பு**

நாவடக்கமுள்ள, அறிவுப்பூர்வமான[1] பேச்சும், அகந்தையின்மையும், அறநூல்களின் பொருளை விளங்க உரைக்கும் திறமையும் உடைய பிக்குவின் சொற்கள் இனிமையுடையன.

*சூழல்*

பௌத்தத் துறவி ஒருவர் அகந்தையாலும் அறியாமையாலும் புத்தரின் தலைமை மாணாக்கர் அனைவரையும் இழிவாகப் பேசித் திரிந்தார். அவரது போக்கைக் கண்டித்துப் புத்தர் கூறிய பாடல் இது.

*விளக்கம்*

1 manta என்னும் சொல் சாதாரணமாக மந்திரம் என்னும் பொருள் தருவது. இவ்விடத்தில் அறிவுப்பூர்வமான என்னும் பொருள் தருகிறது.

மேற்கோள்

நயனீன்று நன்மை பயக்கும் பயனீன்று
பண்பின் தலைப்பிரியாச் சொல். *(குறள் : 97)*
சிறுமையுள் நீங்கிய இன்சொல் மறுமையும்
இம்மையும் இன்பம் பயக்கும். *(குறள் : 98)*

5. Dhammārāmo dhammarato
dhammaṁ anuvicintayaṁ
Dhammaṁ anussaraṁ bhikkhu
saddhammā na parihāyati. (364)

**மொழிபெயர்ப்பு**

அறநெறிப்பட்ட வாழ்க்கையும், அறநெறியில் இன்பமும், அறநெறிப்பட்ட சிந்தனையும் கொண்டு, எப்பொழுதும் அறத்தை மறவாத பிக்கு உயரிய அறத்தினின்றும் வீழ்ச்சியடையார்.

*சூழல்*

தம்மாராமர் என்னும் பிக்கு ஒருவர் புத்தர் நிர்வாணம் அடையப் போகிறார் எனக் கேள்விப்பட்டவுடன் யாருடனும் சேராமல் தனித்து இருந்து தவமியற்றத் தொடங்கினார். அவரது இச்செயலைத் தவறாகப் புரிந்து கொண்ட சிலர் புத்தரிடம் முறையிட்டனர். புத்தர் அவரை அழைத்து விசாரித்த போது, புத்தர் நிர்வாணமடையுமுன் ஞானம் பெற விரும்பி அவ்வாறு நடந்து கொண்டதாகக் கூறினர். அவரது செயலைப் பாராட்டிய புத்தர் கூறிய பாடல் இது.

மேற்கோள்

அறத்தினூஉங் காக்கமும் இல்லை அதனை
மறத்தலி னூங்கில்லை கேடு. (குறள் : 32)

6. Salābhaṁ nātimaññeyya
n'āññesaṁ pihayaṁ care
Aññesaṁ pihayaṁ bhikkhu
samādhiṁ n'ādhigacchati. (365)

**மொழிபெயர்ப்பு**

பிக்கு ஒருவர் தான் பெற்றதை இழிவாகக் கருதிக் கொண்டு, பிறருடன் அவர் ஊதியத்தைக் கண்டு பகைமை கொள்ளக் கூடாது. பிறர் ஊதியத்தைக் கண்டு பகைமை கொள்பவன் மனவடக்கம் பெறமாட்டான்.

7. Appalābho 'pi ce bhikkhu
salābhaṁ n'ātimaññati
Taṁ ve devā pasaṁsanti
suddhājiviṁ atanditaṁ. (366)

**மொழிபெயர்ப்பு**

தான் பெற்றது மிகச் சிறிதேயாயினும் ஒரு பிக்கு அதனை இழிவாகப் பேசக் கூடாது. அப்படிப்பட்ட தூய வாழ்க்கையும் ஊக்கமுமுள்ள அவரைத் தேவர்களும் பாராட்டுகின்றனர்.

*சூழல்*

துறவி ஒருவர் தேவதத்தத்தேரரைப் பின்பற்றும் மற்றொரு துறவியின் அழைப்பினை ஏற்றுச் சென்று சில நாள்கள் அவர் விருந்தினராக இருந்து வசதிகள் பல அனுபவித்து வந்தார். அவர் மீண்டும் முன்னைய மடத்திற்குத் திரும்பி வந்தபின் பிற துறவிகள் அவரைப் பற்றி புத்தரிடம் குறை கூறினர். புத்தர் அவர்களது இயல்பினைக் கண்டித்துக் கூறிய பாடல்கள் இவை.

மேற்கோள்

அருளாக்கம் வேண்டாதான் என்பான் பிறனாக்கம்
பேணா தழுக்கறுப் பான். *(குறள் : 163)*

அவ்வித் தழுக்கா றுடையானை செய்யவள்
தவ்வையைக் காட்டி விடும். *(குறள் : 167)*

8. Sabbaso nāmarūpasmiṁ
yassa natthi mamāyitaṁ
Asatā ca na socati
sa ve bhikkhū' ti vuccati. (367)

**மொழிபெயர்ப்பு**

அருவுருவானவற்றில் நான், எனது என்னும் எண்ணமின்றியும், அவை உண்மையற்றவை என்று எண்ணித் துன்பம் கொள்ளாமலும் இருப்பவரே பிக்கு எனச் சொல்லப்படுவார்.

*சூழல்*

அன்பர் ஒருவரின் வீட்டு வாசலில் புத்தர் நின்றபோது அவ்வன்பர் புத்தருக்கு உணவளித்துவிட்டு, பிக்கு என்பவருக்குள்ள தகுதி என்னவென்று வினவிய போது புத்தர் சுருக்கமாக விளக்கம் கூறிய பாடல் இது.

மேற்கோள்

> யான்என தென்னும் செருக்கறுப்பான் வானோர்க்கு
> உயர்ந்த உலகம் புகும். *(குறள் : 346)*

9. Mettāvihāri yo bhikkhu
   pasanno buddhasāsane
   Adhigacche padaṁ santaṁ
   saṅkhārūpasamaṁ sukhaṁ. (368)

**மொழிபெயர்ப்பு**

(உயிர்களிடத்து) அன்பு மனம் கொண்டவராயும் (ஆன்ம நேயத்துடன்) புத்த நெறியில் விருப்புடையவராயும் உள்ள பிக்கு துன்பங்கள் நீங்கி அமைதி நிலையான நிர்வாண நிலையை அடைந்தவராகிறார்.

10. Siñca bhikkhu imaṁ nāvaṁ
    sittā te lahumessati
    Chetvā rāgañ ca dosañ ca
    tato nibbānamehisi. (369)

**மொழிபெயர்ப்பு**

ஓ பிக்குவே கப்பலைக்[1] காலியாக்கு. காலியான கப்பலைச் செலுத்துவது மிக எளிது. ஆசையையும் கோபத்தையும் துறந்து நிர்வாணமாகிய வீட்டை அடைவாயாக.

11. Pañca chinde pañca jahe
    panca c'uttari bhāvaye
    Pañca saṅgātigo bhikkhu
    oghatiṇṇo' ti vuceati. (370)

**மொழிபெயர்ப்பு**

ஐந்தைத்[2] தகர்த்து , ஐந்தைத் [3] தவிர்த்து, ஐந்தை மேலும் வளர்த்து[4] ஐந்தைக் கடந்து[5] சென்ற பிக்குவே வெள்ளத்தைக் கடந்தவராவார்.

12. Jhāya bhikkhu mā ca pamādo
    mā te kāmaguṇe bhamassu cittaṁ
Mā lohaguḷaṁ giḷī pamatto
    mā kandi dukkham idan' ti ḍayhamāno.
(371)

**மொழிபெயர்ப்பு**

ஓ பிக்குவே! தவம் செய்க. சோம்பலாய் இராதே. காம எண்ணங்களில் உன் மனத்தைச் சுழலவிடாதே. அசட்டைத் தனத்தால் பழுக்கக் காய்ச்சிய இரும்புக் குண்டினை விழுங்காதே. பின்னர் அதன் வெப்பம் தாங்காமல் இது துன்பம் எனக் கதறாதே.

13. Natthi jhānaṁ apaññassa
    paññā natthi ajhāyato
Yamhi jhānañ ca paññā ca
    sa ve nibbāṇasantike. (372)

**மொழிபெயர்ப்பு**

ஞானமற்றோர்க்குத் தியானம் இல்லை, தியானமற்றோர்க்கு ஞானமில்லை. தியானமும் ஞானமும் ஒருங்கே பெற்றவரே நிர்வாணத்தின் அருகில் உள்ளவராவார்.

14. Suññāgāraṁ paviṭṭhassa
    santacittassa bhikkhuno
Amānusī rati hoti
    sammā dhammaṁ vipassato. (373)

மொழிபெயர்ப்பு

தனிமையான வாழ்வை நாடிச் சென்றவரும், அமைதியான மனத்தினராயும், உண்மை அறத்தினை நன்கு அறிந்தவருமான பிக்கு சாதாரண மனிதர்க்கெட்டா[6] உயர்ந்த இன்பத்தை அடைகிறார்.

15. Yato yato sammasati
khandhānaṁ udayabbayaṁ
Labhati pīti pāmojjaṁ
amataṁ taṁ vijānataṁ. (374)

**மொழிபெயர்ப்பு**

கந்தங்களின் வளர்ச்சியையும் வீழ்ச்சியையும் எவ்வளவுக் கெவ்வளவு சிந்தித்துப் பார்க்கிறாரோ அவ்வளவிற்கு அவ்வளவு அவர் இன்பத்தையும் மகிழ்ச்சியையும் அடைகிறார். அவற்றை அறிந்தவர் பிறவா நிலையடைகிறார்.

16. Tatrāyam ādi bhavati
idha paññassa bhikkhuno
Indriyagutti santuṭṭhi
pātimokkhe ca saṁvaro
Mitte bhajassu kalyāṇe
suddh 'ājīve atandite. (375)

**மொழிபெயர்ப்பு**

புலனடக்கம் கொள்ளல், மனநிறைவு அடைதல், பாதிமொக்க[7] நெறிகளைத் தவறாது பின்பற்றல், நல்லோர் தொடர்பு கொண்டு தூய வாழ்க்கை வாழ்தல் ஆகிய இவையே நல்லறிவுள்ள பிக்குவிற்கு அடிப்படை ஆகும்.

17. Paṭisanthāravuty'assa
ācārakusalo siyā
Tato pāmojjabahulo
dukkhass' antaṁ karissati. (376)

**மொழிபெயர்ப்பு**

பிக்கு தன் நன்னெறியில் விருப்பமும், நடத்தையில் தூய்மையும் கொண்டு அதில் இன்பமடைந்து (அதன் மூலம்) துன்பத்திற்கு முடிவு கட்டுகிறார்.

*சூழல்*

பிக்கு ஒருவர் அரங்கம் ஒன்றிலிருந்து அறம் உரைத்தக் கொண்டிருந்தார். அப்பொழுது அவரது தாயும் அங்கு வந்திருந்து அறம் கேட்டுக் கொண்டிருந்தார். அதே சமயத்தில் திருடர்கள் சிலர் அவளது வீட்டில் நுழைந்து பொருள்களைக் களவாடிக் கொண்டிருந்தனர். அத்திருடர்களின் தலைவன் அவள் இடையில் வீட்டிற்குத் திரும்பினால் கொல்வதற்கு அவளைப் பின் தொடர்ந்து வந்திருந்தான். திருட்டு நடப்பதை அறிந்த வேலைக்காரி அரங்கத்திற்கு வந்து திருட்டு நடப்பது பற்றி அவளுக்குத் தெரிவித்தாள். ஆனால் அவளோ அறம் கேட்பதனின்றும் தனக்கு இடையூறு தரவேண்டாம் எனக் கடிந்து கொண்டாள். அவளது அச்செயலைக் கண்ட திருடர் தலைவன் வியப்படைந்து மனம் மாறித் தன் கூட்டத்தினரிடம் சென்று எடுத்த பொருள்களை மீண்டும் வைக்கும்படிச் சொல்லிவிட்டு அனைவரையும் அழைத்துக் கொண்டு அரங்கத்திற்கு வந்து அவளிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டு அவர்களனைவரும் துறவியாயினர். அவர்கள் தவநெறி மேற்கொண்டு தவமியற்றிய பொழுது புத்தர் அவர்கள் முன் தோன்றி அவர்களைப் பாராட்டினார். அப்பொழுது புத்தர் கூறிய பாடல்கள் இவை.

*விளக்கம்*

1. கப்பல் என்பது atta என்னும் ஆன்மாவை.

2. தகர்க்கவேண்டிய ஐந்து விலங்குகள் (Orambhāgiyasaṁyojana)
   1. உடல்நிலையானது என நம்புதல் (Sakkāyadiṭṭi)
   2. ஐயம் (vicikkicchā)
   3. தவறான விழாக்களும் சடங்குகளும் (Sīlabbata parāmāsa)

4. புலன் வேட்கை (Kāmāraga)
5. வெறுப்பு (Paṭigha)

3. தவிர்க்க வேண்டிய ஐந்து குற்றங்கள் (Uddhambhāgiyasaṁyojana)

1. உருவப்பொருள்களில் பற்று (rūparāga)
2. அருவப்பொருள்களில் பற்று (arūparāga)
3. தன்மானம் (Māna)
4. ஆணவம் (Uddhacca)
5. அறியாமை (avijjā)

4. வளர்க்க வேண்டிய ஐந்து உணர்வுகள்

1. நம்பிக்கை (saddhā)
2. சிந்தனை (Sati)
3. வலிமை (Viriya)
4. ஒருமுனைப்பாடு (Samādhi)
5. ஞானம் (Paññā)

5. கடக்க வேண்டிய ஐந்து

1. ஆசை (rāga )
2. வெறுப்பு (dosa)
3. மயக்கம் (Moha)
4. அகந்தை (mada)
5. தவறான காட்சி (Micchadiṭṭhi)

6. Amānusī rati - அடையத் தகுந்த எட்டு ( aṭṭha samāpatthi) தன்மைகளை அடைதல். சாதாரண மனிதர்க்கு எட்டாதவையாகும். அவை:

1. அளவற்ற ஆகாயத்தை அடைதல்
2. அளவற்ற நினைவாற்றல்
3. சூனியநிலை
4. நினைவும் மறப்பும் மற்ற நிலை.

இவை உருவம் அருவம் இரண்டிற்குமாக விரிந்து எட்டாகும்.

7. பாதிமொக்க என்பது பிக்குகள் செய்யத்தகுந்தனவும் செய்யத் தகாதனவும் இவ்விவை என விதிகளை வரையறுத்துக் கூறும் தொகுப்பு. இவ்விதிகள் யாவும் விநய பிடகத்தில் பலவிடங்களிலும் வருவன. இவற்றை மாத வழிபாட்டு நாளன்று இசைத்து குற்றவீடு பெறுவர்.

18. Vass' ikā viya pupphāni
 maddavāni pamuñcati
Evaṁ rāgañ ca dosañ ca
 vippamuñcetha bhikkhavo. (377)

**மொழிபெயர்ப்பு**

மல்லிகைக் கொடி, காய்ந்த மலர்களை உதிர்த்து விடுகின்றது. அதுபோல பிக்குகளே, ஆசையையும், சினத்தையும் முழுக்கத் துறந்துவிடுங்கள்.

*சூழல்*

துறவிகள் சிலர் மல்லிகைக் கொடியினின்றும் மல்லிகை மலர்கள் காய்ந்து உதிர்வதைக் கண்டனர். அம்மலர்கள் போன்று தங்கள் வாழ்வும் உதிர்வது உறுதி எனக் கருதி மிகவும் தீவிரமாகத் தவத்தில் ஈடுபட்டனர். புத்தர் அவர்களது மன நிலையை உணர்ந்து அவர்கள் முன்தோன்றி இப்பாடலைக் கூறியருளினார்.

19. Santakāya santavāco
 santavā susamāhito
Vantalokāmiso bhikkhu
 upasanto' ti vuccati. (378)

மொழிபெயர்ப்பு

உடலால் அடக்கமும் சொல்லைக் காத்தலும் மன அமைதியும் ஆகியவற்றை நிறைவுடன் பெற்று உலகியல் பொருள்களை உதறித்தள்ளிய பிக்குவே பேரமைதியானவர் (உபசந்தர்) என அழைக்கப்படுவார்.

*சூழல்*

பிக்கு ஒருவர் மிகவும் அமைதியான இயல்பினராய் எப்பொருளுக்கும் ஆசைப்படாது, எளிமையாக இருந்தார். அவருடைய அந்த இயல்பு ஏனைய துறவியரைப் பெரிதும் கவர்ந்தது. இவரது முன்னுதாரணமாகிய இவ்வியல்பு பற்றி புத்தர் கேள்வியுற்று, அவரைப் பின்பற்றி நடக்குமாறு ஏனைய பிக்குகளிடமும் கூறிய பாடல் இது.

20. Attanā coday' attānaṁ
paṭimāse attaṁ attanā
So attagutto satimā
sukhaṁ bhikkhu vihāhisi. (379)

மொழிபெயர்ப்பு

உங்களை நீங்களே ஆராய்ந்து பாருங்கள். உங்களை நீங்களே காத்துக் கொள்ளுங்கள். உங்கள் மனத்தை நீங்களே காத்துக் கொள்ளுங்கள். அவ்வாறாயின் நீங்கள் மகிழ்வுடன் வாழ்வீர்கள்.

21. Attā hi attano nātho
attā hi attano gati
Tasmā saññamay' attānaṁ
assaṁ bhadraṁ' va vāṇijo. (380)

மொழிபெயர்ப்பு

நீயே உனக்குத் தலைவன். நீயே உனக்கு அடைக்கலம் (போக்கிடம்). எனவே குதிரை வணிகன் குதிரையைப் பாதுகாப்பாகக் காப்பது போன்று நீயே உன்னை அடக்கிக் காத்துக் கொள்.

*சூழல்*

ஏழைக் குடியானவன் ஒருவனுக்கு ஒரு கலப்பையும் ஒரு உடுத்தும் ஆடையுமே சொந்தமாக இருந்தது. அவன் துறவியானான். எனினும் பலமுறை அவன் துறவை நீத்து விடத் துணிந்தான். இறுதியில் ஒரே முனைப்பாகத் தவமியற்றி ஞானம் அடைந்தான். அவனது அம்முயற்சியைப் பாராட்டி புத்தர் கூறிய பாடல் இது.

22. Pāmojjabahulo bhikkhu
pasanno buddhasāsane
Adhigacche padaṁ santaṁ
saṅkhārūpasamaṁ sukhaṁ. (381)

**மொழிபெயர்ப்பு**

முழுமையான மகிழ்ச்சியும், புத்தரின் அறிவுரைகளில் ஆழ்ந்த நம்பிக்கையும் உடைய பிக்குகள் உலகத் துன்பங்களைத் துறந்து பேரின்ப நிலையை அடைகின்றனர்.

*சூழல்*

புத்தரின் தோற்றப் பொலிவில் பெரிதும் மனம் ஈடுபட்ட பிக்கு ஒருவர் புத்தரையே பார்த்துக் கொண்டிருந்தார். அவரது செயலைக் கண்ட புத்தர் தன் உடலைப் பாராமல் தன் அறத்தைப் பார்க்க வேண்டும். அதுவே தன்னை உண்மையாகப் பார்ப்பதாகும் என அறிவுரை கூறினார். தன் செயலால் வெட்கமுற்ற அந்தப் பிக்கு மலையிலிருந்து விழுந்து தற்கொலை செய்து கொள்ள முனைந்தார். அவரது தற்கொலை முயற்சியை அறிந்த புத்தர் அவர் முன் தோன்றினார். புத்தரைக் கண்ட அத்துறவி மனம் தெளிந்து மிக்க மகிழ்ச்சி அடைந்தார். அப்பொழுது புத்தர் கூறிய பாடல் இது. பின்னர் அத்துறவி தவமியற்றி ஞானம் அடைந்தார்.

23. Yo have daharo bhikkhu
yuñjato buddhasāsane
So imaṁ lokaṁ pabhāseti
abbhā mutto' va candimā. (382)

மொழிபெயர்ப்பு

இளமையிலேயே புத்த நெறியில் தன்னை அர்ப்பணித்துக் கொண்ட பிக்கு மேகத்தினின்று விடுபட்ட நிலவைப் போன்று இவ்வுலகில் ஒளிர்கிறார்.

*சூழல்*

இளம் வயதில் துறவு பூண்டு தன் மன ஆற்றலைப் பெரிதும் வளர்த்துக் கொண்ட இளம் பிக்கு ஒருவரைப் பாராட்டிப் புத்தர் கூறிய பாடல் இது.

## 26 BRĀHMAṆA VAGGA

## 26 பிராமணர் இயல்

1. Chinda sotaṁ parakkamma
    kāme panuda brāhmaṇa
Sankhārānaṁ khayaṁ ñatvā
    akataññu' si brāhmaṇa. (383)

**மொழிபெயர்ப்பு**

ஓ பிராமணனே[1] ஆசையாம் வெள்ளத்தை முயன்று நீக்கி, காம எண்ணத்தைத் தகர்த்து விடு. உலகியல் பொருள்கள் அனைத்தும் அழியும் தன்மையன என்று அறிந்து உண்டாக்கப்படாத நிர்வாணத்தை[2] அறிந்தவனாகு.

*சூழல்*

அன்பன் ஒருவன் பௌத்த நெறியில் பெரிதும் நம்பிக்கை கொண்டு பிக்குகளை அழைத்து உணவு முதலியன அளித்து அவர்களை முத்தரே (அரகந்தரே) என அழைத்தான். ஞானம் அடையாத அந்தப் பிக்குகள், தாங்கள் முத்தர் என அழைக்கப்படத் தகுதி உடையவர்கள் அல்லர் எனக் கூறிவிட்டு அவ்வீட்டிற்கு மீண்டும் செல்வதைத் தவிர்த்தனர். அவர்கள் வராததால் மனவருத்தமுற்ற அன்பன் புத்தரிடம் சென்று காரணம் வினவினான். புத்தர் அப்பிக்குகளை அழைத்து அவ்வன்பன் முத்தரே எனஅழைத்தது மரியாதை கருதியேயன்றி வேறன்று என்று கூறி அவர்களை முத்தராகும்படிக் கூறிச் சொன்ன பாடல் இது.

*விளக்கம்*

1. பிராமணன் என்பது இனத்தைக் குறிக்கும் சொல்லாயினும் புத்தர் பிராமணர் எனக் குறிப்பது அறவோரையே (ஞானியரையே). அந்தணர் என்போர் அறவோர் என்னும் வள்ளுவர் வாக்கை நினைவு கூர்க.

2 நிர்வாண நிலை என்பது ஒருவரால் உண்டாக்கப்படாதது.

மேற்கோள்

தோற்றம்சால் ஞாயிறு நாழியா வைகலும்
கூற்றம் அளந்துறும் நாளுண்ணும் - ஆற்ற
அறம்செய்து அருளுடையீர் ஆகுமின் யாரும்
பிறந்தும் பிறவாதா ரில். (நாலடியார் 7)

2. Yadā dvayesu. dhammesu
pāragū hoti brāhmaṇo
Atha' ssa sabbe saṁyogā
atthaṁ gacchanti jānato. (384)

**மொழிபெயர்ப்பு**

தவநிலை இரண்டையும்[1] குறைவற ஒரு பிராமணன் செய்தால் அவ்வறிஞனுடைய பாசத் தளைகள் அனைத்தும் அறுந்து மறு கரையை அடைகிறான்.[2]

*சூழல்*

நெடுந்தூரத்திலிருந்து புத்தரைக் காணவரும் துறவிகளில் சிலர் நிர்வாணம் அடைதற்குரிய பக்குவம் எய்தியவராக இருப்பதைக் கண்ட சாரிபுத்தத் தேரர் புத்தரிடம் சென்று அவர் அடிக்கடி குறிப்பிடும் தவத்தோரின் இரு நிலைகளைப் பற்றிய சிறப்பினை வினவினார். அதற்குப் புத்தரின் மறுமொழி இப்பாடல்.

*விளக்கம்*

1. இரண்டு நிலையாவது :
   1. ஒரு முகச் சிந்தனை - சமாதி (Samatha)
   2. உள்ளொளி - ஞானம் (Vipassanā)

2. மறுகரை என்பது உயர் ஞானம். (abhiññā)

3. Yassa pāraṁ apāraṁ vā
pārāpāraṁ va na vijjati
Vītaddaraṁ visaṁyuttaṁ
taṁ ahaṁ brūmi brāhmaṇaṁ. (385)

**மொழிபெயர்ப்பு**

எவரொருவர் மறுகரையை[1] யடைந்து இக்கரையைப்[2] பற்றிய எண்ணமோ நான் எனது என்னும் எண்ணமோ கொள்ளாதிருக்கின்றாரோ, எவரொருவர் (புலன்களால்) அசைக்கப்படாமல் இருக்கின்றாரோ, ஆசையாம் கட்டுகளை நீத்தவர் எவரோ அவரையே நான் பிராமணர் என்கிறேன்.

*சூழல்*

மாரன் மனித உருக்கொண்டு புத்தரிடம் வந்து மறுகரையைப் பற்றி வினா எழுப்பினான். புத்தர் மாரனை இனம் கண்டு கொண்டு அவனால் மறுகரையை அடைந்தவரை ஏதும் செய்யவியலாது என்றுரைத்துக் கூறிய பாடல் இது.

*விளக்கம்*

1. மறுகரை என்பது நிர்வாண உலகம்
2. இக்கரை என்பது பிறந்து இறந்து உழலும் இவ்வுலகம்.

4. Jhāyiṁ virajaṁ āsīnaṁ
katakiccaṁ anāsavaṁ
Uttamatthaṁ anuppattaṁ
taṁ ahaṁ brūmi brāhmaṇaṁ. (386)

மொழிபெயர்ப்பு

யோகத்தில் நின்று குற்றங்களை நீக்கித் தனிமையில் இருந்து கடமைகளைக் குறைவறச் செய்து அழுக்குகளினின்றும்[1] விடுபட்டு உயரிய குறிக்கோளினை அடைந்தவரையே நான் பிராமணர் என்கிறேன்.

சூழல்

பிறப்பால் பிராமண இனத்தைச் சேர்ந்த ஒருவன், புத்தர் தன் மாணவத் துறவிகளைப் பிராமணரே என்றழைப்பதைக் கண்டான். அவன் தான் பிறப்பால் பிராமணன் ஆதலின் தானும் அதுபோல் பிராமணனே என்றழைக்கப்படத் தக்கவன் எனக் கருதினான். அவன் இது பற்றி புத்தரிடம் கேட்டபோது புத்தர் கூறிய மறுமொழியே இப்பாடல்.

விளக்கம்

1 āsavā என்பது அழுக்குகள். அவையாவன :

1. புலனுகர் இன்பம் (kāma );
2. உலகியல் நாட்டம் (Bhava );
3. தவறான கண்ணோட்டம் (Micchādiṭṭhi);
4. அறியாமை (avijjā).

5. Divā tapati ādicco
rattim ābhāti candimā
Sannaddho khattiyo tapati
jhāyi tapati brāhmaṇo
Atha sabbaṁ ahorattiṁ
Buddho tapati tejasā. (387)

மொழிபெயர்ப்பு

சூரியன் பகலில் ஒளிர்கிறது. சந்திரன் இரவில் ஒளிர்கிறது. வீரன் தன் ஆயுதங்களால் ஒளிர்கிறான். பிராமணன் தவத்தால் ஒளிர்கிறான். ஆனால் இரவும் பகலும் புத்தர் தன் ஞானத்தால் ஒளிவிடுகிறார்.

*சூழல்*

தேரர் ஆனந்தர், மன்னன் ஒருவன் தான் அணிந்துள்ள ஆயுதங்களால் கம்பீரமான தோற்றத்தைப் பெறுவதைக் கண்டார். அதே சமயம் தியானத்தில் உள்ள பிக்கு ஒருவரின் தோற்றத்தையும் மறையும் சூரியனையும் எழுந்து தோன்றும் சந்திரனையும், புத்தர் தன் ஞானத்தால் விளங்கித் தோன்றுவதையும் கண்டார். தான் கண்டனவற்றை அவர் புத்தரிடம் கூறிய போது புத்தர் கூறிய பாடல் இது.

6. Bāhitapāpo' ti brāhmaṇo
   samacariyā samaṇo' ti vuccati
   Pabbajay' attano malaṁ
   tasmā pabbajito' ti vuccati. (388)

**மொழிபெயர்ப்பு**

(அவர்) தீமைகளைத் துறந்தமையால் பிராமணர் என்று அழைக்கப்படுகிறார். அமைதியில் வாழ்வதால் சமணர்[1] என அழைக்கப்படுகிறார். தன்னுடைய அழுக்குகளைத் துறந்தமையால் அவர் துறவி என்று அழைக்கப்படுகிறார்.

*சூழல்*

வேறு சமயத்தைச் சேர்ந்த துறவி ஒருவர் புத்தரை அணுகித் தன்னைத் துறவி என்று அழைக்கும்படிச் சொன்னார். அவருக்கு மறுமொழியாக புத்தர் துறவியாவது யார் என விளக்கிக் கூறிய பாடல் இது.

*விளக்கம்*

1. சமணர் என்பது துறவியர் எனப் பொருள் தருவது. பிற்காலத்தில் இது ஒரு குறிப்பிட்ட சமயத்தைச் சார்ந்தவர்களைக் குறித்தது.

7. Na brāhmaṇassa pahareyya
   n'āssa muñcetha brāhmaṇo
   Dhī brāhmaṇassa hantāraṁ
   tato dhī yassa muñcati. (389)

மொழிபெயர்ப்பு

பிராமணரை[1] அடிக்கக் கூடாது. பிராமணரும் தன்னை அடித்தவர் மீது சினம் கொள்ளக் கூடாது. பிராமணரை அடித்தவர் வெட்கப்பட வேண்டும். அடித்தவர் மேல் கோபம் கொள்பவர் அதனினும் வெட்கப்பட வேண்டும்.

8. Na brāhmaṇass' etadakiñci seyyo
 yadā nisedho manaso piyehi
Yato yato hiṁsamano nivattati
 tato tato sammatimeva dukkhaṁ. (390)

மொழிபெயர்ப்பு

பிராமணர் ஒருவர் பழி உணர்விலிருந்து தன்னைக் காத்துக் கொள்வதென்பது உயர்வானது. எவரொருவர் மனத்திற்கு விருப்பமானவற்றைத் தவிர்த்து எவ்வளவுக்கெவ்வளவு பழி உணர்வை நீக்குகிறாரோ அவ்வளவுக்கவ்வளவு அவரது துன்பம் நீங்குகிறது.

*சூழல்*

பிறப்பால் பிராமண இனத்தைச் சேர்ந்த ஒருவன் சாரிபுத்தரின் பொறுமையைச் சோதிக்க எண்ணி அவரை அடித்தான். ஆனால் சாரிபுத்தர் அதற்கு எவ்வகையிலும் சினம் கொள்ளவில்லை. மாறாக அவன் வீட்டில் அவன் இட்ட உணவை உண்டார். இதன் மூலமாகத் தாம் அவனை மன்னித்ததை வெளிப்படுத்தினார். சாரிபுத்தரின் இவ்வுயர்ந்த தன்மையை அறிந்த புத்தர் அவரைப் பாராட்டிக் கூறிய பாடல் இது.

*விளக்கம்*

1. பிராமணர் எனக் கூறுவது இங்கு அரகந்தர்களை (முத்தர்களை).

மேறகோள்

குணமென்னும் குன்றேறி நின்றார் வெகுளி
கணமேயும் காத்தல் அரிது. (குறள் : 29)
நிறையுடைமை நீங்காமை வேண்டின் பொறையுடைமை
போற்றி ஒழுகப் படும். (குறள் : 154)

9. Yassa kāyena vācāya
manasā natthi dukkataṁ
Saṁvutaṁ tihi ṭhānehi
taṁ ahaṁ brūmi brāhmaṇaṁ. (391)

**மொழிபெயர்ப்பு**

எவரொருவர் உடல், சொல், மனம் இவற்றால் தீவினை செய்யாதவராக இருக்கிறாரோ; எவர் இவற்றைக் கட்டுப் படுத்தியுள்ளாரோ அவரையே நான் பிராமணன் என்கிறேன்.

*சூழல்*

பெண் துறவிகள் சிலர் மகாபஜாபதி கோதமியின் துறவு நிலையில் ஐயம் கொண்டு அவளுடன் சேர்ந்து விநய (விதிமுறை) நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளவில்லை. புத்தர் கோதமியின் வேட்கையற்ற நிலையையும், மனம் வாக்கு காயம் ஆகியவற்றை அவள் கட்டுப் படுத்திய தன்மையினையும் எடுத்துக் கூறி வேட்கையற்ற அத்தகையோர் மீது ஐயம் கொள்ளக் கூடாது என விளக்கிக் கூறிய பாடல் இது.

10. Yamha dhammaṁ vijāneyya
sammāsambuddhadesitaṁ
Sakkaccaṁ taṁ namasseyya
aggihuttaṁ' va brāhmaṇo. (392)

**மொழிபெயர்ப்பு**

எவரிடமிருந்து ஒருவர் உண்மைப் பேரறிஞன் (புத்தன்) உரைத்த அறங்களைக் கற்றுணர்ந்திருக்கிறாரோ அவரைப் பிராமணன்[1] தன் வேள்வித் தீயை வணங்குதல் போல் போற்றி வணங்க வேண்டும்.

*சூழல்*

தேரர் சாரிபுத்தர் தனக்கு முதன் முதலில் புத்த தர்மத்தைக் கற்றுத் தந்த தேரர் அஸ்ஸஜியின் மேல் உள்ள மரியாதையால் அவரைக் காண அவர் தங்கியிருக்கும் குடிலுக்குச் சென்றார். சில துறவிகள் அவரைத் தவறாகப் புரிந்து

கொண்டு அவர் சொந்த விருப்பு வெறுப்புக் கொண்டு அவருடன் பழகுகிறார் எனக் குறை கூறினர். புத்தர் சாரிபுத்தரின் மீது சுமத்தப்பட்ட குற்றச் சாட்டை மறுத்து தன் ஆசிரியரிடம் மாணவர் காட்ட வேண்டிய மரியாதையை விளக்கி இப் பாடலைக் கூறினார்.

*விளக்கம்*

1. பிராமணன் என இவ்விடத்தில் குறிப்பிடுவது வைதிக பிராமணரை.

11. Na jaṭāhi na gottena
na jaccā hoti brāhmaṇo
Yamhi saccañ ca dhammo ca
so sucī so ca brāhmaṇo. (393)

**மொழிபெயர்ப்பு**

சடைமுடியாலும், குலத்தாலும், பிறப்பாலும் ஒருவர் பிராமணர் ஆவதில்லை. உண்மையையும்[1] அறத்தினையும்[2] அறிந்தவர் எவரோ அவரே தூய்மையானவர். அவரே பிராமணரும் ஆவார்.

*சூழல்*

பிறப்பால் பிராமணனான ஒருவன் பிற ஞானியரைப் புத்தர் பிராமனர் என அழைப்பது கண்டு தன்னையும் அவ்வாறு அழைக்க வேண்டும் என வேண்டினான். அவனுக்குப் புத்தர் மறுமொழியாகக் கூறியது இப்பாடல்.

*விளக்கம்*

1. உண்மை என்பது நான்கு பேருண்மைகளை

2. அறம் என்பது நான்கு வழிகள், நான்கு பயன்கள், நிர்வாணம் ஆகிய ஒன்பது நிலைகளையும் அறிந்திருத்தல்.

மேற்கோள்

மழித்தலும் நீட்டலும் வேண்டா உலகம்
பழித்தது ஒழித்து விடின். *(குறள் : 280)*

பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பெல்லாம்
செய்தொழில் வேற்றுமை யான். (குறள் : 972)

12. Kiṁ te jaṭāhi dummedha
kiṁ te ajinasāṭiyā
Abbhantaraṁ te gahaṇaṁ
bāhiraṁ parimajjasi. (394)

**மொழிபெயர்ப்பு**

ஓ இழிந்தவனே! உன் சடையினால் என்ன பயன், உன் மான் தோலினால் உண்டாகும் பயன் என்ன? உன் மனத்துள் ஆசை என்னும் காடு இருக்கிறதே. நீ புறத்தே மட்டும் தூய்மை செய்வது ஏன்?.

*சூழல்*

சன்னியாசி ஒருவன் பல்லி ஒன்றைக் கொல்ல முனைந்து கொண்டிருந்தான். அவனது இழி செயலைக் கண்ட புத்தர் கூறிய பாடல் இது.

மேற்கோள்

மழித்தலும் நீட்டலும் வேண்டா உலகம்
பழித்தது ஒழித்து விடின். (குறள் 280)

13. Paṁsukūladharaṁ jantuṁ
kisaṁ dhamanisanthataṁ
Ekaṁ vanasmiṁ jhāyantaṁ
taṁ ahaṁ brūmi brāhmaṇaṁ. (395)

**மொழிபெயர்ப்பு**

அழுக்கடைந்த கந்தையை அணிந்து உடலின் நரம்புகள் வெளியே தெரியும் படியாக மெலிந்து தனியாகக் காட்டில் தவம் செய்பவனையே நான் பிராமணன் என்றழைப்பேன்.

*சூழல்*

கிசா கோதமி என்னும் பெண் துறவி காட்டில் தனியாகத் தவம் செய்து கொண்டிருந்தவள் தன் அழுக்கடைந்த ஆடையுடன்

புத்தரை வணங்க ஆகாய வழியே வந்தாள். அவள் புத்தரை வணங்கிச் செல்லும் பொழுது இந்திரன் அவளைக் கண்டான். இந்திரன் வியப்புற்று அவள் யாரென புத்தரை வினவ புத்தர் கூறிய மறுமொழி இப்பாடலாகும்.

மேற்கோள்

இன்மை ஒருவற் கிளிவன்று சால்பென்னும்
திண்மையுண் டாகப் பெறின். *(குறள் : 988)*

14. Na c'āhaṁ brāhmaṇaṁ brūmi
yonijaṁ mattisambhavaṁ
Bhovādi nāma so hoti
sa ce hoti sakiñcano
Akiñcanaṁ anādānaṁ
taṁ ahaṁ brūmi brāhmaṇaṁ. (396)

**மொழிபெயர்ப்பு**

(இனத்தால் பிராமணத் ) தாயின் கருவிலிருந்து பிறந்த காரணத்தால் மட்டும் நான் ஒருவனை பிராமணன் என்று சொல்ல மாட்டேன். செல்வம் (அல்லது பற்றுகள்)[1] இருப்பதனால் அவனை நண்பா[2] என்று அழைக்கலாம். ஆனால் பற்றுகளையும் ஆசைகளையும் துறந்தவர் எவரோ அவரையே நான் பிராமணன் என்கிறேன்.

*சூழல்*

பிறப்பால் பிராமண இனத்தைச் சேர்ந்த ஒருவன் தன்னைப் பிராமணன் என்று அழைக்க வேண்டும் எனப் புத்தரிடம் கேட்டுக் கொண்டதன் பேரில் புத்தர் கூறிய பாடல் இது.

*விளக்கம்*

1. Kiñcano என்னும் சொல்லுக்கு செல்வம் என்றும் ஆசை என்றும் இரு பொருள் உண்டு. இங்கு இச்சொல் இரு பொருளையும் குறிக்கும் வகையில் சிலேடையாகப் பயன் படுத்தப்பட்டுள்ளது.

2. Bho என்னும்சொல் தன்னொத்தவரையும் தன்னினும் தாழ்ந்தவரையும் அழைக்கப் பயன் படுத்தும் சொல். இது நண்பா என்ற பொருள் தருவது.

15. Sabbasaññojanaṁ chetvā
yo ve na paritassati
Saṅgātigaṁ visaṁyuttaṁ
taṁ ahaṁ brūmi brāhmaṇaṁ. (397)

**மொழிபெயர்ப்பு**

(ஆசை என்னும்) எல்லா விலங்குகளையும் தகர்த்தவரும் அச்சமற்று இருக்கின்றவரும் கட்டுகள் அனைத்தையும் கடந்தவருமானவரையே நான் பிராமணர் என்கிறேன்.

*சூழல்*

தேரர் உக்கசேனர் என்பவர் ஞானம் பெற்ற நிலையில் தனக்கு அச்சம் ஏதும் இல்லை என்று கூறினார். அவர் கூற்றை ஏற்காத சில பிக்குகள் அவரைப் பற்றி புத்தரிடம் குறை கூறினார்கள். அவர்களுக்குப் புத்தர் கூறிய மறுமொழி இப்பாடல் ஆகும்.

16. Chetvā naddhiṁ varattañ ca
sandāmaṁ sahanukkamaṁ
Ukkhittapaḷighaṁ Buddhaṁ
taṁ ahaṁ brūmi brāhmaṇaṁ. (398)

**மொழிபெயர்ப்பு**

(பகை என்னும்) வாரை அறுத்து, (ஆசை என்னும்) விலங்கினை உடைத்து, (நிந்தனை என்னும்) கயிற்றைத் துணித்து, (அறியாமை என்னும்) தடையை அகற்றி எவரொருவர் ஞானத்தை ஏற்றுகின்றாரோ அவரையே நான் பிராமணர் என்று அழைக்கிறேன்.

*சூழல்*

இரு மனிதர்கள் தங்கள் காளைகளுள் எது சிறந்தது என்பதைக் கண்டறியத் தங்கள் வண்டிகளில் ஏராளமாக மணலை ஏற்றிக் காளையை விரட்டினர். ஆனால் காளைகள் வண்டிகளைச்

சிறிதளவும் இழுக்கவில்லை. மாறாக அக்காளைகளை வண்டியுடன் சேர்த்துக் கட்டியிருந்த வார்கள் அறுந்து தெறித்து வீழ்ந்தன. இதனைக் கண்ட சில பிக்குகள் புத்தரிடம் சென்று தெரிவித்தனர். அப்பொழுது புத்தர் அக்காளையைப் போன்று கட்டுகளைத் தகர்த்தெரியும்படி அத்துறவிகளுக்குக் கூறிய அறிவுரையே இப்பாடல்.

17. Akkosaṁ vadhabandhañ ca
adut̤tho yo titikkhati
Khantibalaṁ balānīkaṁ
taṁ ahaṁ brūmi brāhmaṇaṁ. (399)

மொழிபெயர்ப்பு

சினத்தையும், பழிச்சொல்லையும், சிறையிடுதலையும், மனத்தாங்கலின்றி சகித்துக் கொண்டு பொறுமையே தன்னுடைய வலிமைமிக்க படையாகக் கொண்டுள்ளவர் எவரோ அவரையே நான் பிராமணர் என்கிறேன்.

*சூழல்*

பெண்ணொருத்தி புத்தரின் பெருமைகளை வாய்ப்புக் கிட்டிய போதெல்லாம் கூறிக் கொண்டிருந்தாள். இதனால் ஆத்திரம் கொண்ட அவள் கணவன் அவள் அவ்வாறு கூறுவதற்குத் தடைவிதித்தும் அவள் கேளாமல் தொடர்ந்தாள். சினம் மிகுந்த அவன் புத்தரிடம் சென்று கடுமையாகப் பேசி சில வினாக்களைத் தொடுத்தான். அவனது வினாக்களைப் பொறுமையாகக் கேட்டு அமைதியாக அவர் பதிலிறுத்த தன்மையைக் கண்ட அவன் மனம் மாறித் தானும் துறவியானான். அவனைத் துறவியாக்கினமையைக் கண்டித்து அவனது சகோதரர்களும் வெகுண்டு வந்து புத்தரிடம் சினந்து பேசினர். அவர்களுக்கும் பொறுமையாகப் பதில் சொன்னார் புத்தர். அவரது விளக்கங்களைக் கேட்ட அவர்கள் மனம் மாறித் துறவியாயினர். புத்தரது பொறுமையைப் பிற பிக்குகள் வியந்து பேசியபோது புத்தர் கூறிய பாடல் இது.

மேற்கோள்

திறனல்ல தற்பிறர் செய்யினும் நோநொந்
தறனல்ல செய்யாமை நன்று. *(குறள் : 157)*

18. Akkodhanaṁ vatavantaṁ
sīlavantaṁ anussutaṁ
Dantaṁ antimasārīraṁ
taṁ ahaṁ brūmi brāhmaṇaṁ. (400)

**மொழிபெயர்ப்பு**

சினத்தை வென்றவரும், கடமையுணர்வினரும் ஒழுக்கமுடையவரும் ஆசையை அறுத்தவரும், தன்னைக் கட்டிக் காத்தவரும் இறுதி உடலைத் தாங்கியவருமானவரையே நான் பிராமணர் என்கிறேன்.

*சூழல்*

சாரிபுத்தர் துறவு வாழ்க்கை மேற்கொண்டதை அறிந்த அவரது தாய் மிகுந்த ஆத்திரமடைந்து வெகுவாகப் பழித்துப் பேசினாள். ஆனால் சாரிபுத்தர் அதையெல்லாம் பொறுமையாகக் கேட்டுத் தாங்கிக் கொண்டார். அவரது பொறுமை பற்றிக் கேள்விப்பட்ட புத்தர் கூறிய பாடல் இது.

19. Vāri pokkharapatt'eva
āragger'iva sāsapo
Yo na limpati kāmesu
taṁ ahaṁ brūmi brāhmaṇaṁ. (401)

**மொழிபெயர்ப்பு**

தாமரை இலையின் மேலுள்ள தண்ணீர் போன்றும் ஊசி முனையிலுள்ள கடுகு போன்றும் இருந்து எவரொருவர் புலனின்பங்களில் ஆசையற்று இருக்கிறாரோ அவரையே நான் பிராமணர் என்கிறேன்.

*சூழல்*

அரகந்த நிலை (ஞான நிலை) அடைந்த பிக்குணி ஒருத்தி அவளது பழைய கணவனால் கற்பழிக்கப்பட்டாள். இதையறிந்த பிற பிக்குகள் அரகந்தருக்கும் புலன் வேட்கை இருக்குமோ என வியந்து பேசிய சமயம் புத்தர் அரகந்த நிலை எய்திய ஞானியருக்குப் புலன் வேட்கை இராது என விளக்கிக் கூறிய பாடல் இது.

20. Yo dukkhassa pajānāti
idh'eva khayamattano
Pannabhāram visaṁyuttaṁ
taṁ ahaṁ brūmi brāhmaṇaṁ. (402)

**மொழிபெயர்ப்பு**

இவ்வுலகில் துன்ப நீக்கத்தை அறிந்து, தன்னுடைய சுமைகளை[1] இறக்கி விட்டு, உலகப் பற்றுகளை நீக்கியவர் யாரோ அவரையே நான் பிராமணர் என்கிறேன்.

*சூழல்*

புத்தர் அடிமைகளுக்குத் துறவறம் கொடுப்பது பற்றிய விதியை ஏற்படுத்துமுன் பிராமணன் ஒருவனது அடிமை ஒருவன் அங்கிருந்து தப்பி வந்து துறவு பூண்டு தவமியற்றி ஞானம் பெற்று அரகந்தரானான். ஒரு சமயம் அத்துறவி பிச்சைக்குச் செல்லும் பொழுது அந்தப் பிராமணன் அவனை அடையாளம் கண்டு கொண்டு துறவியின் ஆடையைப் பற்றிக் கொண்டான். அதைக் கண்ட புத்தர் அத்துறவி தன் சுமைகளை இறக்கி வைத்து விட்டமையை விளக்கி இப்பாடலைக் கூறியருளினார்.

*விளக்கம்*

1. சுமைகளாவன ஐந்து கந்தங்கள்.

21. Gambhīrapaññaṁ medhāviṁ
maggāmaggassa kovidaṁ
Uttamatthaṁ anuppattaṁ
taṁ ahaṁ brūmi brāhmaṇaṁ. (403)

**மொழிபெயர்ப்பு**

ஆழமான அறிவும், தெளிவும், நல்லதும் தீயதுமான வழிகளை[1] அறிவதில் திறமும், தன் உயரிய குறிக்கோளை அடைந்தவரும் எவரோ அவரையே நான் பிராமணர் என அழைக்கிறேன்.

*சூழல்*

தேரியார் கேமா புத்தரை வணங்குவதற்கு வந்தபோது அங்கே இந்திரன் இருப்பதைக் கண்டும் புத்தரை மட்டும் வணங்கி விட்டுத் திரும்பிச் சென்று விட்டாள். அவளைக் கண்ட இந்திரன் இவள் யார் என புத்தரிடம் வினவ, புத்தர் கூறிய மறுமொழி இப்பாடல்.

மேற்கோள் நல்வழி நிர்வாணத்திற்கு இட்டுச் செல்வது
தீவழி நரகத்திற்கு இட்டுச் செல்வது.

22. Asaṁsaṭṭhaṁ gahaṭṭhehi
anāgārehi c'ūbhayaṁ
Anokasāriṁ appicchaṁ
taṁ ahaṁ brūmi brāhmaṇaṁ. (404)

**மொழிபெயர்ப்பு**

இல்லறத்தாருடனோ துறவியரிடமோ நெருக்கமான தொடர்பற்றவரும், எவ்வித வீடும் இன்றித் திரிபவரும், ஆசையற்றவரும் எவரோ அவரையே நான் பிராமணர் என்றழைக்கிறேன்.

*சூழல்*

துறவி ஒருவர் மலைக்குகையில் தங்கியிருந்தார். ஆனால் அம்மலைக் குகையில் தேவதை ஒன்று தங்கியிருந்தது. அத்துறவியை அங்கிருந்து வெளியேற்றுவதற்காக அவர்மீது தவறான குற்றச் சாட்டினைக் கூறியது அத்தேவதை. ஆனால் துறவி சிறிதும் சினம் கொள்ளாமல் அமைதி காத்தார். மேலும் அத்தேவதை கூறிய சுடு சொல்லே அவர் ஞானம் பெறுவதற்குக் காரணமாக இருந்தது. பின்னர் அவர் புத்தரிடம் வந்தபோது நடந்தது அனைத்தையும் அவர் கூறக் கேட்ட புத்தர் கூறிய பாடல் இது.

23. Nidhāya daṇḍaṁ bhūtesu
tasesu thāvaresu ca
Yo na hanti na ghāteti
taṁ ahaṁ brūmi brāhmaṇaṁ. (405)

மொழிபெயர்ப்பு

உலக உயிர்களைத் துன்புறுத்தாதவனும் அவை எளியனவாயினும் வலியனவாயினும் அவற்றிற்குத் தீங்கிழைக்காமலும் கொல்லாமலும் இருக்கின்றவரையே நான் பிராமணர் என்றழைக்கிறேன்.

*சூழல்*

துறவி ஒருவர் ஞானம் பெற்றபின் புத்தரைக் காணக் காட்டு வழியே வந்து கொண்டிருந்தார். கணவனுடன் சண்டையிட்டுக் கொண்டு, தன் தாய் வீட்டுக்குப் போவதற்காக அந்தக் காட்டினுள் சென்றாள் பெண்ணொருத்தி. தன் மனைவியைத் தேடி வந்த கணவன் அவள் இந்த ஞானியைப் பின் தொடர்ந்து போவதைக் கண்டு ஞானியார் மீது ஐயம் கொண்டு கோபமுற்று அவரை நையப்புடைத்தான். பின்னர் அவனது மனைவி உண்மையைக் கூறிய பின் தன் தவற்றை உணர்ந்து மன்னிப்புக் கேட்டான். பின்னர் அவர் புத்தரை அடைந்து நடந்தன வெல்லாம் கூறிய பொழுது புத்தர் கூறிய பாடல் இது.

மேற்கோள்

நிலையஞ்சி நீத்தாருள் எல்லாம் கொலையஞ்சிக்
கொல்லாமை சூழ்வான் தலை. *(குறள் : 325)*

நன்றாகும் ஆக்கம் பெரிதெனினும் சான்றோர்க்குக்
கொன்றாகும் ஆக்கம் கடை. *(குறள் : 328)*

கொல்லா நலத்தது நோன்மை பிறர்தீமை
செல்லா நலத்தது சால்பு. *(குறள் : 984)*

அந்தணர் என்போர் அறவோர்மற் றெவ்வுயிர்க்கும்
செந்தண்மை பூண்டொழுக லான். *(குறள் : 30)*

24. Aviruddhaṁ viruddhesu
attadaṇḍesu nibbutaṁ
Sādānesu anādānaṁ
taṁ ahaṁ brūmi brāhamaṇaṁ. (406)

மொழிபெயர்ப்பு

ஏமாற்றங்களுக்கிடையே[1] பொறுமையாகவும், வன்முறையாளர்களிடையே அமைதியானவராகவும், பற்றுள்ளோரிடையே பற்றற்றவராகவும் உள்ளவரையே நான் பிராமணன் என்று அழைக்கிறேன்.

*சூழல்*

பெண்ணொருத்தித் தன் வீட்டில் ஐந்து புத்தத் துறவிகளுக்கு உணவளிக்க விரும்புவதாகத் தெரிவித்தாள். அவளது விருப்பத்தை ஏற்றுக் கொண்டு சங்கத்திலிருந்து இளம் துறவிகள் ஐவர் அவள் வீட்டிற்குச் சென்றனர். ஆனால் அவளோ மூத்த துறவிகளுக்கே உணவளிக்க விரும்புவதாகக் கூறினாள். எனினும் இவ்விளம் துறவிகள் எவ்வித ஏமாற்றவுணர்வோ சினமோ இன்றித் திரும்ப முனைந்தனர். இவர்களது பொறுமையும் அமைதியும் கண்ட அவள் மனம் மாறி உணவளித்தாள். பின்னர் இது குறித்துப் புத்தரிடம் தெரிவிக்கப்பட்ட போது புத்தர் கூறிய பாடல் இது.

*விளக்கம்*

1. Viruddha என்னும் சொல் நேரடியாகத் தடை என்னும் பொருள் தருவது. ஈண்டு அது ஏமாற்றம் என்று பொருள் தந்துள்ளது.

மேற்கோள்

நிறையுடைமை நீங்காமை வேண்டின் பொறையுடைமை
போற்றி ஒழுகப் படும். *(குறள் : 154)*

25. Yassa rāgo ca doso ca
māno makkho ca pātito
Sāsapor'iva āraggā
taṁ ahaṁ brūmi brāhmaṇaṁ. (407)

மொழிபெயர்ப்பு

ஊசி முனையில் வைத்த கடுகு கீழே விழுவது போல, ஆசை, கோபம், அகந்தை, வஞ்சகம் இவற்றை உதிர்த்தவர் எவரோ அவரையே நான் பிராமணன் என்கிறேன்.

*சூழல்*

ஞானி ஒருவர் தன் சக துறவி நான்கு மாதங்களாக ஒரு செய்யுளைக்கூட மனனம் செய்யவியலாத நிலையில் அவரை துறவை விட்டுப் போகும்படிச் சொன்னார். அந்த ஞானி கோபத்தில் இவ்வாறு சொன்னார் என்று அத்துறவி எண்ணினார். ஆனால் புத்தர் ஞானியருக்குப் பற்றில்லை, எனினும் இவர் அறநூல்களின் மேலுள்ள மதிப்பினால் அவ்வாறு கூறினார் என்று விளக்கி இப்பாடலைக் கூறினார்.

26. Akakkasaṁ viññāpaṇiṁ
giraṁ saccaṁ udīraye
Yāya n'ābhisaje kiñci
taṁ ahaṁ brūmi brāhmaṇaṁ. (408)

**மொழிபெயர்ப்பு**

மென்மையாகவும், பொருளுடையதாகவும், உண்மையான சொல்லாகவும் சொல்லி சினமற்றவராகச் செயலாற்றுபவர் எவரோ அவரையே நான் பிராமணர் என்று சொல்கிறேன்.

*சூழல்*

அரகந்தர் ஒருவர் பிறரை அழைக்கும்பொழுது இழிந்தோரைக் குறிக்கும் சொல் ஒன்றைச் சொல்லி அழைப்பார். இப்படி அழைப்பதை வெறுத்த சில பிக்குகள் புத்தரிடம் சென்று முறையிட்டனர். புத்தர், அவர் தீய எண்ணத்துடன் அவ்வாறு சொல்லவில்லை என்றும் அவ்வாறு சொல்வது அவரது முற்பிறவியிலிருந்து வரும் பழக்கத்தாலேயே என்றும் விளக்கி இபபாடலைக் கூறினார்.

மேற்கோள்

நயனீன்று நன்மை பயக்கும் பயனீன்று
பண்பின் தலைப்பிரியாச் சொல். *(குறள் : 97)*

27. Yo'dha dīghaṁ va rassaṁ vā
aṇuṁ thūlaṁ subhāsubhaṁ
Loke adinnaṁ nādiyati
taṁ ahaṁ brūmi brāhmaṇaṁ. (409)

**மொழிபெயர்ப்பு**

நீளமானதோ, குட்டையானதோ, சிறியதோ, பெரியதோ, அழகியதோ, அழகற்றதோ எதுவாயினும் பிறரால் கொடுக்கப்படாததை எடுக்காதவரையே (திருடாதவரையே) நான் பிராமணர் என்கிறேன்.

*சூழல்*

அரகந்தர் (ஞானி) ஒருவர் வழியில் தனியாகக் கிடந்த துணி ஒன்றை அது தேவையற்றதெனக் கழிக்கப்பட்டது என்று கருதி எடுத்தார். ஆனால் அத்துணிக்குச் சொந்தக்காரன் அதைப் பார்த்து அவர் மீது திருட்டுக் குற்றம் சாட்டினான். அந்த ஞானி தான் அதைத் திருடும் நோக்கத்தில் எடுக்கவில்லை என உண்மையை விளக்கிக் கூறி அதை உரியவரிடம் சேர்த்து விட்டு வந்தார். பின்னர் அதை ஏனைய பிக்குகளிடம் சொன்ன போது அவர்கள் அவரைக் கேலி செய்தனர். இதையறிந்த புத்தர் அரகந்தர்கள் பிறருடைய பொருளை எப்பொழுதும் திருடமாட்டார்கள் எனக் கூறிய பாடல் இது.

மேற்கோள்

உள்ளத்தால் உள்ளலும் தீதே பிறன்பொருளைக்
கள்ளத்தால் கள்வோம் எனல். *(குறள் : 282)*

28. Āsā yassa na vijjanti
asmiṁ loke paramhi ca
Nirāsayaṁ visaṁyuttaṁ
taṁ ahaṁ brūmi brāhmaṇaṁ. (410)

**மொழிபெயர்ப்பு**

இவ்வுலகிற்கும் மறுவுலகிற்கும் தொடர்புடைய எதையும் விரும்பாமல் பற்றுகளற்று உள்ளவர் எவரோ அவரையே நான் பிராமணர் என்கிறேன்.

*சூழல்*

சாரிபுத்தர் ஒரு மழைக் காலத்தில் ஓர் இடத்தில் பல துறவியருடனே தங்கியிருந்தார். மழைக்கால முடிவில் தன்னுடனிருந்த இளம் துறவிகளை, அவர்களுக்குப் பரிசாகக்

கிடைத்த ஆடைகளை எடுத்துக் கொண்டு வரச் சொல்லி விட்டுப் புத்தரைக் காணப் புறப்பட்டார். அவரது சொல்லைத் தவறாகப் புரிந்து கொண்ட பிற பிக்குகள் சாரிபுத்தர் இன்னும் ஆசை வயப்பட்டவராகவே உள்ளார் எனப் பேசிக் கொண்டனர். அவர்களுக்கு விளக்கம் சொல்லும் வகையில் புத்தர் கூறிய பாடல் இது.

மேற்கோள்

தூய்மை என்ப தவாவின்மை மற்றது
வாய்மை வேண்ட வரும். *(குறள் : 364)*

29. Yassālayā na vijjanti
aññāya akathaṁkathi
Amatogadhaṁ anuppattaṁ
taṁ ahaṁ brūmi brāhmaṇaṁ. (411)

**மொழிபெயர்ப்பு**

ஆசையைத் துறந்தவர்களும் ஐயமற்ற அறிவினராகவுள்ளவர்களும், மரணமற்றப் பெருவாழ்வில் உறுதியாக நிற்பவரையுமே நான் பிராமணன் என்கிறேன்.

*சூழல்*

மொக்கலானர் ஒரு மழைக்கால முடிவில் தன்னுடன் தங்கியிருந்த இளம் துறவிகளுக்குக் கொடுக்கப்பட்ட ஆடைகளையும் எடுத்துக் கொண்டு வரச் சொல்லி விட்டுப் புத்தரைக் காணப் புறப்பட்டார். அப்பொழுது ஏனைய பிக்குகள் மொக்கலானர் இன்னும் ஆசை வயப்பட்டவராகவே உள்ளார் என்று பேசிக் கொண்டனர். இவர்களுக்கு விளக்கம் சொல்லும் வகையில் புத்தர் கூறிய பாடல் இது.

மேற்கோள்

இருள்நீக்கி இன்பம் பயக்கும் மருள்நீக்கி
மாசறு காட்சி யவர்க்கு. *(குறள் : 352)*

30. Yo 'dha puññañ ca pāpañ ca
ubho saṅgaṁ upaccagā
Asokaṁ virajaṁ suddhaṁ
taṁ ahaṁ brūmi brāhmaṇaṁ (412)

**மொழிபெயர்ப்பு**

இவ்வுலகில் எவர் நல்வினை, தீவினை என்னும் இருவினைகளாகிய கட்டுகளையும் கடந்தவராகவும், துயரமற்றவராகவும், அழுக்கற்றுத் தூய்மையானவராகவும் உள்ளாரோ அவரையே நான் பிராமணன் என்கிறேன்.

*சூழல்*

தேரர் ரேவதரின் நல்வினைகளின் பெருமைகளைப் பிற பிக்குகள் வியந்து பாராட்டிப் பேசிக் கொண்டிருந்தபோது, ரேவதர் இருவினைகளையும் கடந்தவர் எனக் கூறி புத்தர் சொன்ன பாடல் இது.

31. Candaṁ'va vimalaṁ suddhaṁ
vippasannaṁ anāvitaṁ
Nandībhavaparikkhīṇaṁ
taṁ ahaṁ brūmi brāhmaṇaṁ. (413)

**மொழிபெயர்ப்பு**

நிலவைப் போன்று களங்கமற்றுத் தூய்மையானவராகவும் அமைதியானவராகவும், பாவங்களால் சூழப்படாதவராகவும், பிறப்பிற்குரிய ஆசையை அறுத்தவராகவும் உள்ளவர் எவரோ அவரையே நான் பிராமணன் என்கிறேன்.

*சூழல்*

முற்பிறவியில் ஒருவன் செய்த உயர்ந்த நல்வினைகளின் பயனாக முழுநிலவைப் போன்ற ஒளி வட்டம் ஒன்று அவனது கொப்பூழினின்றும் தோன்றியிருந்தது. அவன் ஒரு சமயம் புத்தரைக் காணவந்த போது புத்தரின் அருகில் வந்தவுடன் அவ்வொளி வட்டம் மறைந்தது. இதனால் வியப்புற்ற அவன் அதற்குக் காரணம் என்னவென்று புத்தரை வினவினான். ஆனால்

அவன் பௌத்தத் துறவியானால் அதற்கான காரணத்தைச் சொல்வதாகப் புத்தர் கூறினார். அதன்படி அவன் துறவியாகிப் பின் அரகந்தரானான். அப்பொழுது புத்தர் கூறிய பாடல் இது.

32. Yo imaṁ paḷipathaṁ duggaṁ
saṁsāraṁ mohamaccagā
Tiṇṇo pāragato jhāyi
anejo akathaṅkathi
Anupādāya nibbuto
taṁ ahaṁ brūmi brāhmaṇaṁ. (414)

மொழிபெயர்ப்பு

எவரொருவர், புதைசேற்றையும்[1], கடத்தற்கரிய பாதையையும்[2], இல்லறக் கடலையும் கடந்து மயக்கத்தைத் தவிர்த்து, மறு கரையை அடைந்தவராகவும் தவவொழுக்கத்தினராகவும், ஆசை, ஐயம் ஆகியவற்றினின்றும் நீங்கியவராகவும், பற்றற்றவராகவும், நிர்வாணத்தை அடைந்தவராகவும் உள்ளாரோ அவரையே நான் பிராமணன் என்கிறேன்.

*சூழல்*

சீவலி என்னும் ஞானி தாய் வயிற்றிலிருக்கும் பொழுது நீண்டகாலம் உள்ளிருந்துப் பெருந்துன்பம் அனுபவித்தவர். அவரைப் பற்றிக் குறிப்பிடுகையில் புத்தர் இப்பாடலைக் கூறினார்.

*விளக்கம்*

1. வேட்கை முதலியனவாகிய நீங்கற்கரிய குணங்கள் புதைசேறு எனப்பட்டது.

2 புலனுணர்வாம் பாதையே கடத்தற்கரியது எனக் குறிப்பிடப்பட்டது.

33. Yo'dha kāme pahatvāna
anāgāro paribbaje
Kāmabhavaparikkhīṇaṁ
taṁ ahaṁ brūmi brāhmaṇaṁ. (415)

**மொழிபெயர்ப்பு**

எவரொருவர் இவ்வுலகில் காம உணர்வை விட்டு, உலக வாழ்க்கையை நீத்து, இல்லறத்தை விட்டுத் துறவு பூண்டு, காமம் உலகப் பற்று ஆகியவற்றை நீக்கி விட்டாரோ அவரையே நான் பிராமணன் என்கிறேன்.

*சூழல்*

பரத்தை ஒருத்தி, செல்வக்குடியினின்றும் வந்து துறவு பூண்ட இளம் துறவி ஒருவரை ஆசை வலையில் வீழ்த்த முயன்றாள். ஆனால் அவள் முயற்சியில் அவள் தோல்வி யுற்றாள். அத்துறவியின் உறுதியைப் பாராட்டிப் புத்தர் கூறிய பாடல் இது.

34. Yo'dha taṇhaṁ pahatvāna
anāgāro paribhaje
Taṇhābhava parikkhīnaṁ
Taṁ ahaṁ brūmi brāhmaṇaṁ. (416)

**மொழிபெயர்ப்பு**

எவரொருவர் இவ்வுலகில் வேட்கையை விட்டு உலக வாழ்வை நீத்து இல்லறத்தைத் துறந்து துறவறம் பூண்டு வேட்கை உலகப்பற்று ஆகியவற்றை நீக்கியவரோ அவரையே நான் பிராமணன் என்கிறேன்.

*சூழல்*

செல்வன் ஒருவன் உலக வாழ்வைத் துறந்து துறவறம் பூண்டு அரகந்தரானான். நீண்ட காலமாகவே அச்செல்வன் ஆசையும் காமமும் இன்றி வாழ்ந்தான் எனக் காட்டப் புத்தர் இப்பாடலைக் கூறினார்.

35 Hitvā mānusakaṁ yogaṁ
dibbaṁ yogaṁ upaccagā
Sabbayogavisaṁyuttaṁ
taṁ ahaṁ brūmi brāhmaṇaṁ. (417)

மொழிபெயர்ப்பு

எவரொருவர் மனித உலகத்துப் பற்றுகளைத் துறந்து தேவருலகப் பற்றுகளையும் கடந்து எல்லாப் பற்றுகளையும் முழுக்கத் துறந்தவரோ அவரையே நான் பிராமணன் என்கிறேன்.

*சூழல்*

முன்பு நடனமாடுபவனாக இருந்தவன் ஒருவன் துறவியானான். அவனிடம் பிற பிக்குகள் அவனது நடனமாடும் ஆர்வம் இன்னும் உளதோ என்று கேட்டபோது அவன் ஆர்வம் இல்லை என்றான். பின்பு அவன் தவமியற்றி அரகந்தரானான். அவனது மனமாற்றத்தையும் அவன் அரகந்தர் ஆனதையும் குறிப்பிட்டுப் புத்தர் கூறிய பாடல் இது.

36. Hitvā ratiñ ca aratiñ ca
sītibhūtaṁ nirūpadhiṁ
Sabbalokābhibhuṁ vīraṁ
taṁ ahaṁ brūmi brāhmaṇaṁ. (418)

மொழிபெயர்ப்பு

விருப்பு வெறுப்புகளைக் கடந்து, ஆறுதல், அடைந்து பிறப்பிற்குக் காரணமான அழுக்குகளைக்[1] களைந்து, உலகத்தை வென்ற வீரனாக உள்ளவர் எவரோ அவ்வரையே நான் பிராமணன் என்கிறேன்.

*சூழல்*

முன்பு நடனமாடுபவனாக இருந்து துறவியான ஒருவனிடம் பிற பிக்குகள் அவனது நடனமாடும் ஆர்வம் இன்னும் உளதோ எனக் கேட்டபோது அவன் அத்தகு ஆர்வம் தற்போது இல்லை என்றான். பின்பு அவன் தவமியற்றி அரகந்தரானான். அவனது மனமாற்றத்தையும் அவன் அரகந்தரானதையும் குறிப்பிட்டுப் புத்தர் கூறிய பாடல் இது.[2]

*விளக்கம்*

1. Upadhi - பிறப்பதற்குக் காரணமான அழுக்குகள். இவை நான்காகும்.

1. கந்தங்கள் (khandha)
2 புலனுணர்வுகள் (kilesa)
3. உலகியல் வினைகள் (abhisaṁkhāra)
4. காம உணர்வுகள் (Kāma)

2 இக்கதையும் முன்பாடலில் குறிக்கப்பட்ட கதையும் ஒன்றே.

37. Cutiṁ yo vedi sattānaṁ
upapattiñ ca sabbaso
Asattaṁ sugataṁ buddhaṁ
taṁ ahaṁ brūmi brāhmaṇaṁ. (419)

**மொழிபெயர்ப்பு**

எவரொருவர் உயிர்களின் பிறப்பு இறப்புகளை உணர்ந்து, உலகத் தொடர்புகளை விட்டு, நன்னெறியிற் சென்று[1] பேரறிஞராக[2] உள்ளாரோ அவரையே நான் பிராமணன் என்கிறேன்.

38. Yassa gatiṁ nā jānanti
devā gandhabbamānusā
Khiṇāsavaṁ arahantaṁ
taṁ ahaṁ brūmi brāhmaṇaṁ. (420)

**மொழிபெயர்ப்பு**

தேவர்களாலும் கந்தருவராலும் மனிதராலும் அறியவொண்ணா நிலைக்குச் சென்றவரும், எல்லாக் குற்றங்களையும் அழித்து விட்டவரும், அரகந்தரானவரும் எவரோ அவரையே நான் பிராமணன் என்கிறேன்.

*சூழல்*

வங்கீசன் என்பான் ஒருவன் இறந்தவர்களது தலையைத் தட்டுவதன் மூலம் அவர்கள் எங்குப் பிறந்துள்ளனர் என்றறிந்து கூற வல்லவனாக இருந்தான். ஒருமுறை அவன் புத்தரிடம் வந்தபோது பலருக்கும் அவர்களது மறுபிறவியைப் பற்றிச் சொன்னான்.

ஆனால் அரகந்தர்களைப் பற்றி ஏதும் கூற அவனால் இயலவில்லை. அதை எப்படி அறிவது என அவன் புத்தரிடம் கேட்டபோது அவன் துறவியானால் அது பற்றிக் கூறுவதாகப் புத்தர் கூறினார். அவன் துறவியாகிய சிறிது காலத்திற்குள்ளாகவே அரகந்தரானான். அவனைப் பற்றிக் கூறும் பொழுது புத்தர் கூறிய பாடல்கள் இவை.

*விளக்கம்*

1. Sugata - su + gata நல்லநெறியில் சென்றவர். அஃதாவது நிர்வாணத்தை அடைந்தவர் என்பது பொருள். புத்தர் சுகதர் என்றழைக்கப்பட்டார்.

2. பேரறிஞர் எனப்படுபவர் புத்தர். அஃதாவது புத்தரின் நிலையை அடைந்தவர்

39. Yassa pure ca pacchā ca
majjhe ca natthi kiñcanaṁ
Akiñcanaṁ anādānaṁ
taṁ ahaṁ brūmi brāhmanaṁ. (421)

**மொழிபெயர்ப்பு**

எவரொருவர் முன்பும்[1] பின்பும்[2] இடையிலும்[3] பற்றுகளின்றி உலக ஆசைகளை நீத்துப் பற்றற்றுள்ளாரோ அவரையே நான் பிராமணன் என்கிறேன்.

*சூழல்*

பெண்ணொருத்தி மூன்றாம் நிலையான அநாகமி நிலையடைந்துள்ள தன் கணவனின் அனுமதியுடன் துறவு பூண்டு விரைவில் ஞானம் பெற்றாள். ஒருநாள் அவளைச் சோதிக்க விரும்பிய அவளது கணவன் அவளிடம் சில வினாக்களைத் தொடுத்தான். அவள் எல்லாக் கேள்விகளுக்கும் உரிய முறையில் பதில் சொன்னாள். அவளது தகுதிக்கு மீறிய கேள்விகளைக் கேட்டபோது அவள் புத்தரை மேற்கோள் காட்டிப் பதில் கூறினாள். அவளது மறுமொழிகளையெல்லாம் கேட்ட புத்தர் அவளைப் பாராட்டிக் கூறிய பாடல் இது.

*விளக்கம்*

1. Pure - முன்பு - இறந்தகாலம்
2. Pacche - பின்பு - எதிர்காலம்
3. Majjhe - இடையில் - நிகழ்காலம்

மேற்கோள்

பற்றற்ற கண்ணே பிறப்பறுக்கும் மற்று
நிலையாமை காணப் படும். *(குறள் : 349)*

40. Usabhaṁ pavaraṁ vīraṁ
mahesiṁ vijitāvinaṁ .
Anejaṁ nahātakaṁ Buddhaṁ
taṁ ahaṁ brūmi brāhmaṇaṁ. (422)

**மொழிபெயர்ப்பு**

அச்சமற்றவரும்[1] தலைமையானவரும், வீரரும், பெரியவரும்[2] வெற்றியாளரும்[3], ஆசையற்றவரும், குற்றங்களைத் துடைத்தவரும், ஞானம் பெற்றவருமானவர் எவரோ அவரையே நான் பிராமணன் என்கிறேன்.

*சூழல்*

அங்குலிமாலா என்னும் வழிப்பறித் திருடன் புத்தரைக் கொல்லும் நோக்கத்துடன் அவரைத் தொடர்ந்து வந்து புத்தரின் ஞான ஒளியால் கவரப் பெற்றுத் துறவியானான். அவன் தவமியற்றி விரைவில் அரகந்தரானான். பின் அவனைத் திருடனாகக் கருதியவர்கள் கல்லாலடித்த போதும் அவன் கலக்கமின்றி இருந்தான். அவனது அச்சமற்ற போக்கினைப் பற்றி புத்தர் கூறிய பாடல் இது.

*விளக்கம்*

1. Usabham - காளை, காளையைப் போன்று அச்சமற்றவன்.

2. Mahesim - உயர்ந்த அறத்தையும் தியானத்தையும் அறிவையும் தேடும் பெரியவர்.

3. Vijitāvinam - புலன்களை வென்றவர்.

41. Pubbenivāsaṁ yo vedi
saggāpāyañ ca passati
Atho jātikkhayaṁ patto
abhiññā vosito munī
Sabba vosita vosānaṁ
taṁ ahaṁ brūmi brāhmaṇaṁ. (423)

**மொழிபெயர்ப்பு**

தனது முற்பிறப்புகளை அறிந்தவரும் சுவர்க்க[1] நரக[2] உலகங்களின் இயல்பினை அறிந்தவரும் பிறப்பைத் தவிர்த்தவரும்[3] உயர்ந்த அறிவுடன் தம்மை நெறிப்படுத்திக் கொண்டவரும் முனிவரும் இறுதி நிலையான நிர்வாண நிலையை[4] அடைந்தவருமானவர் எவரோ அவரையே நான் பிராமணன் என்கிறேன்.

*சூழல்*

ஒருமுறை புத்தர் கீல்வாத வலியில் இருக்கும் பொழுது அன்பர் ஒருவர் அவருக்குக் குளிப்பதற்கு வெந்நீர் வைத்துக் கொடுத்தார். பின்பு புத்தரின் வலி குணமானதும் அவர் புத்தரை அணுகி எத்தகையோருக்குச் செய்யும் பணிவிடை பெரும்பலனை நல்க வல்லது எனக் கேட்டான். அதற்குப் புத்தர் அளித்த பதில் இப்பாடல்

*விளக்கம்*

1. Sagga - தேவர் உலகம் ஆறும் உருவ உலகம் பதினாறும், அருவவுலகம் நான்கும் ஆக மொத்தம் இருபத்தாறு உலகங்கள் சுவர்க்க உலகம் ஆகும்.
2. Apāya - பாவ உலகங்கள் நான்கும் நரகம் எனப்படும்.
3. பிறப்பைத் தவிர்த்தவர் அரகந்தர்.
4. Abhiññāvosito - சேர்க்க வேண்டியதைச் சேர்த்தலும், நீக்க வேண்டியதை நீக்கலும், அறிய வேண்டியதை அறிதலும், வளர்க்க வேண்டியதை வளர்த்தலும் ஆகிய அறிவு கைவரப் பெற்றவர்கள். இந்நிலையடைந்தவர்கள் நிர்வாணம் எய்துதற்குரிய பக்குவத்தை அடைந்தவர்களாவார்கள்.

துணை நூல் பட்டியல்

1. இராமசாமி நாயுடு, க., (ப. ஆ.): தனிப்பாடற்றிரட்டு:
வித்தியாரத்நாகர அச்சுக்கூடம், சென்னை: 1921,

2. இராமானுஜாசாரியார், (மொ. பெ. ஆ.): மனுதர்ம சாஸ்திரம்:
பாரதி அச்சுக்கூடம் , சென்னை : 1924.

3 ஔவையார்: வாக்குண்டாம்:
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை : 1981.

4 குமரகுருபரர் நீதிநெறி விளக்கம்: நீதிக்களஞ்சியம்:
நியூ செஞ்சுரி புக்ஹவுஸ் பிரைவேட் லிமிடெட், சென்னை: 1985.

5 குமரகுருபரர்: மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ்:
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை : 1976.

6 குணவீரபண்டிதர்: வெண்பாப் பட்டியல்:
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை: 1976.

7 சபாபதி, ஈக்காடு (ப. ஆ.): விவேக சிந்தாமணி :
ஸ்ரீ மகள் கம்பெனி, சென்னை.

8. சாமிநாதையர் உ.வே. : புத்த சரிதம் , பௌத்த தருமம்,
பௌத்த சங்கம்: கபீர் அச்சுக்கூடம் , சென்னை : 1945.

9. சாமிநாதையர், உ.வே. (ப.ஆ.): புறநானூறு:
தமிழ்ப்பல்கலைக் கழகம், தஞ்சாவூர் : 1985.

10. சாமிநாதையர் உ. வே. (ப.ஆ.) : பெருங்கதை :
உ. வே. சா. பதிப்பகம், சென்னை : 1968,

11. சாமிநாதையர் உ.வே. (ப.ஆ.): மணிமேகலை:
தியாகராச வெளியீடு சென்னை : 1956.

12. சித்பவானந்தர் (வி. உ. ஆ.) : திருவாசகம்:
ராமகிருஷ்ண தபோவனம், திருப்பராய்த்துறை : 1970.

13. சித்பவானந்தர் (மொ. பெ. ஆ.) : பகவத் கீதை:
ராமகிருஷ்ண தபோவனம், திருப்பராய்த்துறை : 1980.

14. செயலக்குமி : திருக்குறளும் தம்மபதமும் :
சர்வோதயா இலக்கியப் பண்ணை, மதுரை: 1976.

15. சோமானந்தர், பிக்கு, (மொ. பெ. ஆ.): தம்மபதம்:
மகாபோதி சொஸைடி, சென்னை : 1980.

16. தாண்டவராய சுவாமிகள்: கைவல்லிய நவநீதம்:
ஸ்ரீசச்சிதாநந்த சுவாமிகள் தருமபரிபாலன சபை : 1924,

17. திருக்குறள் மூலமும் பரிமேலழகர் உரையும்:
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் , சென்னை : 1953.

18. நடராசன் , அ. லெ. (மொ. பெ. ஆ.) : தம்மபதம் :
கஸ்தூரிபா காந்தி கன்யா குருகுலம் வெளியீடு, வேதாரண்யம் : 1979.

19. பாலசுந்தரம், (உ.ஆ.) : நாலடியார் :
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை: 1953.

20. பாலசுந்தரம், (ப.ஆ.): நீதிவெண்பா :
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை: 1974.

21. புதிய ஏற்பாடு (பைபிள்):
தி கிதியோன்ஸ் இன்டர் நேசனல், பெங்களூர் : 1985.

22. முன்றுறை அரையனார்: பழமொழி,பதினெண் கீழ்க்கணக்கு:
நியூசெஞ்சுரி புக்ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்,
சென்னை: 1981.

23. விளம்பி நாகனார்: நான்மணிக் கடிகை, பதினென் கீழ்க்கணக்கு: நியூ
செஞ்சுரி புக்ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்.
சென்னை : 1981.

24. வேங்கடசாமி, மயிலை, சீனி, : பௌத்தமும் தமிழும்:
சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் , சென்னை: 1972.

25. வேங்கடசாமி ரெட்டியார் , (ப.ஆ) : நாலாயிர திவ்விய பிரபந்தம் :
திருவேங்கடத்தான் திருமன்றம் , சென்னை:1981.

26. Beal, Samuel, (Tr.): Dhammapada:
Indological Book House, Varanasi: 1971.

27. Childers, R.C. : A Dictionary of Pali Language,
cosmo Publication, New Delhi: 1979.

28. Davids, Rhys: Pali English Dictionary:
Oriental Reprints Corporation, New Delhi: 1975.

29. Dhammarakhita, (Ed.): Mahāparinibbāna Sutta (Pali):
Gnanamandal Limited, Delhi: 1958.

30. Kashyap, J. (Ed. ): Mahāvagga Pāli:
Palli Publication Board, Bihar Government, Nalanda: 1956.

31. Law, B.C : A History of Pali Literature:
Indological Book House, Varanasi: 1983.

32. Nandiswara Tera, Ellawala : The Noble Eightfold Path: Mahabodhi Society, Madras: 1959.

33. Narada Thera, (Ed. & Tr. ): The Dhammapada: B.M.S. Publilcations : 1978.

34. Radhakrishnan, S. : Indian Philosophy. Vol. I: Blackie & Sons Publishers, New Delhi: 1983.

35. Radhakrishnan, S., (Tr. &Ed.): The Dhammapada : Oxford University Press, Madras: 1982.

36. Silananda Brahmachari, (Tr.&Ed.) : The Dhammapada: Buddha Gaya Temple Management Comittee, Bodh Gaya: 1981.

37. Upasak, G.S., (Ed.) : Dhammapada Atthakathā pali (Vols 1-4) : Nava Nalanda Mahavihara, Nalanda : 1973.

38. Raj, Prapulla Chandra, (Tr.) : Buddha Vacanamṛtha (Hindi): Vipul Prakashan, Bhodh Gaya: 1981.

# அருஞ்சொற்கள் முதலியவற்றின் அகராதி
(எண்கள் பாடல் எண்ணைக் குறிக்கும்)


அங்குலிமாலா–173
அசுர உலகம் – 45 47
அசேலகர்கள் – 317
அட்ட சீலம் – 24
அடையத் தகுந்தன எட்டு –376
அத்ததத்தர் – 166
அதிதோணசாரி – 240
அதுலன் – 229 230
அநாகமி –18 218 421
அநாகத நிலை – 33
அநாதபிண்டிகன் –18 120 304
அபிதம்மக் கோட்பாடு – 181
அமைச்சர் – 142
அரகந்தநிலை – 35 45 75
அரகந்தர் (முத்தர்) – 1 18 39 57 90 91 142 145 173
அரூபராக – 31
அவிஜ்ஜா – 31
அழுக்குகள் நான்கு – 385
அன்னப் பறவைகள் – 175
அனுராதபுரம் – 150
அனுருத்தர் – 93
அஜாதசத்துரு – 322 324
அஸ்ஸஜி – 392
ஆனந்தர் (தேரர்)– 52 55 185 230 251 286 303 322 387
ஆசீவகம் – 70
ஆசீவகன் – 353
ஆபஸ்ஸரதேவர்கள் – 200
இந்தகில – 95
இந்திரன் – 56 94 395 403
இமயம் – 304
இயக்கி – 5
இயமலோகம் (இயமன் உலகம்)– 44 45 47 86
இயமன் – 46 47 57
இரேவதத்தேரர் – 230 412
இரேவதன் – 98
இறப்பு என்பது யாது? – 23
உக்கசேன தேரர் – 397
உண்மை நெறிகள் நான்கு – 12
உணர்வுகள் (நல்ல) ஐந்து – 376
உத்தச்ச – 31
உதாயி – 64
உபகன் – 353
உபோசத்தநாள் – 18?
உயரிய உண்மைகள் நான்கு–217
உலகங்கள் இருபத்தாறு – 423
உஜ்ஜ கத – 108
ஊசி முனைக் கடுகு – 401
எண்வகை ஞானம் – 144
எண்வகை நெறிகள் – 276
ஐவகைக் கந்தங்கள் – 90 202
ஒழுக்கம் ஐவகை – 24
ஒழுக்கம் பதினைந்து வகை–144
கச்சாயன தேரர் – 43

கச்சாயனர் – 94
கட்டகப் பூண்டு – 164
கட்டுகள் நான்கு – 89
கட்டுகளுள் பெரியது – 345
கடக்கவேண்டிய ஐந்து – 376
கடமைகள் மூன்று – 217
கணபங்க வாதம் – 113
கத புஞ்ஞோ – 16
கந்தங்கள் ஐந்து – 90 202
கபில வத்து – 169
கஸ்ஸப தேரர் – 56 217
கஸ்ஸப புத்தர் – 71
கஸ்ஸபர் (மகா) – 28 61 91
காமராக – 31
காமன் விழா – 27
காவல் மரம் (இந்தகீல) – 95
காளசிலா – 140
கிசாகோதமி – 114 287 394
கிஜ்ஜகூடமலை
(கிருத்திரகூடமலை) – 71 90
கீடாலை – 77
குண்டலகேசி – 103
குமுதமலர் – 285
குற்றங்கள் ஐந்து – 376
குற்றங்கள் நான்கு – 93 226
குற்றங்கள் மூன்று – 200
கேமதேரியார் – 403
கொடையில் சிறந்தது – 354
கோசலமன்னன் – 325
கோசாம்பி – 6 23 322 330
கோதமி (மகாபஜாபதி) – 39
கோதிகன் – 57
கௌதமன் – 301
சக்காய திட்டி – 31
சக்குபாலன் – 1
சகதாகாமி – 18 218
சங்க தம்மம் – 70
சங்கம் – 194
சங்கிச்சன் – 110
சஞ்சயன் – 12
சஞ்ஞோ ஜனா பத்து
(Saññojanā) – 31
சத்தா (Saddhā) – 8
சதுசச்ச புத்தர் – 66
சம்சார – 60
சம்மட்டி வடிவப் பேய் – 72
சம்மா சம்புத்தர் – 66
சமண சமயத் துறவிகள் – 317
சமணர் – 142 388
சமநிலைக் கோட்பாடு – 167
சமநிலை வழி – 70
சன்னன் (தேரோட்டி) – 78
சனந்தனா – 5
சாக்கிய குலம் – 47
சாமாவதி – 23
சார்பில் தோற்றம் – 146
சார்பில் மீட்சி – 154
சார கந்தம் – 55
சாரி புத்தர் – 12 76 77 95 97 98 100 103 106 107 181 230 241 384 390 392 400 410
சால மரம் – 162
சாவத்தி – 16 18 20 27 53 61 67 69 75 76 77 83 84 86 116 127 276
சிரிமா (பரத்தை) – 147

சிறந்த இன்பம் – 354
சீலபத்த பராமாச – 31
சீவலீ – 414
சீவன் முத்தர் – 90
சீவன் முத்தி – 1
சுகதர் – 285
சுத்த நிபாதம் – 142
சுத்தோதனர் – 169
சுதபுத்தர் – 66
சுந்தன் – 15
சுப்ப புத்தன்
(தொழு நோயாளி)–66
சுப்ப புத்தன் (மன்னன்)–128
சுபத்தர் – 255
சுமனன் (தோட்டக் காரன்)–68
சுமனா – 18
சூலிசுபத்தா – 304
சூள பந்தகன் – 25
சேகோ – 45
சோத பன்ன நிலை–63 66
124 178
சோத பன்ன நெறி – 45
சோதபன்னர் – 18 142
ஞான நிலையின்
தன்மைகள் ஏழு– 89
ஞான நெறியின்
நான்கு நிலைகள் – 142
ஞானம் எண் வகை – 144
தக்கசீலம் – 43
தகரசிகி (பச்சேகபுத்தர்) – 66
தச்சன் – 145
தசசீலம் – 24
தடைகள் ஐந்து – 295
ததாகதர் – 254
தம்பதாழகன் – 66
தம்மம் – 1 8
தம்மாராமர் – 364
தம்மிகன் – 16
தருபைப்புல் – 311
தவ நிலை இரண்டு – 384
தவ நெறியின்
நான்கு நிலைகள் – 18
தவமியற்றலின் இரு நிலைகள்– 23
தவறான நெறிகள் மூன்று – 12
தளைகள் ஐந்து – 343
தனபாலகன் – 322 324
தாவதிம்ஸ உலகம் – 181
தியானத்தின் இரு நிலைகள் – 181
திஸ்ஸர் – 4
துடித உலகம் – 181
துறவோர் கூட்டம் – 194
தேரர் (விளக்கம்) – 261
தேவகுமாரன் மாரன் – 8
தேவதத்தன்
– 10 17 90 162 163 324
தேவதத்தத் தேரர் – 366
தேவர் உலகம் – 45
தேவேந்திரன் – 30 354
தொழில்களுள் விட்டொழிக்க
வேண்டிய ஐந்து – 24
நந்தன் – 14
நரகம் நான்கு வகை – 126
நரகர் உலகம் – 45 47
நல்வழிப்பட்ட மனத்தின்
நெறிகள் பத்து – 43
நன்றாக வேயப்பட்ட கூரை – 14

நாணல் – 337
நிகண்டத் துறவிகள்
(நிர்வாணத் துறவிகள்)–106
நிகண்ட வாதிகள் – 317
நிர்வாணத் துறவிகள் –50
70 304
நிர்வாண நிலை – 134
நிர்வாணம் – 18 46
92 166 173 196
நீதிபதிகள் இலஞ்சம்
பெற்றது–257
பகுத்தறிவு நால்வகை – 352
பச்சேக புத்தர் – 66 72
பசனேதி – 60
பசி நோய் – 203
பஞ்ச சீலம் – 24
படாச்சாரா – 113 289
படிக – 31
பயன்கள் மூன்று – 218
பாகவ – 20
பாகியாதாரு சீரியா – 66
பாசனக் காரன் – 145
பாபகாரி – 15
பாபம் ( தீவினை ) – 116
பாம்புருவப் பேய் – 71
பாதி மொக்க – 272 376
பாவ உலகங்கள்
நான்கு – 423
பிக்கு – 117 142
பிக்கு சங்கம் – 117
பிம்பி சாரன் – 68
பிராமண தம்மிக சுத்தம் – 142
பிராமணர் –142 390 391 392
பிறப்பிற்குக் காரணமான
அழுக்குகள் நான்கு – 418
பிறவிகள் நான்கு வகை – 126
புக்குசாதி – 66
புத்தம், தம்மம், சங்கம் – 8
புத்தர் ( விளக்கம் ) – 180
புத்தர் இருபத்தெழுவர் – 301
புத்த ஜாதகக் கதை – 154
புப்ப கந்தம் – 53
புலன்கள் அறுவகை – 60
பேய் உலகம் – 45 47
பொட்டிலன் – 282
பௌத்த சங்கம் – 90
மகவா ( Magavā ) – 30
மகா கப்பினன் – 79
மகா கஸ்ஸபதேரர்
– 28 61 91 118
மகா நாகா – 322
மகா பந்தகன் – 25
மகாபஜாபதி கோதமி – 391
மகா மாணவக ஜாதகம் – 30
மகா வக்கம் – 154
மஞ்சள் துறவாடை – 10
மட்டகுண்டலி – 2
மரணம் என்பது எது ? – 57
மல்லிகா – 52 151
மல்லிகைக் கொடி – 377
மலட்டுப் பெண் – 5
மலர்வளம் (Puppārāma) – 53
மழைக்கால ஒடுக்கம்
(Vassā vāsa ) – 83
மறுபிறப்பு என்னும் அம்புகள்– 352
மனக்குற்றங்கள் ஐந்து – 89

மனம் செல்லும் தவறான நெறிகள் பத்து – 42
மனமாசுகள் ஐந்து – 89
மஜ்ஜிம படிபதா – 70 167
மாகந்தியா – 23 180 322
மாரன் – 8 34 40 175 180 200 333 349 350 352 385
மாரன் (மரணம்) – 37
மாரனின் படைகள் பத்து – 175
மாரனின் மலர்க் கணைகள் – 46
மாலுவாக் கொடி – 162 334
மான (அகந்தை) – 31
மிருக உலகம் – 45 47
முத்தர் – 383
மும்மணிகள் – 8 117
மூங்கில் காடு (வேளுவனம்) – 71 94
மூலகந்தம் – 55
மொக்கலானர் – 12 49 71 72 136 140 221 224 241 307 411
யக்கினி – 66
யசோதரை – 128
யமக – 1
ராஜகிரி (ராஜகேக) – 15 61 68 71 90 94 103
ரூபராக – 31
லக்கணத்தேரர் – 71 72
வங்கீசன் – 420
வஸ்ஸாவாச – 83
வாசபகத்தியா – 52
வாய்மை நான்கு – 276
வாரணாசி – 353
விசாகை – 53 135 146 213
விசிகிச்சா – 31
விசுத்தி மக்க – 150
விட்டொழிக்கப்பட வேண்டிய ஐவகைத் தொழில்கள் – 24
விடுதலைகள் ஐந்து ( Vimutti) – 57
விதூதபன் (கோசல மன்னன்)–47
விநய பிடகம் – 117
விநயம் – 391
வில்லாளிகள் – 145
விலங்குகள் ஐந்து – 376
வெட்டிவேர்ப் புல் – 335 337
வெள்ளம் (Ogha) – 25
வேட்கை என்னும் நெருப்பு–146
வேட்கை மூவகை நூற்றெட்டாதல்–337
வேரஞ்சா – 83
வேளுவனம் – 71 94
வைசாலி – 30 290
ஜம்புகன் – 70
ஜீவகன் – 90
ஜேதவனம் – 27 77 276

245 (300)

245